

ரா.கி.ரங்கராஜனின்
புரொபசர்
மித்ரா

# புரொபசர் மித்ரா

ரா.கி.ரங்கராஜன்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

# புரொபசர் மித்ரா

## 1

"It is proposed to recommend your name for being decorated with Padmashri in connection with the Republican Day Honours on..."

புதுடெல்லியின் கலாசாரத்துறை அமைச்சகத்திலிருந்து வந்திருந்த அந்தக் கடிதம், தன்னை அழுத்திக்கொண்டிருக்கும் கண்ணாடிக் குண்டிடமிருந்து விடுபட முயன்று படபடத்துக் கொண்டிருந்தது.

வெள்ளைக் காகிதத்தின் கீழே ஒரு தந்தி பாரம் இருந்தது. அரசாங்க விருதை ஏற்றுக்கொள்ளச் சம்மதமா இல்லையா என்பதை உடனடியாகத் தெரிவிப்பதற்காக அவர்களே அனுப்பியிருந்த பாரம்.

புரொபசர் மித்ராவின் உதட்டுக் கோடியில், ஈ அசைவதுபோல் ஒரு புன்னகை அசைந்துகொண்டிருந்தது. கால்களை நீட்டிக்கொண்டு நாற்காலியில் சாய்ந்திருந்தார் அவர். பெருக்கல் குறிமாதிரி ஒன்றையொன்று குறுக் கிட்டிருந்த பாதங்கள், விரலோடு விரல் தட்டிக் கொண் டிருந்தன.

''ஓடாதே! ஊகூம். கண்டபடி ஓடக்கூடாது.'' என்று சுட்டுவிரலை ஆட்டி எச்சரித்தார் புரொபசர்.

அவருடைய வளர்ப்புப் பூனை குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்ததே காரணம். எஜமானின் புதுப் புகழை அதனால் உணர முடிந்ததோ என்னவோ, உற்சாகத்துடன் துள்ளிக்கொண்டிருந்தது.

''ஜன்னல் பக்கம் தாவாதே! வா இப்படி!'' என்றார் புரொபசர்.

அது கேட்பதாய்த் தெரியவில்லை.

டெலிபோன் மணி கிணுகிணுத்தது. ''மித்ரா ஸ்பீக்கிங்'' என்றார்.

''பத்மஸ்ரீ மித்ரா என்று சொல்லுங்கள்.''

''யார் பேசுனது?''

''நான்தான் மிஸஸ் எஞ்சினீயர். கங்கிராசுலேஷன்ஸ், புரொபசர்.''

''இப்போதுதானே எனக்கே கடிதம் வந்திருக்கிறது? உங்களுக்கு எப்படி?''

''என் கணவர் டெல்லியில் பிரஸ் கிளப் செகரட்டரி. மறந்துவிட்டதா? எனக்கு இன்று காலையே கடிதம் வந்துவிட்டது. கங்கிராசுலேஷன்ஸ்!''

''எல்லாம் உங்கள் ஆசீர்வாதம், அம்மா.''

''அடேயப்பா! பெரிய வார்த்தையெல்லாம் போடாதீர்கள், புரொபசர்! யூ ஆர் த பிக்கஸ்ட் ஷோமேன் இன் த கண்ட்ரி. மாஜிக்கிலும் சரி, ஹிப்னாடிஸத்திலும் சரி உங்களுக்கு...''

''தாங்ஸ் மேடம்.''

''நான் கூப்பிட்டது வெறும் கங்கிராசுலேஷன்ஸுக்காக மட்டுமில்லை. இந்த மாதம் இருபதாம் தேதி உங்கள் பர்ஃபாமென்ஸ் ஒன்று ஏற்பாடு செய்திருக்கிறோம். கவர்னர்

தலைமை தாங்க ஒப்புக்கொண்டிருக்கிறார். பத்மஸ்ரீ பட்டம் வந்தபிறகு முதல் ஷோ. பிரமாதமாய் அமையவேண்டும்.''

புரொபசரின் முகம் மலர்ந்தது. ஆனால் அதை அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ''தாங்ஸ் மேடம். கவர்னருக்கும் என் நன்றியைச் சொல்லுங்கள்'' என்றார் அமைதியாக.

''மிஸஸ் மித்ராவைக் கூப்பிடுங்கள். வாழ்த்துச் சொல்லவேண்டும்.''

புரொபசர் மித்ராவின் புருவங்கள் சுருங்கின. ''ஜெகதாவா? ஸோ ஸாரி. அவள் இப்போதுதான் வெளியே போனாள்.''

''ஓ கே! இனி வாழ்த்துக்கள் வந்துகொண்டேயிருக்கும். ரிஸீவரை வெளியே எடுத்து வைத்துவிடாதீர்கள்.''

''ஓ நோ! பஸ்ஸரை அழுத்தினார் புரொபசர்.''

''எஸ் ஸார்'' என்றபடி இளைஞனொருவன் உள்ளே நுழைந்தான்.

டெல்லி கடிதத்தையும் தந்தி பாரத்தையும் அவனிடம் கொடுத்தார். ''சம்மதம் என்று பூர்த்தி செய்து தந்தியை அனுப்பிவிடு.''

இளைஞன் கடிதத்தை மேலோட்டமாகப் பார்த்தான். அவன் முகம் மலர்ந்தது. ''ஸார்... ரொம்ப... ரொம்ப... சந்தோஷம் சார்... கங்கிராசுலேஷன்ஸ் சார்...''

''தாங்ஸ். இந்தா, உனக்கும் ஒரு கடிதம்.''

தம் கைப்படவே டைப் அடித்து வைத்திருந்த இன்னொரு கடிதத்தையும் தந்தார் மித்ரா.

''சார்!'' பதறினான் இளைஞன். ''இன்று முதல்... வேலை கிடையாதா...?''

''ஸாரி. தேதி பார்த்தாயா?'' காலண்டரைக் காட்டினார் புரொபசர். ''நேற்றுடன் உனக்கு முப்பத்திரண்டு வயது முடிந்துவிட்டது.''

''சார், நான் ஐந்து வருஷமாய்...''

''நன்றாகத்தான் வேலை செய்தாய். அதைப் பாராட்டி ஆயிரம் ரூபாய்க்குச் செக் தருகிறேன். உன்னை வேலையில் சேர்க்கும்போதே சொல்லவில்லை..., 32'வது வயதில் விலகிவிட வேண்டுமென்று?''

''அது ஏதோ வேடிக்கை என்று...''

''என் வேடிக்கையெல்லாம் ஸ்டேஜில்தான். வாழ்க்கையில் அல்ல. 32 வயதுக்குமேல் என்னிடம் யாரும் வேலைக்கு இருக்கக்கூடாது. யாராவது வைத்திருக்கிறேனா பார், ஸ்டேஜ் அஸிஸ்டென்ஸிலோ, ஒர்க்ஷாப்பிலோ.''

''சார், வருமானம் இல்லையென்றால் என்னால் வாழவே முடியாது சார்.''

''தேவையில்லை - முப்பத்திரண்டு வயதுக்குமேல் யாரும் உயிர் வாழக்கூடாது. அலெக்ஸாண்டர் அந்த வயதுக்குள் பாதி உலகத்தை ஜெயித்தான். 125 வயதுவரை வாழப்போவதாகச் சொன்ன காந்தி சுட்டுக்கொல்லப்பட்டுச் செத்தார். முப்பத்திரண்டு வயதுக்கப்புறம் எதற்காக வாழுவது? தொலையட்டும் என்று எடுப்பிடி வேலைக்கும், பிள்ளைகளை வளர்க்கவும் இரண்டொரு கிழங்களை விட்டுவைக்கலாம்... ஸிரட், தந்தியை அனுப்பிவிட்டு நீ போகலாம்.''

சில வினாடிகள் மௌனமாக நின்றான் அவன். பிறகு, ''அம்மா கீழே இருக்கிறார்கள். சொல்லிக்கொண்டு போகிறேன்'' என்றான்.

''எந்த அம்மா?''

''எஜமானியம்மா.''

''எஜமானிடம் சொல்லிக் கொண்டால் எஜமானியிடமும் சொல்லிக் கொண்ட மாதிரிதான். நீ போகலாம். போ.'' பல்லைக் கடித்துக்கொண்டு புரொபசர் பேசுவது நன்கு புலப்பட்டது.

அவன் வெளியேறினான்.

புரொபசரின் பூனை மியாவ் என்று கூவியது. ஆனால் விளையாட்டாகவோ சந்தோஷமாகவோ அல்ல. மரணக் கூச்சலாக. ''மியாவ், மியாவ்'' என்று இடைவிடாமல் அதன் குரல் ஒலித்தது.

புரொபசர் திரும்பிப் பார்த்தார். ஜன்னலின் படுக்கை வசமான கம்பிகளுக்கிடையே அது சிக்கியிருந்தது. வெளியே பாய முயன்றபோது ஏற்பட்ட விபத்து.

அதை விடுவிக்கும் நோக்கத்துடன் இரண்டடி முன்னே சென்றார் மித்ரா. ஆனால் உடனே நின்றார். கொஞ்ச நேரமாக மறைந்திருந்த புன்னகை திரும்பப்படர்ந்தது அவர் முகத்தில்.

பூனையை விடுவிக்காமலே திரும்பினார். அறையை விட்டு வெளியே வந்தார். மாடிப்படி வழியே கீழே இறங்கினார். பஞ்சுப்பொதி போன்ற விரிப்புகள் அவருடைய காலடியை அழுந்த அழுந்தப் பதிந்துகொண்டு மெல்ல மெல்லப் பழைய நிலைக்குப் பிரிந்துகொண்டன.

மாளிகை போன்றிருந்த பங்களாவின் கீழ்ப்புறத்தை அடைந்தார் புரொபசர். ஹாலை அடுத்து வலப்புறமும் இடப்புறமுமாக நீண்ட கூடங்கள் சென்றன. வலப்புறமிருந்த கூடத்தின் வழியே நடந்தார். கடைசி அறையை அடைந்ததும் நின்றார்.

இறுகச் சாத்தியிருந்த அந்த அறையின் கதவுகள். கண்ணிமைக்கும் நேரம் தாமதித்தார் புரொபசர். பிறகு பாண்ட்

பையிலிருந்து சாவியை எடுத்துத் துவாரத்தில் நுழைத்து, அழுத்தமாய் ஒருமுறை திருகினார். கதவைச் சட்டெனத் திறந்து, வேகமாய் உள்ளே நுழைந்து, கதவைச் சாத்திக் கொண்டார். அதன்மீது முதுகைச் சாய்த்த நிலையில் நின்று அறையைக் கவனித்தார்.

எல்லா ஜன்னல்களும் மூடப்பட்டிருந்தன. உள்ளே கும்மிருட்டு. இருட்டுக்கே உரிய புழுக்கமான மணம்.

அறையின் மூலையில் ஒரு சிறு மெழுகுவத்தி கடைசி இழை வெளிச்சத்தை வெளிவிட்டுக்கொண்டிருந்தது. தரையில், அதன் முன்னே, கால்களைச் சப்பணமிட்டபடி, விறைப்பாக ஓர் உருவம் உட்கார்ந்திருந்தது. பெரும்பாலும் அதன் வெளி விளிம்புகள்தான் புலப்பட்டன என்றாலும் அந்தக் கோடுகளையும் வளைவுகளையும் கொண்டு அது ஓர் இளவயது மங்கை என்பதை ஊகிக்க முடிந்தது. சீராக ஒரே சுருதியில் அவளிடமிருந்து சுவாசம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. எந்த இடுக்கு வழியாகவோ சாமர்த்தியமாக நுழைந்துவந்த காற்று மெழுகுவத்தியின் ஜ்வாலையோடு விளையாடியது. சுடரை அசைப்பதும், சீண்டுவதும், பின்னடைவதும், எட்டி நின்று வேடிக்கை பார்ப்பதும், அது மறுபக்கம் பார்த்தாற் போல் அசையாது நிற்கும்போது அதன் முதுகில் தட்டி விட்டுக் கடகடவென்று நகைப்பதுமாகக் காற்று சேட்டைகள் செய்துகொண்டிருந்தபோது அந்தப் பெண்ணின் நிழல் தரையில் வளைவதும் நெளிவதுமாக ஓடியது.

புரொபசர் மித்ரா அவற்றையெல்லாம் கவனிக்க வில்லை. மெழுகுவத்தியின் முன்னே அமர்ந்துள்ள மங்கையர் மீது வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டே யிருந்தார்.

மாடியிலிருந்து பூனையின் மியாவ் சப்தம் இடையறாது ஒலித்துக் கொண்டிருந்தது.

அவளுடைய கண்டத்திலிருந்து ஒரு நெடிய மூச்சு வெளிப்பட்டது. மிகக் கொஞ்சமாக அவள் அசைவதுபோல் தெரிந்தது.

''நிம்மி'' என்று கூப்பிட்டார் புரொபசர் தாழ்ந்த குரலில்.

அவள் திரும்பிப் பார்க்கவில்லை.

''நிம்மி'' என்று இரண்டாம் முறையும் கூப்பிட்டார்.

தூக்கக் கலக்கத்துடன் படுக்கையிலிருந்து எழுந்திருப்பவளைப்போல அவள் கண்ணைக் கசக்கிக்கொண்டாள். பிறகு எழுந்துகொண்டாள். புரொபசரின் அருகில் வந்தாள்.

''இன்றைய அனுபவம் எப்படி?'' என்று அவர் தோளைத் தட்டிக் கொடுத்தபடி கேட்டார் மித்ரா.

''பரவாயில்லை, அப்பா,'' என்றாள் நிம்மி.

''மெழுகுவத்தியின் சுடர் உன் நெஞ்சுக்குள் இறங்குவதுபோல் தெரிந்ததா?''

''இல்லை, அப்பா. கண்ணுக்கருகில் வருகிறமாதிரி தெரிகிறது. பிறகு அப்படியே நின்றுவிடுகிறது, அல்லது மறைந்துவிடுகிறது'' என்று பதிலளித்தாள் அவள். குரல் வெகு இனிமையாயிருந்தது. கண்களில் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரகாசம் ஏறியது. அவள் சற்று ஒல்லி ரகம்போல் தோன்றினாலும், பருவத்தின் செழுமை சரியாகவேயிருந்தது. எந்தப் பகுதிகள் எந்த அளவுக்கு வளர்ந்தால் பெண்மையின் மென்மையும் யெளவனத்தின் வசீகரமும் சிறப்பாக இருக்குமோ அந்த அளவுக்கு அவள் தேகம் பொலிவு பெற்றிருந்தது. மன்மதன் சுவைத்துக்கொண்டிருக்கும் தேன்கிண்ணமாக அவள் உதடுகளில் ஈரத்தின் கசிவு மினுமினுத்தது.

''இன்னும் நீ முயற்சி செய்ய வேண்டும்'' என்றார் புரொபசர், அவள் கண்களையே கவனித்தவண்ணம், ''மெழுகுவத்தியின் சுடரை நீ ஆசையுடன் உன் இருதய

வீட்டுக்குள் அழை. குழந்தையைக் கொஞ்சுவதற்காகக் கையை நீட்டும் தாயைப்போல வா வா என்று கூப்பிடு. அதெப்படி வராமலிருக்கும்? அது வந்துவிட்டால், உன் மனோசக்தி பரிபூரணமாக வளர்ந்துவிட்டதாகப் பொருள்.''

அவள் தன் கூந்தலை விரல் நுனிகளால் அளைந்து கொண்டாள். ''இன்றைக்கு எனக்குச் சில கார்டு டிரிக்குகளும் சொல்லியிருந்தீர்கள் அப்பா'' என்று நினைவுபடுத்தினாள்.

''தூ!'' என்று இகழ்ச்சியாகச் சூள்கொட்டினார் புரொபசர் மித்ரா. ''அந்தச் செப்படி வித்தையெல்லாம் அரைவேக்காட்டுப் பேர்வழிகளுக்காக ஏற்பட்டது. இருந்தும் கூடப் பலவற்றை உனக்குச் சொல்லித் தந்திருக்கிறேன். அது வெறும் வியாபாரம். மட்டமான வியாபாரம். பிழைப்புக்காக நானும் கூட அதைச் செய்துவருகிறேன்...''

புரொபசர் சற்று நிறுத்திய போது. பூனையின் குரல் ஒருமுறை ஒலித்தது மாடியிலிருந்து.

''ஆனால் நீ பயிலப்போவது, உன்னை வைத்துப் பரிசோதனை செய்து செய்து நான் அடையப்போவது, மாஜிக் மட்டுமல்ல. உலகத்தையே பிரமிப்பில் ஆழ்த்தப் போகும் மாபெரும் ரகசியமாக அது இருக்கப்போகிறது...''

நிம்மியின் கண்கள் இப்போது நிலைகுத்தி நிற்க வில்லை. ஆவலுடன், ஆசையுடன், புதிய உலகத்தைப் பார்க்கப்போகிற தாகத்துடன், படபடவென்று துடித்துக் கொண்டிருந்தன இமைகள். புரொபசரை அவள் பார்த்த பார்வையில் பிரியம் இருந்ததா, அச்சம் இருந்ததா என்று சொல்வதற்கில்லை.

படக்கென்று மெழுகுவத்தியின் கடைசிச் சுடரும் அணைந்து. பூனையின் மியாவ் குரல் இடைவிட்டு இடை விட்டு மிதந்து வந்தது. அறைக்குள் ஆயிரம் நாவுகளுடன் இரைச்சலிட்டது நிசப்தம்.

புரொபசர் அலமாரியைத்திறந்து ஒரு கறுப்புத்துணியை எடுத்தார். நிம்மியின் கண்களைச் சுற்றிக் கட்டினார்.

''இப்போது என்ன தெரிகிறது?'' என்று வினவினார்.

''எதுவும் தெரியவில்லை'' என்றாள் நிம்மி. ஆனால் சற்றுமுன்பிருந்த இனிமை இப்போது காணோம்.

புரொபசர் மித்ரா அவளுக்குப் பின்புறம் சென்று இரண்டடி தள்ளி நின்றுகொண்டார். கைகளை நீட்டினார். இரண்டு கைவிரல்களும் அவளுடைய இரு காதுகளைத் தொடும்அளவுக்கு நெருங்கியிருந்தன. ''இப்போது தெரிகிறதா?''

''ஆமாம். நீங்கள் என் பின்னால் நின்றிருக்கிறீர்கள். கைகளை நீட்டிக் கொண்டிருக்கிறீர்கள்.''

''என் உடைகள் தெரிகின்றனவா?''

''ஆமாம். சட்டைப் பைக்குள் ஒரு காகிதம் வைத்திருக்கிறீர்கள்.''

''என்ன காகிதம்? அதைப்படி.''

''புதுடெல்லி அரசாங்கத்திலிருந்து வந்திருக்கிறது. கல்ச்சரல் மினிஸ்ட்ரி. உங்களுக்குப் பத்மஸ்ரீ விருது கொடுக்கப்போவதாக...''

அவளது பேச்சை நிறுத்துவது போல வெளியே கதவு தட்டப்பட்டது. - லேசாக, பயத்துடன்.

புரொபசர் மித்ரா அதை அலட்சியம் செய்ய நினைத்தார். ஆனால் தட்டப்படும் ஓசை அதிகமாயும் வேகமாயும் வரத்தொடங்கியது.

''யாரது?'' என்றார் புரொபசர் குரலில் கடுமையுடன்.

''நான்தான் ஜெகதா'' பதற்றமாக வந்தது பதில்.

''உன்னை யார் இங்கே...'' என்று புரொபசர் மித்ரா உறுமிக்கொண்டிருக்கும்போதே, சரியாகச் சாத்தப்படாத கதவு திறந்து வழிவிட்டது.

அவர் மனைவி புயல்போல உள்ளே நுழைந்தாள். கண்ணில் கட்டுடன் மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டதுபோல அசைவற்று நிற்கும் நிம்மியின் உருவம் அவள் கண்ணில் பட்டதும், திகில் நிறைந்த ஒரு கேவல் அவள் நெஞ்சிலிருந்து வெளிப்பட்டது. ''நிம்மி...'' என்று தொண்டை தழுதழுக்க, பேசத்தெரியாமல் குழறினாள்.

நிம்மி அவள் பக்கம் திரும்பவில்லை.

ஜெகதா அவளை அணைத்துக் கொள்ள விரும்பினாலும் நெருங்கிய போது புரொபசரின் கரம் குறுக்கே நீண்டு அவளைத் தடுத்து நிறுத்தியது. ''உஷ்!'' என்ற அவரது எச்சரிக்கையும், விழிகளின் உருட்டலும் அவளை அச்சம் கொள்ள வைத்தன.

புரொபசர் நிம்மியின் கண்கட்டை அவிழ்த்தார். அவளிடம் பேசத் தொடங்கினார் முன்போல.

''உன் விழிகள் செருகிக் கொள்கின்றன. இன்பமான பரவசம் உன் தேகத்தில் ஓடுகிறது. சுகமான நித்திரை உன்னைத் தழுவுகிறது. படுக்கப் பார்க்கிறாய். அதனால்தான் உன் உடல் தள்ளாடுகிறது...''

அவர் பேசப் பேச, நிம்மியின் தேகம் முன்னும் பின்னுமாய் ஆடியது, ஆட்டிவிட்ட தொட்டிலைப்போல். விழுந்து விடுகிற அளவுக்கு அவள் சாய்ந்தபோது சரேலெனத் தாங்கிக்கொண்டார் புரொபசர். தோளில் தூங்கிவிட்ட குழந்தையைக் கிடத்துவதுபோல். தரையில் அவளைப் படுக்க வைத்தார்.

''மரங்கள் நிறைந்த, நிழலைத் தவிர வேறில்லாத ஒரு தோட்டத்துக்குள் நீ நுழைந்திருக்கிறாய். அப்பப்பா! எவ்வளவு பழங்கள்! எத்தனை வண்ணங்கள்! பூச்செடிகள்! ஆ! எப்படிப்பட்ட நறுமணம்! இதோ மலர்களைக் கொட்டிக்

குவித்துப் புஷ்பப்படுக்கை தயாரித்திருக்கிறார்கள். நீ அதிலே சுகமாய்ப்படுக்கிறாய். குளிர்ந்த காற்று உன்மீது வீசுகிறது. நீ ஆனந்தமாகத் தூங்கத் தொடங்குகிறாய். தூங்கு. தூங்கு...''

நிம்மி துளிக் கூடச் சலனமின்றிப் படுத்திருந்தாள். அவளுடைய இமைகள் அழுத்தமாக மூடிக்கொண்டன.

ஜெகதா மறுபடியும் அவளை நோக்கி நகர முயன்றாள். புரொபசரின் கை அவள் கையை இரும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டது. ''வா வெளியே'' என்றார். அவள் வரத் தயங்குவதுபோல் தோன்றியதும், வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டு வெளியே வந்தார். கதவைச் சாத்தினார்.

''சொல்!'' என்றார்.

ஜெகதா பயத்துடன் நாற்புறமும் பார்த்துக்கொண்டாள். அந்தப் பிரம்மாண்டமான வீட்டில், கண்ணுக்கெட்டிய தூரத்தில், வேலைக்காரர்கள் யாரும் தென்படவில்லை. பாலைவனத்தில் அனாதையாக நிற்பதுபோன்ற பீதியும் துன்பமும் அவளை வாட்டின.

''அந்தப் பையன் வந்து சொன்னான்... நான் நம்பவில்லை...''

''எந்தப் பையன்?''

''நீங்கள் வேலையை விட்டுப் போகச் சொன்னீர்களாமே அவன்... தினம் சாயந்தரம் நிம்மியை இந்த அறைக்குள் அடைத்துவைத்துச் சித்திரவதை செய்கிறீர்கள் என்று...''

புரொபசர் மித்ரா விகாரமாகச் சிரித்தார். ''நீதான் பார்த்தாயே... அது சித்திரவதையா...''

''அதைக் காட்டிலும் கொடுமை... நிம்மி தினம் சினேகிதியைப் பார்க்கப் போகிறாள் என்று நினைத்திருக்கிறேன்... இந்த வீட்டுக்குள்ளேயே... எனக்குத் தெரியாமல்...''

புரொபசர் மாடியை நோக்கிக் கண்களை உயர்த்தினார். அவருடைய வளர்ப்புப் பூனையின் முனகல் இப்போது பலவீனமாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

''நான்தான் உத்தரவிட்டிருந்தேன் யாரிடமும் சொல்ல வேண்டாமென்று - முக்கியமாக உன்னிடம்'' என்றார்.

தடாலென்று அவர் காலடியில் விழுந்தாள் ஜெகதா. கரகரவென்று வழிந்த கண்ணீர் புரொபசரின் ஷூக்களை நனைத்தது.

''உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன், நிம்மியை விட்டுவிடுங்கள்.'' கழுத்திலிருந்த மாங்கல்யத்தை பிடித்துக்கொண்டு விம்மினாள் ஜெகதா. ''கழுத்தில் கட்டினீர்களே, இந்தத் தாலியின் உரிமையினால் கேட்கிறேன் - என் குழந்தையை - நம் குழந்தையை - விட்டு விடுங்கள். அவளுக்கு இந்த அவல வாழ்க்கை வேண்டாம்.''

''எது அவல வாழ்க்கை?'' புரொபசர் தன் கால்களை உதறினார் கோபத்துடன். பூட்ஸின் கெட்டியான முனைகள் ஜெகதாவின் மோவாயை எகிறித் தள்ளின.

''எது அவல வாழ்க்கை என்று கேட்டேன். பதில் சொல்லு. நிம்மி என்னைக் காட்டிலும் அதிகப் பகழ்பெறப் போகிறாள். இந்தியாவிலேயே தலைசிறந்த பெண் மாஜிஷியனாக, ஹிப்னாடிஸ்டாகப் பிரகாசிக்கப் போகிறாள்...''

விக்கி விக்கி அழுதுகொண்டே இடைமறித்தாள் ஜெகதா.

''உண்மையான, உன்னதமான மாஜிக்கையும் மனோவசியத்தையும் நீங்கள் கடைப்பிடித்து வந்திருந்தால், நானே நிம்மியை உங்கள் காலடியில் உட்கார்த்தி வைத்திருப்பேன். நீங்கள் கற்றிருப்பதெல்லாம் அரக்கத்தனம், பேய்த்தனம்...''

''ஜெகதா!'' அவள் பேச்சை நிறுத்த முயன்றார் புரொபசர். முடியவில்லை.

''விட்டுவிடுங்கள் தயவுபண்ணி என் செல்வத்தை! அவள் படிப்பும் பண்பாடும் உள்ள பெண்ணாக வளர வேண்டும்; பெண்ணுக்குரிய ஆசைகளுடன், பெண்ணுக்குரிய லட்சணங்களுடன் நல்ல மனைவியாக. நல்ல தாயாக, நல்ல குடும்பத் தலைவியாக அவள் விளங்கவேண்டும். தயவு பண்ணி அவளை விட்டுவிடுங்கள்.

வாழைக் குருத்துப்போல . இருக்கிற அவள் வாழ்க்கையை முறித்து முடமாக்கி, உங்களுடைய கெட்ட பரிசோதனைகளில் சுட்டுக் சுருக்காதீர்கள்... பெற்றவள் கெஞ்சுகிறேன், என் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுங்கள்...''

''நிறுத்து!'' தரையை வெகுபலமாகக் காலினால் உதைத்தார் புரொபசர் மித்ரா. ''உன் உணர்ச்சி! உனக்கென்று ஓர் உணர்ச்சி இந்த மித்ராவின் குடும்பத்திலாகட்டும், தொழிலிலாகட்டும், யாருக்கும் அப்படியொன்று தனியாக இருந்தது கிடையாது. இருக்கவும் கூடாது! புரிகிறதா! இங்கே ஒரே மனம் தான் உண்டு - இந்த மித்ராவின் மனம். இங்கே ஒரே உணர்ச்சிதான் உண்டு - இந்த மித்ராவின் உணர்ச்சி.''

''தெரியும், எனக்குத் தெரியும்!'' என்று முகத்தை மூடிக்கொண்டு தேம்பினாள் ஜெகதா. ''ஆனால் நிம்மி ஒருத்திக்கு மட்டும் விதிவிலக்குக் கொடுங்கள்!''

''இந்த ஒன்றில்தான் நான் நிச்சயமாக விட்டுக் கொடுக்கப் போவதில்லை. கேள், அடுத்த இருபதாம் தேதி என் மாஜிக் ஷோ பிரமாதமாக கவர்னர் தலைமையில் நடக்கவிருக்கிறது. அப்போது முதல் தடவையாக நிம்மியும் ஸ்டேஜுக்கு வரப்போகிறாள். நான் கற்றுத் தந்திருக்கிற வித்தைகளைக் காட்டப்போகிறாள்...''

''ஐயையோ! வேண்டாம்!''

''உன் எதிர்ப்பையெல்லாம் இப்போதே மூட்டை கட்டி வைத்துவிடு. புரிகிறதா! இந்த வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஓரளவு சுதந்திரம் கொடுத்திருக்கிறேன். அதற்குள்தான் அவர்கள் வளைய வரவேண்டும். மீறிப்போய் அதிகப்படி சுதந்திரம் கேட்டால் -'' புரொபசர் நிறுத்தினார். ''என்னுடன் மாடிக்கு வா'' என்று கூறி முன்னே நடந்தார்.

நடுங்கும் கால்களைச் சிரமத்துடன் இழுத்துக்கொண்டு அவரைப் பின் தொடர்ந்தாள் ஜெகதா.

தன் அறையை அடைந்ததும் கதவைத் திறந்தார் புரொபசர். ''பார்'' என்று ஜன்னலைக் காட்டினார்.

கம்பிகளின் இடுக்கில் சிக்கிவெகு நேரமாகக் கூவிக் கொண்டிருந்த பூனை, உயிரற்ற சடலமாகத் தொங்கித் துவண்டு கிடந்தது.

''இந்தக் கதிதான்'' என்று தன் வாக்கியத்தைப் பூர்த்தி செய்தார் புரொபசர் மித்ரா.

## 2

Vanishing Alarm clock - Mystic coins - The Third Eye - Miracle Mug - Arm chopper - For - all Kind of Magic Apparatus visit Mithra's Workshop

பேப்பர்க்காரன் போட்டு விட்டுப் போன தினசரியைப் புரட்டிக் கொண்டிருந்தபோது இந்த வரி விளம்பரம் ஜெகதாவின் கண்ணில் பட்டது.

புரொபசர் மித்ராவின் பங்களாவை அடுத்து மூன்று சிறிய கட்டிடங்கள் இருந்தன. இழைக்கும் சத்தமும் அடிக்கும்

சத்தமும் வெடிக்கும் சத்தமும் வெட்டும் சத்தமும் அங்கிருந்து பகல் முழுதும் கேட்டுக் கொண்டேயிருக்கும். அமெச்சூர் மாஜிக்காரர்களுக்கும் தொழில் முறை நிபுணர்களுக்கும் தந்திர சாதனங்கள் தயாரித்தனுப்பும் ஓர்க் ஷாப் அவை. அவைகளைப் பற்றி வாரத்துக்கொருமுறை தினசரிகளில் 'வரி விளம்பரம்' கொடுப்பது வாடிக்கை. ஜெகதா கையில் வைத்திருந்ததும் அதுதான்.

'தெய்வமே! இந்த மாதிரி விற்பனை வியாபாரம் இதிலெல்லாம் நிம்மியை ஈடுபடுத்தட்டுமே? வேறு என்னென்னவோ பரிசோதனை செய்கிறேன் என்கிறாரே!' என்று புலம்பியபடியே மகளின் அறைக்குள் நுழைந்தாள் ஜெகதா.

''நிம்மி! நிம்மீ!'' மகளின் போர்வையை விலக்கி, தோளை மெல்லத் தட்டி எழுப்பினாள்.

''ஊம்'' என்று முனகிக்கொண்டே புரண்டுபடுத்தாள் நிம்மி.

இரவு படுக்கும்போது தலையில் சூடியிருந்த ஒற்றை ரோஜாப்பூ நழுவி, முதுகுப் பக்கம் ஜாக்கெட்டுக்குள் பாதி செருகிக்கொண்டிருந்தது. 'என் கண்மணிக்குப் பூ கூட உறுத்தும்' என்று தன்னுள் சொல்லிக்கொண்டே அதை வெளியிலெடுத்தாள் ஜெகதா. ''நிம்மி, காலேஜுக்கு அப்புறம் நேரமாகிவிடுமே, கண்ணே! எழுந்திரம்மா'' என்றாள் மீண்டும்.

''மணி என்ன ஆகிறது?'' மெத்தையில் முகத்தைப் புதைத்தபடி கேட்டதால், சொற்கள் ஒரு வேடிக்கையான ஒலியுடன் வெளிப்பட்டன.

''எட்டு ஐந்தாகிறதம்மா'' என்றாள் ஜெகதா, அலமாரியிலிருந்த அலாரத்தை நோக்கியபடி.

''அவ்வளவு ஆகிவிட்டதா!'' கண்களைக் கசக்கிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள் நிம்மி. முழங்காலைக் கட்டிக்கொண்டு, ''ராத்திரி இரண்டு மணிவரை நான் தூங்கவில்லை'' என்றாள்.

''அவ்வளவு நேரம் படிப்பானேன்?'' என்று பெண்ணின் கூந்தலைக் கோதினாள் தாய்.

''படித்தேன் என்றா அம்மா சொன்னேன்? தூக்கம் வரவில்லை. புரண்டுகொண்டேயிருந்தேன். கொஞ்ச நாளாய் அப்படித்தானம்மா இருக்கிறது.''

நிம்மியின் முகத்தைத் தன் பக்கம் திருப்பி உற்றுக் கவனித்தாள் ஜெகதா. இனம் புரியாத சங்கடமொன்று அவள் வயிற்றைப் பிசைந்தது. யௌவனத்தின் உற்சாகம் கொப்புளிக்க வேண்டிய கண்கள், ஏதோ கனவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதுபோல எட்டாத தொலைவில் ஆழமாகக் காணப்பட்டன.

''உன் அப்பாவின் கூத்துக் கெல்லாம் நீ இடம் கொடுக்காதே நிம்மி!'' சொல்லும்போதே ஜெகதாவின் குரல் தழுதழுத்தது. ''எனக்குக்கூடத் தெரியாமல்தானே இதை யெல்லாம் வைத்துக்கொண்டிருக்கிறாய்? எத்தனை நாளாய் நடக்கிறது அது?''

''இரண்டு மூன்று வருஷமாய் அவரிடம் மாஜிக் கற்றுக்கொண்டுவருகிறேன், அம்மா! உனக்குத் தெரியாதா? அவர் ரூமுக்குப் போகும்போதெல்லாம் நானே கேட்பேன். சொல்லித் தருவார். வேடிக்கைதானே அம்மா? எதற்காக மனசை அலட்டிக்கொள்கிறாய்?''

''வெறும் மாஜிக் மட்டுமானால் கவலைப்பட மாட்டேன். இவர் மனோவசியம் அது இது என்றெல்லாம் கற்றுத் தருகிறாரே! நீ ஏன் உடன்படுகிறாய் அதற்கெல்லாம்?''

''அது இப்போதுதான் ஆரம்பித்தார். இரண்டு மூன்று மாதம்தான் ஆகிறது. அம்மா, அது ஓர் ஆச்சரியமான, அதிசயமான அனுபவம்'' என்றாள் நிம்மி.

''அது எப்படிப்பட்ட அனுபவமானாலும் சரி, உனக்கு வேண்டாம். நான் சொல்வதைக் கேள், நிம்மி.''

''நீ போம்மா. சுத்தப் பயந்தாங்கொள்ளி!'' என்று கூறிய மகளை ஏறிட்டு நோக்கினாள் ஜெகதா. அப்படியொரு வாக்கியத்தைச் சொல்லும்போது முகத்தில் தென்பட வேண்டிய புன்னகையைக் காணோம். அப்புறம்தான் ஞாபகம் வந்தது - இரண்டு மூன்று மாத காலமாயிற்று நிம்மியின் கலகலப்பான சிரிப்பைக் கேட்டு என்ற உண்மை.

''முதல் நம்பர் கட்டுப்பெட்டி அம்மா நீ. ஏதாவது சினிமா நாடகம் என்றாலாவது கெட்டுப் போய்விடுவேனோ என்று நீ பயப்படலாம். இதிலே என்ன தவறு அம்மா?''

''உனக்கு எப்படி நிம்மி விளக்குவேன்?'' என்று கையைப் பிசைந்து கொண்டாள் ஜெகதா. என்னென்னமோ சொல்ல நினைத்தாள் அவள். 'சினிமாவிலும் நாடகத்திலும் உள்ளம் கெட்டுப் போகலாம்; சிலசமயம் உடம்பும் கெட்டுப்போகலாம். இது - உன் அப்பா உனக்கு ஏற்படுத்த நினைக்கிற வாழ்க்கை - உன் ஆன்மாவையே அழிக்கப் போகிறதே!' என்று கூற அவள் உதடுகள் துடித்தன. ஆனால் கணவனின் முகமும் அவள் மனக்கண் முன் தோன்றி அவள் நாவைக் கட்டுப்படுத்தின.

''போய்க் குளித்து உடைமாற்றிக்கொண்டு பலகாரம் சாப்பிடப் போ. சமையல்காரர் ரெடியாய்க் காத்துக் கொண்டிருக்கிறார்'' என்று கூறிவிட்டு, கண்களைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

அந்தப் பங்களா ஒன்றையொன்று பார்த்தாற்போல் இரண்டு பகுதிகளாகப் பிரிந்திருந்தது. நடுநடுவே ஹால்

அல்லது திறந்த முற்றும் உண்டு. இரண்டு வரிசையிலும் ஒரேமாதிரியான அறைகள் உண்டு. இடது பகுதியை மட்டுமே புரொபசரின் குடும்பத்தினர், வேலைக்காரர் ஆகியோர் உபயோகித்து வந்தனர். வலது பக்கமுள்ள அறைகள் புரொபசரின் சொந்த உபயோகத்துக்காகவும் சோதனைகளுக் காகவும் உள்ளவை.

ஜெகதா அந்தப் பகுதியை நோக்கித்தான் நடந்தாள். ஆனால் அவள் மனத்தில் திட்டம் எதுவும் இருக்கவில்லை. கல்லெறிந்த குட்டையாக அவள் உள்ளத்தில் எண்ண அலைகள் முடிவற்றுப் பிரிந்து விரிந்துகொண்டிருந்தன.

பளபளக்கும் ஒரு சிறுபொருள் அவள் நடையை நிறுத்தியது. குனிந்து பார்த்தாள்.

மூடி. அழகிய மூடி. சிறிய மூடி. விஸ்கி புட்டியின் அலங்கார மூடி.

அருகிலிருந்த அறையைநோக்கினாள். அவள் முகத்தில் சிறிதளவு தெளிவு உதித்தது. அவள் கண்ணில் லேசாக ஒளி வந்தது.

சாத்தியிருந்த கதவைத் திறக்க முயன்றாள். முடிய வில்லை. வெளிப்புறத்திலிருந்து சாவியை நுழைத்துப் பூட்டக்கூடிய தாழ்ப்பாள் அமைப்பு அந்தக் கதவில் இருந்தது. யார் பூட்டியிருப்பார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

மெதுவே அதிக ஓசைப்படுத்திவிடாதபடி ஜாக்கிரததை யாகத் தட்டினாள்.

தட்டலுக்குப் பலனில்லாது போகவே, ''நீலகண்டன்! நீலகண்டன்!'' என்று அடிக்குரலில் கூப்பிட்டுப் பார்த்தாள். அந்தப் பெயரை இரண்டு மூன்று முறை உச்சரிப்பதற் குள்ளேயே மேலண்ணம் உலர்ந்துவிட்டது.

உள்ளே யாரோ அசைகிறமாதிரி ஓசைகள் கேட்டன. ஆனால் யாரும் கதவைத் திறக்கவில்லை. ஜெகதா மாடிப் பக்கம் அவசரமாய்ப் பார்த்து விட்டு, கதவின் சாவித் துவாரம் வழியே உட்புறம் நோக்கினாள். நாற்காலியின் ஒரு பகுதியும் மேஜையின் விளிம்பும் மட்டுமே அந்தத் துவாரத்தின் வட்டத்துக்குள் புலப்பட்டன. தொளதொளவென்ற பைஜாமா அணிந்துள்ள ஒருவர் அந்த மேஜைமீது காலைத் தூக்கிப் போட்டுக்கொண்டிருந்தார். நாற்காலியில் ஒரேயடியாகச் சரிந்தாற்போல் சாய்ந்திருக்க வேண்டும் என்று தோன்றியது, அந்தக் கால்கள் மேஜைமீது கிடந்த கோணத்தைக் கவனிக்கையில்!

சாவித் துவாரத்தில் உதடுகளைப் பொருத்திக்கொண்டு, ''நீலகண்டன்!'' என்று கூப்பிட்டாள் ஜெகதா. மீண்டும் தலையைத் தாழ்த்திக் கண்களால் கவனித்தாள். அந்தக் கால்கள் அப்படியே தான் கிடந்தன. நகரக் காணோம்.

கதவின் கைப்பிடிக் குமிழைப்பிடித்துத் திருகினாள். திறந்துகொள்ளவில்லை. எதனால் அந்தத் திடீர் உறுதி பிறந்ததோ, அவள் மாடியை நோக்கி நடந்தாள்.

புரொபசரின் அறையில் அவர் மேஜைமீது சாவி இருக்கும் என்று அவளுக்குத் தெரியும். அதைமட்டும் எப்படியாவது...! எப்படி?

யோசனைசெய்து முடிக்கு முன்பே அவள் புரொபசரின் அறைக்குள் நுழைந்துவிட்டாள். பின்கையைக் கட்டிய வண்ணம், திறந்த ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்தவாறு நின்றிருந்தார் மித்ரா. அவருடைய அகலமான முதுகு, அந்த அறையையே அடைத்த மாதிரி வியாபித்திருந்தது.

ஜெகதா உள்ளே நுழையும் சப்தத்தைக் கேட்டதுமே, ''யாரது?'' என்று கடுகடுத்தபடி திரும்பினார் அவர்.

ஜெகதா மிடறு விழுங்கினாள். ''வேலைக்காரி, பையன் இரண்டு பேரும் மட்டம் போட்டுவிட்டார்கள். அறையை நாமாவது சுத்தப்படுத்தலா மென்று வந்தேன்'' என்று சொல்லி முடிப்பதற்குள் மூச்சு வாங்கியது.

''சீக்கிரம் செய்'' என்று கூறிவிட்டுத் திரும்பவும் வெளிப்புறமே நோக்கலானார் புரொபசர்.

சோபாக்களையும் நாற்காலிகளையும் தூசி தட்டினாள் ஜெகதா. மேஜையை அங்குலம் அங்குலமாக நெருங்கும் போது அவளுடைய படபடப்பே அவளை வீழ்த்திவிடும் போலிருந்தது. மேஜைமீதிருந்த புத்தகங்களைத் தட்டினாள். அடுக்கி வைத்தாள். நகர்த்தினார்.

எங்கே அந்தச் சாவி?

வழக்கமாய்ப் புரொபசரின் மேஜை மீதிருக்கும் மண்டையோட்டை நகர்த்தியபோதுதான், அதன் பல்வரிசையில் மாட்டப்பட்டிருக்கும் சாவி கண்ணில் பட்டது. மெல்லக் கழற்றி மேஜை மீது வைத்துக்கொண்டாள். சற்றுத் தள்ளியிருந்த குப்பைக் கூடையை எடுத்து வந்து, மேஜைக்குக் கீழே ஏந்திக்கொண்ட வண்ணம். மேஜையைப் பிரஷினால் துடைக்கலானாள். அப்படித் துடைத்துக் கொண்டே விருட்டென்று அந்தச் சாவியை -

கடவுளே! அவள் நினைத்தபடி நேரே குப்பைக் கூடைக்குள் விழாமல், தரையில் போய் வெளியே விழுந்தது சாவி. இன்னும் ஓரங்குலம் தள்ளியிருந்தால் மொசைக் தரையில் விழுந்து கிணிங்கென்று ஓசையெழுப்பியிருக்கும். நல்ல காலம், மேஜையின் அடியில் விரிக்கப்பட்டிருந்த சிவப்புக் கம்பளத்துக்குள்ளேயே விழுந்ததால் மொத்தென்று ஒரு சிறு ஒலி மட்டுமே கேட்டது.

அப்படியும்கூடப் புரொபசரின் பாம்புச் செவிக்கு அது கேட்டுவிட்டது. ''என்ன விழுந்தது?'' என்று கேட்டபடி

அவர் திரும்பியபோது, சாவியைப் பொறுக்கிக் குப்பைக் கூடைக்குள் போட்டுக்கொண்டுவிட்டாள் ஜெகதா.

''ஒன்றுமில்லையே?...'' என்று பதிதளித்துவிட்டு, குப்பையைக் கொட்ட வேண்டிய சாக்கில் வெளியேறி, கீழ்ப்படிக்கட்டை அடைந்த பிறகுதான் வியர்வையினால் தான் தெப்பலாய் நனைந்திருப்பதை உணர்ந்தாள்.

கூடையைப் படியின் கீழேயே வைத்தாள். சாவியை மட்டும் எடுத்துக் கொண்டாள். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே பழைய அறையை அடைந்தாள்.

சாவியைச் செருகி, சரக்கென்று திருகி, கதவைத் திறந்து எட்டிப் பார்த்தபோது -

ஒரு வினாடி அவளுக்கு இருதயத்தை என்னவோ செய்தது.

''நான்தான் ஜெகதா'' என்று அறிவித்தாள் கிசுகிசுக்கும் குரலில்.

நாற்காலியில் சாய்ந்திருந்தவர் தன் கால்களை மேஜையிலிருந்து எடுக்கவில்லை. ஆனால் முகத்தைத் திருப்பினார்.

''வா ஜெகதா'' என்று சொல்ல சில வினாடிகள் பிடித்தன அவருக்கு. அதற்குக் காரணம் திகைப்போ ஆச்சரியமோ அல்ல; போதையிலிருந்து புத்தியைத் திருப்ப அந்த அவகாசம் தேவைப்பட்டது.

அவர் கண்கள் செக்கச் செவேலென்றிருந்தன. ஒரு கையில் மதுக்கோப்பையும் மறு கையில் மதுப்புட்டியும் பிடித்திருந்தார். அவருக்குப் பின்புறமிருந்த பெரிய அலமாரியை மதுப்புட்டிகளே அடைத்திருந்தன. அவருடைய ஜிப்பாவில் பொத்தான்கள் போடப்படாதிருந்தபோதிலும், தலைமயிர் சரியாக வாரப்படாத போதிலும், முகம்

முழுமழுவென்று ஷேவ் செய்யப்படாதபோதிலும் அவர் ஒருவிதக் கவர்ச்சியுடன் காணப்பட்டார். குடிப் பழக்கத்தினால் அவருடைய கம்பீரம் குன்றவில்லை. இருபது வருடங்களுக்கு முன் அவர் எந்தப் பெண்ணின் உள்ளத்தையும் கிறுகிறுக்கச் செய்யக்கூடிய வாலிபராகத் திகழ்ந்தார் என்றால், இப்போதும் முதிர்ச்சியின் கவர்ச்சி அவரிடம் இருக்கவே செய்தது.

தயக்கத்துடன் அவரை நோக்கிச் சென்ற ஜெகதா, அவர் கையிலிருந்த மதுப்புட்டியையும் கோப்பையையும் லாகவமாக வாங்கி, அலமாரிக்குள் வைத்துக் கதவை மூடினாள்.

''நீலகண்டன்! உங்களிடம் ஐந்து நிமிடம் பேசவேண்டுமென்று வந்திருக்கிறேன். தயவு பண்ணிக் காது கொடுத்துக் கேளுங்கள்'' என்றாள்.

''வித் ப்ளெஷர்'' என்று கூறிவிட்டு நாற்காலியில் சற்றே நிமிர்ந்து அமர்ந்தார் நீலகண்டன். ''ஆனால் நீ சொல்வதைக் கேட்டுக்கொண்டே நான் பாட்டுக்கு...'' அவர் கை அலமாரியைக் காட்டியது.

''வேண்டாம். புத்தித் தெளிவோடு எனக்கு வழி சொல்லவேண்டும் நீங்கள். இந்த இருபது வருடத்தில் உங்களை நான் எதுவும் கேட்டதில்லை. இனி மேலும் கேட்கக்கூடிய சந்தர்ப்பம் வரப்போவதில்லை. இந்த ஒருமுறை மட்டும் எனக்காக நீங்கள் ஒத்தாசை செய்து தானாகவேண்டும்...'' கதவைப் பார்த்துக் கொண்டாள் ஜெகதா. மூடித்தான் இருந்தது.

நீலகண்டன் எழுந்துகொண்டார். தள்ளாடி நடந்து அறையின் மூலையிலிருந்த வாஷ் பேசினில் குழாயைத் திறந்துவிட்டு, குளிர்ந்த தண்ணீரை முகத்தில் பளீர் பளீரென்று அடித்துக் கொண்டார். கைக்குட்டையை நனைத்துப் பிழிந்து தலையின்மீது ஒற்றிக்கொண்டார். திரும்ப வந்து

நாற்காலியில் அமர்ந்து, ''சொல்லு'' என்றபோது அவர் பார்வையில் ஓரளவு தெளிவு ஏற்பட்டிருந்தது. குரலிலும் குழறல் குறைந்திருந்தது.

''வெறும் அன்னக்காவடியாய்க் கிடந்த என் கணவரை நீங்கள் தான் கைதூக்கிவிட்டீர்கள். மனைவிக்கும் கைக்குழந்தைக்கும் அரை வயிற்றுச் சோறு போடக்கூட லாயக்கில்லாதவராகத் திரிந்துகொண்டிருந்தவருக்கு, உங்களுக்குத் தெரிந்த வித்தைகளைச் சொல்லித் தந்தீர்கள். மாஜிக்கிலிருந்து மனோவசியம் வரை பலவற்றையும் கற்றுக் கொடுத்து, முதலில் பிழைப்புக்கு வழியும், பிறகு புகழுக்கு வழியும், கடைசியில் செல்வத்துக்கும் அதிகாரத்துக்கும் புரொபசர் பட்டத்துக்கும் வழியும் ஏற்படுத்தித் தந்தீர்கள். எதையும் நான் மறுக்கவில்லை... ஏன், கீர்த்தியோ பணமோ எதுவானாலும் உங்கள் நண்பரே அனுபவிக்கட்டும் என்று தாரைவார்த்து விட்டு இந்த நான்கு சுவர்களுக்குள்ளேயே அடைந்து கிடக்கிறீர்களே. அந்தப் பெருந்தன்மையையும் நான் மறுக்கவில்லை...''

''நானா அடைந்து கிடக்கிறேன்? எனக்குத்தான் உன் புருஷன் அருமையான தனியுலகம் ஏற்படுத்தித் தந்திருக் கிறானே! அப்புறம் எனக்கென்ன குறைச்சல்?'' நீலகண்டன் அலமாரியை ஒருமுறை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டார். புன்னகை செய்தார். ''ஜெகதா! இருபது வருடத்துக்கு முன்பு எப்படி அப்பாவித்தனமாய்க் குழந்தைபோல் புலம்புவாயோ அதேபோல்தான் இன்றைக்கும் புலம்புகிறாய்! நறுக்கென்று விஷயத்துக்கு வர உனக்கு என்றைக்குத்தான் தைரியம் வரப்போகிறதோ!''

''என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், என் கண்மணியைப்பற்றிக் கவலைப்படுங்கள். அதற்காகத்தான் இப்போது வந்தேன்.''

''யார், நிம்மியா? அவளுக்கென்ன?'' முதல் முறையாக நீலகண்டனின் குரலில் ஓர் அக்கறை வெளிப்பட்டது.

ஜெகதாவின் கண்ணில் நீர் துளித்தது. ''நிம்மிக்குத் தன்னை போலவே மாஜிக்கும் மனோவசியமும் கற்றுத் தரப்போகிறாராம்! தன் வாழ்க்கையையே அவளும் வாழும்படி செய்யப்போகிறாராம்!''

''அவன் ஒரு முட்டாள்!'' என்று மேஜையைக் குத்தினார் நீலகண்டன். ''ஜெகதா! நிம்மியை அவன் வழியில் திருப்ப ஒரு நாளும் நான் இடந் தரமாட்டேன்! நீ கவலையே படாதே!''

''யாருக்கு என்ன கவலை?''

புதிய குரலைக் கேட்டதுமே நடுங்கிப்போன ஜெகதா, கதவைத்திறந்துகொண்டு உள்ளே வரும் புரொபசரை நிமிர்ந்து பார்க்கவும் அஞ்சினாள்.

நீலகண்டன் வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டார். புரொபசர் மித்ரா அவரருகே வந்தார்.

''ஜெகதாவுக்கு என்ன தெரியுமென்று நினைத்துப் பெரிதாய்ப் பேசிக்கொண்டிருக்கிறாய்? அவளுக்கு எதுவுமே தெரியாது. மேஜைமீதிருக்கிற ஸ்கலை நகர்த்தினால் திரும்ப அதே இடத்தில் வைக்க வேண்டுமென்பதுகூடத் தெரியாது. எந்தப் பொருளும் ஓரங்குலம் இடம் மாறினால்கூட நான் கண்டுவிடுவேன் என்பதும் தெரியாது'' என்றார் மனைவியைப் பார்த்தபடி. பிறகு சட்டென்று நினைவு வந்தவர் போல, ''எனக்கு பத்மஸ்ரீ கொடுக்கப் போவதாய்க் கடிதம் வந்திருக்கிறது. எல்லாம் உன் ஆசீர்வாதம்தான் நீலகண்டன். உனக்குக் கிடைத்திருக்கவேண்டிய கௌரவம்... அடடா! இந்த நிகழ்ச்சியை நாம் ஸெலப்ரேட் செய்ய வேண்டாமோ? வேர் இஸ் த கிளாஸ்?'' என்று அலமாரிக்குச் சென்றார்.

அவரைத் தடுக்கிற மாதிரி குறுக்கே வர முயன்றாள் ஜெகதா.

புரொபஸர் அவளை உறுத்துப் பார்த்தார். இரண்டு வினாடிகள் இருக்காது. அந்தப் பார்வையின் தீவிரத்தைத் தாங்கமாட்டாதவளாக, ஓரடி ஈரடி மூன்றடியாகப் பின்வாங்கினாள் ஜெகதா. இறுதியில் முகத்தைப் பொத்திக்கொண்டு அறையை விட்டே வெளியேறினாள்.

நீலகண்டனுக்கு இந்தப் போராட்டங்கள் எதுவும் மனத்தில் பதியவில்லை. கடைக்காரன் மிட்டாய் ஜாடியைத் திறக்கும்போது ஆவலுடன், வேறெவ்வித கவனமுமில்லாத நிலைகுத்திப் பார்த்துக் கொண்டிருக்குமே குழந்தை, அதுபோல, மித்ரா அலமாரியைத் திறப்பதையும், புட்டியையும் கிண்ணத்தையும் எடுத்துவருவதையும் மேஜைமீது கிண்ணத்தை வைத்து, செந்நிற அமுதத்தை வழிய வழிய ஊற்றுவதையுமே அவர் பார்த்துக்கொண்டிருந்தார். சிரித்துக் கொண்டே ஊற்றினார் மித்ரா. கிண்ணம் நிரம்பியதும், பாய்ந்து எடுத்து, ஆசையுடன் உறிஞ்சினார் நீலகண்டன். கடந்த சில நிமிடங்களாக அவரிடம் காணப்பட்டிருந்த புத்தித்தெளிவு விடைபெற்றுக்கொண்டது. உலகம் கோணலாயும் கோமாளித்தனமாயும் தோன்றலாயிற்று.

கிண்ணத்தைக் காலிசெய்து விட்டு மீண்டும் நிரப்ப வேண்டி நீட்டினார் நீலகண்டன். ''மித்ரா! எவ்வளவு நாளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன் ஷீவாஸ் ரீகல் விஸ்கி வரவழைத்துக் கொடு என்று?''

''புட்டி நானூறு ரூபாயானாலும் பரவாயில்லை வாங்கி வா என்று பல பேரிடம் சொல்லியிருக்கிறேன். இந்த வாரம் வரும்... அது சரி, நான் எவ்வளவு நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன், நீ சொல்லித் தரவேண்டிய விஷயம் ஒன்று பாக்கி இருக்கிறதென்று!'' திருப்பிக் கேட்டார் புரொபசர்.

புருவங்களைச் சுளித்தார் நீலகண்டன். ''எதைச் சொல்கிறாய்?''

''ரீகால் ஆஃப் ஃபெயிண்ட் மெமரீஸ் என்று நீயே சொல்லியிருக்கிறாய்'' என்று நினைவூட்டினார் புரொபசர். ஆனால் நீலகண்டனின் காலிக் கிண்ணத்தை நிரப்பவில்லை. ''மனோவசியத்தின்மூலம் ஒருவரைக் கட்டுப்படுத்தி, பல வருடத்துக்கு முன்பு, ஒரு குறிப்பிட்ட தேதியன்று அவர் வாழ்க்கையில் என்ன நடந்தது என்பதைக் கூறவைக்க முடியும் என்று நீ சொல்லியிருக்கிறாய். நினைவில்லை?''

''ஆமாம்...''

''என்னென்ன விதத்தில் பயிற்சி செய்தால் எனக்கு அந்த அளவுக்கு மனோவசிய சக்தி வளரும்? அதைச் சொல்லிக் கொடு. எவ்வளவு நாளாகத் தட்டிக் கழித்துக்கொண்டே யிருக்கிறாய்?''

பாறாங்கல் போல் கனக்கும் தலையை இரு கைகளா லும் தாங்கிப் பிடித்துக் கொண்டார் நீலகண்டன். மேஜையை நோக்கி அவர் சிரம் கவிழ்ந்திருந்தது. ''நான் தட்டிக் கழிக்க வில்லை. நீயும் நானும் அந்தப் பயிற்சிகளைச் செய்யலாமே தவிர பலன் கிடைக்காது என்றுதான் சொல்லிவருகிறேன்.''

''ஏன் கிடைக்காது?''

''ஏனா?'' நீலகண்டனின் குரல் திடீரெனச் சீறிக் கொண்டு புறப்பட்டது. ''ஏன் கட்டாந்தரையில் புல் முளைப்ப தில்லை? ஏன் காய்ந்த பூவில் தேன் சுரப்பதில்லை? ஏன் சணல் கயிற்றில் பட்டு நெய்ய முடியவில்லை? ஒவ்வொரு பொருளுக்குத்தான் ஒவ்வொரு பக்குவம் ஏற்பட முடியும். அதுதான் காரணம். நீ பெற விரும்புவது அசாதாரணமான மனோசக்தி. அதற்கு உன் மனம் பொறாமை, மாற்சரியம், கெட்ட நோக்கம் எதுவுமில்லாம் சுத்தமானதாக, களங்க

மற்றதாக இருக்க வேண்டும். ஆனால் நீ அந்தக் குறிப்பிட்ட மனோசக்தியைப் பெறவேண்டுமென்று துடியாய்த் துடிப்பதைப் பார்த்தால் உனக்கு வேறு ஏதோ நோக்கம் உண்டென்றல்லவா தோன்றுகிறது?''

புரொபசர் அவசர அவசரமாக, ''சே சே! அப்படி எதுவுமில்லை'' என்று கூறியவாறு நீலகண்டனின் நீட்டிய கோப்பையை நிரப்பினார். ''சரி, பயிற்சிகளை எனக்குச் சொல்லிக்கொடு. நான் இன்னொருவருக்குச் சொல்லித் தருகிறேன். அந்த நபருக்கு நீ சொல்கிற குணங்கள் நிச்சயமாய் உண்டு!'' என்றார்.

மதுவை ஒரே மடக்கில் அருந்தி முடித்தார் நீலகண்டன். ''யார் அது?''

கோப்பையை மறுபடியும் நிரப்பிவிட்டு, ''நம் நிம்மிதான்'' என்றார் புரொபசர் மித்ரா.

நிம்மி? அவளைப் பற்றி யாரோ ஏதோ சொன்னார்களே...? நீலகண்டன் யோசித்தார், நினைவு வரவில்லை. இறுதியில், மதுவைச் சுவைத்தபடி பேசினார். ''பேஷ் பேஷ்! நிம்மியென்றால் சரி! நிச்சியமாய் அவளுக்குக் கைகூடும்!''

மித்ராவின் கண்கள் குரூரமாகச் சிரித்துக் கொண்டிருந்தன.

## 3

while some people can not be made to carry out hypnotic suggestions contrary to their principles, there are certainly some who can.

'த்ஸ' என்று சூள் கொட்டியபடி, எஸ்.எட்மண்ட்ஸ் எழுதிய புத்தகத்தை மூடி நகர்த்தி வைத்தார் புரொபசர் மித்ரா. 'நமக்குத் தெரியாதது எதையும் சொல்லவில்லை' என்று

நினைத்துக்கொண்டபோது கர்வச் சிரிப்பு அவர் முகத்தில் பரவியது.

சந்தனக் கலரில் வழவழவென்றிருந்த அந்தப் பிரம்மாண்டமான டைனிங் டேபிளைச் சுற்றிப் பத்துப் பேர் அமர்ந்து சாப்பிடலாம். ஆனால் புரொபசர் ஒருவர்தான் உட்கார்ந்திருந்தார். அந்தத் தனிமையும் அந்த ஒருமையும், மறைவான இடத்திலிருந்து பாயும் மின்சார விளக்கொளியும் அந்த விஸ்தாரமான ஹாலுக்கு ஓர் அமானுஷ்யத் தன்மையை ஊட்டிக் கொண்டிருந்தன.

பளபளக்கும் வெள்ளித் தட்டில் ஜில்லென்ற ஐஸ் தண்ணீரைத் தெளித்துக் கொண்டு அண்ணாந்து பார்த்தார் மித்ரா. கோபத்தின் சாயல் அவர் கண்களில் தோன்றியது.

மேற்கூரையின் இடுக்கிலிருந்து சாதாரண வெள்ளை பல்பின் சாதாரண வெளிச்சம் வந்து கொண்டிருந்ததே காரணம்.

அவருடைய கட்டளைப்படி பங்களாவின் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு நிற வெளிச்சம் இருக்கவேண்டும் - அந்தந்த இடத்தின் தன்மைக்கேற்ப. மனித மனத்தை ஒவ்வொரு போக்கில் திருப்பக்கூடிய சக்தி அந்த நிறங்களுக்கு உண்டு என்று நம்புகிறவர் அவர். சிவப்பு, ஊக்கி உற்சாகப்படுத்தும்; நீலம், தடவிக்கொடுக்கும்; பச்சை, இன்பம் தரும்; ஆரஞ்சு பிரகாசப்படுத்தும்; மஞ்சள் ஊடுருவித் துளைக்கும்; ஊதா, அனாவசியத் திசுக்களைக் கொல்லும்; கருஞ்சிவப்பு, குணப்படுத்தும்; பழுப்பு, ஓய்வளிக்கும் - இவ்வாறு கொள்கை கொண்டவராக எந்தெந்த இடத்துக்கு என்னென்ன நிறத்தில் வெளிச்சம் பரவியிருக்க வேண்டும் என்று குறித்துக் கொடுத்திருந்தார் வேலைகாரர்களிடம். விளக்கையோ பல்பையோ மாற்றும்போது அந்தத் திட்டத்தை அணுவளவும் பிசகாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

சாப்பிடும் இடத்தில், குளுமையான இன்பம் வழங்கும் பச்சை வெளிச்சமல்லவா பரவியிருக்க வேண்டும்? ஏன் இன்று மாறியிருக்கிறது?

மேஜையின் விளிம்போடு பொருந்தியுள்ள பஸ்ஸரை அழுத்தினார் புரொபசர்.

விளக்கம் சொல்ல வேண்டிய சமையல்காரனுக்குப் பதில், கையில் சாதத் தாம்பாளத்துடன் அருகில் வந்து நின்றாள் ஜெகதா.

''அவனுக்கு வயிற்று வலியாம். படுத்திருக்கிறான்'' என்று கூறிய வண்ணம், சாதத்தைப் புரொபசரின் தட்டில் பரிக்கக் குனிந்தாள் அவள்.

''இரு'' என்று அவள் கையை விலக்கிவிட்டார் மித்ரா. மடியில் விரித்துக் கொண்டிருந்த நாப்கிளை மறுபடி நான்காக மடித்து மேஜைமீது வைத்தார். நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு அவர் எழுந்த போது அதில் அமைதிதான் தென்பட்டது. ''எங்கே இருக்கிறான் அவன்?'' என்று மனைவியை வினவியபோது அதில் பரிவுதான் புலப்பட்டது. ''அங்கே'' என்று அவள் சுட்டிக் காட்டிய லம்பர் அறையை நோக்கி அவர் நடந்தபோது அதில் கனவுதான் வெளிப்பட்டது.

''என்னப்பா, உடம்பு சரியில்லையா?'' என்று விசாரித்தார். அடக்கமான, சாதாரணமாக, கீழ்த்தொனியிலான குரலில்.

ஆனால் எரிமலை வெடித்திருந்தால்கூட அந்தச் சமையற்காரன் அப்படி நடுங்கியிருக்க மாட்டான். வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தவன், வெற்றுடம்பை எஜமானுக்குக் காட்டக்கூடாதென்று பனியனை அவசரமாக மாட்டிக் கொண்டான். மார்புப் புறத்திலிருந்த பொத்தல்களை மறைத்தாற்போல் கைகளைக் கட்டிக்கொண்டு, ''சும்மா... லேசாய் வயிற்றுவலி...'' என்றான்.

''மூன்று மாசம் முன்புகூட வயிற்றுவலி வந்தது போலிருக்கிறதே?''

அவன் தலையைச் சொறிந்தான். ஞாபகம் வரவில்லை போலும்.

''என்ன, நினைவில்லையா? மூன்று மாசம் முந்தி ஒரு செவ்வாய்க் கிழமை காலையில் நீ கடற்கரைக்குப் போய், ஸ்நானம் செய்துவிட்டு வந்தாய். லுங்கி கட்டியிருந்தாய். மத்தியான்னம் மூன்று மணிக்கு உன் சினேகிதன் வடிவேல் என்கிறவன் உன்னைப் பார்ப்பதற்காக வந்திருந்தான். ஏழரை மணிக்கு நீ வயிற்று வலி என்று தோட்டத்தில் சிமெட்டிப் பெஞ்சில் படுத்திருந்தாய்...''

''ஆமாம், எஜமான்'' சமையல்காரனுக்குத் தேகம் நடுங்கியது. அவ்வளவு கச்சிதமாக அவர் கொடுத்த விவ்ரங்களைக் கேட்டதும். டயரியைப் பார்த்த படியே படிக்கிற மாதிரி, சினிமாவைப் பார்த்தபடியே விவரிக்கிற மாதிரி, எந்த ஒரு குறிப்பிட்ட தினத்தையும் மனக்கண் முன்னே கொண்டுவந்து நிறுத்தி வைத்துக்கொண்டு அடுக்கு மேல் அடுக்காக அன்றைய நிகழ்ச்சிகளை விவரிக்கும் திறன் தன் எஜமானனுக்கு உண்டு என்று பல சந்தர்ப்பங்களில் அவன் கண்டிருக்கிறான். கண்டு அசந்திருக்கிறான். இன்று நோயுற்ற பலவீனமான நிலைமை தலைகுப்புற வீழ்த்தி விட்டாற் போல் தோன்றியது.

ஆறிப்போன சாதத்தை வைத்துக்கொண்டு எட்டத்தில் நின்றிருந்தாள் ஜெகதா. புரொபசரின் அமைதிக்கும் சாவ தானத்துக்கும் பின்னே பாம்பொன்று படமெடுத்தாடப் போகிறது என்ற அச்சம் அவளுக்குக் கால்கட்டும் வாய்க் கட்டும் போட்டிருந்தது.

மித்ரா தொடர்ந்து கேட்டார், சமையற்காரனிடம்: ''அப்போது - அந்த தடவை வயிற்றுவலி வந்த போது - என்ன சொன்னேன் உன்னிடம்?''

''வைத்தியம் பார்த்துக்க, அலட்சியமாயிருக்காதேன்னு சொன்னீங்க!''

''ஓகோ!'' புரொபசர் உதடுகளை மடித்துக் கொண்டு சுளித்துக் கொண்டும் அவனைக் கண் கொட்டாது பார்த்தார். ''வேறு எதுவும் சொல்லவில்லை நான்?''

அதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை அவன். ''நீங்க சொன்னாப்போலவே இந்த வாட்டி டாக்டரண்டை போனேனுங்க. மருந்து கொடுத்தாங்க, மூணுவேளை சாப்பிடச்சொல்லி'' என்று அவன் அவசரமாகப் பேசிய விதமும், படபடப்பாக அலமாரியைத் திறந்த விதமும், புரொபசரிடம் அவன் எதையோ மறைக்க முயலுகிறான் என்பதை வெளிப்படுத்தின.

''இதோ இந்த மருந்து தானுங்க'' என்று ஒரு புட்டியை எடுத்து வந்து காட்டினான் சமையற்காரன்.

கைநீட்டி வாங்கினார் மித்ரா. அதன் மூடியைத் திருகிக் கழற்றினார். பக்கத்திலிருந்த சாக்கடை வாயில் குபுகுபு வென்று அதைக் கொட்டினார். ''இந்தா'' என்று காலிப் புட்டியை அவனிடம் நீட்டினார்.

ஜெகதா விக்கித்து நின்றாள். சமையல்காரன் தலையைக் குனிந்து கொண்டான்.

''இப்போதாவது நினைவு வந்துதா? போன முறை உனக்கு என்ன சொன்னேனென்று?'' மித்ரா கேட்டார்.

பதிலை வாயால் சொல்லக் கூட அஞ்சியவன்போல அவன் தலையை மட்டுமே ஆட்டின்னான். ஆனால் அது புரொபசருக்குப் போதவில்லை. ''வாயால் சொல்லு'' என்றார்.

''உங்க ரூமுக்கு வந்து வைத்தியம் செய்துக்கச் சொன்னீங்க'' என்றான் சமையல்காரன்.

''அதில் உனக்கு விருப்பமில்லையா, நம்பிக்கை இல்லையா?'' அணுவளவு புரொபசரின் குரல் உயர்ந்தது.

''ஐயாவைப் போய்த் தொந்தரவு செய்யலாமான்னு...'' அவன் மறுப்பு பலவீனமாக இருந்தது.

''எனக்குத் தொந்தரவு இல்லை. அதுதான் தொழில், அதுதான் இன்பம். புரிகிறதா?'' என்றார் மித்ரா. சாக்கடைத் தண்ணீரோடு கலந்துவிட்ட மருந்தையே வெறித்துப் பார்த்தவண்ணம் நின்றிருந்த சமையல்காரன், பொம்மை போல் தலையை அசைத்தான்.

''தெரிந்து கொள், எப்படியும்பட்ட நோயையும் என் மனோவசியத்தின் மூலம் குணப்படுத்த என்னால் முடியும். உன் வயிற்றிலே கட்டி இருப்பதாக எக்ஸ்ரேயில் தெரிந்தால், மயக்க மருந்து கொடுக்காமலே உன் வயிற்றைக் கீறி அந்தக் கட்டியை அகற்றி, கீறிய இடத்தில் தையல் போட்டு மூட முடியும்.''

சமையல்காரனுக்கு மட்டுமல்ல, ஜெகதாவுக்கும் கூட உடல் வெடவெடத்தது.

''இந்த வீட்டிலே யாருக்கு என்ன உடம்பு சரியில்லை யென்றாலும் சரி, எந்த வைத்தியனிடமும் போகக்கூடாது. எப்படிப்பட்ட மருந்தும் சாப்பிடக் கூடாது. என் மனோ வசியத்தினால் அவர்களைக் குணப்படுத்திக் காட்டுவேன். அப்படி என்னையும் மீறிக்கொண்டுபோகிற உயிர் தாராள மாகப் போகட்டும்.''

புரொபசர் டைனிங் மேஜைக்குத் திரும்பினார்.

பழையபடி நாப்கினைப் பிரித்து மடிமீது விரித்துக் கொண்டபோது அவரது நிதானம் ஓரளவு அகன்றிருந்தது. வெறுப்பைக் காட்டும் குரலில், ''பயம், கட்டுப்பாடு டிஸிப்ளின் எல்லாம் குறைந்துகொண்டே போகிறது

ஒவ்வொருவருக்கும்'' என்று முணுமுணுத்தவர், சாதத் தட்டை நீட்டும் கையைக் கவனித்தார். ''நீதான் காரணம்'' என்று உறுமினார் ஜெகதாவை நோக்கி.

''நான்... நானா...?''

''சொந்த மகளைத் தகப்பனுக்கு எதிராகத் தூண்டி விடவில்லையா நீ?'' வெறுப்பை உமிழ்ந்தது அவருடைய குரல். ''ஏன், அன்றைக்கு நீலகண்டனிடம் சென்றாயே, உனக்கு உதவி கேட்க? என்ன ஆயிற்று?''

ஜெகதா தலையைக் குனிந்து கொண்டாள். இரண்டு கோப்பை வழிய வழியக் கிடைத்ததும் நீலகண்டனின் வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிட்டன என்று அவளுக்குத் தெரியும்.

சிறிய தட்டுக்களில் கறிகாய்களை வட்டித்தபடி ஜெகதா மெதுவே பேசினாள்; ''நிம்மியை நன்றாய்க் கவனித்துப் பாருங்கள். உங்களுக்கே தெரியும். நோயாளிப் பெண்ணைப் போல் கண்ணெல்லாம் அடைந்து, மங்கிப்போய்க் கிடக்கிறது. நீங்கள் ஆண்பிள்ளை, மனோதிடம் உள்ளவர் - என்ன விதமான மனோவசியப் பயிற்சி செய்தாலும் கெடுதல் ஏற்படாது. நிம்மி குழந்தை. பெண். அவள்-''

புரொபசர் மித்ரா குறுக்கிட்டார். ''தயவு பண்ணி என் எதிரில் நிற்காதே. எல்லாவற்றையும் இப்படி மேஜைமீது வைத்துவிட்டு அந்தண்டை போ. நானே எடுத்துப் போட்டுக் கொள்கிறேன்.''

''நான் போகமாட்டேன்'' என்று வழக்கத்துக்கு விரோதமாய் அடம் பிடித்தாள் ஜெகதா. புரொபசரை எதிர்த்து இவ்வளவு தைரியமாகப் பேச முடிந்ததைக் குறித்து அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது. அவருக்கு அருகில் இன்னொரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டவள்,

மன்றாடும் குரலில் கெஞ்சினாள். ''ஏன் திடீரென்று இந்த விஷப் பரீட்சைகளில் இறங்கினீர்கள்? நிம்மதியாயும் சந்தோஷமாயும் இருந்த குடும்பத்தில் - ''

''நிம்மதியா! சந்தோஷமா!'' புரொபசர் கர்ஜித்தார். ''என் வாழ்க்கையிலா! ஒருபோதும் இல்லை!''

''ஏன் இல்லாமல்? புரொபசர் மித்ரா என்றால் இந்தியாவில் தெரியாதவர்கள் யார்? வெளிநாட்டில் உங்களுக்கு இணையான புகழும் பெயரும் பெற்றவர் எவர் இருக்கிறார்கள்? மாஜிக், மனோவசியம் இரண்டையும் சரி சமமாகச் செய்து காட்டும் திறமை உங்களுக்கு இருக்கிற மாதிரி யாருக்கு இருக்கிறது? ஆராய்ச்சிப் புத்தகங்கள் எவ்வளவு எழுதியிருக்கிறீர்கள்! உங்களுடைய ஒர்க் ஷாப்பிலிருந்து எவ்வளவு வேடிக்கைப் பொருள்கள் தினம் தினம் விற்பனையாகிச் செல்கின்றன! வீடும் தோட்டமும் காரும் ரொக்கமுமாக உங்களைப்போல சம்பாதித்தவர் யாருண்டு? எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது அரசாங்க விருதும் கிடைத்திருக்கிறது, பத்மஸ்ரீ பட்டமாக.

இதைக் காட்டிலும் வெற்றிகரமான வாழ்க்கை யாருக்கு ஏற்பட முடியும்? இவ்வளவோடு திருப்தியடையக் கூடாதா? ஏன் நிம்மியும் உங்களைப்போல வரவேண்டுமென்று ஆசைப்படுகிறீர்கள்? எதற்காக அவளுக்கு மனோவசியத்தைக் கற்றுக்கொடுக்க முயற்சி செய்கிறீர்கள்?''

அவள் பேசிய நேரம் முழுதும் புரொபசர் மௌனமாகக் கேட்டுக் கொண்டே சாப்பிட்ட வண்ணமிருந்தார். அவள் முடித்ததும் நிமிர்ந்து நோக்கினார்; ''நிம்மியை எதற்குத் தயார் செய்கிறேன் என்றா கேட்கிறாய்? மனோவசிய சக்தியை ஏன் அவளுக்குக் கற்றுக் கொடுக்கிறேன் என்றா கேட்கிறாய்? என்னைப்போல் பேரும் புகழும் அவள் பெறத் தேவை

யில்லை. பணமோ காசோ பதவியோ பட்டமோ பெற்று அவள் என்னைச்சந்தோஷப்படுத்த வேண்டாம். ஆனால் - ஆனால் -''

''ஐயோ! என்னை அப்படிப் பார்க்காதீர்கள். எனக்குப் பயமாயிருக்கிறது!'' நாலைந்து அடி தூரம் பின்வாங்கி, மிரட்சியுடன் நின்று கைகளைப் பிசைந்தாள் ஜெகதா.

ஃபிங்கர் பௌலில் விரல்களை விட்டுக் கழுவிக் கொண்டார் மித்ரா. நாப்கினால் வாயைத் துடைத்தவாறே ஜெகதாவுக்கு நேர் எதிரில் வந்து நின்று கொண்டபோது அவளுக்கும் அவருக்கும் நடுவே இடைவெளி ஓரங்குலத்துக் கும் கம்மியாக இருந்தது. கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் உற்பத்தி ஸ்தானம் தெரியாமலே வெளிப்படுகின்ற தொனியைப்போல அவருடைய நெஞ்சாழத்திலிருந்து பேச்சுப் புறப்பட்டது.

''இந்த மித்ராவைப் பேராசைக்காரன், புகழுக்காகப் பித்துப்பிடித்தவன் என்று உலகம் எண்ணிக் கொள்ளட்டும். ஆனால் கோடிச் செல்வம் குவிந்தாலும் கிடைத்த ஒரு திருப்தியை நிம்மி மூலம் அடையத்தான் நான் பாடுபட்டு வருகிறேன். உலகத்தின் உச்சாணிக் கொம்பான பதவி கிடைத்தால் கூட ஏற்படாத சந்தோஷத்தை நிம்மி மூலம் நான் பெறப் போகிறேன். அது என்ன என்பது உனக்குத் தெரியும், தெரியாத மாதிரி பாசாங்கு செய்கிறாய்!''

''இல்லை, இல்லை! சத்தியமாக எனக்கு உங்கள் போக்குப் புரியவில்லை. மனநிம்மதியும் சந்தோஷமும் கெடுகிறது மாதிரி உங்களுக்கு என்ன நேர்ந்ததென்று கடவுள் ஆணையாக எனக்குத் தெரியவில்லை.

''தெரிய வைக்க வேண்டிய நாள் வரும். அப்போது தெரிய வைக்கிறேன்.'' புரொபசர் மித்ரா கைக்கடியாரத்தைப் பார்த்தபடி புறப்பட்டார். ''ஆமாம், நிம்மி மீது இவ்வளவு அக்கறை உனக்கு எதற்கு?''

அந்தக் கேள்வி ஜெகதாவைத் திகைக்க வைத்தது. ''ஏன் ஒரு தாய் தன் மகள் மீது பாசம் வைப்பதில் என்ன அதிசயம்? பெண்ணின் வாழ்வு நன்றாக அமைய வேண்டுமென்று அக்கறைபடுவதில் தப்பென்ன?''

''அதே அளவுக்கு உன்மீது அவளும் பிரியம் வைத்திருக்கிறாள் என்று நினைக்கிறாய். இல்லையா?''

ஜெகதா பின்னும் தடுமாறினாள், இரண்டாவது கேள்வியில். ''ஆமாம் நிம்மிக்கு என்னிடம் கொள்ளைப் பிரியம் தான்... பாசம்தான்...''

புரொபசர் மறுபடியும் கை கடியாரத்தைப் பார்த்துக் கொண்டார் ''எட்டே கால் ஆகிறது. ஒன்பது ஐம்பத்திரண்டுக்கு அதைப்பற்றி என்ன நினைக்கிறாய் என்று சொல்.''

ஸ்லிப்பர் சளக் சளக்கென்று ஓசைவிட விரைந்து நடந்தவரை வேகமாய்ப் பின்தொடர்ந்தாள் ஜெகதா. ''இருங்கள், என்னவோ சொல்லிவிட்டுப் போகிறீர்களே, என்ன அது?'' என்று பதற்றமாக வினவ வினவ, பதில் தராமலே சென்றார் புரொபசர்.

நிம்மியின் அறையில் தாழ்வாக விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மேசையடியில் படித்துக் கொண்டிருந்தவள், காலடியோசை கேட்டதும் ''ஹலோ டாடி!'' என்று ஓடிவந்து வரவேற்றாள். ''இப்போதுதான் உங்க ஷோவுக்கான புரோகிராமைப் பார்த்தேன், அப்பா! நல்ல சுவாரஸ்யமான ஐட்டங்களெல்லாம் போட்டிருக்கிறீர்களே?''

''ஆமாம், முக்கியமான ஓர் ஐட்டத்தில் நீ தோன்றுகிற மாதிரி அமைத்திருக்கிறேன்'' என்றார் மித்ரா.

''ஆனால் புரோகிராமில் மாஜிக் மட்டும்தான் போட்டிருக்கிறீர்கள். ஹிப்னாடிஸம் கிடையாதா?''

''அதற்கு இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். எனக்கு நல்ல தேர்ச்சி ஏற்பட்ட பிறகுதான் அதை ஸ்டேஜ் செய்ய

வேண்டும்'' என்ற புரொபசர், ''மணி எட்டு இருபத்தைந்து ஆகிறது. பத்து நிமிடம் நான் பிராக்டிஸ் பண்ண உதவி செய்வாய் இல்லையா?''

''ஓ! நிச்சயமாய் அப்பா'' என்றவள் அறை விளக்கைப் படக்கென்று அணைத்தாள். அப்போதுதான் அறைக்கு வெளியே நின்று கொண்டிருக்கும் ஜெகதாவைக் கவனித்தவளாக, ''அம்மா இங்கே இருக்கிறாளே அப்பா! பயந்தாங்குள்ளி! ராத்திரி அவளுக்கு ஜுரம் வந்துவிடும்!'' என்று சிரித்தாள்.

''நிம்மி...'' என்று ஏதோ கூற வாயெடுத்த ஜெகதா கூறாமலே நிறுத்திக் கொண்டாள்.

''ரிலாக்ஸ்டு ஆகப்படுத்துக் கொள் நிம்மி'' என்று புரொபசர் சொல்லும் வரை அவள் காத்திருக்கவில்லை. அறையில் தயாராகச் சாய்த்து வைத்திருந்த சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டாள்.

புரொபசர் தன் பாண்ட் பாக்கெட்டிலிருந்த கட்டை விரல் நீளமுள்ள ஒரு டார்ச் விளக்கை எடுத்துக்கொண்டு அவளுக்குப் பின்னால் சென்று நின்று கொண்டார். அந்த டாச்சிலிருந்து குங்குமப் பொட்டு போல் இள நீலவெளிச்சம் சிந்திக் கொண்டிருந்தது. அதை நிம்மியின் தலைக்குச் சற்று மேலே பிடித்துக் கொண்டு, ''இதையே பார்த்தபடி இரு... தலையை உயர்த்தாதே. விழிகளை மட்டும் மேலே ஏற்றி, இந்த நீலப்பொட்டையே பார். கண்ணை அங்கே இங்கே நகர்த்தாதே. ஒரு நிமிடம்தான். உன் கண்கள் கலங்குகிற மாதிரி இருக்கும். இருக்கிறதா இல்லையா? என் விரலையோ வெளிச்சத்தையோ பார்ப்பது கஷ்டமாகிக் கொண்டிருக்கிறது. நீ ரொம்பக் களைப்பாயிருக்கிறாய். இமைகளை மெல்ல மூடிக் கொள். மெதுவாய் மூச்சு இழு. மெதுவாய் மூச்சுவிடு! உன் மனசிலே என்னென்னவோ எண்ணங்கள் இருக்கின்றன.

இல்லையா? அவ்வளவையும் விலக்கு. எல்லா எண்ணங்களும் வெளியே போகட்டும். இதோ போகின்றன, பார். எல்லா எண்ணங்களும் போய் விட்டன...''

நிம்மியின் கண்கள் மூடிக்கொண்டன. ஆழ்ந்த பெருமூச்சொன்று அவள் கண்டத்திலிருந்து புறப்பட்டது.

புரொபசர் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தார். இந்த மாதிரி சமயங்களில் மட்டுமே அவர் குரலில் தொனிக்கக்கூடிய மென்மையும் குளுமையும் இப்போதும் வெளிப்பட்டன. ''இப்போது வெளி உலக ஓசை எதுவும் உன் காதில் விழவில்லை. இல்லையா?''

''ஆமாம், விழவில்லை.'' என்றாள் நிம்மி.

''நான் கையை ஒன் டூ த்ரி என்று மூன்று தரம் சொடுக்கி விழித்துக்கொள் என்று சொல்வேன். நீ விழித்துக் கொள்வாய். பிறகு சரியாய் ஒன்பது ஐம்பத்திரண்டுக்கு...''

புரொபசரின் கண்கள் ஒரே ஒரு வினாடிக்காலம் அறைக் கதவின் அருகே சென்று திரும்பியது. சிலையென அங்கே நின்றிருந்த ஜெகதா, ஓரடி முன்னே வைக்க முயன்று, தானும் மித்ராவின் மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டவள் மாதிரி அங்கேயே நின்று விட்டாள்.

''நீ விழித்துக் கொள்ளும் போது, இப்போது நான் சொன்னது எதுவும் உனக்கு நினைவிருக்காது. ஆனால் சரியாய் ஒன்பது ஐம்பத்திரண்டுக்கு, நமது டிராயிங் ஹாலில், நான் வயலின் வாசித்துக் கொண்டிருப்பேன். கமாஸ் ராகத்தை நான் வளாசிக்கத் தொடங்கியதும் நீ கையிலிருக்கும் புத்தகத்தை உன் அம்மா மீது தூக்கி எறிவாய். 'உன்னை வெறுக்கிறேன்! வெறுக்கிறேன்!' என்று கூச்சலிடுவாய்...''

நிம்மியின் உதடுகள் அசையக்காணோம். தோட்டத்திலிருந்து குளிர்ச்சியான காற்று தயங்கித் தயங்கி தவழ்ந்து வந்தது.

புரொபசர் மித்ரா டார்ச் விளக்கை அணைத்து, பைக்குள் போட்டுக் கொண்டார். ''ஒன் டூ த்ரி!'' என்று கையை மூன்றுதரம் கொடுக்கி, ''விழித்துக்கொள்!'' என்றார்.

ஈஸிசேரிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள் நிம்மி. கண்களைத்துடைத்துக் கொண்டு எழுந்து கொண்டாள்.

''தாங்க் யூ நிம்மி,'' என்றார் புரொபசர். ''இன்றைக்கு என் பரிசோதனை ஸக்ஸஸாக அமையுமென்றும், நம்புகிறேன்.''

''என்னப்பா செய்தீர்கள்?'' என்று ஆவலுடன் கேட்டாள் நிம்மி.

''உனக்கு நினைவில்லை?''

''எதுவும் நினைவு வரவில்லை. இன்பமாய், அம்மாடா என்கிற மாதிரி ஒருதுாக்கம் மட்டும்தான் ஞாபகம் இருக்கிறது.''

ஜெகதா ஒரு வழியாய்த் தன் வாய்க் கட்டிலிருந்து விடுபட்டவள்போல் ''சாப்பிட வாம்மா, நிம்மி. பிறகு பேசிக்கொள்ளலாம்'' என்றாள்.

''சாயந்தரம் டிபன் சாப்பிட்டதே வயிறு நிறைய இருக்கிறது, அம்மா. டிராயிங் ரூமில் போய் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்போமே? ரொம்ப நாளாயிற்று'' என்றாள் நிம்மி.

மின்னல் போல் ஒரு பார்வையை ஜெகதா வீசினாள் புரொபசரின் பக்கம். அவருடைய உதடுகள் புன்னகையைச் சிந்திக் கொண்டிருந்தன.

''ஓ, ரெடி!'' என்றார் புரொபசர்.

மூவரும் டிராயிங் ஹாலில் சென்று, வெவ்வேறு சோபாக்களில் அமர்ந்த போது மணி ஒன்பதரையை எட்டிக்கொண்டிருந்தது.

புரொபசர் ரேடியோகிராமைத் திருகி, மேற்கத்திய இசையைக் கேட்கலானார்.

ஜெகதா குடும்பச் செலவுகளை டயரியில் குறித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் பார்வை மகளையும் கணவனையும் கடியாரத்தையும் மாறி மாறி வட்டமிட்டது. நிம்மி கல்லூரியில் வரிவுரையாளர் கொடுத்த பாடத்தை, விரிவாகத் தன் நோட்டில் எழுதியபடியே, அன்று காண்ட்டீனில் ஒரு புதுவகை ஸ்வீட் போட்டதைப் பற்றியும், எல்லா மாணவர்களும் அதைக் கிண்டல் செய்து கலாட்டா பண்ணியதைப் பற்றியும், சளசளவென்று பேசிக் கொண்டிருந்தாள்.

மணி ஒன்பதரை ஆயிற்று; ஒன்பதே முக்கால் ஆயிற்று. இரண்டு முட்களும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு உறவாடிப் பின்னர். ஊடல் செய்து விலகிக் கொண்டன. பெரிய முள் எட்ட நகர்ந்து கொண்டிருந்தது.

''அப்பா! எத்தனை நாளாயிற்று நீங்கள் வயலின் வாசித்து!'' என்றாள் நிம்மி.

முகத்தில் அடிபட்டாற்போலத் திடுக்கிட்ட ஜெகதா, ''வேண்டாம் நிம்மி! அது எதற்கு இப்போது?'' என்றாள்.

''என்னம்மா, அப்பா வயலின் வாசித்துவிடப் போகிறாரே என்று அப்படி அலறுகிறாய்?'' என்று சிரித்தாள் நிம்மி.

புரொபசர் ஸ்டீல் அலமாரியைத் திறந்து, சிறிய வயலின் பெட்டியை வெளியிலெடுத்தார். வயலினை மேலோடு துடைத்துவிட்டு, தோளில் சாத்திக் கொண்டு, வில்லை வைத்தார், தந்திகளின் மீது.

கடியாரத்தின் பெரிய முள் பத்தைத் தொட்டது.

''என்னப்பா, சுருட்டி வாசிக்கிறீர்கள்? கமாஸ் வாசியுங்களேன்'' என்றாள் நிம்மி.

ஜெகதாவின் விழிகள் எல்லையற்ற அச்சத்துடன் கடியாரத்துக்கும், மகளுக்குமாகத் தாவிக் கொண்டிருந்தன.

# 4

Khamas is one of the most pleasing Desya Ragas, useful for portraying sringara and Bakthi rasa compositions.

''நிம்மி, ஸௌத் இண்டியன் மியூஸிக் என்ற புத்தகம் படித்திருக்கிறாயா நீ? கமாஸ் ராகத்தைப் பற்றிப் பேராசிரியர் சாம்பமூர்த்தி எழுதியிருப்பதைக்கட்டாயம் படிக்க வேண்டும்!''

மகளிடம் பேசிக்கொண்டே புரொபசர் மித்ரா வயலினில் கமாஸ் இசைக்கத் தொடங்கினார். மணி ஒன்பது ஐம்பத்தொன்று.

கமாஸ் ராகம் தன் பூரண எழிலுடன் வடிவெடுத்து, அந்த அறையெங்கும் தவழ்ந்து புரண்டு விளையாடத் தொடங்கியது.

ஜெகதாவின் மிரண்ட கண்களையும், நிம்மியின் விசித்திரப் பரபரப்பையும் கவனியாதவர்போலப் புரொபசர் மித்ரா தன் பாட்டுக்கு வயலினை இசைத்துக்கொண்டிருந்தார். ஆனால் ஜெகதா இருக்கை கொள்ளாமல் தவிக்கும் மகளை நோக்கி, ''என்னம்மா நிம்மி, என்ன உன் உடம்புக்கு?'' என்று பதறினாள் ஜெகதா.

நிம்மி அவள் கேள்விக்கு மறுமொழி தரவில்லை. யாரோ பிடித்து நிறுத்துகிற மாதிரி எழுந்துகொண்டாள் நிம்மி. கையிலிருக்கிற புத்தகத்தை, சாவி கொடுத்த பொம்மை உணர்ச்சியற்றுச் செய்வதுபோல், அம்மாவைக் குறிபார்த்து வீசியெறிந்தாள். ''உன்னை வெறுக்கிறேன்! வெறுக்கிறேன்!'' என்று கீச்சென்ற குரலில் கூவவும், கடியாரத்தின் முட்கள் ஒன்பது ஐம்பத்திரண்டை அடையவும் சரியாயிருந்தது.

''ஹா ஹ்ஹா!'' வாய்விட்டுப் பெரிதாகச் சிரித்த வண்ணம் வயலினைக் கீழே வைத்தார் புரொபசர். ''சபாஷ் நிம்மி!'' என்று எழுந்து சென்று மகளைத்தட்டிக் கொடுத்தார்.

ஜெகதாவின் தொண்டையில் ஈரமெல்லாம் வற்றி விட்டது. ''நிம்மி...'' என்று அழைப்பதற்குள் நா உலர்ந்து கண்கள் எரிந்தன. ''நிம்மி... என்ன காரியமம்மா செய்தாய்...''

கனவிலிருந்து விழித்துக் கொண்டமாதிரி நிம்மியின் தேகம் முறித்துக்கொண்டது. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டாள். ''நானா... உன்மீதா புத்தகத்தை விட்டெறிந்தேன்?'' என்று தன்னைத் தானே நம்ப மறுப்பவளாக, தனக்குத் தானே கேட்டுக்கொண்டாள். செய்யக் கூடாததைச் செய்து விட்டோம் என்ற குற்ற உணர்வு அவள் மனத்தை அலைக்கழிக்கவே, அப்படிச் செய்யத் தூண்டிவிட்டவர் தன் தந்தைதான் என்ற நினைவும் அவள் அறிவை எட்டியது. அவருடைய இரக்கமற்ற நகைப்பு அவளைத் திகைக்கவைத்தது.

''அப்பா! என்னை இப்படி - அம்மாமீது புத்தகத்தை எறிந்து வெறுக்கிறேன் வெறுக்கிறேன் என்று சொல்லும் படியா - ஹிப்னாடைஸ் செய்திருந்தீர்கள்?'' என்று வினவினாள். அவள் கேள்வியின் தோரணையில் கோபத்தைக் காட்டிலும் மனம் நொந்திருப்பதே அதிகம் வெளிப்பட்டது.

''எஸ் டார்லிங்!'' என்றார் புரொபசர். ''பின்னே பாரேன் அவளை! உனக்கு மனோவசியம் கற்றுத் தருவதைப் பற்றித் திரும்பத் திரும்பச் சண்டை போட்டுக்கொண்டேயிருக்கிறாள் என்னோடு! இன்னொரு தரம் நம் வழிக்கு வந்தால், நீயே வெறுக்கிறமாதிரி பண்ணிவிடுவேன் என்று பயமுறுத்தி னேன்!''

அன்னையின் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள் நிம்மி. கண்ணீர் அலை மோதும் விழிகளைப் பார்த்தபோது

பரிதாபமாயிருந்தது. ''போங்களப்பா! பாவம் அம்மா. விளை யாட்டுக்குக்கூட இப்படிச் செய்யாதீர்கள் தயவு பண்ணி. மறுபடி மறுபடி இந்தமாதிரி சொல்ல வைத்தாலும் சரி, செய்யவைத்தாலும் சரி, நம் ஸப்கான்ஷியஸில் நிஜமாகவே அப்படியொரு வெறுப்பு ஏற்பட்டுவிடும் என்று நீங்கள் கொடுத்த புத்தகங்களிலேயே படித்திருக்கிறேன். அம்மாவை நான் வெறுக்கமுடியுமா, அப்பா? எதற்காக வெறுக்க வேண்டும்? பாவம்...''

''நிம்மி...'' குரல் தழுதழுக்க, பெண்ணைக் கட்டிக் கொண்டாள் ஜெகதா. சில நிமிடங்களுக்கு முன்பு மகளின் செயலால் ஏற்பட்டிருந்த துயரமனைத்தும் இப்போது ஓடி ஒளிந்து கொண்டுவிட்டாற்போன்ற ஆறுதல் உதித்தது, அவளது ஆதரவான பேச்சைக் கேட்டதும்.

புரொபசரின் அடர்ந்த புருவங்களில் முடிச்சுக்கள் தோன்றின. மிக மிக லேசான முணுமுணுப்பைக்கூட நிம்மி யிடம் அவர் எதிர்பார்க்கவில்லை. ஆனால் தன் ஏமாற்றத்தை நொடிநேரத்துக்குள் மறைத்துக்கொண்டவராக, மீண்டும் கடகடவென்று சரித்தார். ''சரி தான்! உன் அம்மாவைக் காட்டிலும் பெரிய முட்டாள் இந்த வீட்டிலேயே கிடையாது என்று நினைத்திருந்தேன். நீ இருப்பதாகக் காட்டி விட்டாயே!'' என்றார். ''சரி, சரி அவளை அழைத்துப் போய்ப் படுக்கச் சொல்லிவிட்டு வா. கண்கள் செருகுகிறது உன் அம்மாவுக்கு. போய்த் தூங்கட்டும். நீ சீக்கிரமாய் வா. ஏதோ புத்தகங்கள் படித்ததாய்ச் சொன்னாயே, அதைப்பற்றிப் பேசலாம்.''

''நீ வாம்மா. போகலாம்.'' தாயை அணைத்தாற்போல் அழைத்துக்கொண்டு அவர்களுடைய படுக்கையறையை நோக்கி நடந்தாள் நிம்மி. ''எப்படி நேர்ந்தது என்று எனக்கே புரியவில்லை, அம்மா... திடீரென்று யாரோ என் காதிலே

சொல்கிறாற்போல இருந்தது. யாரோ என்னைப் பிடித்து எழுப்பி, என் கையைக் காலை வலுக்கட்டாயமாய் அசைக்கிறாற்போல் தோன்றியது. ஹிப்னாஸிஸில் இருக்கும்போது அப்படித்தான் தோன்றுமாம். அதாவது...''

நிம்மியின் குரல் சிறிது சிறிதாகத் தேய்ந்து மறைந்து விட்டது.

புரொபசர் மித்ரா பின்கை கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக உலவினார். எப்போதும் இணைபிரியாதிருக்கும் தன்னம்பிக்கை இப்போது சற்றுத் தளர்ந்திருக்குமோ? தன் எண்ணங்களிலும் திட்டங்களிலும் வெற்றியை தவிர வேறு கண்டிராதவருக்கு, நிம்மியின் சிணுங்கல் உறுத்தியிருக்குமோ? கைகளைப் பிசைந்து கொள்ளும் விதத்திலிருந்து, புருவங்களை நெரித்துக் கொள்ளும் வகையிலிருந்து, உதடுகளைக் கடித்துக்கொள்ளும் முறையிலிருந்து அப்படித் தான் தோன்றியது.

ஆனால், கிணிங் கிணிங் என்று டெலிபோன், அழைத்ததும் அவர், ''ஹலோ'' என்று பதில் கொடுத்த இனிமை, அதிலிருந்த சாந்தம், எப்படிப்பட்ட ஞானியிடமும் காணக் கிடைக்காததாகும்.

''மிஸ் நிம்மி இருக்கிறார்களா?''

கண்ணிமைக்கும் காலம் புரொபசர் குழம்பினார். அந்த வாலிபக் குரலைக்கேட்டு. நிம்மியை அவள் சினேகிதிகள் கூப்பிடுவது உண்டு அடிக்கடி. ஆண்கள் யாரும் அழைத்ததில்லை; அதுவும் - புரொபசர் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டார் - மணி பத்தரையை நெருங்கும்போதா?

''இப்போதுதான் படுக்கப் போனாள்'' என்றார். ''மே ஐ நோ ஹூ இஸ் ஸ்பீக்கிங்?''

''என் பெயரைச் சொன்னால் அவர்களுக்குத் தெரியாது.''

''தெரியாவிட்டாலும் சொல்லலாமே?'' குரலில் புன்னகையை வர வழைத்துக்கொண்டார் மித்ரா.

''கல்யாணம்'' என்று தெரிவித்தான் அவன். ''நிம்மியுடன் நான் கட்டாயம் பேசியாகவேண்டும்.''

''ப்ளீஸ் ஹேங்க் ஆன்'' போனை வைத்துவிட்டு, ''நிம்மி!'' என்று குரல் கொடுத்தார் புரொபசர். ''யாரோ கல்யாணமாம்! உன்னைக் கூப்பிடுகிறார்.''

அம்மாவைப்படுக்கச் சொல்லிவிட்டு வந்த நிம்மி. பெயரைக் கேட்டதும் யோசித்தாள். ''கல்யாணமா? எனக்கு யாரையும் தெரியாதே'' என்று சொன்னவாறே போனை எடுத்தாள். ''நிம்மி ஹியர்.''.

புரொபசர் அவள் முகத்தையே கவனித்தபடி சோபாவில் அமர்ந்திருந்தார். நிஜமாகவே டெலிபோனில் பேசுகிற இளைஞனை அவளுக்குத் தெரியாது என்பது அவள் முதலிரண்டு வார்த்தைகள் பேசியதுமே விளங்கி விட்டது. ஆனால் மேற்கொண்டு அவள் பேசிக்கொண்டேபோன விஷயம் அவரைத் திகைப்பில் ஆழ்த்தியது.

''லீலாவதியின் ப்ரதரா? ஓ க்ளாட் டூ மீட் யூ... எது? முகத்தில் சுட்டிருப்பதா? அது சும்மா தமாஷ்... நோ! நோ!... நான்தான் விளையாட்டு என்கிறேனே... ஆயின்ட்மென்ட் தடவினால் நாளைக்கே... ஓகே! ஓகே! யூ ஆர் வெல்கம் எனி டயம்... நான் நேரிலேயே எக்ஸ்ப்ளெயின் பண்ணுகிறேன்...'' டெலிபோனைத் திரும்ப வைத்தாள் நிம்மி. எடுத்தபோது இருந்த லேசான திகைப்பு இப்போது கோபமாக மாறியிருந்தது. ''ஸில்லி இடியட்!'' என்று திட்டினாள் போனைப் பார்த்து.

''யார் நிம்மி அவன்?'' புரொபசர் அலட்சியமாகக் கேட்கிறமாதிரி விசாரித்தார்.

''என் ஃப்ரண்ட் லீலாவதி இல்லை? அவளுடைய அண்ணனாம். கல்கத்தாவில் இருக்கிறானாம். நாளைக் காலை ஊருக்குப் போகிறானாம். அதற்குள் என்னுடன் ஒரு சண்டை போட்டுவிட்டுப் போகவேண்டுமா! முட்டாள்.''

''என்ன விஷயமாய்ச் சண்டை?'' கையிலிருந்த தினசரியில் மேலும் ஆழ்ந்துவிட்டமாதிரி காணப்பட்டார் புரொபசர். ஆனால் அவருடைய கடைக்கண் நிம்மியைத் துளைத்துக் கொண்டிருந்தது.

''இந்த அண்ணன்தான் பிரமாதமான படிப்பாளியாம்! அடுக்கடுக்காய் டிகிரி வாங்கியிருக்கிறவனாம்! பெரிதாய்ப் பீற்றிக்கொள்வாள் லீலாவதி! ஆர்டினரி ஹ்யூமன் ஸைகாலஜியே புரியாது போலிருக்கிறது. ஹிப்னாடிஸத்தைப் பற்றிச் சொன்னால் என்ன ஏறப்போகிறது மண்டையில்!''

புரொபசர் பேப்பரை மடித்து மேஜைமீது வைத்தார். ''ரொம்பத்தான் எரிச்சலில் இருக்கிறாய். சொல்லு மெதுவாய்'' என்றார்.

''ஒன்றுமில்லையப்பா. சாயந்தரம் ஹாஸ்டலுக்குப் போயிருந்தேன், லீலாவதியிடம் கெமிஸ்ட்ரி நோட்ஸை இரவல் வாங்குவதற்காக. அங்கே மூன்று நாலு சினேகிதிகள் வந்திருந்தார்கள். இருபதாம் தேதி உங்கள் ஷோ இருக்கிறதே -''

''நம்ம ஷோ என்று சொல்.'' எனத் திருத்தினார் புரொபசர்.

''அந்த ஷோவுக்கான புரோகிராமை வைத்திருந்தாள் கங்கா. 'நீ ஒரே ஒரு ஐட்டத்திலேதானே வருகிறாய் போலிருக்கு?' என்றாள் என்னிடம். அதற்குள் இன்னொருத்தி சும்மா இராமல், 'நம்ம நிம்மிக்கு மாஜிக்ஷோவில் அக்கறை கிடையாது. மனோவசியமா - ஹிப்னாடிஸம் - அதிலேதான் பிரமாதமாகப் பெயர் வாங்க ஆசை!' என்று சொன்னாள்...''

''அப்படியானால் நீ மனோவசியம் கற்றுக்கொள்வது உன் சினேகிதிகளுக்குத் தெரியுமா என்ன?'' என்றார் புரொபசர்.

''நன்றாய்த் தெரியும்? சில பேருக்கு டெமான்ஸ்ட்ரேட் பண்ணிக் கூடக் காட்டியிருக்கிறேனே!'' என்று பதிலளித்தாள் நிம்மி.

''ஓ! என்னிடம் சொன்னதில்லையே அப்புறம்?''

''ஹாஸ்டல் ரூமிலே இருந்து ஒரு கேரளா பெண் - சாந்தா நாயர் என்று பெயர் - என்னைச் சீண்டுகிறமாதிரி, 'ஹிப்னாடிஸமாவது மண்ணாவது! எல்லாம் பாஷ்! நான்ஸென்ஸ்!'' என்றாள். எனக்குச் சுருக்கென்றாகிவிட்டது. உடனே சவால் விடுகிறமாதிரி, 'இங்கேயே செய்து பண்ணுகிறேன்' என்றேன்...''

''நோ. தட் இஸ் ராங்'' என்று மகளைக் கண்டித்தான் மித்ரா. ''ஹிப்னாடிஸம் என்பது ஒரு ஸயன்ஸ். சாஸ்திரம். அதை நம்பாத பேர்வழிகளிடம் போய்ச் சவால் விடக்கூடாது. அது அவர்களுடைய மடமை என்று விட்டுவிட வேண்டியது தான்.''

''நீங்கள் வேண்டுமானால் விடுங்கள். நான் விடமாட்டேன்'' என்றாள் நிம்மி. புதிதாய் மதம் மாறுகிறவர்களுக்கு, பழையவர்களைக் காட்டிலும் அதிக ஆர்வமும் ஆவேசமும் இருக்கும் என்பதுண்டு. அந்த உண்மை அவள் பேச்சில் புலப்பட்டது. ''நான் என்ன செய்தேன் என்று கேளுங்கள்.''

''என்ன செய்தாய்?''

''அவர்கள் முகத்தில் ஒரு கிலோ கரியை அரைத்துப் பூசினேன் அப்பா!'' என்று சிரித்தாள் நிம்மி. ''லீலாவதியை அவர்கள் கண்ணெதிரிலேயே மனோவசியம் செய்தேன்.

ஹாஸ்டல் ரூமில், கட்டிலில் படுத்துக்கொள்ளச் சொல்லி, இரண்டே நிமிஷத்தில் லைட் ஹிப்னாஸில் ஏற்படுத்தினேன். பிறகு கேடலப்ஸி ஸ்டேஜ் வந்தது. நான் சொல்கிறபடி யெல்லாம் ஆடத் தொடங்கினாள்.''

புரொபசர் மித்ரா நிம்மியின் முகபாவத்தைக் கவனித்தவறாயிருந்தார். குழந்தைத்தனமான பெருமை அந்த வதனத்தில் சுடர் விடுவது அவருக்குத் தெரிந்தது. அதே சமயம், மகளுக்கு எவ்வளவு தூரம் சோதனையில் வெற்றி கிட்டியது என்பதை அறிந்துகொள்ளும் ஆவலும் குறுகுறுத்தது.

''புத்தகங்களில் படித்திருந்த பல சோதனைகளை டக்டக்கென்று செய்தேன், அப்பா! ஒவ்வொன்றிலும் அபார ஸக்ஸஸ்!'' என்றாள் நிம்மி தொடர்ந்து.

''எல்லாவற்றிலும் லீலாவதி அருமையாய் ரெஸ்ட்பாண்ட் பண்ணினாள்.''

''என்னென்ன பண்ணினாய்? அதைச் சொல்.''

அவருடைய பொறுமையின்மை நிம்மிக்கு வியப்பைத் தந்தது. ''என்னப்பா, ஏதோ புதிசாய்க் கேட்கிற மாதிரி கேட்கிறீர்களே! எல்லா ஸஜஷன்களையும் நிறைவேற்றினாள் லீலாவதி. ஹிப்னாடிக் தூக்கத்தில் நான் கேட்டதற்குப் பதில் சொன்னாள். நான் சொல்வதைச் செய்தாள். ஒரு காகிகத் துண்டை எடுத்து அவள் முகத்தினருகே நீட்டி, 'ஆகா! என்ன அழகு மிக்க ரோஜாப்பூ! அடடா! என்ன நறுமணம்! லீலாவதி, உனக்குத் தெரியவில்லை, சிவப்பு ரோஜாப்பூ?' என்றேன். 'ஆமாம். ரொம்ப அழகாய் இருக்கிறது' என்றாள். 'வாசனை எப்படி? அருமையாய் இல்லை?' என்றேன். மூக்கை உறிஞ்சிக் கொண்டு, 'ஹா! பிரமாத வாசனை!' என்றாள். அடுத்தாற்போல் இன்னொன்றும் செய்தேனப்பா. அதிலே தான் இந்த லீலாவதியின் அண்ணன்காரனுக்குக் கோபமாம்!''

''என்ன அது?''

''ஒரு பென்சிலை எடுத்து அவள் கண்ணுக்கெதிரே காட்டினேன். 'பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பி! பார்த்தாயா லீலாவதி? என்ன செக்கச் செவேலென்று இருக்கிறது! அம்மம்மா! என்ன பயங்கரமாய் ஜொலிக்கிறது!' என்றேன். லீலாவதி, 'ஆமாம்... ஐயோ! என்கிட்டே கொண்டு வராதே!' என்று கத்தினாள். இந்தக் கம்பியால் உன் முகத்தில், மோவாயின் கீழ சுடப்போகிறேன்!' மோவாயின் கீழ் சுடப் போகிறேன்!' என்றேன். 'ஐயோ! வேண்டாம்! வேண்டாம்!' என்று கூச்சலிட்டாள் லீலாவதி.

''நிம்மி! நீ இவ்வளவு தூரம் தேர்ச்சி பெற்றிருப்பாய் என்று நான் நினைக்கவேயில்லை!'' புரொபசரின் வியப்பு வெளிப்படையாக உருவெடுத்தது.

''இதற்கே இப்படிச் சொல்கிறீர்களே!'' என்றாள் நிம்மி, பெருமை பொங்கி வழிய. ''அடுத்தாற்போல் நடந்ததைக் கேளுங்கள்!''

''சொல்லு.''

''அந்தப் பென்சில் நுனியால் அவள் மோவாயைத் தொட்டேன் அப்பா! அவ்வளவுதான். நெருப்புச் சுட்ட மாதிரியே 'ஆ! உஸ்!' என்று கையை உதறிக்கொண்டு கத்தினாள். அடுத்த நிமிஷம் அப்பா

புரொபஸர் கண்ணையும் இமைக்கவில்லை. கம்பளிப் பூச்சி போல் கறுத்து அடர்ந்து இமைகளுக்கு பிராக்கெட் போட்டிருந்த புருவங்கள் வளைந்தது வளைந்தபடியே இருந்தன. ''அடுத்த நிமிஷம்?'' என்று தூண்டினார் பதற்றத்தை மறைக்க முடியாதவராக.

''நான் பென்சிலால் மோவாயைத் தொட்ட இடத்தில், உண்மையாகவே, நெருப்புச் சுட்ட மாதிரி. தோல் கன்றி

விட்டது. சருமம் வழண்டது போல், ஒரு சிவப்புத் தழும்பு ஏற்பட்டு விட்டது!''

''உண்மையிலா!'' சோபாவின் விலாப்புறங்களைப் பற்றியிருந்த மித்ராவின் விரல்கள் இரும்புக் கொக்கிகள் போல் இறுகிக் கொண்டன. அவரது கழுத்து நரம்புகள் புடைத்துக் கொண்டு நின்றன. முகம் ஜிவு ஜிவு வென்று பளபளத்தது.

தந்தையின் உணர்ச்சிகளைக் கண்டு நிம்மிக்கு மகிழ்ச்சிதான் ஏற்பட்டது. கலகலப்பாகச் சிரித்தார். ''நீங்கள் கொடுத்த ஒரு புத்தகத்தில் படித்திருக்கிறேன், அப்பா! மனோவசியம் ரொம்பச் சக்தி வாய்ந்ததாக இருக்குமானால், மனோவசியத்துக்கு உட்படுகிறவர் மனத்தால் மட்டு மல்லாமல், உடம்பாலும் பாதிக்கப்படுவர் என்று ஒரு அறிஞர் எழுதியிருந்தார். தீயால் சுட்டாற் போல் லீலாவதிக்கு வெறும் பிரமை மட்டும் ஏற்படவில்லை. வெகு ஆழமாக அந்த வேதனையை அவள் அனுபவித்ததால், அதன் அடையாளம் அவள் உடம்பிலேயே ஏற்பட்டு விட்டது. ஆச்சரியமான விஷயம் இல்லை?''

புரொபசருக்கு என்ன நேர்ந்து விட்டது.

அசைவற்று உட்கார்ந்திருந்தார் அவர். 'நான் நினைத்ததைக் காட்டிலும் பல மடங்கு நீ முன்னேறி யிருக்கிறாய்! நீலகண்டன் மூலம் உனக்கு என்னென்ன திறமைகள் ஏற்படுத்த நினைத்தேனோ, அதெல்லாம் உன் சொந்தப் பயிற்சியால் நீயே அடைந்து விட்டாயே!' என்று சொல்ல நினைத்தவர், வேண்டுமென்றே சொல்லாமல் நிறுத்திக்கொண்டார். அவர் மனத்துக்குள் ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது.

அதை அறியாதவளாக நிம்மி பேசினாள். ''என் சக்தியைக் கண்டு அப்படியே அசந்து விட்டார்களப்பா

அத்தனை பேரும்! லீலாவதிகூட விழித்துக் கொண்டதும், தான் செய்த காரியங்களைப் பற்றி மற்றவர்களிடம் கேட்டுத் திகைத்துப் போனாள். நெருப்புப் புண் எப்படி ஏற்பட்டது என்றுதான் யாராலும் விளக்கிச் சொல்ல முடியவில்லை...''

புரொபஸர் இப்போதும் மௌனமாகவே இருந்தார்.

நிம்மி தொடர்ந்தாள்... ''இந்த லீலாவதியின் அண்ணன்காரன் பெரிய கொம்பன் போலிருக்கு! ராத்திரி ஹாஸ்டலுக்கு வந்தானாம். தங்கையைப் பார்த்தானாம். தீப்புண் எதனால் என்று கேட்டானாம். லீலாவதி சொன்னாளாம். அதற்குத்தான் என்னோடு சண்டைபோட்டான். 'சினேகிதம் என்றால்என்ன வேண்டுமானாலும் விளையாடுவதா?' என்ற கத்துகிறான். நாளை விடிகாலை கல்கத்தாவுக்குப் புறப்படுவதாக இருக்கிறவன், என்னைப் பார்த்துவிட்டுத்தான் போகிறானாம்! வரட்டும்! என்னப்பா சிரிக்கிறீர்கள்?''

ஆம். புரொபஸர் மித்ரா சிரித்துக் கொண்டுதான் இருந்தார். சற்று முன்பு உள்ளத்தில் உதித்திருந்த குரூரங்கள் எல்லாம் மறைத்து விட்டு நகைத்துக்கொண்டுதான் இருந்தார்.

''நிம்மி! நீ சொல்கிற கதையையெல்லாம் நான் நம்ப வேண்டுமென்றா நினைக்கிறாய்?''

''அப்பா!'' சிறுப்பிள்ளைத் தனமான கோபத்துடன் சிலிர்த்து எழுந்தாள் நிம்மி. ''நான் பொய் சொல்கிறேன் என்றா சொல்கிறீர்கள்?''

''குழந்தைகள் அறியாமல் பேசுவதையெல்லாம் பொய் என்று சொல்லி விடலாமா?'' மறுபடியும் புரொபஸர் அவளைச் சீண்டுகிற மாதிரி புன்னகை செய்தார். ''ஏதோ உன் சந்தோஷத்துக்காக, விளையாட்டாய்ச் சொன்னால்... அதை நிஜமென்று...''

''நிஜம் நிஜம் என்று அடித்துச் சொல்கிறேன்!'' மிதிபட்ட பாம்பு போல் சீற்றம் ஏற்பட்டது நிம்மிக்கு.

''சரி, ஒப்புக் கொள்கிறேன்' ஆனால், நீ சொல்கிற அளவுக்கு உனக்கு மனோவசிய சக்தி ஏற்பட்டிருக்குமானால், இன்னொரு சக்தியும் வந்திருக்குமே!''

''என்ன சக்தி?''

''சாதாரணமாக வசியத்துக்கு உட்படாதவர்களைக் கூட உட்பட வைக்கும் சக்தி. அவர்களை ஹிப்னாஸிஸ்ஸில் ஆழ்த்தி, என்றைக்கோ நிழகந்த ஒரு சம்பவத்தை விவரிக்கும் படி செய்ய வேண்டும். அது மிகுந்த மனோசக்தி உள்ளவர்களால்தான் முடியும். நீ சொல்வது உண்மை யென்றால், உனக்கும் அந்தச் சக்தி ஏற்பட்டிருக்க வேண்டும்!''

''ஏற்படவில்லை என்று கண்டீர்களா? ஏற்பட்டிருக் கிறது என்கிறேன்! யாரைப் பரீட்சிக்க வேண்டும்? எப்போது எப்படி? சொல்லுங்கள் அப்பா!'' என்றாள் நிம்மி ரோஷத்துடன்.

புரொபஸரின் கண்கள், ஜெகதாவின் அறையை நோக்கின.

## 5

Hypnotic regression is the process whereby the hypnotist takes his subject back through the years. At each stage, the subject will act, talk. write and draw exactly as he did at the age in question.

- Dr. Jonathan Rodney

ஜெகதாவுக்குத் தன் வேதனை இன்னதென்று தெரிய வில்லை. தான் தூங்கிக் கொண்டிருக்கிறோமா, விழித்துக் கொண்டிருக்கிறோமா என்று புரியவில்லை. அறையில்

இருக்கிறோமா வெட்டவெளியில் கிடக்கிறோமா என்று கண்டுகொள்ள முடியவில்லை. படுத்திருக்கிறோமா உட்கார்ந் திருக்கிறோமா நின்றிருக்கிறோமா என்பது தெரியவில்லை. அது பகலா இரவா என்பதை உணர இயலவில்லை. தனக்குக் கடும் ஜுரம் அடிக்கிறதா, நார்மலா இருக்கிறோமா என்பது புரியவில்லை.

உருவமில்லாத பீதியொன்று அவளை ஆட்கொண் டிருந்தது. ஆயிரம் கால்கள் படைத்த பூச்சியொன்று தன் முதுகில் ஓடுவதுபோல் உணர்ந்தாள் அவள். ஆடைகளை நீக்கிவிட்டு, பச்சை உடம்பில் ஐஸ்கட்டியைச் சில்லென்று வைத்துக் காலோடு தலை ஒட்டுவதைப் போல் தோன்றியது. போர்த்துக்கொண்டுபடுத்திருந்தபோதிலும், போர்வைக்குள் குடம் குடமாய் வியர்த்துக் கொட்டுகிறமாதிரி இருந்தது. அந்த வியர்வையே சொட்டு சொட்டாகப் பெருகி, பலத்த வெள்ளமாக வடிவெடுத்து, தான் அதிலே மூச்சுத் திணறத் திணற மூழ்குவதுபோல பிரமை ஏற்பட்டது.

புரொபசருக்கு வாழ்க்கைப்பட்ட இத்தனை வருடங்களில் இதுபோன்று பயங்கர உணர்ச்சிகள் பலவற்றை அனுபவித்திருக்கிறாள் ஜெகதா. அந்தச் சந்தர்ப்பங்களில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவள் கற்றிருந்த ஒரே வழி, மன உறுதிதான். பலவந்தமாகத் திமிறிக் கொண்டு, அந்தப் பிராந்தியிலிருந்து விடுபட்டுவிட வேண்டும். பிறகு எப்படிப் பட்ட ஆபத்துப்போல் தோன்றினாலும் சற்றைக்கெல்லாம் விலகிவிடும்.

அந்த உபாயத்தையே இப்போதும் கையாள எண்ணிய வளாக, வலுக்கட்டாயமாகக் கண்களைத் திறந்தாள்.

நேரம் நள்ளிரவல்ல. விடிகாலைப் பொழுது என்பது, ஜன்னலுக்கு வெளியே ஆகாயம் வெளிறிக்கொண்டிருப்பதி லிருந்து புலப்பட்டது.

''படுத்திரு, அம்மா. படுத்திரு அப்படியே.''

நிம்மி!

கட்டிலில், ஜெகதாவின் விலாப்புறமாக அவள் உட்கார்ந்திருந்தாள். மென்மையான நீண்ட விரல்கள்தான் இவ்வளவு நேரமும் தன் உடலின்மீது ஓடிக்கொண்டிருந்தது என்பதை அறிந்ததும் ஜெகதாவுக்கு மூச்சே நின்றது. வலது உள்ளங்கையை அகலப் பிரித்து, ஐந்து விரல்களையும் அம்மாவின்மீது பட்டதும் படாததுமாகத் தொட்டு, தலையிலிருந்து கால்வரையில் தடவிக்கொண்டிருந்தாள் நிம்மி.

''அப்படியே இரு, அம்மா. ஒன்றுமில்லை. ஹிப்னடைஸ் பண்ணுகிறேன் உன்னை!'' நிம்மி புன்சிரிப்புக் காட்டினாள்.

''நிம்மி!'' மகளின் கைகளை விலக்கிக்கொண்டு எழுந்திருக்க முயன்றாள் ஜெகதா. ஆனால், ஏதோ ஒரு விலங்கு அவளைப் பூட்டி வைத்திருப்பது போல் தோன்றியது. எதை எதிர்த்து வந்திருக்கிறாளோ, எதை வெறுத்து வந்திருக்கிறாளோ, அதைத் தன் மகள்ட தன்னிடமே பரீட்சிக்க முயலுவதைக் காண ஆத்திரமும் அளவற்ற துக்கமும் அவளுடைய மன ஆழத்தில் பீரிட்டு, விழிமுனைகளில் நீராகப் பளபளத்தது. ''நிம்மி, இந்த அம்மாவைப் பார்த்தால் உனக்குப் பரிதாபமாயில்லையா? இந்தக் கூத்தெல்லாம் உனக்கு வேண்டாமென்று பைத்தியம்போல் புலம்பிக்கொண்டிருக்கிறேனே, அது உனக்கு ஒரு பொருட்டாகவே தோன்ற வில்லையா?''

''அம்மா! நீ ஒரு சுத்த இது!'' அன்னையின் தோள்களைக் கட்டிக்கொண்டு கலகலவென்று சிரித்தாள் நிம்மி. ''நான் ஒரு பரிசோதனை செய்யவேண்டும், அம்மா. அது ஒரு சவால். நீதான் எனக்கு உதவி பண்ணவேண்டும்.''

''ஒருநாளும் மாட்டேன்,'' என்றாள் ஜெகதா தீர்மானமாக. ''முதலில் கட்டிலை விட்டு இறங்கு. பொழுது விடியப்போகிறது. இன்று வெள்ளிக் கிழமை. எண்ணெய் ஸ்நானம் செய்துவிடப் பல வேலைகளைச் செய்ய வேண்டும்.''

''சரி, சரி தாராளமாய்ப் போய்க்கொள்'' என்று நகர்ந்து இடம் விட்டாள் நிம்மி. ''மனோவசியத்துக்கு உன்னை ஆட்படுத்தி, நீ எப்போதோ மறந்து போய்விட்ட விஷயங் களையெல்லாம் நீயாகவே நினைவுபடுத்திக்கொண்டு சொல்லும்படி செய்யவேண்டும். அது ஒரு கஷ்டமான சக்தி. அந்த சக்தி எனக்கு வந்திருக்கிறது என்றேன். இல்லை என்றார் அப்பா. அதைப் பரிசோதிக்கப் போகிறேன்.''

''வேண்டாம்'' என்று கட்டிலைவிட்டு இறங்கவிருந்த ஜெகதா அடுத்த வினாடி மகள் சொன்ன ஒரு பேச்சிலே திடுக்கிட்டவளாகக் கட்டிலிலேயே உட்கார்ந்துகொண்டாள்.

''பரிசோதனைக்கு நீ கிடைக்கா விட்டால் எனக்கு வேறு யாருமே அகப்படமாட்டார்களா என்ன? எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஏன், நீலகண்ட மாமா இல்லையா?'' என்று நிம்மி கூறியதுதான் காரணம்.

''வேண்டாம் நிம்மி!'' என்றாள் ஜெகதா தழுதழுத்த குரலில்.

''ஏம்மா, அப்பாவுக்கே பல வித்தைகள் அவர்தான் கற்றுக் கொடுத்தார் என்று சொல்வாயே? சும்மாதானே உட்கார்ந்திருக்கிறார் எப்போது பார்த்தாலும்?''

''சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. போதையில் உட்கார்ந்திருக்கிறார். கடுமையான குடிகாரர் அவர். சுபாவமாய் நல்லவர்தான். ஆனால் குடிமயக்கத்தில் யார் எப்படி நடந்து கொள்வார்களோ? அவரிடம் நீ போகாதே நிம்மி.''

''என்னம்மா நீ!'' என்று நிம்மி சிணுங்கினாள். 'நீயும் உதவமாட்டாய். நீலகண்ட மாமாவிடமும் போகக் கூடாது! அதெல்லாம் மாட்டேன். அவரிடம்தான் போய்ப் பரிசோதனை செய்யப் போகிறேன்.''

''என் கண்ணில்லையா? சொல்வதைக் கேள்'' என்று பெண்ணின் மோவாயைத் தொட்டுக் கெஞ்சினாள் ஜெகதா. ''சரி. இப்போது என்ன செய்ய வேண்டும் நான்? படுத்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதானே! நீ என்னை மனோவசியம் செய்யப்போகிறாய், அவ்வளவுதானே! செய், செய்'' என்றபடி கட்டிலில் படுத்துக்கொண்டாள்.

கள்ளமற்ற குழந்தை போல சிரித்தாள் நிம்மி. ''தாங்ஸ் அம்மா. ஆனால் வேண்டா வெறுப்பாய், கோபமாய்ப் படுத்துக் கொண்டால் எனக்கு உபயோகமில்லை. என்ன ஆனாலும் நிம்மியின் ஹிப்னாடிஸத்துக் கட்டுப்படுவதில்லை என்று மனசுக்குள் பிடிவாதகமாய், வீம்பாய் நீ இருந்தா யானால் நான் தலைகீழாக முயற்சி பண்ணினாலும் பலிக்காது, என்னுடன் பூரணமாய் ஒத்துழைப்பதென்று மனப்பூர்வமாய் நினைக்க வேண்டும்.''

''சரி, நினைக்கிறேன்.''

தலையணையில் சற்றே சாய்ந்தாற்போல் கிடந்த அம்மாவின்மீது கைகளை ஓட்டினாள் நிம்மி. விரல்கள் லேசான நடுக்கத்துடன் அவள் உச்சந்தலையைத் தொட்டன. நடுக்கத்துடனேயே நகர்ந்து நகர்ந்து பாதம்வரையில் வந்தன. மீண்டும் பலமுறை அவ்வாறு விரல்களால் தாயின் உடம்பைத் தடவிய பின்னர் ஆட்காட்டி விரலை மட்டும் அவளுடைய கண்ணுக்கு மேலாக நீட்டிக் கொண்டாள்.

''நீ கண்ணை மூட வேண்டாம். திறந்தபடியே வைத்துக் கொள். ஆனால் உனக்கு என்னைத் தவிர வேறு எதுவும் தெரியாது. தெரியவில்லையே?''

''தெரியவில்லை'' என்று ஜெகதாவிடமிருந்து பதில் வந்தது.

''இந்த அறையிலிருந்த படங்கள் மேஜை நாற்காலிகள் எல்லாவற்றையும் யாரோ எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். வெறும் காலியாக இருக்கிறது.''

''ஆமாம்: நாற்காலி மேஜை எதுவுமில்லை.''

''மறுபடி நான் சொல்கிற வரையில், இந்த அறையில் யார் வந்தாலும் யார் போனாலும் உனக்குத் தெரியாது. யார் என்னோடு பேசினாலும், யாருடன் நான் பேசினாலும் உனக்குக் கேட்காது. நான் உன்னோடு பேசுவது மட்டும்தான் காதில் விழும், தெரிகிறதா?''

''சரி.''

ஜெகதாவிடமிருந்து மூச்சு சீராக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அவளுடைய விழிகள் அசைவற்று, ஒரே இடத்தையே பார்த்தாற்போல் குத்திட்டு நின்றிருந்தன. ஆனால் அவளுடைய தேகம் விறைப்பாகக் கட்டை போலிராமல், லேசான ஈரம் பட்ட துணியைப் போலத் துவண்டு தொய்ந்திருந்தது.

''உன்னை இப்போது பின்னோக்கி அழைத்துப் போகப்போகிறேன். காலம் என்கிற நதியில் நீ எதிர்நீச்சல் போட்டுக்கொண்டு பின்னே போகிறாய்.

பின்னே, பின்னே, பின்னே... பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னால் போவோம். ஜனவரி மாதம் இருபத்தெட்டாம் தேதி, அந்த நாள் உனக்குத் தெரிகிறதா?''

''ஆமாம்... வந்து... தெரிகிறது.''

''இப்போது உன் வயது என்ன?''

''முப்பது'' என்றாள் ஜெகதா.

*நிம்மிக்கு வியப்பினால் விழிகள் விரிந்தன. திடீரென்று அம்மாவின் குரலில் ஓர் இளமை தென்படுகிறதே, எப்படி?*

*''எங்கே வசிக்கிறாய்?'' என்றாள்.*

*''திருவல்லிக்கேணியில்.''*

*''எந்தத் தெரு?''*

*''தெரு... சிங்காராச்சாரி தெரு.''*

*''நம்பர்?''*

*''நம்பர் தெரியவில்லை... அடுத்த வீடு ஒரு கல்யாண மண்டபம். அங்கே ஒரு கல்யாணம் நடக்கிறது.''*

*''எப்படித் தெரியும்?''*

*''நாதசுரம் வாசிக்கிற சத்தம் கேட்கிறது. வாசலில் வந்து வேடிக்கை பார்க்கிறேன்.''*

*''உன்னுடன் யார் இருக்கிறார்கள்?''*

*''என் குழந்தை, நிம்மி.''*

*''என்ன வயது?''*

*''ஆறு வயது.''*

*''தெருவில் என்ன தெரிகிறது?''*

*''கல்யாண வீட்டு வாசலில் பையனும் பெண்ணும் நிற்கிறார்கள். ஆரத்தி கரைத்துக் கொட்டுகிறார்கள். தேங்காய் உடைக்கிறார்கள். ஒரு சில்லு - வெள்ளை வெளேரென்று - தெறித்து என் வீட்டு வாசலில் வந்து விழுகிறது.''*

*''அப்புறம்?''*

*''குழந்தை நிம்மி அந்தத் தேங்காய்ச் சில்லை எடுக்கப் போகிறாள். நான் கூடாதென்று தடுக்கிறேன். ஒரு ரிக்ஷாக்காரன் வந்து அந்தச் சில்லை எடுத்துக்கொண்டு போகிறான்.''*

''நீ என்ன டிரஸ் பண்ணிக் கொண்டிருக்கிறாய்?''

''கோடம்பாக்கம் புடவை - ஸ்பன் ஸில்க் கட்டிக் கொண்டிருக்கிறேன்.''

''நிறம்?''

''மாந்துளிர் கலர்.''

''என்ன கரை?''

''கறுப்பு.''

''ப்ளவுஸ்?''

''வாயல் - சிவப்பு.''

''தலையைப் பின்னிக்கொண்டிருக்கிறாயா அல்லது வெறுமே முடிந்து கொண்டிருக்கிறாயா?''

''இரட்டையாய்ப் பிரித்து முறுக்கிப் பிச்சோடா போட்டுக்கொண்டிருக்கிறேன்.''

''பூ?''

''மல்லிகைப்பூ வைத்திருக்கிறேன்.''

''கழுத்தில் என்ன நகை போட்டிருக்கிறாய்?''

''கல் அட்டிகை.''

''கையில்?''

''ப்ரிட்ஜ் வளையல் - கைக்கு ஒரு ஜோடி.''

''கல்யாண வீட்டில் மாப்பிள்ளையும் பெண்ணும் உள்ளே போனதும் நீயும் உன் வீட்டுக்குள் போகிறாயா?''

''ஆமாம் - இல்லை, போகவிருக்கிறேன். ஓர் ஆள் வருகிறான்.''

''நடந்தா?''

''இல்லை, சைக்கிளில்.''

''யாரைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறான்?''

''டிரைவர் தங்கவேலுவைத் தேடிக்கொண்டு வருகிறான். கவலையாயும் பதற்றமாயும் இருக்கிறான். தங்கவேலுவைப் பார்க்கவேண்டும் என்கிறான்.''

''அவசரமாய்ப் பார்க்கவேண்டும் என்கிறானா?''

ஜெகதா, 'ஆமாம் ஆமாம்' என்று உறுதியாய்க் கூறுகிறமாதிரி பலமாய்த் தலையை அசைத்தாள்.

''என்ன விஷயம் என்று நீ கேட்கிறாயா?''

''கேட்கிறேன். தங்கவேலுவின் மனைவி பிரசவத்துக்குப் போயிருக்கிறாள். தாம்பரத்தில் அவள் அம்மா வீடு. அங்கே தான் போயிருக்கிறாள். குழந்தை வயிற்றுக்குள் இறந்துவிட்டதாம். தாய் ரொம்ப ஸீரியஸாய்க் கிடக்கிறாளாம். தங்கவேலுவை அழைத்துக்கொண்டு போவதற்காக இந்த ஆள் வந்திருக்கிறானாம்.''

''தங்கவேலுவை நீ அனுப்புகிறாயா?''

''புரொபசரைக் கேட்டுக் கொண்டு போகச் சொல்கிறேன்.''

''புரொபசர் என்றால் யார்?''

ஜெகதா முதன் முறையாகச் சிரித்தாள். ''என் கணவர்தான். வேறு யார்?''

''புரொபசர், தங்கவேலுவை அனுப்புகிறாரா?''

''இல்லை?''

''பின்னே?''

''போகக்கூடாது. அந்த ஆள்சொல்வதெல்லாம் பொய் என்கிறார்.''

''தங்கவேலு என்ன சொல்கிறான்?''

''இல்லை, சத்தியமாய் நிஜம்தான் என்று அழுகிறான்.''

''புரொபசர் என்ன சொல்கிறார்?''

''தங்கவேலுவிடம் கோபமாய் இரைகிறார். 'போன மாசம் பெங்களூருக்குப் போகவேண்டுமென்று கூப்பிட்ட போது, உன் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று பொய் சொன்னாயில்லையா? நானே பெங்களூருக்குக் கார் ஓட்டிக் கொண்டு போனேன். அமிஞ்சிக்கரையில் ஒரு தியேட்டர் வாசலில் உன்னைப் பார்த்தேன். சினிமா டிக்கெட்டுக்காகக் க்யூவில் நின்றிருந்தாய். அது பொய்தானே?' என்கிறார்.

''தங்கவேலு என்ன சொல்கிறான்?''

''அப்போது சொன்னது பொய்தான், இப்போது சொல்வது நிஜம் என்கிறான்.''

''புரொபசர் என்ன செய்கிறார்?''

''நீ என்ன கெஞ்சினாலும் சரி, உன்னை அனுப்ப முடியாது என்கிறார்.''

''தங்கவேலு போய்விடுகிறானா?''

''இல்லை. அழுது பார்த்து நடக்காததால் கோபம் வந்துவிடுகிறது. ஒரு நாற்காலியை எடுத்து ஆத்திரமாய் எறிகிறான் புரொபசர்மீது.''

''அப்புறம்?''

''நெற்றியில் பலமான காயம் புரொபசருக்கு, ரத்தம் வழிகிறது. நான் துடைக்கப்போகிறேன். என்னைத் தள்ளிவிடுகிறார்.''

''பிறகு?''

''வேறு ஆட்களைக் கூப்பிட்டுத் தங்கவேலுவைப் பிடித்து வைக்கிறார். போலீசை வரவழைத்து நடந்ததைச் சொல்லி, தங்கவேலுவை அவர்களிடம் ஒப்படைக்கிறார். தங்கவேலுவை இழுத்துக் கொண்டு போகிறார்கள்.''

ஜெகதா அதற்குமேல் பேசவில்லை. நிம்மி அவளை மேற்கொண்டு கேட்காததே காரணம். அம்மாவிடமிருந்து பார்வையைத் திருப்பி, வாசல் புறம் பார்த்தாள்.

''கங்கிராசுலேஷன்ஸ் நிம்மி!'' அறைக்கு வெளியே திரைச்சீலைக்குப் பின்னால் மறைவாக நின்றிருந்த புரொபசர் விரைந்து வந்து, மகிழ்ச்சியுடன் மகளின் கைகளைக் குலுக்கினார்.

''கரெக்ட்தானா அப்பா அம்மா சொன்னதெல்லாம்?'' என்றாள் நிம்மி.

''ரொம்பக் கரெக்ட். அன்று என்ன புடவை உடுத்தியிருந்தாள்; அடுத்த வீட்டில் என்ன நடந்தது என்றெல்லாம் என்னால் சொல்லமுடியாது. ஆனால் இவள் குறிப்பிடுவது போன்ற ஒரு நிகழ்ச்சி, நாங்கள் திருவல்லிக்கேணியில் வசித்தபோது நடந்தது உண்மைதான்.''

நிம்மி தன் தாயை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் அப்படியே அசையாமல் இருந்தாள். புரொபசர் உள்ளே வந்திருப்பதோ, பேசுவதோ அவளுடைய உணர்வுகளில் பதிந்தமாதிரி தோன்றவில்லை.

''அந்த டிரைவருக்கு அப்புறம் என்னப்பா நேர்ந்தது?''

''ஆறுமாதம் ஜெயிலில் போட்டார்கள். அவன் பெண்டாட்டி செத்து விட்டாள். அதைப்பற்றி இப்போதென்ன? நிம்மி, நீ பிரமாதமான சக்தியைப் பெற்றிருக்கிறாய். மனோவசியத்தில் இது மிக அரிதான சக்தி. எல்லோருக்கும் கைவந்து விடாது.''

''தாங்ஸ் டாடி!'' என்றாள் நிம்மி. ''அம்மாவை எழுப்பிவிடலாமா?''

''இரு, இரு!'' என்றார் மித்ரா அவசரமாக. ''பன்னிரண்டு வருடத்துக்கு முன்பு நடந்ததை உன் அம்மா ஞாபகத்துக்குக் கொண்டுவரும்படி செய்திருக்கிறாய். இன்னும் கொஞ்சம் பின்னே போக முடியுமா பார்க்கலாம்.''

''எதற்காக அப்பா?''

''எதற்காகவா? எவ்வளவுக் கெவ்வளவு ஆழமாக மனித உள்ளத்தை உன்னால் துளைக்க முடிகிறதோ அவ்வளவுக்கவ்வளவு உன் சக்தி வலுவானது, சிறப்பானது என்று ருசுவாகும் இல்லையா?''

''சரி. நான் என்ன செய்ய வேண்டும்?''

''மேலும் ஓர் ஆறு வருஷம் பின்னோக்கிப் போகச் சொல்.'' இதைக் கூறும்போது புரொபசரின் கண்களில் ஒரு கடினம் தென்பட்டது. அவருடைய உதடுகள் கருங்கல்லில் செய்யப்பட்டாற் போல் கெட்டிப்பட்டன. வெளியே இரவின் கருமைக் கோலம் முற்றிலும் விலகி, கீழ்வானத்தின் வெளிச்சம் உலகையெல்லாம் தழுவத் தொடங்கியது.

புரொபசர் எழுந்து சென்று அறையின் கதவுகளைத் தாளிட்டார். தாளிடும்போதே, சட்டையிலிருந்து ஒரு சிறிய டைரியை எடுத்து எதையோ பார்த்துக் கொண்டார். பிறகு மகளிடம் திரும்பி வந்தார்.

''ஆறுவருடங்கள் பின்னோக்கிப் போ. ஜூலை மாதம் மூன்றாம் தேதி, என்னென்ன நடந்தது என்று கேள்!'' என்றார் மித்ரா.

நிம்மி அம்மாவின் பக்கம் நோக்கினாள். கைகளால் அவளைத் தடவி விட்டாள் காலோடு தலை...

''நான் பேசுவது காதில் விழுகிறதா?''

''விழுகிறது'' என்றாள் ஜெகதா.

''சற்று முன்பு என்ன செய்துகொண்டிருந்தேன்?''

''மௌனமாயிருந்தாய்.''

நிம்மி புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டாள். ''இப்போது இன்னும் நன்றாய் ரிலாக்ஸ்டு ஆக இரு. உடம்பையும் மனத்தையும் நன்றாய்த் தளர்த்திக்கொள். காலத்தில் இன்னும்

பின்னே நாம் போய்க்கொண்டிருக்கிறோம். மேலும் ஆறு வருடம் பின்னே போகிறோம். உனக்கு இருபத்துநாலு வயதாகப் போகிறது. இரண்டு நிமிடத்தில் உன்னைச் சில கேள்விகள் கேட்கப் போகிறேன். அப்போது உனக்கு இருபத்துநாலு வயதாகி விடும். உனக்கு இருபத்துநாலு வயது. இருபத்துநாலு வயது. இப்போது உனக்கு இருபத்துநாலு வயது ஆகிறது, எங்கே வசிக்கிறாய் நீ?''

''மாம்பலத்தில்.''

இரண்டாம் முறையாகத் தூக்கிவாரிப் போட்டது நிம்மிக்கு. அம்மாவின் குரலில் மேலும் எத்தனை இளமை!

''பழைய மாம்பலமா, புது மாம்பலமா?''

''பழைய மாம்பலம்.''

''என்ன தெரு?''

''தெருவுக்குப் பெயர் வைக்க வில்லை; இங்கே ஒரு வீடு, அங்கே ஒரு வீடு என்று இருக்கிறது. நாங்கள் அந்தண்டை கடைசியில் குடியிருக்கிறோம்.''

''நாங்கள் என்றால் யார் யார்?''

''நான், என் அம்மா, என் அப்பா.''

''உனக்குக் கல்யாணமாகி விட்டதா?''

''இல்லை.''

''வேலை பார்க்கிறாயா?''

''தேடிக்கொண்டிருக்கிறேன்.''

''சுவரைப் பார், காலண்டர் தெரிகிறதில்லையா?''

''தெரிகிறது.''

''தேதியைக் கவனி. ஜுலை மூன்றாம் தேதி என்று போட்டிருக்கிறதா?''

''ஆமாம்.''

''என்ன நடக்கிறது. சொல்லு.''

''அப்பா சாப்பிட்டுவிட்டார். நான் இலையை எறிவதற்காக வாசலுக்கு வருகிறேன். இரண்டு பேர் வருகிறார்கள்.''

''வயதானவர்களா, வாலிபர்களா?''

''வாலிபர்கள்.''

''இரண்டு பேரும் உனக்குத் தெரிந்தவர்களா?''

''ஒருவரைத்தான் தெரியும். அடிக்கடி வருவார். அம்மாவுக்கு ஏதோ உறவு.''

''பெயர்?''

''மித்ரா.''

''புரொபசர் மித்ராவா?''

''இல்லை. வெறும் மித்ரா தான்.''

''கூட வருகிறவர் யார்?''

''மித்ராவின் சினேகிதராம். அப்பாவிடம் அறிமுகம் செய்கிறார்.''

''என்ன பெயர்?''

''நீலகண்டன். ஆமாம். நீல கண்டன்.'' ஜெகதாவின் உதடுகளில் ஒரு இளநகை அரும்பியது.

புரொபசர் மித்ரா, சற்று எட்ட நின்றிருந்தவர், நிம்மி கேள்விகளைக் கேட்கக் கேட்க அருகில் வரத்தொடங்கினார். இறுதியில் நிம்மியின் பின்னாலேயே நின்றுகொண்டார். நாற்காலியைப் பலமாய்ப் பிடித்திருந்ததால் நரம்புகள் புடைத்துக்கொண்டு நின்றன.

''நீலகண்டனும் மித்ராவும் வருகிறார்கள்... நீ?''

''நான்-'' ஜெகதாவின் விழிகள் முதன்முறையாக அசைந்தன.

நிம்மி அவளைத் தூண்டினாள். ''நன்றாய் ஞாபகம் வருகிறது உனக்கு யோசனை செய். சிரமப்படாதே. அலட்டிக் கொள்ளாதே. சினிமா பார்க்கிறமாதிரி உனக்கு எல்லாம்

தெரிகிறது. இல்லையா? நீ என்ன செய்கிறாய்? நீலகண்டனும் மித்ராவும் உள்ளே வந்ததும் நீ-''

நிம்மி தன் பேச்சை முடிக்கு முன் வெளியே கதவு தட்டப்பட்டது. புரொபசர் திடுக்கிட்டுத் திரும்பி. ''யாரா யிருந்தாலும் அப்புறம் வா!'' என்றார்.

அதற்குக் கட்டுப்படவில்லை வெளியே கதவைத் தட்டியவர். மேலும் தட்டினார்.

நிம்மி எழுந்துகொண்டு ''யாரது?'' என்றாள்.

''நான் கல்யாணம். மிஸ் நிம்மி இருக்கிறார்களா?''

நிம்மி கதவின் குமிழில் கைவைத்துத் திருகினாள். ''வேண்டாம். இப்போது திறக்காதே!'' என்று கட்டளை யிட்டார் புரொபசர்.

அதற்குள் மறுபக்கத்தில் அவனும் உட்புறம் தள்ளித் திறந்துவிட்டான்.

## 6

> I Say to X; "The two men have gone away; you and I are alone." From this moment X neither sees nor hears them. nor perceives them by means of any sense. - Albert Moll

உள்ளே நுழைய முயன்ற இறைஞனுக்கு வயது இருபத்தாறு இருபத்தேழு இருக்கும். கருகருவென்று வளர்ந்திருந்த சைட்பர்ன்ஸ் அவனுடைய சிவந்த முகத்தில் எடுப்பாகத் தெரிந்தது. ஸிதார் வாசிக்கத் தெரிந்தவனோ தெரியாதவனோ, அப்படித் தோற்றம் தரக்கூடிய விதத்தில் ஜிப்பா பைஜாமா அணிந்திருந்தான். மார்பின்மீது ஒரு நீல

நிறப் பவழ மாலை நடுவில் முடிச்சுப் போடப்பட்டு, லூஸாகத் தொய்ந்து கிடந்தது. எந்தப் பிரசினையையும் சிரித்துக் கொண்டே முறியடிக்கிறவன் என்பதைக் காட்டுகிற மாதிரி அவன் வதனத்தில் ஓர் இனிமையும் புன்னகையும் விரவியிருந்தன..

ஒரு காலை அறைக்குள் வைத்தவன் இன்னொரு காலையும் வைக்குமுன் புரொபசர் மித்ரா முந்திக்கொண்டார். நிம்மி அவனை வரவேற்பதை அவர் விரும்பவில்லை. அவனைத் தடுக்கும் நோக்கத்துடன், ''முன்னறையில் போய் இருங்கள். இதோ அங்கே வந்துவிடுகிறேன் சில நிமிடங்களில். விஸிட்டர்கள் இவ்வளவு தூரம் வருவது வழக்கமில்லை'' என்றார்.

''தங்களுக்குத் தெரிந்தது தங்களுடைய வேலைக் காரனுக்குத் தெரியவில்லை பாருங்கள்'' என்றான் கல்யாணம் என்ற அந்த வாலிபன். ''மிஸ் நிம்மி எங்கே என்று விசாரித்ததும் இந்த அறையைச் சுட்டிக் காட்டினான். மிஸ் நிம்மியைக் கூப்பிடச் சொல்லித் தொந்தரவு தர வேண்டாம் என்று இங்கேயே வந்துவிட்டேன்.''

''வந்ததைப் பற்றிப் பரவாயில்லை. திரும்பி அங்கே போய் இருங்கள்,'' என்றார் புரொபசர் கண்டிப்புடன்.

சுண்டெலியைப் போன்ற சுறு சுறுப்புடன் கல்யாணத்தின் பார்வை அந்த அறைக்குள் ஓடியது. நிம்மியின் மீது அரைக் கணம் தீங்கிவிட்டு, அவளைத்தாண்டி, கட்டிலுக்குச் சென்றது. சிலை போல் ஆடாது அசையாது உட்கார்ந்திருக்கும் ஜெகதாவைக் கண்டதும் வியப்பும் பயமும் அவன் முகத்தில் தோன்றின.

''அந்த அம்மாளுக்கு என்ன... ஏன் அப்படி உட்கார்ந்திருக்கிறார்கள்? எதனால் அப்படி வெறித்துப் பார்க்கிறார்கள்?'' என்றான் திகைப்புடன்.

புரொபசர் கண்டிப்பைக் கடுமையாக மாற்றிக் கொண்டு, ''டிராயிங் ரூமில் போய் நீ உட்கார்ந்துகொண்டால் நன்றாயிருக்கும், மீறிப் பிடிவாதம் பிடித்தால், அங்கே உட்கார்ந்திருக்கலாம் என்கிற சலுகையையும் நான் ரத்துப் பண்ணிவிட வேண்டியிருக்கும்'' என்று கூறியதோடு மட்டுமல்ல, அவனை வலுக்கட்டாயமாக வெளியேற்றப் போகிறவர் போல அவன் தோள்மீது அழுத்தமாகக் கையை வைக்கவும் செய்தார்.

''ஒரு நிமிடம் அப்பா'' என்றாள் நிம்மி குறுக்கிட்டு, ''மிஸ்டர் கல்யாணம், நீங்கள் லீலாவதியின் அண்ணன் தானே?''

''கரெக்ட்,''

''நேற்றிரவு போன் செய்தீர்கள், இல்லையா?''

''ஆமாம், என் தங்கையின் மீது ஏதோ குரோதம் வைத்துக்கொண்டு, நெருப்புக் குச்சியால் முகத்தில் சுட்டுவிட்டு, ஹிப்னாடிஸத்தால் அப்படி தேர்ந்தது என்று சொன்னீர்களாம். நாங்கள் ஒன்றும் முட்டாளல்ல அதை யெல்லாம் நம்புவதற்கு என்று சொல்வதற்காகத் தான் வந்தேன் இப்போது.''

''த்ஸு'' என்று கேலியாகச் சூள் கொட்டினாள் நிம்மி. ''என்னோடு சண்டை போடுவதற்காகக் கல்கத்தா பிரயாணத்தைக்கூட அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்று இந்த விடிகாலையில் வந்திருக்கிறீர்கள்? அப்படித்தானே?'' என்றாள் நிம்மி தொடர்ந்து.

''பல ஜோலிகளைக் கவனித்து முடித்துவிட்டு இன்றிரவு ஹௌரா எக்ஸ்பிரஸைப் பிடிக்க வேண்டும். வண்டியைப் பிடிக்கிறேனோ இல்லையோ, சண்டையைப் பிடித்துவிட வேண்டுமென்று, நீங்கள் வேறெங்கும்

நழுவுவதற்கு முன்னால் காலை வேளையிலேயே வந்து விட்டேன்'' என்றான் கல்யாணம்.

''நான் நழுவவேண்டிய அவசியமே கிடையாது'' என்று ரோஷத்துடன் பதிலளித்தாள் நிம்மி. ''அப்பா, கதவை நன்றாகத் திறந்து அவரை உள்ளே வரவழையுங்கள்.''

''எதற்கு? புரொபசர் மித்ரா ஆட்சேபித்தார்.

''ஸ்கெப்டிக்குகளை எப்படியப்பா பின்னே நம்ப வைப்பது? அம்மா இப்போது ஹிப்னாஸிஸ் நிலையில் இருக்கிறாள். நாம் நம் பரிசோதனைய்யைத் தொடர்ந்து நடத்துவோம். இவரும் இங்கேயே இருந்து, நடப்பதைப் பார்க்கட்டும்.''

''முட்டாள்தனம்!'' என்றார் மித்ரா. ''இது ஸ்டேஜ் பர்ஃபாமென்ஸ் இல்லை நிம்மி, ஊரையெல்லாம் கூட்டிக் காட்ட!''

''ஆடியன்ஸில் இவர் ஒருவரை மட்டும் சேர்த்துக் கொள்ளலாம் அப்பா'' என்றாள் நிம்மி சிரித்துக் கொண்டே. புரொபசரின் முகம் இருளடைந்து கடுகடுப்பாக மாறிவருவதை அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ''அம்மாவிடம் என்ன கேட்கச் சொன்னீர்கள்?'' அவள் நெற்றியைத் தட்டிக் கொண்டாள். ''ஆ! அந்தத் தேதி - என்ன நடந்தது என்று கேட்கச் சொன்னீர்களே - அது என்ன தேதி?''

''நிம்மி!'' என்று பல்லைக் கடித்தார் புரொபசர். ''அது நம் சொந்த விஷயம். நான் மட்டுமே காணவேண்டியது, கேட்கவேண்டிய பரிசோதனை அது. முன் பின் தெரியாத அன்னியர் எதிரில் அதைச் செய்யத் தேவையுமில்லை, செய்யவும் கூடாது.''

புரொபசரின் கண்ணோட்டம் நிம்மிக்குப் பிடிபட வில்லை. அவளுடைய குழந்தைத்தனமான கண்கள்

அவருடைய இரும்பு முகத்தை ஆராய்ந்தன. கற்பாறையில் தேன் சுவைக்க முயலும் வண்டைப்போல, எந்த விஷயத்தையும் அந்த முகத்திலிருந்து கிரகிக்க முடியாமல் அவள் விழிகள் தோல்வியுற்று தாழ்ந்தன. ''இல்லையப்பா... வந்து... மனோவசியம் என்பதே வெறும் ஹம்பக் என்கிறாரே இவர். அதனால்...''

''அதை நிரூபிக்க உன் அம்மாதான் கினி பிக்கா?'' என்று அவளது பேச்சை வெட்டினார் மித்ரா. ''உன் அம்மாவை ஹிப்னாஸிஸிருந்து எழுப்பிவிடு. நான் நினைத்த பரிசோதனையை இன்னொரு நாள் வைத்துக்கொள்ளலாம். எனக்குத் தெரியாமல் அம்மாவிடம் எந்தக் கேள்வியும் கேட்கவும் வேண்டாம். பேசவும் வேண்டாம். புரிகிறதா?''

''சரி அப்பா'' என்றாள் நிம்மி பரிதாபமான பணிவுடன்.

கல்யாணம் விளையாட்டாக ஒரு பெருமூச்சு விட்டான். ''அநியாயமாய் ஒரு ஹோக்ஸை நான் கண்டு பிடிக்க முடியாமல் தடுத்துவிட்டீர்கள்!'' என்றவன், நிம்மியின் முகம் கோபத்தால் சிவப்பதைக் கவனித்தவனாக, ''ஸாரி! அநியாயமாய் நான் ஒரு முதல் தரமான ஹிப்னாடிஸ நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமல் தடுத்துவிட்டீர்கள்'' என்றான்.

புரொபசர் மித்ரா முறைப்பாக, ''முதலில் பண்பாடும் நாசூக்கும் கற்றுக்கொண்டு வா. பிறகு உன்னுடன் பேசுகிறேன்'' என்றார்.

''அதற்கு ரொம்ப நாளாகும் புரொபசர்'' என்று கல்யாணம் சிரித்த போது அவனுடைய ஆரோக்கியமான பற்கள் பளீரென வெளித்தெரிந்தன. ''இவ்வளவு தூரம் வந்துவிட்டதால், மிஸ் நிம்மியின் சினேகிதியின் சகோதரன் என்ற முறையில் நான் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து

விட்டுப் போகலாம் இல்லையா? அதற்குத் தடையில்லையே?''

''அது நிம்மியின் இஷ்டம்'' என்றார் புரொபசர் முறைப்புத் தளராமல். ''அனாவசியமான நபர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாதென்று நிம்மிக்குத் தெரியும். அவளுக்குத் தெரியாதிருக்கும் சமயங்களில் அதை எப்படித் தெரிய வைப்பது என்பது எனக்குத் தெரியும்.''

புரொபசர் மித்ரா வெளியேறிவிட்டார். கல்யாணம் தோள்களை ஒருமுறை குலுக்கிவிட்டுக்கொண்டு, உதட்டைப் பிதுக்கி, கைகளை விரித்தான். நிம்மி, அம்மாவை நோக்கிச் சென்றவள், திரும்பி நின்று அவனைப் பார்த்தாள். ''அப்பா தடுத்துவிட்டதைச் செய்ய முடியாவிட்டாலும் வேறொன்றை உங்களுக்குச் செய்து காட்டலாமென்று பார்க்கிறேன்'' என்றாள்.

ஜெகதாவையே பார்த்தவாறிருந்தான் கல்யாணம். ''இவர்கள் உங்கள் அம்மாவா? வீட்டுக்குள் சொந்த அம்மாவையே ஹிப்னாடிஸம் செய்கிறீர்களே?'' என்றான்.

''அம்மாடா! ஏதோ ஹிப்னாடிஸம் என்று ஒன்று உண்டு என்பதை இப்போதாவது ஒப்புக்கொண்டீர்களே!'' என்றாள் நிம்மி.

''வானத்துக்கும் வையத்துக்கும் நடுவே மனிதனால் புரிந்துகொள்ள முடியாதவை பல நடக்கின்றன என்று ஒரு அறிவாளி சொன்னார், அப்படியிருக்க, எனக்குப் புரியாததை இல்லாதது என்று சொல்ல நான் முட்டாளா!''

''இரண்டாம் தடவை தாங்க் காட்! நீங்கள் போட வந்த சண்டைக்கு அடிப்படையை நீங்களே தகர்த்துவிட்டீர்கள்!''

''சண்டை போட வந்தேன் என்பதைத் தயவுசெய்து திருப்பித் திருப்பிச் சொல்லாதீர்கள்'' என்றான் கல்யாணம்.

''லீலாவதி அடிக்கடி சொல்வாள் உங்களைப்பற்றி, உங்கள் இதைப்பற்றி.''

''எதைப்பற்றி?'' என்று வேண்டுமென்றே அவனைச் சீண்டுகிற மாதிரி குறும்பாகக் கேட்டுவிட்டு, அம்மாவிடம் சென்றாள் நிம்மி.

''ஆகவே உங்களைப் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் நான் இப்படியொரு சாக்குத் தேடியிருக்கலாமல்லவா?''

நிம்மியின் வாய்க்குள் சிவப்பு விளக்குப் போட்ட மாதிரி அவள் ரோஜாக் கன்னங்களில் பளீரென்று ஒரு செம்மையின் ஜொலிப்பு ஏறியது. அதை மறைக்க முயலுவது போல, ''கவனியுங்கள்'' என்று கூறிவிட்டு அம்மாவின் எதிரே நின்றுகொண்டாள்.

''நான் இப்போது உன்னுடன் பேசுகிறேன். யார் என்று தெரிகிறதா?'' என்றாள்.

கண்களைச் சிறிதும் மூடமாமல் திறந்தவாறே வைத்துக் கொண்டிருந்த ஜெகதா, ''நன்றாய்த் தெரிகிறது, நிம்மி'' என்றாள்.

''இதுவரை நான் யாருடன் பேசினேன்? என்ன பேசினேன்?''

''ஒன்றும் பேசக் காணோமே? ரொம்ப நேரமாய் ஏதோ கதவுப் பக்கம் போவதும் வருவதுமாய் இருக்கிறாயே தவிர, எதுவும் பேசவில்லையா? எனக்கு திகைப்பாய்க்கூட இருந்தது, ஏன் பேசாமலே இருக்கிறாய் என்று.''

'பார்த்தீர்களா?' என்று கேட்கும் பாவனையில் கல்யாணத்தை நோக்கித் தன் கண்களை உயர்த்தினாள் நிம்மி. ஆனால் அவனுடைய ஆச்சரியம் வார்த்தைகளாக வெளிப் படத் தேவையிருக்கவில்லை. எழுதி ஒட்டினாற்போல பிரமிப்பு அவன் முகம் முழுதும் வியாபித்திருந்தது. இப்படிக்

கூட ஒரு கண்கட்டு வித்தை நடைபெற முடியுமா என்ற குழப்பம் அவனை நிலைகுலையச் செய்திருந்தது.

அவனுடைய குழப்பம் நிம்மிக்கு ஆனந்தம் தருவதாயிருந்தது. அதைத் தனக்குள் தானே அனுபவித்தபடி, ''கையை மூன்று தரம் தட்டுகிறேன். மூன்றாவது தட்டின் போது நீ விழித்துக் கொள்வாய்'' என்று தாயினிடம் கூறினாள்.

ஜெகதா பேசவில்லை.

''ஒன்! டூ!'' என்று சொல்லி நிம்மி கையைப் பட்பட்டென்று தட்டிய பின்னர், ''த்ரீ!'' என்று கூவியபோது, அணைபடாத சிகரெட் முனையை மிதித்து விட்டவள்போல ஜெகதா சட்டென்று உடம்பைச் சிலிர்த்துக்கொண்டாள். இத்தனை நிமிடங்களாக அவள் தேகத்தின் நாடி நரம்புகளை விட்டு வேறெங்கோ ஓடிவிட்டிருந்த ரத்தம் குபுக்கென்று திரும்பி வந்து, ஆயிரக்கணக்கான மயிர்க்கால்களிலும் புகுந்து புறப்பட்டாற்போன்று ஓர் உயிர்ப்பு அவளிடம் தோன்றியது. கனவின் நடுவில் திடுக்கிட்டு விழித்தவள் போலன்றி, சுபாவமாக எழுந்திருப்பவள் போன்றுதான் அவள் காட்சி தந்தாள். ஆனால் எதிரே ஓர் அன்னிய வாலிபன் நின்றிருப்பதைக் கண்டவுடன் அவ்ள் இயல்பில் ஒரு சங்கடமும் பதற்றமும் ஏற்பட்டன.

''என்னம்மா நிம்மி, ஒரு வார்த்தை சொல்ல வேண்டாமா அயலார் இருக்கிறார்கள் என்று?'' மகளைக் கோபித்துக்கொண்ட வண்ணம் புடவையைச் சரிசெய்து கொண்டாள்.

''என் சிநேகிதி லீலாவதி இல்லை, அம்மா? அவளுடைய அண்ணன் இவர். கல்கத்தாவிலிருந்து வந்திருக் கிறார்'' என்று அறிமுகம் செய்தாள் நிம்மி. ''பெயர்தான் கொஞ்சம் கர்னாடகம் - கல்யாணமாம்.''

''உங்களுக்கு விருப்பமானால் கல்யாண் என்று கூப்பிடுங்களேன்'' என்றான் கல்யாணம்.

''ஏன், தாதர், ஸயான் என்று கூப்பிடுகிறேன்!'' என்று சிரித்தாள் நிம்மி.

கல்யாணத்தையே வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஜெகதா மெல்ல எழுந்துகொண்டாள், ''அப்பப்பா! முதுகெல்லாம் என்ன வலி வலிக்கிறது!'' என்ற வேதனை முனகலுடன்.

அத்தனை நேரமாய் அசையாமல் விறைத்தாற்போல் உட்கார்ந்திருந்ததால் அவள் உடம்பு கணுவுக்குக் கணு வலியினால் துடித்துக்கொண்டிருக்கும் என்பதை நிம்மி உணர்ந்தாள். ''நான் அழைத்துப் போகிறேன், அம்மா'' என்று அன்னையின் கையைப் பிடித்துக்கொண்டாள்.

ஆனால் கட்டிலை விட்டு நாலடிதான் நடந்திருப்பாள் ஜெகதா. ''நிம்மி, எனக்குத் தலையைச் சுற்றுகிறது. கண்ணை இருட்டிக்கொண்டே வருகிறது.'' என்று சொன்னபடியே, மகளின் கைப்பிடியிலிருந்து வழுக்கிக்கொண்டு நடுத்தரை யில் உட்கார்ந்தவள், அடுத்த.கணம் அலங்கோலமாகச் சாய்ந்துவிட்டாள்.

''அம்மா! ஐயோ! என்னம்மா?'' என்று ஒரு பக்கம் நிம்மி பதற, ஜெகதா தரையில் சாயும்போதே சட்டென்று கல்யாணம் அவளை முதுகுப்புறம் தாங்கிக்கொண்டு அடிபட்டு விடாமல் கீழே கிடத்தினான்.

''மயக்கம் போலிருக்கிறது. கொஞ்சம் குளிர்ந்த தண்ணீர் எடுத்து வாருங்கள்'' என்று நிம்மியை அனுப்பிவிட்டு, மின்சார விசிறியைச் சுழலவிட்டான் கல்யாணம்.

நிம்மி அறையை விட்டு அந்தண்டை மறைந்த வினாடியே தலையைத் தூக்கினாள் ஜெகதா. ''கல்யாணம் உன்னைப் பார்த்தால்-''

கல்யாணம் திடுக்கிட்டவனாக, ''உங்களுக்கு மயக்கம் சரியாகிவிட்டதா?'' என்றான்.

ஒரு வெளிறிய புன்னகையுடன் ஜெகதா பேசினாள்: ''மயக்கமே கிடையாது. உன்னைப் பார்த்தவுடனேயே, என் பிள்ளைமாதிரி உன்னிடம் ஒரு பாசம் ஏற்பட்டுவிட்டது. அதனால்தான்-''

நிம்மி திரும்பிவரும் ஓசை கேட்டதும் முன்போலவே படுத்துவிட்டாள் ஜெகதா. கல்யாணத்தைக் குழப்பமும் திகைப்பும் வாட்டியெடுத்தன.

''நிம்மி, உங்கள் அம்மாவுக்குக் கொஞ்சம் மயக்கம் தெளிவடைந்திருக்கிற மாதிரி தோன்றுகிறது. யாராவது டாக்டரை வரவழையுங்கள் போன் பண்ணி...'' என்றான்.

நிம்மி, கலவரத்தால் •ஆட்கொள்ளப்பட்டவளாக விரைந்து வந்து அம்மாவின் முகத்தை ஒருமுறை குனிந்து பார்த்துவிட்டு மறுபடி வெளியே ஓடினாள்.

''சொல்லுங்கள்'' என்று ஜெகதாவை ஊக்கினான் கல்யாணம்.

''உன்னைப் பார்த்த மாத்திரத்திலேயே உன்னிடம் என்ன உதவி வேண்டுமானாலும் கேட்கலாம் என்று எனக்குத் தோன்றிவிட்டது. கல்யாணம், நான் கேட்பதைச் செய்வா யல்லவா?'' கிசுகிசுத்த குரலில், ஒரு கண் அறை வாசலிலும்• ஒரு கண் கல்யாணத்தின் முகத்திலுமாகப் பதற்றத்துடன் வினவினாள் ஜெகதா.

''எனக்கும் உங்களைப் பார்த்தால் என் அம்மாவைப் பார்த்தமாதிரி இருக்கிறது. ஆனால் நான் இன்று கல்கத்தா போகிறேனே'' என்றான் கல்யாணம்.

''போகாதே, தயவு பண்ணிப் போகாதே'' என்று அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள் ஜெகதா ''முன்பின்

அறியாதவள் இப்படிக் கேட்க என்ன உரிமை என்று யோசிக்காதே.''

''என்ன செய்யவேண்டும்? முதலில் அதைச் சொல்லுங்கள்!''

மறுபடி வெளியே காலடியோசை கேட்டது. ''இப்போது வேண்டாம். ராத்திரி எட்டுமணி சுமாருக்கு இந்தத் தெருவின் கோடியில் காத்திரு. அங்கே வந்து உன்னைச் சந்திக்கிறேன்'' என்றாள் ஜெகதா. அவள் விழிகள் உண்மையான அச்சத்துடன் சுழன்றன. உதடுகள் உணர்ச்சி வசப்பட்டுத்துடித்தன.

தன்னையும் மீறிய அனுதாபத்துடன், ''சரி'' என்று ஒப்புக்கொண்டான் கல்யாணம்.

''டாக்டர் வருவதாகச் சொல்லியிருக்கிறார்'' என்று தெரிவித்தபடியே திரும்பி வந்தாள் நிம்மி.

''எனக்கு ஒன்றுமில்லை, நிம்மி. கொஞ்ச நேரம் படுத்திருந்தால் சரியாகிவிடும்'' என்று ஜெகதா எழுந்து கொண்டாள்.

''ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். வருகிறேன்'' என்று விடைபெற்றான் கல்யாணம், ஜெகதா வின் கண்களை அவன் கண்கள் சந்தித்து, மீண்டுமொரு முறை உறுதி கூறின.

ஏழரை மணி இருக்கும். புரொபசர் மித்ராவின் பங்களாவில் ஒருசில அறைகள் நீலக்குழல் விளக்கில் குளித்துக்கொண்டிருக்க, வேறு சில அறைகள் இருட்டோடு இருட்டாகப் புதைந்து கிடந்தன. பின்னவற்றுள் ஒன்றான புரொபசரின் ஆபீஸ் அறையை ஓசைப்படாமல் நெருங்கிக் கொண்டிருந்தாள் ஜெகதா. ரோடு எஞ்சின்போல அவள்

இதயம் தித்திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. அடிமேலடி வைத்து, அறை வாசலை அடைந்து, பூட்டில் சாவியைப் பொருத்தியபோது அவளுடைய பயமே ஒரு வடிவமாக உருவெடுத்து, பெருங்கூச்சல் எழுப்பிவிடும் போலிருந்தது.

சாவியை இம்மி இம்மியாகத் திருகுகையில், இழுத்து அடக்கப்பட்டிருந்த மூச்சு, உடம்புக்குள் இடம் தேடிக் கிடைக்காமல், புகைகின்ற எரிகுண்டைப்போல எந்தக் கணமும் வெடித்து வெளிவந்துவிடத்துடித்து. பூட்டின் கிளிக் ஓசையைப் புடவையால் பொத்தி அமுக்கிக் கதவைத் திறந்தாள்.

பூனைபோல் டைப்பிஸ்டின் மேஜையை அணுகினாள். காகிதங்களும் மைக்கூடும் டெலிபோனும் பேனாக்களும் தட்டெழுத்து யந்திரமும் பரயிருந்த மேசையில் அவள் தேடிவந்த பொருள் எங்கிருக்கிறதென்று தெரியவில்லை.

விளக்கைப் போட்டுப் பார்க்கலாமா என்று யோசித்த வினாடியில் -

அவள் கழுத்தை யாரோ சரேலெனப் பிடித்தார்கள்.

எஃகுக் கம்பியினால் செய்யப்பட்டது போன்ற சிலீரென்ற நீண்ட விரல்கள் அவளுடைய தொண்டை நரம்புகளை அழுத்தின. எலும்புகள் பொடிப் பொடியாக நொறுங்கப் போவதுபோல் மரணவேதனை ஏற்பட்டது. அவளால் கூச்சலிட முடியவில்லை. வாயிலிருந்து மெல்லிய ஓசை கூட வெளிப்படுத்த இயலவில்லை.

# 7

The magician appears from the wings and opens the two curtains of the cabinet to the opposite sides as shown in the illustration. Then he goes to the back of the...

- The Linking Ring, March 60

வினாடிக்கு வினாடி அந்த விரல்களின் சுருக்குப் பிடி இறுகிக் கொண்டே போயிற்று.

ஜெகதாவுக்குக் கண்கள் இருண்டன. ஏற்கெனவே அவள் இருளில்தான் இருந்தாள். அந்த இருட்டு தன் உடம்புக்குள்ளும் புகுந்துகொண்டது போலாயிற்று. சரியாய்க் குரல்வளையின் நடு எலும்பைக் குறிவைத்து அழுத்துகிற மாதிரி இருந்தது. வாய்விட்டுக் கத்த முடியாதபடி ஒரு கை அவள் வாயை அழுந்தப் பொத்திக் கொண்டிருந்தது. அந்த எஃகு விரல்கள் தன் பல்லிலேபடும்போது அவளுக்கு அருவருப்பாயும் அளவற்ற அச்சமாயும் இருந்தது. அப்படியும் அந்த உணர்ச்சிகளைப் பொறுத்துக் கொண்டு, பற்களால் அந்த விரல்களைக் கடிக்க முடியுமா என்று முயன்று பார்த்தாள். இரும்புக் கம்பியைக் கடித்தால் பல் எப்படிக் கூசுமோ அதுபோலவே கூசின. அந்த விரல்களைக் கடிக்க முயன்ற போதும்.

கழுத்தை நெரிப்பவன் எவனாயிருந்தாலும், அவளுக்கு முன்னே வந்து முகத்தைக் காட்டாமல், அவள் முதுகின் பின்னால்தான் நின்றிருந்தான். கழுத்தை முறிப்பதற்குத் தோதாக, தன் மார்பின் மீது ஜெகதாவின் தலையைச் சாய்த்து அழுத்திக்கொண்டிருந்தான். இதோ இதோ என்று உயிர்ப்பறவை சிறகடித்துப் பறக்கத் துடித்துக்கொண்டிருந்த

அந்த வேளையிலும் ஜெகதாவின் உள்ளம், பற்களைப் போலவே கூசிற்று. எப்பாடுபட்டேனும் இந்தக் கொலைகாரனிடமிருந்து தப்பிவிட வேண்டும் என்ற பதைப்பு அவளுடைய அறிவை மிகக் கூர்மையாக இயங்கவைத்தது. இருப்பது ஒரு வினாடியோ அரை வினாடியோதான். அதற்குள் என்னவோ செய்து எப்படியோ பிழைத்துவிட வேண்டும் என்று நினைத்தாள். புலன்கள் கலங்கின. நிம்மி, உன்னைக் காப்பாற்றாமலே... இல்லை... அந்தப்பிள்ளை கல்யாணம்... நீலகண்டன்... புரொபசர் இப்போது...

நீரின் ஆழத்திலே ஆழத்திலே ஆழத்திலே அமிழ்ந்து கொண்டே போகிறவனுக்கு ஏற்படக்கூடிய கடைசித் தோற்றங்களும் காட்சிகளும் கற்பனைகளும் எண்ணங்களும் அவளுக்குள்ளே அலைபோல் புரண்டு புரண்டு விழுந்தது. ஒரே ஒரு மூச்சு! ஐயோ! அதற்கு இடம் கொடேன். ஒரே ஒரு தரம் மூச்சு - தன்னையறியாமலே - அல்லது அறிந்துதானோ என்னவோ - கால்களை எவ்வி, ஓங்கி உதைத்தாள் ஜெகதா. அருகிலிருந்த ஒரு நாற்காலியின் மீது அந்த உதை விழுந்தது. ஓர் எம்பு எம்பி அந்த நாற்காலி பறந்து, எதிரிலிருந்த ஒரு கண்ணாடி பீரோ மீது மோதியது போலும். படீர் என்ற பயங்கர ஓசையும், சில்லென்று கண்ணாடி தெறித்து விழும் சப்தமும் ஒரே சமயத்தில் எழுந்தன.

பங்களா முழுதும் அந்த ஓசை எதிரொலித்திருக்க வேண்டும். எங்கெங்கோ காலடியோசைகள் கேட்டன. யார் யாரோ தடதடவென்று ஓடிவரும் சப்தங்கள் எழுந்தன.

''அம்மா! அம்மா! நீ எங்கே இருக்கிறாய்? என்ன ஓசை அது?'' என்று பங்களாவின் வேறொரு புறத்திலிருந்து நிம்மி கூவுவது ஜெகதாவின் காதில் விழுந்தது.

அதே வினாடி, தன் கழுத்திலிருந்து அந்தக் கை - அந்த எலும்பு விரல்கள் - விலகுவதையும் உணர்ந்தாள் ஜெகதா.

கடும் பாலையில் அலைந்துகொண்டிருந்தவன் தண்ணீரைக் கண்டதும் அள்ளி அள்ளி விழுங்குவதுபோல, அந்த எதிர்பாராத சுதந்திரத்தை - திடீரென்று கிடைத்த சுவாசத்தை - ஆசை தீர இழுத்து இழுத்து வெளிவிட்டு, போயே போய்விட்டது என்று நினைத்திருந்த உயிர் திரும்பக் கிடைத்த ஆனந்தத்தை மெய்ம்மறந்து அனுபவித்தாள். அந்த உவகையில், தன்னைக் கொலை செய்ய முயன்றவன் தப்பியோடுகிறான் என்பதைக் கவனிக்கவில்லை. அவள் யாரென்பதை அறியவேண்டுமென்றோ, அவனைத் தடுத்து மடக்கவேண்டுமென்றோ அல்லது 'பிடி! பிடி!' என்று கத்தவேண்டும் என்றோ அவளுக்குத் தோன்றவில்லை. மூச்சுக் காற்றை வாங்கி விடுவதிலேயே சில வினாடிகளைக் கழித்தவள், ''அம்மா! அம்மா! நீயா உள்ளே இருக்கிறாய்?'' என்று கேட்டவண்ணம் உள்ளே ஓடிவரும் நிம்மியையும், அவள் விளக்கு ஸ்விட்சைத் தட்டிவிட்டதும் பளீரென்று ஒளிபாய்ச்சும் விளக்கையும் கண்டபிறகு தான் சுயநினைவை அடைந்தாள்.

கழுத்தில் அந்தக் கொலைகார விரல்கள் அழுத்திய இடத்தில் நரம்புகள் புடைத்து நின்றன. வலி விண்விண் ணென்று தெறித்தது. ''நிம்மி... என் கண்ணே! ஒரு நிமிஷம் முன்னால் நான் சாகவிருந்தேனடி, செல்வமே!'' என்று குரல் தழுதழுக்கக் கேவிக்கொண்டே மகளை அணைத்துக் கொண்டாள் கெட்டியாக.

''என்னம்மா நீ!'' என்று பார்வையைச் சுழற்றினாள் நிம்மி. கவிழ்ந்து கிடக்கும் நாற்காலியும் உடைந்து கிடக்கும் கண்ணாடி பீரோவும் அவளுக்குத் திகைப்பூட்டின. ''யாராவது திருடன் கிருடன் வந்தானா என்ன? உடனே சத்தம் போடுவதற் கென்ன?''

''திருடனில்லை, நிம்மி! என்னை... என்னைக் கொலையே செய்யப் பார்த்தான்...'' என்று ஜெகதா சொல்லிக்

கொண்டிருக்கையிலேயே, ''என்ன அது அமளி?'' என்று குரல்கொடுத்தபடி உள்ளே வந்தார் புரொபசர் மித்ரா. ''என்ன இதெல்லாம்? என்ன நடந்தது?''

''எனக்கும் தெரியவில்லை, அப்பா. சத்தம் கேட்டது. ஓடிவந்தேன்!'' என்று நிம்மி பதிலளித்தாள். ''எவனோ திருடன் வந்தான்போலிருக்கிறது. அம்மா அவனைப் பிடிக்கப் பார்த்தாள்போலிருக்கிறது. அவன் -''

''உன் அம்மாவைக் கீழே தள்ளிவிட்டுத் தப்பியோடி விட்டான் போலிருக்கிறது!'' என்று கேலியாக மகளின் பேச்சை முடித்தார் புரொபசர். ''நான் சொன்னால் உன் அம்மாவுக்குக் கோபம் வரும். ஆனால் வரவர அவள் அரை லூஸாகிக்கொண்டிருக்கிறாள்.''

''கரெக்ட்'' என்று கூறி, நிம்மியும் சிரித்தாள்.

ஆனால் ஜெகதா சிரிக்கவுமில்லை, அவர்களுடைய கருத்துக்களை மறுக்கவுமில்லை; நடந்ததைப்பற்றி விளக்கம் கொடுக்கவுமில்லை.

அவள் கண்கள், புரொபசரின் கைகளையும், அந்த விரல்களையுமே பார்த்துக்கொண்டிருந்தன. மூச்சுத் திணறத் திணறத் தான் போராடியபோது, நெஞ்சுக் குழியை அழுத்திய விரல்களை நினைத்துப் பார்த்துக் கொண்டாள். இறுக்கப்பட்ட வலி இப்போதும்கூட நீங்கவில்லை.

அந்த விரல்கள்!

ஜெகதாவின் உடம்பு ஒரு கணம் அச்சத்தினால் சிலிர்த்து அடங்கியது. எந்தக் கையைப் பிடித்து அவள் அக்கினியை மும்முறை வலம்வந்தாளோ, எந்தக் கை அவள் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்ததோ அதே கை அவள் உயிரைக் குடிக்கும் எமனாகவும் உருவெடுத்திருக்குமா? அவள் மார்பு படபடத்தது. அவளால் கற்பனையும் செய்ய முடியவில்லை.

'சே! சே! இருக்காது! இருக்காது!' என்று சொல்லி அந்த எண்ணத்தை வலுக்கட்டாயமாக வெளியேற்றினாள்.

''எல்லாம் கிடக்க நீ இந்த ரூமுக்கு எதற்காக வந்தாய்? சமையற்கட்டிலோ ஸ்டோர் ரூமிலோ அடைந்து கிடக்கிறவளாயிற்றே நீ!'' என்று புரோபசர் அவள் கண்களை நேருக்கு நேர் பார்த்துக் கேட்டபோது அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

''அதுதானே! இங்கே எங்கே நீ வந்தாய்! ஏதாவது சத்தம் கித்தம் கேட்டதா?'' என்று தந்தையின் கேள்வியை எதிரொளித்தாள் மகள்.

''ஆளுக்கு ஆள் என்னைப் போட்டுக் குழப்பாதீர்கள். எனக்குத் தலையைச் சுற்றுகிறது... கொஞ்சம் அப்படி உட்கார்ந்திருக்கிறேன்'' என்று கூறிய ஜெகதா, மகளின் அணைப்பைவிலக்கிக்கொண்டு, தள்ளாடி நடந்து, ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டாள். புரொபசருக்கு அருகில் நில்லாமல் நாலடி விலகிச் சென்றது அவள் உள்ளத்துக்கு ஆறுதல் தந்தது. அதே சமயம் அப்படி எண்ணுவது தவறு என்றும் தன்னைத் தானே கண்டித்துக் கொண்டாள்.

மித்ரா பின்கையைக் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் உலாவினார். ''காலையில் வந்தானே, உன் சினேகிதியின் அண்ணனென்று - அவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. அவன்தான் இங்கே வந்து ஏதாவது கலாட்டா செய்திருப்பான். அம்மா அதைப் பார்த்திருப்பாள்...''

''போதுமப்பா! நீங்களும் உங்கள் டிடெக்ஷனும்!'' என்று நகைத்தாள் நிம்மி. ''பேசாமல் நீங்கள் கொஞ்சம் வெளியே போய் இருங்கள். உங்களைக் கண்டால்தான் அம்மாவுக்கு நடுக்கமாயிருக்கிறது. போய், வேலைக்காரனை

அனுப்புங்கள். இந்தக் கண்ணாடிச் சில்லுகளையெல்லாம் பொறுக்கி வெளியே எறியச் சொல்ல வேண்டும்.''

புரொபசர் வெளியே சென்றார். நிம்மி, அம்மாவின் அருகில் போய், கழுத்தை மெல்லக் கட்டிக்கொண்டாள்.

''ஆ! வலிக்கிறதம்மா!'' என்று அலறிவிட்டாள் ஜெகதா, மகளின் கை பட்டதும். 'என்னைக் கழுத்தை நெறித்துக் கொல்லப் பார்த்தார்கள் யாரோ ஒருவர் - அது உன் அப்பாவோ என்று சந்தேகமாயிருக்கிறது' எனச் சொல்லி விடலாமா? ஜெகதா தன் எண்ணத்தை அடக்கிக்கொண்டாள். எல்லாமே வெறும் பிரமையாக இருக்கலாம். பயங்கரக் கனவோ என்னவோ? தன் இதயத்துக்குள் எரிமலையாய்க் குழம்பிக் கொந்தளிக்கின்ற சந்தேகங்களை, பசுஞ்சோலை யாய்க் குளிர்ந்திருக்கும் நிம்மியின் உள்ளத்தில் குடியேற்று வது நியாயமில்லை. இவள் பச்சைக் குழந்தை. அப்பாவினால் பெற்று வரும் அனர்த்தங்களே போதும்.

''ஒன்றுமில்லை நிம்மி... நீ சொன்னாற்போல்தான்... ஏதோ சத்தம் கேட்டு இங்கே வந்தேன்... யாரோ ஓடினமாதிரி இருந்தது... பிரமையாக இருக்கும்... வா, போகலாம்.'' எழுந்து கொண்ட ஜெகதா, தற்செயலாய் அருகிலிருந்த மேஜையைப் பார்த்தாள். தேகத் தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அதை வெளிக்காட்டாமல், ''இன்னும் வேலைக்காரன் வரவில்லையே, வருகிறானா பார்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பவும் நாற்காலியிலேயே உட்கார்ந்து கொண்டாள்.

''பார்த்துவருகிறேன்'' என்று கூறி நிம்மி அறைக்கு அந்தண்டை கால் வைத்ததுதான் தாமதம் -

ஒரே எட்டில் மேஜைமீதிருந்த அந்த டைப்படித்த காகிதத்தை எடுத்துக் கொண்டாள். மின்னல் வேகத்தில் அதைப் பார்வையிட்டாள். தான் தேடிவந்தது அதுதான் என்று

தெரிந்ததும் அவள் முகம் மலர்ந்தது. பரபரவென்று மடித்து, இடுப்பில் புடவையிடுக்கில் செருகிக் கொண்டாள்.

வேலைக்காரனுடன் நிம்மி வந்ததும் அவள் மெதுவாய் எழுந்து கொண்டு வாசல்வரை சென்றாள். வந்த வேலை நிறைவேறிவிட்டது என்ற திருப்தி அவள் முகத்தில் நிலவியது. எனினும் எப்படிப்பட்ட அபாயமான, ஆபத்தான சூழ்நிலை இந்த வீட்டுக்குள் உருவாகி விட்டது என்பதை எண்ணுகையில் உடம்பில் நடுக்கம் கண்டது. உயிரைப்பற்றிய கவலையற்று இந்த வீட்டிலே இனி வாழமுடியுமா என்று நினைத்து விதிர்த்துப் பெருமூச்சு விட்டாள்.

''ஜெகதா! எங்கே புறப்படுகிறாய்?''

குரலைக் கேட்டு விக்கித்து நின்றாள் ஜெகதா. யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு நழுவுவதாக அவள் நினைத்தது எவ்வளவு தவறு! மித்ராவின் கழுகுக் கண்களுக்குத் தப்பி இங்கே என்னதான் நடைபெறமுடியும்?

''கோவிலுக்குப் போகலாமென்று கிளம்பினேன்.''

''மணி எட்டாகிறது. எல்லாக் கோயிலிலும் கதவைச் சாத்திக்கொண்டிருப்பார்கள்'' என்றார், வெராந்தாவில் நின்றிருந்த புரொபசர்.

''பரவாயில்லை'' என்று சொல்லிக்கொண்டே படியிறங்கினாள் ஜெகதா. ''மனசு என்னவோ போலிருக்கிறது. அம்பாள் சன்னதியில் ஐந்து நிமிடமாவது நின்றுவிட்டு வந்தால்தான் ஆறுதலாயிருக்கும்.''

புரொபசரின் கூரிய கண்கள் அவளைத் துளைத்தன ஒரு வினாடி காலத்துக்கு. ''பூ, பழம் எதுவும் வேண்டாமா?''

மீண்டும் தடுமாறிப்போனாள் ஜெகதா, ''உம்... வந்து... போகிற வழியில் வாங்கிக்கொள்கிறேன். தட்டுக்கூடக் கடைக்காரனே கொடுப்பான்.''

வேகமாக நடந்தாள் ஜெகதா. நடுநடுவே திரும்பியும் பார்த்துக்கொண்டாள். புரோபசரோ அல்லது அவர் அனுப்பிய ஆட்களோ யாரும் அவளைப் பின்தொடர வில்லை. இருந்தாலும் தெருக்கோடியை அடைந்தபோது அவளுடைய இருதயம் வெகு வேகமாகத்தான் துடித்துக் கொண்டிருந்தது.

அந்தப் பிள்ளை - பெயரென்ன, கல்யாணம் - அவன் வருவானோ? வந்தாலும் உதவுவானோ?

''என்னம்மா வேண்டும்!'' என்ற குரல் பின்னாலிருந்து வந்தது. திரும்பிப் பார்த்தவள், ஒரு ஓட்டலின் வாசலருகே தான் நின்றிருப்பதை உணர்ந்தாள். கல்லாவிலிருந்த முதலாளிதான் அவளை விசாரித்தவர்.

''ஒன்றும் வேண்டாம்... ஒருவர் வருகிறேன் என்றார்... அதற்காகத்தான் காத்திருக்கிறேன்...'' என்று பதிலளித்தாள் ஜெகதா. தெருவோடு போகும் பலபேர் தன்னைப் பார்த்துத் திகைத்தவாறே செல்வது அவளுக்குத் தெரிந்தது. அவளுக்கு அதிகம் பேரைத் தெரியாது. ஆனால் புரொபசர் மித்ராவின் மனைவி என்ற முறையில் பலபேருக்கு அவளைத் தெரிந்திருக்கலாம்... இரவு எட்டு மணிக்கு, தன்னந்தனியே, நடுத்தெருவில் அவள் நின்றிருப்பதற்கு என்ன வெல்லாம் அர்த்தம் செய்துகொள்கிறார்களோ!

எதிரில் வருகிற ஒவ்வொரு மனிதரையும், சைக்கிளையும், டாக்ஸியையும் பார்த்துப் பார்த்துக் கண்கள் வலியெடுத்தன. துயரம் அவள் நெஞ்சை அடைத்தது. யாரோ முன்பின் தெரியாத பையன் அவன். ஜெகதா என்கிற எவளோ ஒரு பெண்மணிக்கு உதவவேண்டும் என்று அவனுக்கென்ன தலையெழுத்து? கல்கத்தா போகவேண்டுமென்று சொன்னவன் போயே போய்விட்டானோ என்னவோ?

''ஸாரி, ரொம்ப நேரம் காக்க வைத்துவிட்டேனோ?'' காதில் தேனாகப் பாய்ந்தது அந்தக் கேள்வி.

சிரித்த முகத்துடன், சுறு சுறுப்பும் தன்னம்பிக்கையும் சேர்ந்து ஒரு வடிவம் எடுத்தாற்போல, இளமையும் இனிமையும் நிறைந்தவனாக எதிரே நிற்கும் கல்யாணத்தைப் பார்த்ததும், தன் வேதனை அத்தனையும் பஞ்சினும் லேசாகிப் பறந்தோடுவது போன்ற சந்தோஷத்தைத் துய்த்தாள் ஜெகதா.

''இப்போதுதான் நானும் வந்தேன்...'' இடுப்பில் செருகியிருந்த காகிதத்தைப் பதைப்புடன் வெளியிலெடுத்தாள். நாலு பக்கமும் ஒருதரம் பார்த்துக்கொண்டாள். ''இந்தா, இதைப் படித்துப்பார்.''

மடங்கிக் கசங்கியிருந்த காகிதத்தை நீவிவிட்டு ஓட்டலிலிருந்து வந்த வெளிச்சத்தில் படித்தான் கல்யாணம்.

''ஏதோ மாஜிக் ஷோவின் திட்டம்போல் அல்லவா இருக்கிறது?'' என்றான் திகைப்புடன்.

''ஆமாம். புரொபசரின் ஷோவுக்கான நிகழ்ச்சிக்குறிப்பு அது'' என்றாள் ஜெகதா. ''என்னென்ன ஐட்டத்தின் போது யார் யார் எங்கெங்கே நிற்கவேண்டும், என்னென்ன பொருள்கள் எப்படியெப்படித் தயாராயிருக்கவேண்டும் என்ற விவரங்களைத் தனது அஸிஸ்டெண்ட்டுகளுக்காகக் குறித்து வைத்திருக்கிறார். இது அவர் வழக்கம். அவர்களுக்குக் கொடுத்தது போக, ஒன்றிரண்டு காப்பியாவது பாக்கியிருக்குமென்று தேடினேன். கிடைத்தது.''

''சரி, எதற்காக என்னிடம் இதைக் கொடுக்கிறீர்கள்?''

''என் பெண்ணைக் காப்பாற்றுவதற்காக.''

''நிம்மியையா?'' கேட்கும் போதே அவன் விழிகளில் ஆர்வமும் ஆசையும் பளபளத்தன. ''அவள் என்ன ஆபத்தில் இருக்கிறாள்?''

''நான் அபாயமென்று சொன்னால் அதை நீ ஒப்புக் கொள்ள மாட்டாய்,'' அவன் கையிலிருந்த காகிதத்தை வாங்கி, தனக்குள்ள அரைகுறை ஆங்கில ஞானத்தைக் கொண்டு படித்தாள் ஜெகதா. ''இதோ, இங்கே போட்டிருக்கிறது பார் - 'நிம்மி செய்யவேண்டியவை' என்று. இதுதான் அவளுடைய அரங்கேற்றம் - அவள் மேடைக்கு வரப்போகிற முதல் ஷோ. இந்த் வாழ்க்கை என் பெண்ணுக்குக் கூடாது என்று நான் பிடிவாதமாக இருக்கிறேன். மாஜிக்கும் ஹிப்னாடிஸமும் கற்றுத் தந்து, பூவைப்போல அழகாயும் மணமாயும் இருக்க வேண்டிய பெண்ணை, பொம்மையைப் போல, யந்திரத்தைப்போல, பிசாசைப்போல மாற்றப் போகிறார் என் கணவர். எப்பாடு பட்டாவது அதைத் தடுத்து விட வேண்டும். இரவு பகல் எனக்கு இதுதான் எண்ணம். கடவுள்கூட என் ஒத்தாசைக்கு வரமாட்டார் போலிருக்கிறதே என்று மனம் வெறுத்திருந்த சமயத்தில், உன்னை அவர் அனுப்பியிருக்கிறார் என்று என் உள்மனசில் ஏதோவொன்று சொல்கிறது. கல்யாணம், உன்னிடம் உதவிகேட்பதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஆனால், என்னைப் போலவே நீயும் நினைத்தால் - நிம்மியின் வாழ்க்கையும் எதிர்காலமும் நல்லபடியாக அமையவேண்டுமென்று நினைத்தால் - உதவிபண்ணு.''

''நினைக்கிறேன், அம்மா. நீங்கள் சொல்வது ரொம்பவும் நியாயம் என்றுதான் எனக்கும் படுகிறது. ஆனால்-'' காகிதத்தைப் பார்த்தான் கல்யாணம். ''இன்னும் இரண்டே நாள் தானே இருக்கிறது ஷோவுக்கு? அதற்குள் நிம்மியின் மனசை -''

''மாற்றமுடியாது'' என்றாள் ஜெகதா. ''உனக்கு உதவி செய்யத்தான் இந்தக் குறிப்பை எடுத்துவந்தேன். நிகழ்ச்சியின்போது நிம்மி எங்கே இருப்பாள், எந்தெந்த

வழியாகப் போவாள் என்கிற விவரமெல்லாம் இதிலே இருக்கிறது. கடைசி நிமிடத்திலாவது எப்படியேனும் அவளைத் தடுத்துவிடு. அரங்கேற்றத்தின்போதே நிம்மியின் நிகழ்ச்சி கெட்டுவிட்டதென்றால், பிறகு இப்போதைக்கு இந்த முயற்சியில் இறங்கமாட்டார் புரொபசர்.''

காகிதத்தை மடித்துத் தன் ஜிப்பாப் பையில் வைத்துக் கொண்டான் கல்யாணம். ''பக்கத்தில் எங்கே தபாலாபிஸ் இருக்கிறது?''

''அடுத்த தெருவில் இருக்கிறது. என்ன வேண்டும்?''

''ஒன்றுமில்லை. ஒரு தந்திகொடுக்கவேண்டும். என் தங்கைக்கு ஒரு வரன் பார்த்திருக்கிறேன் கல்கத்தாவில். இந்த வாரத்தில் ஒருநாள் அங்கே நிச்சயதார்த்தம் செய்வதாயிருந்தது. அது இப்போது முடியாது, நான் வருவதற்கில்லை என்று ஒரு தந்தி கொடுத்துவிடுகிறேன்.''

ஜெகதா ஏதோ கூற வாயைத்திறந்தாள். திகைப்பு நீங்கி வார்த்தைகள் வெளிப்படுமுன் கல்யாணம் போய்விட்டான்.

தெருவில் நிற்கிறோம் என்பதையும் மறந்து வானை நோக்கிக் கையைக் கும்பிட்டாள் ஜெகதா. இவனைப்பற்றித் தான் நம்பியது வீண்போகவில்லை என்ற மனநிறைவுடன் கூடவே ஒரு பீதியும் பிடித்துக் கொண்டது.

நிம்மிக்கும் புரொபசருக்கும் இடையே குறுக்கே நின்றதால் அவள் உயிருக்கே ஆபத்து ஏற்படவிருந்தது. அதே காரியத்தில் ஈடுபடும் இந்தக் கல்யாணத்துக்கும் அதேமாதிரி நேர்ந்தால்? அவள் தெய்வாதீனமாகத் தப்ப முடிந்தது. அவனுக்குத் தப்பமுடியாமலே போய்விட்டால்...?

# 8

The rose was an emblem of the early church, and the chosen badge of a succession of a kingss. It grew in chinese gardens in A.D.1000, and the Moors, overunning Spain, brought with them the roses they had found in Syria, including the first yellow rose to appear in Europe.

- Collier' Encyclopedia

''நான் நன்றாயிருக்கிறேனா அம்மா?'' உடையையும் உடலையும் ஸ்டைலாக விறைப்பாக்கிக்கொண்டு தாயின் முன்னே நின்று கேட்டாள், நிம்மி.

ஸில்க்கை விட மென்மையாகவும், மையைவிடக் கருமையாகவும் உள்ள மகளின் கூந்தலை மெல்ல வருடினாள் ஜெகதா. ஆரோக்கியம் பாலிஷ் செய்த கன்னங்களை வழித்து விட்டாள். கமீஸ் தழுவிய தோள்களை அன்போடு அழுத்திக் கொடுத்தாள். தந்தத்தில் செதுக்கியது போன்ற கைகளைத் தடவினாள். பூப்போன்ற இடையைப் பாசத்துடன் பிடித்துக் கொண்டு அவளுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

''நிம்மி...'' பார்வையைக் கண்ணீர் மறைத்த தென்றால், குரலைத் துக்கம் தடுத்தது.

''என்னவோ என்னைத் தூக்கு மேடைக்கு அனுப்புகிற மாதிரியல்லவா அம்மா அழுகிறாய்?'' என்று நிம்மி சிரித்த போது, ஜெகதாவின் வேதனை அவள் நெஞ்சைப் பிளந்துவிடும் போல அதிகரித்தது. 'தூக்கு மேடை என்றால் கூட, ஒரு வழியாய் உன்னை முற்றும் இழந்து விட்டோம் என்று மனத்தைத் தேற்றிக்கொள்வேனே, கண்ணே!' என்று வாய்விட்டு மனம்விட்டுச் சொல்ல அவள் உதடுகள் துடித்தன.

ஆனால் டக்டக் கென்று கேட்கும் மிடுக்கான நடையோசை அவள் பேச்சை நிறுத்திவிட்டது.

வழக்கமான கறுப்புக் கோட்டும் போ டையும் அணிந்து, புல்லாங்குழல் போன்ற சந்தனக் கட்டையை அக்குளில் அடக்கியபடி, வெளியே கிளம்புவதற்கு ஆயத்த மாக வந்தார் புரொபஸர் மித்ரா. மாஜிக் நிகழ்ச்சி நடக்க விருக்கும் நாட்களில், அதிகப்படியான குரூரமும் கண்டிப்பும் கம்பீரமும் அவருடைய தோற்றத்தில் கூடிக்கொள்வதுண்டு. இன்றும் அப்படித்தான் அவர் காட்சியளித்தார்.

வந்தவர், ஜெகதாவை ஓரக்கண்ணால் கவனித்தார். சாதாரணப் புடவையும், வாராத தலையுமாக இருந்தாள் அவள். "கடைசியாகக் கேட்கிறேன். நீ வரப் போகிறாயா இல்லையா?" என்றார்.

"அடாடாடா! என்னப்பா நீங்கள்! மிரட்டி மிரட்டியே அம்மாவைக்கொலை பண்ணி விடுகிறீர்களே!" என்று விளையாட்டாகத் தந்தையைக் கடிந்து கொண்டாள் நிம்மி. பிறகு அம்மாவின் கழுத்தை ஆசையுடன் கட்டிக்கொண்டு, "இன்றைக்கு எவ்வளவு விசேஷமான நிகழ்ச்சி தெரியுமா அம்மா! பத்மஸ்ரீ பட்டம் கிடைத்ததற்காக அப்பாவுக்குப் பாராட்டு. அப்பாவின் மாஜிக் ஷோ. கடைசி ஐட்டத்திற்கு முந்தின ஐட்டம் முத்துச் சிப்பியும் கடல் கன்னியும்! அதிலே நான் முதல் முறையாக மேடைக்கு வரப்போகிறேன்! என் அரங்கேற்றத்திற்காகவாவது நீ வரவேண்டாமா அம்மா?" என்றாள்.

ஜெகதாவினால் பதில் கூற இயலவில்லை. மகளின் மீது வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்தவாறிருந்தாள்.

நிம்மி தொடர்ந்து, "ஹிப்னாடிஸ சமாசாரம் என்றாலா வது உனக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக்கொள்ளலாம்.

இது வெறும் மாஜிக் நிகழ்ச்சி தானே அம்மா? நீ வரக் கூடாதா?'' என்றாள்.

புரொபஸரின் கண்டிப்பான குரல் கேட்டது: ''நிம்மி! உன் அம்மாவுடன் மன்றாடியது போதும் புறப்படு.''

''சரியப்பா. நீலகண்ட மாமா விடம் சொல்லிக்கொண்டு வருகிறேனே? அவராவது வர மாட்டாரா?''

''அவனா!'' புரொபஸர் மித்ரா உதட்டைச் சுழித்தார். ''பார்க்கலாம், வா.''

அம்மாவை நோக்கி, விளையாட்டுக் கோபத்துடன் பல்லைக் கடித்துத் தலையை ஆட்டி 'ஒழுங்கு' காட்டிவிட்டு, தந்தையின் பின்னே நடந்தாள் நிம்மி. நீண்ட வெராந்தாவில் நடந்து பின்கட்டை அடைகையில் ஒரு கேள்வி அவள் மனத்தில் உதித்து நாவிலும் வந்துவிட்டது. ''ஏன் அப்பா நீல கண்ட மாமாவைப் பூட்டியே வைத்திருக்கிறீர்கள்?''

''இந்தச் சாதாரண விஷயம் கூட உன்னால் ஊகிக்க முடியவில்லை! என்னமாத்தான் நீ பெரிய மாஜிக் மேதையாக வரப்போகிறாயோ?'' புன்னகை செய்த வண்ணமே பாண்ட் பையிலிருந்து சாவிக் கொத்தை எடுத்தார் புரொபஸர். ''நீலகண்டன் எப்போதும் தன்னை மறந்து கிடக்கிறவன். எங்கே போகிறோம் என்று தெரியாமல் போய்விடுவான். என் உயிர் நண்பனை அப்படி இழப்பதற்கு எனக்கு மனமில்லை.''

கதவைத் திறந்தார் புரொபசர். நீலகண்டன் ரொம்ப அலங்கோலமாகக் காட்சியளிக்கப் போகிறாரே என்று கவலைப்பட்டவர் போல, முதலில் தான் மட்டும் தலையை உள்ளுக்கு எட்டிப் பார்த்துக் கொண்டார்.

மேஜைமீது காலைத்தூக்கிப் போட்டுக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து கிடந்தார் நீலகண்டன். அவர் தலை அவருடைய மார்பின் மீதே கவிழ்ந்திருந்தது. கண்கள் பாதி திறந்தும் பாதி மூடியும் இருந்தன.

''வா'' என்று நிம்மியிடம் சொல்லிவிட்டு உள்ளே நுழைந்தார் மித்ரா. ''நீலகண்டன்! நீலகண்டன்!'' இருமுறை அவர் கூப்பிட்டதற்குப் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

கப்பென்று தலைமயிரைப் பிடித்து, உலுக்கினாற்போல் தூக்கினார் புரொபஸர். புறங்கையினால் பளீர் பளீரென்று நீலகண்டனின் இரு கன்னத்திலும் அறைவிட்டார்.

''அப்பா!'' என்று பதறிப்போனாள் நிம்மி.

சிவந்து விட்ட கன்னங்களைத் தடவிக்கொண்டு மலங்க மலங்க விழித்தார் நீலகண்டன்.

புரொபஸர் அமைதியான குரலில், ''நிம்மி இன்றைக்கு என்னோடு ஸ்டேஜுக்கு வரப் போகிறாள், நீலகண்டன்!'' என்றார்.

''ஸ்டேஜுக்கா? நிம்மியா? சீ சீ! வேண்டாம்'' என்றார் நீலகண்டன் குழறும் வார்த்தைகளில்.

நிம்மி சட்டென்று தந்தையின் பக்கம் திரும்பினாள், 'இவரும் இப்படிச் சொல்கிறாரே' என்று வினவுவது போல. ஆனால் புரொபஸர் அருகில் இல்லை. அலமாரியிடம் சென்றிருந்தார். கதவைத் திறந்து பளபளக்கும் அழகிய புட்டியொன்றை எடுத்து, ''நீ கேட்ட ஷீவாஸ் ரீகல் விஸ்கி வந்து விட்டதே, பார்த்தாயா நீலகண்டன்?'' என்று சொன்னாரோ இல்லையோ-

நீலகண்டன் குபுக்கென்று எழுந்து கொண்டார். கிறுகிறுக்கும் தலையைக் கைகளால் அழுத்திய வண்ணம், நாற்காலியிலும் மேஜையிலும் இடித்து இடறிக்கொண்டு, ஆவலுடன் புரொபஸரை நோக்கி ஓடும் அவரைப் பார்க்கையில் நிம்மியின் கண்கள் கலங்கின.

புட்டியை அவர் கையில் ஒப்படைத்துவிட்டுத் திரும்பினார் புரொபஸர். ''வா போகலாம்'' என்று நிம்மியை

அழைத்துக் கொண்டு வெளியில் வந்து கதவைப் பூட்டினார் முன்போல.

நிம்மியின் முகத்தைச் சோகமும் அதிர்ச்சியும் கப்பியிருந்தன. நீலகண்டன் பளீரென்று அறையப்பட்ட நிகழ்ச்சி நீங்காத வலியாக அவள் உள்ளத்தில் பதிந்திருந்தது. ஷோவுக்குப் போக வேண்டா மென்று அவர் கூறியதும் உடனே புரொபஸர் அவருக்கு மதுவைக் கொடுத்ததும் அவளைச் சங்கடத்துக்குள்ளாக்கின.

''கொஞ்ச நாள் மதுவை அவர் கண்ணில் காட்டாமல் இருக்கக் கூடாதா அப்பா?'' என்றாள் தயக்கத்துடன்.

''தற்கொலை செய்துகொண்டு விடுவான்'' என்றார் புராபஸர். ''அதைக் காட்டிலும் இப்படிக் கொஞ்சம் கொஞ்ச மாகக் சாகட்டும்.''

திடுக்கிட்டவளாக புரொபசரின் முகத்தைப் பார்த்தாள் நிம்மி. அதில் தென்பட்ட கசப்பும் கொடூரமும் அவள் மனத்தில் பீதியை எழுப்பின. 'உயிர் நண்பன்' என்று அடிக்கடி நீலகண்டனைப்பற்றி அவர் குறிப்பிடுவது உண்மையாக இருக்குமா? முதல் முறையாய் அவளுக்குச் சந்தேகம் உதித்தது.

சட்டக் கல்லூரியிலிருந்து கூப்பிடு தூரத்தில் இருந்தது அந்த மன்றம். பசேலென்ற புல்வெளியில் நடுவே அமைந் திருந்த பிரம்மாண்டமான கட்டிடத்தைப் புரொபசரின் கார் அடைந்தபோது, மாலை நிகழ்ச்சிக்கான கூட்டம் சேர வில்லை. மணி நான்கு தான் ஆகியிருந்தது. காலை நீட்டிக் கொண்டு வெய்யில் காயும் கிழவியைப்போல, மன்றத்தின் நிழல்கள் புல்வெளியின் கிழக்குப் பகுதிகளில் சோம்பிக் கிடந்தன.

மேடையை ஒட்டிய பின் புறத்தில் புரொபசரின் 'வேன்' வந்திருந்தது. பெட்டி பெட்டியாகத் தந்திரக் கருவிகள்

இறக்கப்படுவதை மேற்பார்வையிட்டுக்கொண்டிருந்தார், புரொபசரின் மானேஜர். கூலியாட்களும் உதவியாளர்களும் குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருந்தனர்.

மானேஜரின் கும்பிடுக்குத் தலையசைத்துவிட்டு, 'வேலை நடக்கட்டும்' என்று சைகை காட்டினார் புரொபசர். நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த மிஸஸ் எஞ்சினியர், தன் கணவரைத்தான் முன்னதாக அனுப்பி, ஏற்பாடுகள் சரிவர இருக்கிறதா என்று கவனிக்கச் சொல்வது வழக்கம். அதன்படி வந்திருந்த மிஸ்டர் எஞ்சினியர், காண்டீன் குத்தகைக் காரருடன் பேசிக் கொண்டிருந்தார். புரொபசரையும் நிம்மியையும் கைகுலுக்கி வரவேற்றார். அவரிடமும் இரண்டு வார்த்தைகள் மரியாதைக்காகப் பேசினார் மித்ரா. ஷோவின்போது மேடையில் அழகுக்காகவும் கவர்ச்சிக்காக வும் சில நாடக நடிகைகளை அமர்த்திக் கொள்வது புரொபசரின் வாடிக்கை.மேக்கப் போட்டுக்கொண்டிருந்த அவர்கள் புரொபசரிடம் வந்து, மரியாதை கொஞ்சமும் பொறாமை கொஞ்சமுமாக நிம்மியிடம் பேச முயன்றபோது, ''ஊம், ஊம்! அவரவர் களுடைய இடத்தில் போய் இருங்கள்.'' என்று அனுப்பி விட்டார். பிறகு, நிம்மியை மேடைக்கு அழைத்துச் சென்றார். முந்தின தினமே இதே இடத்துக்கு அவருடன் வந்து, திரைகளுக்குப் பின்னால் என்னென்ன ஒளிவிடம் உண்டு, எங்கெங்கே ரகசிய இடுக்குகளும் சந்துகளும் இருக்கின்றன என்று காட்டியிருந்தார். இப்போது கறுப்புத் திரையின் பின்னால் இரண்டடி உயரமுள்ள ஒரு கப்போர்டு வைக்கப்பட்டிருந்தது.

''இதற்குள்தான் நீ கைகால்களை மடக்கிக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும்'' என்றார் புரொபசர்.

''இந்த வித்தையெல்லாம் தான் ஆரம்பத்திலேயே எனக்குக் கற்றுத் தந்துவிட்டீர்களே அப்பா!'' என்று சிரித்தாள் நிம்மி அலட்சியமாக.

''அது சரி. ஆனால் நீ தோன்றவேண்டிய ஐட்டம் - சரியாய் எட்டு நாற்பத்தைந்துக்குத்தான். அதற்கு ஐந்து நிமிடம் முன்னால் நீ இங்கே உட்கார்ந்து கொண்டால் போதும். கப்போர்டை எங்கே எப்படி வைக்கவேண்டுமோ அப்படி வைத்துவிடுவார்கள். நான் இரண்டு முறை கைதட்டியதும் நீ எழுந்துகொள். அவ்வளவுதான். நீ எழுந்துகொள்ளும் இடம் முத்துச்சிப்பியாக இருக்கும். அதை என் ஆட்கள் பார்த்துக் கொள்வார்கள்'' என்றார் புரொபசர்.

சிறிது சிறிதாக மன்றம் நிறையத் தொடங்கியது. பரபரப்பு அதிகரித்தது. ஸ்டேஜின் பின்புறமிருந்த அறையில் புரொபசர் மேற்பார்வை செய்து கொண்டிருந்தபோதிலும், அங்கேயும் சில நெருங்கிய நண்பர்கள் வந்து குசலம் விசாரித்தார்கள். மரியாதைக்காக இரண்டிரண்டு வார்த்தை பதில் சொல்லிவிட்டு கவர்னர் தம்பதிகளின் வருகைக்காகக் காத்திருந்தார் மித்ரா.

ஆறடிக்க ஐந்து நிமிடம் இருந்தபோது, கவர்னரின் வருகையை அறிவிக்கும் பைலட் வண்டிகள் நுழைந்தன. மன்ற நிர்வாகிகளுடனும் மிஸஸ் எஞ்சினியருடனும் வாசலுக்குச் சென்று கவர்னரையும் அவர் மனைவியையும் வரவேற்றார் புரொபசர். நிம்மியும் அருகிலேயே நின்றிருந்தாள். கவர்னரின் ஆஜானுபாகுவான மனைவி நிம்மியின் தோளை அன்புடன் அணைத்துக்கொண்டு ஏதோ கேட்டபோது, அவள் கூச்சத்துடன் தலையாட்டினாள் - அந்த அம்மையார் என்ன கேட்கிறார் என்று புரிந்து கொள்ளாமலே.

நிகழ்ச்சியைத் தொடங்குவதற்காக அனைவரும் உள்ளே சென்றார்கள். நிம்மி கிரீன் ரூமில் போய் உட்கார்ந்து கொண்டாள். தந்தையின் ஒவ்வோர் அசைவையும் ஒவ்வோர் வார்த்தையையும் இப்போது போல இவ்வளவு உன்னிப்பாக என்றுமே அவள் கவனித்தது கிடையாது. இன்று

கவனித்ததால், அவர்பால் ஒரு புதிய பாசமும் அவளிடம் உதித்தன.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னால் புரொபசர் அதிகம் பேசுவதில்லை. ஏனெனில், நிகழ்ச்சி நடைபெறும் மூன்று மணி நேரத்தில் இரண்டரை மணி நேரம் அவர் ஏதாவது பேசிக்கொண்டு இருக்க வேண்டும் அவையினரைப் பார்த்து. அந்தப் பேச்சில் அவர்கள் மயங்கியிருக்கும் சமயத்தில்தான் அவருடைய தந்திரங்கள் நடைபெறும். அந்த வழக்கப்படி இன்றும் அவர் நிகழ்ச்சிக்கு முன் குறைவாகத் தான் பேசினாரெனினும், அதுவே நிம்மியைக் கவரப் போதுமானதாயிருந்தது.

'எவ்வளவு திறமைசாலியான அப்பா!' என்று அவளுடைய குழந்தை யுள்ளம் நினைத்து நினைத்து வியந்து கொண்டிருக்கையில்...

ஹாலில் நிகழ்ச்சி தொடங்குவதைக் குறிக்க மணியடித்தது.

பட்டுத் திரை மெல்ல மெல்ல மேலே தூக்கிக் கொண்டது. அதிலே வரையப்பட்டிருந்த புரொபசர் மித்ரா வின் சிரித்த முகம் சிறிது சிறிதாகச் சுருங்கி மடங்கி மறைந்து விட்டது.

பளீர் பளீரென்று வண்ணங்களை மேடைமீது வாரி யிறைத்தன ஒளிவிளக்குகள். பளபளப்பாக உடையணிந்த கட்டழகிகள், பட்டாம் பூச்சிகளைப் போல ஒவ்வொரு மூலை யிலிருந்து ஒவ்வொருவராகத் தோன்றி, நடனமாடிக் கொண்டே வந்தார்கள். ஒவ்வொருவருடைய உடம்பின் மீதும் பெரிதாக ஒர் ஆங்கில எழுத்துக் காணப்பட்டது. நடனமாடிய வண்ணம் அவர்கள் ஒழுங்காகக் கைகோத்துக் கொண்டதும், 'புரொபசர் மித்ரா' என்ற வர்த்தை உருவாயிற்று. மகிழ்ச்சியுடன் அவையினர் கரகோஷம் செய்ய,

வண்ணவிளக்குகளனைத்தும் ஒரே ஓர் இடத்தில் குவிந்து வீச, அந்த இடத்திலே ராஜகம்பீரமாகச் சிரம் தாழ்த்திச் சலாமிட்டபடியே புரொபசர் மித்ரா தோன்றிய போது...

அன்றைய நிகழ்ச்சி அந்த வினாடியே களைகட்டி விட்டது.

அதற்குப்பின், புரொபசரின் பேச்சு ஓயவேயில்லை.

ஒவ்வொரு பொருளையும் எடுக்கும்போது அதற்கொரு கதை; ஒவ்வொரு ஐட்டத்தையும் தொடங்கும் போதும் அதற்கொரு விளக்கம்; தந்திரம் வெற்றிகரமாக முடிவுறும் போது அவையினரின் கரகோஷத்துக்கு நன்றி தெரிவித்த படியே அடுத்த ஐட்டத்துக்குத் தாவும் லாகவம் - புரொபசர் மித்ரா அன்று புகழ்த் தடாகத்தில் முழுக்குளியலை அனுபவித்துக்கொண்டிருந்தார்.

ஆறேழு சிறிய சாதாரண ஐட்டங்களுக்குப் பின்னால் அவருடைய புகழ்பெற்ற 'பாரசீகத்து ரோஜா' ஆரம்பமா யிற்று.

வேலைப்பாடுகள் நிறைந்த, ஆனால் ஒளி மங்கிப் பழசாய்த் தோன்றிய ஒரு பித்தளைஜாடியை நன்று பரிசீலனை செய்யுமாறு கவர்னர் தம்பதிகளிடம் அனுப்பிவைத்தார் புரொபசர். கவர்னரிடமிருந்து கை கையாய் மாறி, முன் வரிசைகளிலிருந்த பிரமுகர்களிடம் ஜாடி சென்றுகொண்டே யிருந்தது. ஒவ்வொருவரும் அதைத் தட்டியும் கொட்டியும் கவிழ்த்தும் இழுத்தும் பரிசோதித்துக் கொண்டிருந்தபோது, புரொபசரின் வாய் தங்குதடையின்றிச் சொற்பொழிவு நிகழ்த்திக்கொண்டிருந்தது.

'எனதன்புக்குரிய சீமான்களே! சீமாட்டிகளே! இதோ உங்கள் முன்னே. பட்டாடையும் பத்மஸ்ரீ பட்டமுமாக டாலடிக்கும் புரொபசரைத் தயவுசெய்து மறவுங்கள். ஒட்டிய

கன்னமும் உலர்ந்த வயிறுமாக, அரேபியப் பாலைவனங்களில் திரிந்துகொண்டிருக்கும் ஒரு சிறுவனைக் கற்பனை செய்து பாருங்கள்! அதுதான் நான். காற்றுக்கூட நுழைய முடியாத அந்தப்புரங்களிலே பர்தா வேடமிட்டுப் புகுந்து புறப்பட்டவன் நான்! முரட்டுக் கொள்ளைக்காரர்களின் மத்தியிலே சுருட்டுக்கு நெருப்பேற்றும் சிறுவனாகப் பணியாற்றியவன் நான்! புனித மெக்காவிலிருந்து ஏடன் வரையில் பேரீச்சம் பழங்களைத் தின்றுகொண்டே ஓடியவன் நான்! பாஹ்ரீனிலும் குவைத்திலும் எண்ணெய் சாம்ராஜ்யங்களில் எடுபிடிப் பையனாக இருந்தவன் நான்! வட ஸிரியாவில் துருக்கிய மொழி, இராக்கிலே பாரஸீகமொழி, பாலஸ்தீனத்தில் ஹீப்ரு மொழி, அல்ஜீரியாவில் பெர்பர் மொழி - இவ்வளவும் பேசக் கற்றுக்கொண்டவன் நான். எல்லாம் எதற்காக?

இங்குள்ள அறிவாளிகளுக்கு நான் சொல்லத் தேவையில்லை - இபன்பதூதா என்ற பதினான்காம் நூற்றாண்டு அறிஞனைப்பற்றி. 'அரபுநாட்டு மார்க்கோ போலோ' என்று புகழ்பெற்ற அந்த யாத்திரீகன், தனது ஆச்சரியமான அனுபவங்களையெல்லாம் வடித்தெடுத்து ஒரு நூல் இயற்றினான். அந்த நூலைப் படித்த போதுதான் இந்தப் பாரசீக ஜாடியைப் பற்றி ஒரு சிறிய குறிப்பைக் கண்டேன்; இதைத் தேடிக் கண்டுபிடிக்கத்தான் அப்படி அராபிய தேசங்களிலெல்லாம் சஞ்சரித்தேன்... கடைசியில் பாக்தாத் கடைவீதியில், ஒரு கிழவரின் கடையிலே இதைக் கண்டெடுத்து வாங்கினேன்...''

புரொபசரின் மளமளவென்ற பேச்சு, ஹாலை மயக்கிக்கொண்டிருந்த நேரத்தில், அந்த ஜாடியும் மன்றமெங்கும் சுற்றிவிட்டு அவர் கைக்குத் திரும்பி விட்டது.

''என்ன இந்த ஜாடியிலே அவ்வளவு சிறப்பு என்கிறீர்களா?'' பேசிக்கொண்டே ஒரு கிண்ணத்திலிருந்து

சில உலர்ந்த சருகுகளை வெளியிலெடுத்தார் புரொபசர். ''காலத்தைப் பின்னோக்கிச் செலுத்தக்கூடிய மாபெரும் சக்தி இந்த ஜாடிக்கு உண்டு. காலத்தால் உருமாறிய ஒரு பொருளை அதன் பழைய வடிவத்துக்குக் கொண்டுவரக் கூடிய மந்திர சக்தி பெற்றது இந்த ஜாடி. ஆனால் இதைக்கண்டுபிடித்தவன் பெரும் கலைஞன்! மகா ரசிகன்! கண்ட கண்ட பொருள் களையெல்லாம் உயிர்ப்பித்து யாருக்கு என்ன லாபம் என்று அவன் நினைத்தான். உலகத்திலேயே அருமையானது, தலைசிறந்தது எது என்று சிந்தித்தான். முடிவுக்கு வந்தான் - ரோஜாப்பூ தான் என்று! பெரியோர்களே! பாரசீகர்களுக்கு ரோஜா என்றால் உயிர். உங்களுக்கு ஒரு பாரசீகப் பழமொழி தெரியுமா? 'உன்னிடம் இரண்டே இரண்டு ரொட்டித்துண்டு தவிர வேறு எதுவுமே கிடையாதா? அப்படியானால் ஒரு ரொட்டித் துண்டை விற்று ஒரு ரோஜாப்பூ வாங்கிக்கொள்' என்று சொல்வார்கள்... மனித வாழ்வின் அழகு, இனிமை, மணம், மென்மை இவற்றுக்கு ரோஜாப்பூதான் உதாரணம் என்று நினைத்தார்கள் அவர்கள்...

மன்றத்திலே குண்டூசி விழுந்தால்கூடக் கேட்கும் அளவுக்கு நிசப்தம்.

''ஆகவே, இந்த ஜாடியைக் கண்டிபிடித்த மகத்தான கலைஞன் என்ன செய்தான்? இதிலே ரோஜாப் பூக்களுக்கு மட்டுமே புத்துயிர் கிடைக்கட்டும், அவை ஒன்றுக்குப் பத்தாக, நூறாகப் பெருகட்டும் என்று செய்து வைத்தான். நண்பர்களே! இதோ என் கையிலே இருப்பவை என்ன தெரிகிறதா? உலர்ந்து காய்ந்து போன சில ரோஜாப்பூ சருகுகள் தான்... இவற்றை இந்தக் காலி ஜாடியில் இப்படிப்போட்டு... இப்படிக் குலுக்கினால்... இதோ... அம்மம்மா! எவ்வளவு புஷ்பங்கள்!... நமது அவையை இன்று கௌரவித்திருக்கும் கவர்னர் தம்பதிகளுக்கு முதலில் வழங்குகிறேன்...''

மேடையிலிருந்து கொஞ்சம் இறங்கினார் மித்ரா. உள்ளங்கையில் ஜாடியைக் கவிழ்த்தார். ஏராளமான ரோஜாப் பூக்கள் கொட்டின. வாரியிறைத்தார் கவர்னர்மீதும், அவரது மனைவியார் மீதும். மேலும் கவிழ்த்தார். மேலும் வந்தன ரோஜாப் பூக்கள். முன் வரிசையில் அமர்ந்திருக்கும் பிரமுகர்களுக்கும் வழங்கினார். பிறகு அடுத்த வரிசை அதற்கடுத்த வரிசை...

மன்றமெங்கும் ரோஜாப்பூ மலைகள்! கொட்டக் கொட்டக் குறையாமல் அவ்வளவு ரோஜாப் பூக்கள் - அன்றலர்ந்த அழகுக் கிண்ணங்கள் - எங்கே தான் உற்பத்தியாகுமோ! எப்படித்தான் வருமோ!

ஆரவாரமும் சிரிப்பொலியும் பாராட்டும் கைத்தட்டலுமாக மக்கள் அதிசயத்தில் ஆழ்ந்திருந்த சமயம், புரொபசர் தமது அடுத்த நிகழ்ச்சிக்குத் தாவிவிட்டார்.

அரங்கம் திடுப்பென்று இருளடைந்து மறுநிமிடம் ஒளிவெள்ளத்தில் மூழ்கியது. புரொபசரின் பின்னேயிருந்த திரையில் பொங்கும் கடலின் திரைப்படம் தோன்றியது. அலைகள் ஆர்ப்பரித்தன. படகுகள் மிகுந்தன; பறவைகள் சிறகடித்தன; கரையிலே மக்கள் கூட்டம் தெரிந்தது.

அந்தக் கடலின் நடுவிலிருந்து எழுந்து வருவது போல இரண்டு இளமங்கைகள் புரொபசரை நெருங்கிவந்தனர். கடல்கன்னிகளைப்போல வேடமணிந்திருந்த அவர்கள், கையில் அழகிய பேழையொன்றைச் சுமந்து வந்தார்கள். முத்துச்சிப்பியின் வடிவத்தில் காணப்பட்ட அதைப் புரொபசரிடம் பணிவோடு நீட்டினார்கள்.

அதை வாங்கி, சபையோரின் முன்னே திறந்து காட்டினர் மித்ரா. எதுவும் இல்லை. காலியாக இருந்தது அந்தச் சிப்பி. ஒரு சிறிய மேஜைமீது வைத்தார் அதை.

''நண்பர்களே! 'சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடும் செய்தி அறியாயோ?' என்றுதான் பாரதியார் பாடினார். சிப்பியிலே இளம்கன்னி பிறந்திடும் அதிசயத்தை அவர் பார்த்தது கிடையாது... நீங்கள் பார்க்கப்போகிறீர்கள்...''

சிப்பியை மூடிவிட்டு, கையை இருமுறை தட்டினார் புரொபசர். மீண்டும் திறந்தார்.

எதுவும் இருக்கவில்லை. காலியாகவே இருந்தது அந்த முத்துச்சிப்பி.

மின்னலைப்போல ஓர் இருள் மித்ராவின் முகத்திலே படிந்து மறைந்தது. 'ஜெகதா!' கொலை வெறியுடன் பல்லைக் கடித்தார்.

மன்றம் அவரையே பார்த்தவாறு காத்திருந்தது.

# 9

If you can do something different, or perform magic in an unusual manner or presentation, then you have a chance of coming out all right.

- Tom powell

அசைவுகளனைத்தும் உலகத்தில் செத்து விட்டாற் போலிருந்தது. யாரோ சாபம் கொடுத்து அவ்வளவு உயிர்ப் பிராணிகளையும் பொம்மைகளாக்கி விட்டாற்போல, மன்றம் மொத்தமும் ஜடமாகக் காட்சி தந்தது. நாற்காலிகளும் சோபாக்களும் வரிசை வரிசையாகச் சவங்களைத் தாங்கிக் கொண்டிருக்கிற மாதிரி அசையாது ஆடா பாறாங்கற்களாக மாறின. ஓசைகள்? அதுவும் அப்படித்தான். எல்லோரும் முன்னதாகப் பேசி வைத்துக்கொண்டு சதி செய்வது போல, மூச்சுக்கூட விடாமல் அமைதி ஏற்படுத்தினர்.

இவ்வளவு காட்டமான சூழ்நிலையையும் புலன்கள் வாங்கி மூளைக்கு அனுப்பக் கால் வினாடிக்கும் கம்மியாகத்தான் பிடித்தது. புரொபசர் மித்ரா, தன் எதிரே நிற்கும் இரண்டு பெண்களையும் பார்த்தார். திறந்தது திறந்தபடி இருக்கும் முத்துச்சிப்பியைப் பார்த்தார். மன்றத்தில் வீற்றிருக்கும் பெரிய மனிதர்களையும் அவர்களுடைய முகங்களில் உதித்துள்ள திகைப்பையும் பார்த்தார்.

எங்கிருந்தோ எப்படியோ வருவித்துக்கொண்ட ஒரு புன்னகையுடன் இரண்டாம் முறை கைகளைத் தட்டினார்.

முத்துச் சிப்பியை மூடித் திறந்தார்.

அப்போது காலியாகத்தான் இருந்தது.

திடீரென, ஹாலின் கோடியிலிருந்து யாரோ மெல்லச் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பிலே தொற்றுக் கிருமிகள் இருந்தன போலும். அடுத்தவரும் சிரித்தார். அதற்கு அடுத்தவர், பின்னும் அடுத்தவர், மேலும் அடுத்தவர் என்று அலை அலையாக அந்தச் சிரிப்புப் பரவியது. அடர்ந்த கானகத்தில் கிளை கிளையாகத் தாவிவரும் ஏராளமான குரங்குக் குட்டிகளைப் போல, அந்தச் சிரிப்பு நாற்காலி நாற்காலியாகத் தாவி மித்ராவை நோக்கி முன்னேறிக் கொண்டேயிருந்தது.

புரொபசரின் புத்தி என்றைக்குமே மரத்துப் போவதில்லை. மடக்குக் கத்திமாதிரி அவசியம் ஏற்பட்டபோது டக்கென்று திறந்துகொண்டு கூர்மையை வெளிப்படுத்தும் சக்தி அவருடைய அறிவுக்கு உண்டு.

எது புத்திசாலித்தனமோ, எது சாமர்த்தியமோ, எது தப்பிப் பிழைப்பதற்கு ஒரே வழியோ, அதை இப்போது செய்தார் புரொபசர்.

சபையின் கேலியான சிரிப்பிலே தானும் கலந்து கொண்டார்!

கூட்டத்தினரின் மகிழ்ச்சிக்குத் தான் ஒரு காரணமாகி யிருப்பதைக் கண்டு பெருமைப்படுகிறவரைப்போல, மார்பை நிமிர்த்தி, தலையை உயர்த்தி, வாய்விட்டுச் சிரித்தார். அசட்டுச் சிரிப்பாக அல்ல, மனம் நிறைந்த சிரிப்பாக.

''நல்லது, நண்பர்களே!'' என்று கூறி, இரு கைகளையும் அகலப் பிரித்து, தலையைக் குனிந்து ஒரு வணக்கத்தைச் சமர்ப்பித்தார் மன்றத்தினருக்கு. ''இந்த ஐட்டம் மட்டும் கெட்டுவிட்டதென்று ஒப்புக்கொள்கிறேன். ஆனால் வருத்தப்படவில்லை. என்னதான் பிரமாதமான வித்தை களைக் காட்டினாலும், எவ்வளவுதான் பத்மஸ்ரீ விருதுகள் பெற்றாலும், இந்தப் புரொபசர் மித்ரா ஒரு சாதாரண மனிதன்தான் என்று நீங்கள் கண்டுகொள்ள இந்த நிகழ்ச்சி உதவியிருப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். மீண்டும் நன்றி.''

உடனே மன்றம் எப்படி மாறி விட்டது!

முதல் கைதட்டலை, முதல் வரிசையில் அமர்ந்திருந்த கவர்னர் ஆரம்பித்து வைத்தார். பின்கோடியிலிருந்து புறப்பட்டுவந்த கேலிச் சிரிப்பைக் காட்டிலும் வேகமாக, இந்த முன் வரிசைக் கைத்தட்டல் அவையெங்கும் பரவியது. தவறைப் புரொபசர் பெருந்தன்மையாக ஒப்புக்கொண்டதற்கு ஈடாக, மன்னிப்பைப் பெருந்தன்மையாக வழங்குவதென்று கூட்டத்தினர் முடிவுசெய்தார்கள் போலும்.

படபடவென்ற கரகோஷம் மித்ராவுக்கு ஆறுதல் தந்தது. ஆயினும், இரண்டாவது மூன்றாவது வரிசைகளில் அமர்ந்திருந்த சிலரின் முகங்களை அவரால் புறக்கணிக்க முடியவில்லை. நகரத்தில் உள்ள 'மாஜிஷியன்கள் கிளப்பில்' அங்கத்தினர்கள் அவர்கள். சிலர் ஐ.பி.எம். உறுப்பினர்கள். நண்பர்களைப்போலக் கைகுலுக்கிப் பழகினாலும், எரி நட்சத்திரம் மாதிரி கும்மென்று புகழ் வானத்தில் ஏறிவிட்ட

புரொபசரிடம் அவர்களுக்குப் பொறாமைதான் உள்ளுக்குள். என்றைக்கு அவர் சறுக்கிவிழப் போகிறார் என்பதைப் பார்ப்பதற்காகச் சளைக்காமல் பல வருடங்களாகக் காத்துக் கொண்டிருப்பவர்கள்.

இன்றைய தோல்வியைப் பொதுமக்களிடம் சமாளித்து விட்டார். ஆனால் தொழில் எதிரிகளிடம் அப்படிச் சமாளிக்க முடியாது. ஏளனச் சிரிப்பு அவர்கள் முகங்களில் எழுதி ஒட்டி யிருந்தது. அறியாதவர்களிடம் அடைகிற அவமானத்தைக் காட்டிலும் அறிந்தவர்களிடம் அடைகிற அவமானத்துக்குக் கூர்மை ஜாஸ்தி. அந்த வாளினால் ஏற்படுகிற ரணம் லேசிலே ஆறுவதில்லை.

அடுத்தடுத்த ஐட்டங்களைப் புரொபசர் வெற்றிகர மாகத்தான் செய்து முடித்தார். புரோக்கிராமிலே காணப்படாத ஐட்டங்கள் கூட இரண்டு செய்தார். எழுந்து செல்லவிருந்த கவர்னர் தம்பதிகள் மேலும் சில நிமிடங்கள் தங்கியிருந்து பார்க்கு மளவுக்குப் பேச்சாலும் செயலாலும் பிடித்து வைத்துக் கொண்டார். கைதட்டல்களும் நிறையக் கிடைத்தன.

ஆனாலும்கூட, அந்த மாஜிஷியன்களின் ஏளனச் சிரிப்புதான் மித்ராவின் மனத்தில் உறுத்திக்கொண்டே யிருந்தது. பயத்துடனும் பணிவுடனும் ஒடுங்கி உட்கார்ந் திருந்த அந்த இரண்டாம் தர மூன்றாம்தரப் பேர் வழிகள், இப்போது கால்களை நீட்டிக்கொண்டு அல்லது ஒன்றன்மே லொன்றாகப் போட்டுக்கொண்டு அலட்சியத்துடனும் செருக்குடனும் நாற்காலிகளில் சாய்ந்து கிடந்தார்கள். இரண்டொரு பேர்கள், கைகளை நீட்டி அருகிலிருந்தவரின் தோள்மீது வீசிப் போட்டுக்கொண்டிருந்தார்கள். புரொபசர் மித்ரா என்ற ஒற்றைத் தனி மனிதருக்கு எதிராகத் தாங்கள் ஒன்றுபட்டு, வெற்றி பெற்று, அந்த வெற்றியைக்

கொண்டாடிக்கொண்டிருக்கிறமாதிரி இருந்தது அந்தக் காட்சி. என்னதான் கண்களைக் கட்டுப்படுத்திக் கொண்ட போதிலும் புரொபசரின் பார்வை அவர்களிடம்தான் திரும்பத் திரும்பச் சென்றது. நாளைக்குச் சங்கத்தின் மாதாந்தரப் பத்திரிகையில் இந்த விழாவைப்பற்றிச் செய்தி வெளியிடு வார்கள். அதிலே இந்தத் தோல்வியைப் பற்றிக் கட்டம் கட்டியோ கொட்டை எழுத்திலோ போட்டு விட மாட்டார்கள்! அந்த அளவுக்கு முட்டாள்கள் அல்ல. ஆனால் நாசூக்காக, போகிற போக்கில் சொன்ன மாதிரி, காஷுவலாகக் குறிப்பிடத் தவறமாட்டார்கள்...

'ஜனகணமன' இசைக்கப்பெற்று, கைகுலுக்கல்கள் முடிவடைந்தது, ஆசனங்கள் காலியாகின. எல்லாம் சொப்பனத்தில், வேறு ஏதோவோர் இடத்தில் காணுகிற மாதிரி இருந்ததே தவிர, தானும் ஓர் அசல் பங்கு பெறுகிறமாதிரி புரொபசருக்குத் தோன்றவில்லை.

மிஸஸ் எஞ்சினியர் விடைபெற்றுக்கொண்டபோது, ''எங்கே உங்கள் குமாரி?'' என்று விசாரித்தாள்.

''நான் பொதுவாகவே பெண்களை நம்புவதில்லை. காலேஜிலே படிக்கிற குமரிகளையா நம்புவேன்!'' என்று சிரித்தார் புரொபசர். ''புரோக்ராம் ஆரம்பித்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தலையை வலிக்கிறது என்று சொல்லி விட்டு வீட்டுக்குப் போய்விட்டாள்.''

''மொத்தத்தில் ஷோ வெற்றிதான்'' என்று பாராட்டி விட்டுச் சென்றார் மிஸஸ் எஞ்சினியர்.

திரைகள் கீழிறங்கின. விளக்குகள் அணைந்தன.

அரங்கத்துக்குப் பின்புறமிருந்த ஒப்பனை அறைக்குள் நுழைந்தார் புரொபசர் மித்ரா.

பதுமைபோல, சுவரோடு சுவராக ஒட்டியபடி நின்றிருந்தார்கள் அவருடைய உதவியாளர்களும்

மானேஜரும். எரிமலை வெடிக்கப்போவதை எதிர் நோக்கி அவர்கள் முகங்கள் பீதியால் வெளுத்திருந்தன. சாட்டையடி பெறப்போகும் சர்க்கஸ் விலங்குகள்போல அவர்கள் தேகம் வெடவெடத்துக்கொண்டிருந்தது.

புரொபசர் உள்ளே நுழைந்தார். யாரையும் நேராக நோக்கவில்லை. வாய்திறந்து கேட்கவுமில்லை. பின்கை கட்டிக்கொண்டு அந்தச் சிறிய அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவினார். மன்றத்தைப் பூட்டவேண்டிய கடைசி வேலைக்காரன் வந்து வந்து எட்டிப்பார்த்தும்கூட அவருடைய உலா நிற்கவில்லை. மெத்து மெத்தென்ற அவருடைய காலணியின் ஓசை தவிர வேறெதுவும் கேட்காத அந்த அமைதி, நிமிடத்துக்கு நிமிடம் பொறுக்க முடியாத தாயிற்று. நின்றிருப்பவர்களின் கால்கள் தள்ளாடின. அவர்களுடைய உதடுகள் காய்ந்தன. கழுத்தின் பின்புறத்தில் வியர்வைத் துளிகள் முத்திட்டு, வழிந்து ஒன்றாகி, கால் வாய்களாக முதுகின் பள்ளங்களில் இறங்கியோடியது.

இறுதியில் புரொபசர் மித்ரா நின்றார். மானேஜரை நோக்கினார்: ''என்ன நடந்தது?''

உலர்ந்து போய்விட்ட உதட்டை நாக்கினால் ஈரப்படுத்திக்கொண்ட பிறகே மானேஜருக்குப் பேச்சு வந்தது. ''முத்துச்சிப்பி ஐட்டம் ஆரம்பிப்பதற்கு ஐந்து நிமிஷம் முன்னால்வரைகூட இங்கேதான் இருந்தாள். கடல்கன்னி மேக்கப் சரியாயில்லை என்று விமலாவுக்கு''- துணை நடிகையைச் சுட்டிக்காட்டினார் மானேஜர் - ''தானே சரிப்படுத்தினாள். பிறகு யாரோ அவளை வெளியே கூப்பிடுவதாக ஓர் ஆள் வந்து சொன்னான். 'இதோ வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனவள்தான் - பிறகு மிஸ் நிம்மி வரவேயில்லை.''

''வந்து சொன்ன ஆளைக்கேட்டீர்களா? யார் அவளைக் கூப்பிட்டார்களாம்?''

''அந்த ஆளைக் காணோம். அவன் மன்றத்தைச் சேர்ந்த வேலையாள் இல்லை. எவனோ வெளி ஆள். மிஸ் நிம்மி யாருடனாவது வெளியே போனாளா என்று கேட்டதற்கும் பலன் கிடைக்கவில்லை. வாசல்பக்கத்து வாட்ச்மேன் உள்பட எல்லோரும் ஷோவைப்பார்க்க உள்ளே வந்துவிட்டார்கள்.''

''வீட்டுக்கு ஆளனுப்பினீர்களா?''

''உடனே அனுப்பினேன். கொஞ்சம் முன்னால்தான் வந்து சொன்னான். அங்கே யாரும் வரவில்லையென்று கூர்க்கா ரொம்ப உறுதியாகச் சொல்கிறானாம்.''

''உள்ளே போய் அம்மாவைக் கேட்டானா?''

''இல்லை. கூர்க்கா வெகுநிச்சயமாகச் சொல்கிறானாம், ஈ காக்கை உள்ளே நுழையவில்லை என்று.''

''ஊம்.'' மேலும் சில நிமிடங்கள் அறையின் நீள அகலத்தை அளந்தார் புரொபசர். பிறகு, ''எல்லோரும் போகலாம்'' என்று உத்தரவிட்டார்.

அவர்களுடைய ஆறுதல் பெருமூச்சு ஒரு பெரும் கோரஸ்போல எழுந்தது. அவசர அவசரமாகத் தங்கள் தங்கள் பைகளையோ பெட்டிகளையோ உடைகளையோ சுருட்டிக் கொண்டு, ஒரே சமயத்தில் வெளியே ஓட யத்தனித்தார்கள்.

''இருங்கள்'' என்று கையமர்த்தினார் புரொபசர். ''நிம்மி முக்கியமான சமயத்தில் இல்லாமற் போனதைப்பற்றி வெளியே யாரிடமும் மூச்சுவிட வேண்டாம். தெரிந்தவர்களுக்குத் தெரியட்டும். நீங்கள் அந்தச் செய்தியைப் பரப்ப உதவ வேண்டாம். புரிகிறதா?''

''எஸ் ஸார்'' என்று ஒரே குரலில் பாடினர் அனைவரும்.

மித்ராவின் கார் தோட்டத்தில் நுழைந்தபோது அதன் ஹெட் லைட்டின் ஒளி, ஹாலில் அமர்ந்து மாலைப் பேப்பரைப் புரட்டிக்கொண்டிருந்த ஜெகதாவின்மீது விழுந்து நகர்ந்தது. அந்த ஒரு கணத்துக்குள்ளேயே அவள் முகத்தைக் கவனித்துக் கொண்டார் புரொபசர்.

காரிலிருந்து இறங்கி, வெராந்தாப் படிகளிலே ஹாலை அடைந்தபோது, அவருடைய நடையுடை பாவனையில் ஓர் உல்லாசமும் இனிமையும் பரவியிருந்தன.

''அருமையான பர்ஃபாமென்ஸ் இன்று! அவ்வளவு தூரம் சொல்லியும் நீ வராமல் இருந்துவிட்டாயே?'' என்று கேட்டுக்கொண்டே கோட்டைக் களையும் கணவனைத் திகைப்புடன் ஏறிட்டு நோக்கினாள் ஜெகதா. இவ்வளவு இயல்பானதன்மையில் அவர் பேசி வெகுநாளாயிற்று என்பது மட்டுமல்ல - ஷோ மிகச் சிறப்பாக நடந்தேறியது என்ற தகவல் அவளைக் கட்டாரிக் குத்துபோல் தாக்கியது. ஒரு குந்தகமுமில்லாமல் - ஒரு இடையூறுமில்லாமல் - நடந்திருந்தது என்றால்...

''நிம்மிக்குத்தான் பிரமாதமான பாராட்டு!'' என்று புரொபசர் தொடர்ந்தார். ஓரக்கண்ணால் மனைவியை அளவெடுத்த வண்ணமே.

''அப்படியா!'' என்று ஆச்சரியம் தெரிவிக்கிறமாதிரி பாசாங்கு செய்ய முயன்றாள் ஜெகதா. ஆனால் குழப்பத்தில் சப்தம் உருவாகாமல், வெறும் காற்று மட்டுமே வெளிப்பட்டது.

''அதிலும் உன் பெண்ணுக்குத்தான் எக்கச்சக்கமான கைத்தட்டல்... கண் பட்டிருக்கும்... வந்ததும் திருஷ்டி சுற்றிப் போடு...'' சொல்லிவிட்டு மீண்டும் ஆராய்ந்தார் ஜெகதாவை.

''ஊம்...'' என்ற முனகல் கேட்டது அவளிடமிருந்து.

''நிம்மி எங்கே என்றுகூட நீ கேட்கவில்லையே?''

''ஆமாம்... எங்கே?''

''கவர்னர் மனைவி விடமாட்டேன் என்று சொல்லி விட்டாள். அவ்வளவு பிரியம் ஏற்பட்டுவிட்டதாம் அவளிடம். ராஜ்பவனுக்குத் தன்னுடன் அழைத்துப் போயிருக்கிறாள்... ராத்திரி அனுப்புகிறாளோ, காலையில் அனுப்புகிறாளோ. சரி, மணி ரொம்ப ஆகிவிட்டது. நீ படுக்கப் போ. நான் சாட்பிட்டுவிட்டு வருகிறேன்.'' தேங்காய்ப் பூத் துவாலையைக் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டு டைனிங் ஹாலுக்குச் சென்றார் புரொபசர்.

பிரமையடித்து உட்கார்ந்திருந்தாள் ஜெகதா. வெறுப்பும் ஏமாற்றமும் அவள் நெஞ்சில் மோதிக்கொண்டு வெடித்தன. அந்தக் கல்யாணம் என்கிற பையனும் எல்லோரையும்போல வெற்று வேட்டுதானா?

அவன் கொஞ்சம்கூட முயற்சியே பண்ணவில்லையா, நிம்மியைத் தடுத்து நிறுத்த? அல்லது முயற்சி செய்தும் பலிக்காமல் போய்விட்டதா? எப்படித் தெரிந்துகொள்வது?

எதிரிலிருந்த டெலிபோன் ஜெகதாவைக் குபுக்கென்று எழுந்து கொள்ள வைத்தது. டைரக்டரியைப் படபடவென்று புரட்டினா. பல கல்யாணராமன்களின் பெயர்கள் இருந்தன. யாரையென்று கூப்பிடுவது? லீலாவதி என்ற பெயரில் தேடினாள். எதுவுமே காணப்படவில்லை. பிறகுதான் ஞாபகம் வந்தது. நிம்மியின் மேஜைமீது ஒரு பாக்கெட் டயரி இருக்கும். அதில் தன் தோழிகளின் போன் நம்பர்களை யெல்லாம் குறித்து வைத்திருப்பது அவள் வழக்கம்.

டைனிங் ஹாலில் விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது... புரொபசர் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்... சீக்கிரம்! சீக்கிரம்...!

டயரியைத் தேடிக் கண்டு பிடிப்பதும் அதிலிருந்து லீலாவதியின் நம்பரை அறிந்துகொள்வதும் இரண்டு நிமிட வேலைதான் என்றாலும் இரண்டு யுகங்கள் அதில் சென்றுவிட்டாற் போலத் தோன்றியது.

நம்பரைச் சுழற்றினாள். மறுமுனையில் போன் மணியடிக்கும் ஒலி கேட்டது. மணி பதினொன்றே கால்... அயர்ந்து தூங்குகிறவர்கள் எழுந்து வர வேண்டும்...

திடுமென்று அவளுடைய கழுத்துப் புறத்தில் மூச்சுக் காற்றுப்பட்டது. அதிர்ச்சியுடன் திரும்பினாள்.

புரொபசர்தான் நின்றிருந்தார் பின்னால். ''பருப்பு சாம்பார் வெகு நன்றாக வைக்கிறான் நம் சமையற்காரன்... யாருக்குப் போன் செய்கிறாய் இந்த வேளையில்?''

வியர்த்துக் கொட்டியது ஜெகதாவுக்கு. ''யாருக்கும்... யாருக்கும் பண்ணவில்லை... மணி அடிக்கிறமாதிரி இருந்தது... எடுத்தேன். ஒன்றையும் காணோம்.'' போனைத் திரும்ப வைத்தாள். எவ்வளவு ஓசைப்படாமல் வந்து, பின்னாலேயே நின்று கவனித்துக்கொண்டு இருந்திருக்கிறார்! அல்லது சாப்பிடவே போகவில்லையோ?

''எவனாவது சோம்பேறி, டைரக்டரியைச் சரியாய்ப் பார்க்காமல் ராங் நம்பருக்கு டயல் செய்திருப்பான்'' என்றார் புரொபசர் மித்ரா, சாதாரணமான குரலில். படுக்கப் போகலாம், வா. நள்ளிரவாகிறது. இனிமேல் நிம்மிகூடக் காலையில்தான் வருவாள்.''

வேண்டுமென்றே நிம்மியின் பெயரை அவர் பிரஸ்தாபிக்கிறார் என்று ஜெகதாவுக்குத் தோன்றியது. வயது வந்த பெண்ணைத் தனியே அனுப்பியது பற்றி எந்தத் தாயாரும் இரண்டு வார்த்தையாவது புலம்பியிருப்பாள்... அந்த மாதிரி தானும் ஏதேனும் சொல்லியிருக்க வேண்டுமோ? இப்போது

சொன்னால் என்ன? ஆனால் என்ன சொல்வது? ஜெகதா வுக்குப் புரியவில்லை. ஷோவிலிருந்து திரும்பியதுமுதல் புரொபசர் பேசுகின்ற பேச்சுக்களில் ஒரு செயற்கையான தன்மைதான் தெரிகிறது. அவளை ஆழம் பார்க்கிறார், ஆராய்கிறார், கவனித்துக்கொண்டே இருக்கிறார்...

இப்போது எப்படிப் பேசினாலும் அது தன்னைக் காட்டிக் கொடுப்பதாகவே இருக்கும் என்று உணர்ந்தஜெகதா மௌனமாகவே படுக்கையில் சாய்ந்தாள்.

**பி**ன்னிரவு இரண்டு மணி இருக்கும்.

''ஜெகதா! ஜெகதா!'' என்ற அவசரக் குரல் பக்கத்துக் கட்டிலிலிருந்து கேட்டது.

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தவள், அறையில் விளக்குப் பளீரென்று எரிவதையும் படுக்கையில் முழங் காலைக் கட்டிக்கொண்டு புரொபசர் மித்ரா உட்கார்ந் திருப்பதையும் கண்டாள். அவருடைய முகத்தில் அலாதியான தொரு பரபரப்பும் ஆர்வமும் மின்னின.

''ஆறு மாசமாய் மனசுக்குள் உறுத்திக்கொண்டிருந்த ஒரு ட்ரிக்குக்கு வழி கிடைத்துவிட்டது, ஜெகதா!'' உற்சாகத்துடன் கையைச் சொடுக்கினார் புரொபசர் மித்ரா. ''வா, வா! எழுந்து வா சீக்கிரமாய்! இப்போதே அதை எக்ஸ்பரிமெண்ட் பண்ணிப் பார்த்துவிட வேண்டும்!''

கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு. நம்பவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் புரொபசரைப் பார்த்தாள் ஜெகதா. அவரோ வெகு பரபரப்பாகச் சட்டையை அணிந்துகொண்டு, கட்டிலின் கீழிருந்த ஸ்லிப்பர்களை மாட்டிக் கொண்டிருந்தார்.

இம்மாதிரியான திடீர் 'இன்ஸ்பிரேஷன்'கள் வருவது அவருக்கு வழக்கம். ஒரு குறிப்பிட்ட மாஜிக் வேலையை

எப்படிச் செய்வது என்றோ, ஒரு ஏமாற்றான கருவியை எப்படி அமைப்பது என்றோ திடுதிப்பென அவருக்கு யோசனைகள் உதிப்பது உண்டுதான். உடனே பக்கத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களை இழுத்துக்கொண்டு தன் 'ஒர்க் ஷாப்'புக்குச் சென்று, அதைச் செய்து பார்ப்பார். அவருக்கே உரிய பல மாஜிக் தந்திரங்கள் இம்மாதிரி சமயங்களில் உதித்தவைதான்.

எனினும்கூட, இன்று அவரை நம்ப, நம்பி அவர் பின்னே செல்ல, ஜெகதாவுக்கு ஏனோ தயக்கமாயிருந்தது.

''ஊம்! ஊம்! வா!'' என்று அவர் முன்னே போய்க் கொண்டிருந்தார். வேறு வழியின்றி அவள் பின் தொடர்ந்தாள்.

விந்தை விந்தையான பல வகை உபகரணங்கள் கொட்டிக் கிடந்த அறையை மித்ரா திறந்தார். முகமூடிகள், யந்திரங்கள், உறைகள், பொம்மைகள், பல்சக்கரங்கள், கத்திகள், விலங்குகள், பெட்டிகள் முதலியன வேண்டுமென்றே கோரமும் விகாரமுமாகச் செய்யப்பட்டிருந்தன. நிசப்தமும் இருளும் நிறைந்த அந்த வேளையில், அந்த அறை யாரோ ஒரு கொடுங்கோலனின் சித்திரவதைக் கூடமாகக் காட்சி தந்தது.

ஜன்னலருகே ஒரு மேடை. அங்கு வைக்கப்பட்டிருந்த எலிப்பொறியொன்றை எடுத்தார் மித்ரா.

''இதைப் பார்த்தாயா?'' என்று அதைத் தூக்கிக் காட்டினார், ஜெகதாவின் கண்ணெதிரே.

பொறியினுள்ளே குறுகுறுவென்று ஓடிக்கொண்டிருந்தன நான்கு வெள்ளை எலிகள்.

அடுத்து, மேடைக்குக் கீழேயிருந்த பிறையிலிருந்து ஒரு சிறிய மண்பானையை வெளியிலெடுத்தார் புரொபசர்.

''ஆறுமாதம் முன்பு ஒரு கதைபடித்தேன். அதைப் படித்தது முதல் குறுகுறுத்துக் கொண்டிருந்தது ஓர் ஐடியா!'' என்று உற்சாகத்துடன் சொல்லத் தொடங்கினார்.

# 10

You learn only from what you love.

- GOETHE

ஊரே உறங்கிக் கிடந்த வேளையில், மிக அருகில் ஒரு சுவர்க் கோழியின் ரீங்காரமும், எண்ணத் தொலையாத தூரத்தில் ஒரு நாயின் குரைப்பும் தவிர வேறெந்த ஒலியும் எங்கிருந்தும் கேட்காத நேரத்தில், தனிமையிலும் தனிமையாகத் தான் மட்டுமே புரொபசரின் அறையில், அவருடைய பயங்கரமான மாஜிக் கருவிகளுக்கு மத்தியில், குறுகுறுவென்று ஓடியவண்ணம் கூரிய பற்களைக் காட்டும் வெள்ளை எலிகளின் எதிரில், உடம்பு வெடவெடக்க, உள்ளம் படபடக்க நின்றுகொண்டிருக்கும் பரிதாப நிலையை எண்ணிப் பார்த்தாள் ஜெகதா.

''என்ன பேசாமலிருக்கிறாய்?'' என்று கேட்டார் புரொபசர். எலிக் கூண்டை இப்போது மேஜை மீது வைத்துவிட்டார் அவர். சிறிய பானையை மட்டுமே கையில் பிடித்திருந்தார். அவருடைய முரட்டுத் தனமான விரல்கள் பானையின் சொறசொறப்பான விலாவில் தாளமிட்டுக் கொண்டிருந்தன.

மித்ராவின் பார்வையும் பேச்சும் ஜெகதாவைப் பீதிவசப்படுத்திக் கொண்டிருந்தன. எதற்காக நள்ளிரவில் தன்னை இங்கே இழுத்து வந்தார்? புரொபஸர், ''இந்த அறுவருப்பான எலிகளை எடுத்து இந்தப் பானைக்குள் போடவேண்டியது. என் அஸிஸ்டென்ட் ஒருவனைக் கூப்பிட்டு, அவன் வயிற்றில் வைத்துக் கட்டவேண்டியது... என்ன, கவனிக்கிறாயா?''

''கவனிக்கிறேன்'' என்றாள் ஜெகதா. ஆனால் கிணற்றுக்குள்ளிருந்து வருவதுபோல ஒலித்தது அவள் குரல்.

புரொபசர் சுவாரஸ்யமாக விவரித்துக்கொண்டே சென்றார்: ''பிறகு நெருப்புப் பந்தம் கொண்டுவரச் சொல்லி, பானையின் கீழே காட்டவேண்டியது. எலிகள் துள்ளியோடி, அவன் வயிற்றைக் குடைகுடை என்று குடைந்து கிழித்துக் கொண்டு வெளிவரவேண்டுமல்லவா? ஆடியன்ஸ் அத்தனை பேரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு, பயந்து நடுங்கி, மேடையையும் அந்த ஆளையுமே வைத்த கண் எடுக்காமல் பார்த்துக்கொண்டிருப்பார்கள்... ஆனால் எதுவும் நேராது! சித்திரவதைக்குள்ளாகவேண்டிய ஆள், ஒரு வேதனை யுமில்லாமல், புன்சிரிப்பாய் அப்படியே நின்று கொண்டிருப்பான்! மூன்று நிமிடம் தீப்பந்தம் அப்படியே இருக்கும். பானை அப்படியே இருக்கும். ஆனால் ஒன்றும் நேராது. நான் என் மந்திரக் கோலால் பானையை இரண்டு தட்டுத் தட்டிவிட்டு, அதை அவன் வயிற்றிலிருந்து கழற்றுவேன். கவிழ்த்துக் காட்டுவேன். உள்ளே ஒன்றும் இருக்காது. எலிகள் மாயமாய் மறைந்திருக்கும்! எப்படி?''

''எப்படி?'' என்று தீனக்குரலில் எதிரொலித்தாள் ஜெகதா.

''எப்படி என்றுதான் ஆறுமாதமாய் இரவு பகல் யோசித்து, இன்று கண்டுபிடித்தேன். இப்படி வா.'' ஜெகதாவின் இடையை வளைத்தது புரொபசரின் இடக்கரம். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் குச்சிகள் தன்னைத் தொடுவது போன்ற தகிப்பும் பீதியும் அவளை உசுப்பின.

புரொபசர் வலக்கரத்தால் பானையை எடுத்தார். கூண்டினருகே வைத்து, அதன் வாயைத் திறப்பதற்கான கொக்கியை இழுக்கப்போனார்.

''பயப்படாமல் இரு, ஜெகதா!'' என்றார், ஜெகதாவின் நடுக்கத்தை ரசித்தபடி. ''என் வழக்கமான ஹாண்ட் ஸ்லீக் - கைத்தந்திரம்தான். பானைக்குள்ளிருக்கும் எலிகள் பாய்ந்து வந்து உன் வயிற்றைப் பிறாண்டுவது போல் தோன்றினாலும் -''

''மாட்டேன், மாட்டேன்!'' என்று மீண்டும் அலறிய வண்ணமே அவருடைய பிடியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டாள் ஜெகதா. ''என்னை ஏன் இப்படிக் கொல்கிறீர் கள்? என்ன குற்றம் செய்தேன் என்று வாய்விட்டுத்தான் சொல்லுங்களேன்! ஆசையாக, அன்பாக, காதலாக உங்களை மணந்து வாழ்க்கை நடத்திய காலம் மலையேறி, விழிப்பிலும் உறக்கத்திலும் உங்களைப்பற்றி எண்ணியெண்ணி நடுங்குகிறவளாக என்னைச் செய்துவிட்டீர்களே? ஏன்? என்ன பிழை செய்தேன் என்று இப்படி வாட்டி வதைக்கிறீர்கள்?''

''என்னது! என்ன ஜெகதா! என்னென்னவோ பேசுகிறாயே?'' என்று திகைத்துப் பிரமித்தவர்போல, குரலில் ஒரு செயற்கையான வியப்பை ஏற்படுத்திக் கொண்டு வினவினார் புரொபசர்.

''எனக்குத் தெரியாதென்று நினைக்காதீர்கள். அன்று உங்கள் ஆபீஸ் அறையில் நான் நுழைந்தபோது, உங்கள் கையால் என் கழுத்தை முறிக்கப் பார்த்தீர்கள். நான் தப்பி விட்டேன். எதற்காக அப்படிச் செய்தீர்கள்? இப்போது மாஜிக் பரிசோதனை என்கிற சாக்கில் என்னைத் துடிக்கத் துடிக்கச் சாக வைத்துப் பார்க்க ஆசைப்படுகிறீர்கள்! எதற்காக? எதற்காக, சொல்லுங்கள்?''

புரொபசர் மித்ரா அவள் கைகளை உதறிவிட்டு, விலகி நின்றார். அவருடைய கூரிய கழுகுக் கண்கள் - எந்தத் தைரியசாலிக்கும் நடுக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நெருப்பு விழிகள் - சன்னமான மரப்பலகையில் ட்ரில்லிங் கருவி இறங்குவதுபோல் கிறுகிறுவென்று ஜெகதாவைத் துளைத்தன.

பின் கை கட்டிக்கொண்டு, பல்லைக் கடித்துக் கொண்டு, ''நீ என் வாழ்க்கையிலிருந்து என்றைக்கு ஒழிகிறாயோ அன்றைக்குத்தான் எனக்கு நிம்மதி'' என்றார் புரொபசர்.

''ஐயோ! ஏன்... ஏன் இப்படியெல்லாம் சொல்கிறீர்கள்?''

''ஏனா? துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தொண்டையில் சிக்கிக்கொண்டிருக்கும் கசப்புக் கட்டி நீ! காலிலே குத்தி, நெஞ்சுவரை ஏறிவிட்ட கண்ணாடித் துண்டு நீ! உன்னை ஒரேயடியாகக் கொலை செய்துவிட வேண்டும் போல் என் மனம் ஒரு சமயம் துடிக்கிறது. கூடாது, உன்னை அணு அணுவாகத் துளைத்து, நான் அறிய விரும்புவதை யெல்லாம் அறிந்துகொண்ட பிறகே உன்னைச் சாக அனுமதிக்க வேண்டும் என்று இன்னொரு சமயம் தோன்றுகிறது. ஜெகதா! உன்னை... உன்னை...'' புரொபசரின் எஃகு விரல்கள் மடங்கிப் பிரிந்து மடங்கிப் பிரிந்து அவருக்குள்ளே குமுறிக் கொண்டிருக்கும் அரக்கத் தனங்களுக்கு அடையாளங் களை வெளிப்படுத்தின.

ஜெகதா முகத்தைப் பொத்திக்கொண்டு குலுங்கி அழுதாள். ''அதனால்தான் கேட்கிறேன், நான் என்ன செய்தே னென்று.''

''பழங்கதை இருக்கட்டும். நேற்று என்ன செய்தா யென்று நினைவிருக்கிறதா?'' என்று உறுமினார் புரொபசர்.

''நேற்றா... நேற்று...''

''பாசாங்கு பண்ணாதே! நிம்மி ஸ்டேஜுக்கு வந்ததா யும், கவர்னர் மனைவி அவளைப் பாராட்டித் தன்னோடு அழைத்துச் சென்றதாயும் நான் சொன்னதெல்லாம் பொய். உனக்கும் அது தெரியும். கடைசி நிமிடத்தில் அவளைக் காணவேயில்லை. என்ன செய்தாய் அவளை?''

''நானா... நிம்மியை நான் பார்க்கவேயில்லையே...'' என்று தடுமாறினாள் ஜெகதா.

''பொய் சொல்லிப் பொய் சொல்லி என் ஆத்திரத்தைக் கிளறாதே!'' என்றார் புரொபசர். ''அவள் மாஜிக்கும்

ஹிப்னாடிஸமும் கற்றுக்கொள்வதை ஆரம்பத்திலிருந்தே நீ எதிர்த்து வந்திருக்கிறாய். என் மானம் போகட்டுமென்று சதி செய்து அவளைக் கடத்திப் போயிருக்கிறாய்...''

''சத்தியமாய் நான் அந்தப் பக்கம் வரவேயில்லை'' என்றாள் ஜெகதா.

''அரை உண்மைகள் சொல்வதில் என்றைக்குமே நீ கைகாரியாயிற்றே!'' என்று எகத்தாளமாகச் சிரித்தார் மித்ரா. ''நீ வரவில்லை அந்தப் பக்கம் என்று நானும் ஒப்புக் கொள்கிறேன். வேறு யாரை அமர்த்தி அந்தக் காரியத்தைச் செய்தாய் என்றுதான் கேட்கிறேன்.''

''வேறு யார்... எனக்கு யார் இருக்கிறார்கள் உதவி பண்ண...''

''இரண்டு நிமிட்ம் டயம் தருகிறேன். யோசித்துச் சொல் உன் பதிலை. வரவர என் பொறுமை பறந்து கொண்டே யிருக்கிறது. இனிமேல் உன்னைத் துன்புறுத்துவதை நிறுத்திக்கொண்டு நிம்மியையே துன்புறுத்தலாமோ என்று கூடத்தோன்ற ஆரம்பித்திருக்கிறது... அப்போதுதான் நீ திருந்துவாயோ என்னவோ... அந்த அளவுக்கு என்னை மிருக்கமாக்காதே... சொல், யார் உனக்குத் துணைசெய்தது?...''

விக்கித்து நின்றாள் ஜெகதா, புரொபசரின் கடைசி மிரட்டலைக் கேட்டு, அவளுடைய உதடுகள் பிரிக்க முடியாதபடி ஒட்டிக்கொணடிருந்தன, சில வினாடிகளுக்கு. இறுதியில், ''அந்தப் பிள்ளை... கல்யாணம்... அவனிடம் தான் சொல்லியிருந்தேன்... ஒரு வேளை...''

''ஓ! அந்த லீலாவதியின் அண்ணனா? அதிகப் பிரசங்கி!'' கைக் கடியாரத்தைப் பார்த்தார் மித்ரா. ''மணி இரண்டாகிறது. பொழுது விடியட்டும். அவன் வீடு எனக்குத் தெரியும்...''

கதவை மடேலென்று சாத்திக்கொண்டு வெளியேறினார் புரொபசர் மித்ரா.

படுக்கையிலிருந்து சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்தாள் நிம்மி.

காலையில் எழுந்ததும் அவள் கண்விழிப்பது ராம கிருஷ்ண பரமஹம்சரின் உருவத்தில்தான். அந்தப் படம் எங்கே?

எப்போதும் படுக்கையில் நாலு தலையணைகள் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவளுக்குத் தூக்கம் வராது. இப்போது ஒரே ஒரு தலையணைதான் இருக்கிறது. அப்படியும்கூட அவள் தூங்கியிருக்கிறாள்.

தூக்கம்தானா அது? நிம்மி கண்களையும் மூளையை யும் கசக்கிக்கொண்டாள். இல்லை, இது தூக்கமில்லை. ஏன், இது அவள் அறையேயில்லை, அவள் வீடேயில்லை.

வாயெல்லாம் கசப்பாயிருந்தது. அதே சமயம் ஓர் இனிமையான மணமும் அவள் சுவாசத்தில் கலந்திருந்தது. வயிற்றைப் புரட்டிக் கலக்கிக் கொண்டிருந்தது. எதனுடைய அறிகுறிகள் இவை?

நிம்மி யோசித்தாள். சிறிது சிறிதாக உண்மை புலப் பட்டது. அவள் வெகுநேரமாய்க் குளோரோபார மயக்கத்தில் இருந்திருக்கிறாள்.

குளோரோபாரமா? ஏது? எப்போது?... நினைவு வருகிறது, வருகிறது...

மன்றத்தில் புரொபசர் மித்ராவின் மாஜிக் ஷோ நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்பாவுக்குக் கிடைக்கும் கைதட்டல்களையும் பாராட்டுதல்களையும் மேடை இடுக்கு களின் வழியே கவனித்து நிம்மி மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறாள். மானேஜர் வந்து, ''உங்கள் ஐட்டம் ஆரம்பமாகப் போகிறது. அந்தக் கப்போர்டில் வந்து உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்கிறார்.

''இதோ வருகிறேன்'' என்று புறப்படுகிறபோது, ஸ்டேஜின் பின்புறவாசல் வழியாய் ஓர் ஆள் வருகிறான். பார்வைக்கு வேலைக்காரன் போன்றிருக்கும் அந்த ஆள், ''நீங்கதானே நிம்மி? வாசல்லே ஒருத்தர் உங்களை அவசரமாய்க் கூப்பிடறாங்க'' என்கிறான்.

நிம்மிக்கு ஒரே திகைப்பு, ''யார் கூப்பிடுவது? இருக்கச் சொல். கொஞ்சம் பொறுத்து வருகிறேன்'' என்று பதில் கூறிவிட்டு, அவனைத் தாண்டிக்கொண்டு செல்ல முனைகிறாள்.

''சரிம்மா'' என்று அவனும் திரும்புகிறான். ''உங்க அம்மான்னு சொன்னாங்க.''

அம்மாவா! நிம்மிக்குத் திகைப்பு நீங்கி, அதிர்ச்சியும் கவலையும் ஏற்படுத்தின. அம்மா எதற்காகத் தன்னைத் தேடிக்கொண்டு இவ்வளவுதூரம் வரவேண்டும்? ரொம்ப முக்கியமாகத்தான் இருக்கும்... ''எங்கேயப்பா இருக்கிறார் கள்? காட்டு'' என்று கூறி அந்த ஆளைப் பின்தொடர்கிறாள்.

மன்றத்தின் புறக்கடைப் பகுதியில், ஒரு சந்தில், இருட்டான இடத்தில் டாக்ஸி நிற்கிறது. உள்ளேயிருப்பவர் கதவில் வைத்திருக்கும் கையில் வளையும், தோளில் புடவையும் தெரிகின்றன. ''என்னம்மா...'' என்று கேட்டுக் கொண்டே காருக்குள் குனிந்ததுதான் தாமதம்-

நிம்மியின் முகத்தில் ஒரு துணியைக் கப்பென்று போர்த்துகிறார்கள் யாரோ... கும்மென்று ஒரு நெடி...

அவ்வளவுதான் தெரியும் நிம்மிக்கு. பிறகு இப்போது தான் படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொள்கிறாள். இவ்வளவு நேரமும் மயக்கம்!

முழு உணர்வும் ஏற்பட்டதும் அவளுக்கு ஏற்பட்ட முதல் அச்சம், தான் மானபங்கப் படுத்தப்பட்டிருப்போமோ என்பதுதான். தன் உடையைப் பார்த்துக் கொண்டாள்.

படுத்திருந்ததால் சிறிது கசங்கியிருந்ததே தவிர வேறு அலங்கோலம் தென்படவில்லை. கை கால்களைக் கட்டியிருப்பார்களோ என்று பார்த்தாள். அதற்கான வலியோ சுவடோ இருக்கவில்லை.

கடத்தி வந்தவர் யாரானாலும் சரி, கௌரவமாகத்தான் இதுவரை நடத்தியிருக்கிறார். அந்த அளவில் நிம்மிக்குத் திருப்தி ஏற்பட்டது.

நிம்மி கட்டிலை விட்டு இறங்கினாள். மயக்கத்தின் ஆதிக்கம் முழுக்க விலகாததால் காலில் ஒரு வெட வெடப்பும் கண்ணில் ஒரு மசமசப்பும் இருந்தன. சமாளித்துக்கொண்டு, ஜன்னல் இருந்த பக்கமாகச் சென்றாள். வெளியே நோக்கினாள்.

தான் இருப்பது ஒரு வீட்டின் மாடியறை என்பது தெரிந்தது. வெளியே ஒரு வெராந்தாவும் அதற்கப்பால் கைப்பிடிச் சுவரும் தெரிந்தன. கீழேயுள்ள தெரு அப்படியொன்றும் சுறுசுறுப்பானதாகத் தோன்றவில்லை. எப்போதோ ஒரு முறை கார் அல்லது சைக்கிள் செல்லும் ஓசை கேட்டது.

எதிர்ச் சாரியில் வீடுகள் கிடையாது. எட்டத்தில் ஒரு பள்ளிக்கூட விளையாட்டு மைதானம் தென்பட்டது. வாலி பால் விளையாடிக்கொண்டிருந்தார்கள் டீனேஜ் சிறுவர்கள்.

அறைக் கதவை மெதுவாய் இழுத்துப் பார்த்தாள். பூட்டித்தான் இருந்தது.

ஜன்னலில் முடிந்த அளவு ஓரத்துக்கு நகர்ந்து, கண்களைச் சிரமப்படுத்திக்கொண்டு, வெராந்தாவைக் கவனித்தாள் நிம்மி. ஒரு தாடீ மீசைக்காரகக் கிழவன் - முஸ்லிமைப் போல் தோற்றமளித்தவன் - சுவரில் சாய்ந்துகொண்டு அரைத்தூக்கத்தில் ஆடிக்கொண்டிருந்தான்.

அவனைக் கூப்பிட வாயெடுத்தாள் நிம்மி. அதைக் காட்டிலும் வேறொன்று செய்தாலென்ன என்று தோன்றவே, கட்டிலுக்குத் திரும்பினாள். ஒரு சினிமாவில் பார்த்த காட்சி ஞாபகத்துக்கு வந்தது.

அறை துப்புரவாக இருந்தது. ஆயுதமாக உபயோகிக்கக் கூடிய கடினமான பொருள் ஏதுவும் இருக்கவில்லை. படுக்கையைத் தூக்கிப்பார்த்தாள் நிம்மி. அவள் முகம் மலர்ந்தது. அது மரக்கட்டிலாகையால், குறுக்கே சட்டங்கள் போடப்பட்டிருந்தன. அந்தச் சட்டங்களில் ஒன்றை எடுத்துக்கொண்டாள்.

கதவின் பக்கம் போய் நின்றுகொண்டவள், ''தேள்! தேள்! ஐயையோ! தேள்!'' என்று பெரிதாய்க் கூச்சலிட்டாள்.

மரச்சட்டத்தை ஓங்கிப் பிடித்துக்கொண்டாள்,

## 11

When the subject is hypnotised take hold of one of his hands and tell him that he would feel no pain in that hand... Prick a pin or needle through the skin. He would not feel it.

- Prof.M.S.Rao

முதலில் கொஞ்ச நேரத்துக்கு எவ்விதமான சந்தடியும் கேட்கவில்லை. கையில் ஓங்கிய மரச் சட்டத்துடன் கதவருகில் தயாராக நின்றிருந்த நிம்மிக்கு ஏன் அந்தக் கிழவன் எழுந்தோடி வரவில்லை என்று திகைப்பாயிருந்தது. ஒரேயடியாய்த் தான் மௌனமாயிருந்தால் அவனுக்குச் சந்தேகம் வந்துவிடும் என்பதற்காக, மறுபடியும், ''ஐயோ!

எவ்வளவு பெரிய தேள்! இங்கே யாருமே இல்லையா எனக்கு உதவி செய்ய?'' என்று கத்திப் பார்த்தாள்.

இப்போது அவன் எழுந்து கொள்கிறாற்போல் ஓசைகள் கேட்டன. நிம்மிக்கு உள்ளூர ஆச்சம்தான். அந்த மாதிரி யாரையும் அடித்துத் தாக்கக் கூடிய சந்தர்ப்பம் அதுவரை அவள் மனத்தில் மிகுந்திருந்தது. அயோக்கியத்தனமாய்த் தன்னைக் கடத்தி வந்து இங்கே அடைத்திருக்கிறார்களே என்கிற நியாயமான ஆத்திரம் அவளைப் பதறச் செய்தது.

என்ன இது? அந்தக் கிழவன் இந்த அறையை நோக்கி வருவதாய்த் தெரியவில்லையே? கீழேயல்லவா போகிறான் போலிருக்கிறது? மாடிப்படியில் இறங்குகிற ஓசை கேட்கிறதே! ஓகோ! தேளை அடிப்பதற்காகக் கழி அல்லது துடைப்பம் எடுத்து வருவதற்காகச் செல்லுகிறானோ என்னவோ!

தன் எச்சரிக்கையைக் கைவிட்டு விடாமல் கதவின் ஓரமாகவே நின்று கொண்டிருந்தாள் நிம்மி. சற்றைக் கெல்லாம் அவன் திரும்பி வரும் சத்தம் கேட்டது. மூச்சைப் பிடித்துக் கொண்டு காத்திருந்தான்.

ஆனால் கதவின் பக்கம் அந்தக் கிழவன் வரக்காணோம். என்ன செய்கிறான்? எங்கே இருக்கிறான்?

நிம்மி யோசித்துக்கொண்டிருக்கும்போது, ஜன்னலுக்கு வெளிப்புறத்தில் ஒரு கனைப்புச் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

ஒரு கைமட்டும்தான் நீட்டிக்கொண்டிருந்தது அங்கே. உடம்பின் மற்றப் பாகங்கள் கண்ணுக்குத் தெரியவில்லை.

முக்கால் ஆள் உயரத்துக்கு இருந்தது அந்தப் பெரிய ஜன்னல். பழங்காலத்து இரும்பில் வளையம் வளையமான வேலைப்பாடுகள் இருந்தன. நிம்மி மட்டும் இன்னும்

கொஞ்சம் ஒல்லியாக இருந்தால் ஒரு வளையத்துக்குள்ளாக உடம்பையே நுழைத்து வெளியேறிவிட முடியும். அத்தகைய ஜன்னலின் மறுபுறத்தில்தான் அந்தக் கை நீட்டிக் கொண்டிருந்தது.

கனைப்புச் சத்தம் இரண்டாம் தடவையும் கேட்டது. தன்னை அருகில் வரும்படி கிழவன் கூப்பிடுகிறான் என்று நிம்மிக்குப் புரிந்துவிட்டது. போவதா கூடாதா என்று ஒரு நிமிடம் யோசனை செய்தாள். பிறகு வருவது வரட்டும் என்று ஜன்னலை நோக்கி நடந்தாள். அருகில் சென்று பார்த்தாள்.

அவளுக்குத் தன் முகத்தைக் காட்டாமல், சுவரோடு சுவராக ஒட்டிக்கொண்டிருந்தான் அவன். கையை மட்டும் அவளுக்குத் தெரிகிற மாதிரி நீட்டிக் கொண்டிருந்தான்.

''ஊம்'' என்று உறுமினான் அவன், நீட்டிய கையை ஆட்டியபடி.

அந்தக் கையில் ஒரு சிறிய சீசா இருந்தது. அந்தச் சீசாவின் மீது 'தேள்கடி மருந்து' என்று சீட்டு எழுதி ஒட்டியிருந்தது.

நிம்மிக்கு விளங்கியது. அவள் 'தேள்! தேள்!' என்று கத்தியதை அந்த முஸ்லிம் கிழவன் நம்பத் தயாராயில்லை. கதவைத் திறப்பதற்காகத் தந்திரம் செய்கிறாள் என்று புரிந்துகொண்டுவிட்டான். அவள் பாச்சா தன்னிடம் பலிக்காது என்பதைக் காட்டுவதற்காகவே, கீழே சென்று ஒரு சீசாவை எடுத்து வந்து, அதிலே சீட்டு ஒட்டிக் கிண்டல் செய்கிறான்!

உதட்டைக் கடித்துக் கொண்டு யோசித்தாள் நிம்மி. அவள் கையில் இன்னும் அந்த நீண்ட மரச்சட்டம் இருந்தது. அவனுடைய உடம்பு கண்ணுக்குத் தெரியவில்லையென்றாலும், நீட்டப்பட்டுள்ள கையைக் கொண்டு, அருகில்

எத்தனை தூரத்தில் அவன் நின்றிக்கக்கூடும் என்பதை மனத்துக்குள் கணக்கிட்டுக் கொண்டாள். சீசாவை நிம்மி வாங்கிக் கொள்கிறாளா இல்லையா என்பதில்தான் அவன் கவனம் இருக்கும். அப்படியானால் அவன் பார்வையும் உயரத்தில்தான் இருக்குமே தவிர, கீழ்ப்பக்கம் இருக்காது என்று ஊகித்துக் கொண்டாள்.

ஓசைப்படுத்தாமல் குனிந்து மண்டியிட்டுக்கொண்டாள். மரச் சட்டத்தை ஜன்னல் கம்பி வழியாக வெளியே நீட்டி, பலம் கொண்ட மட்டும் இழுத்து பக்கவாட்டாகச் சடெரென்று அடித்தாள் சுவரை நோக்கி.

''அம்மா!'' என்று வீரிட்டு அலறிக்கொண்டு அவன் துள்ளினான்.

தான் உத்தேசமாக வைத்த குறி தப்பவில்லை என்று மகிழ்ச்சியடைந்த நிம்மி அதே வினாடி ஆச்சரியத்துக்கும் உள்ளானாள்.

''அம்மா!'' என்று கூவிய குரல் ஒரு கிழவனுடையதல்ல.

வாலிபமானது. அது மட்டுமல்ல. எங்கேயோ நிம்மி கேட்டிருந்த மாதிரியும் இருந்தது.

காலில் பலமான அடி வாங்கிக்கொண்டு அவன் தரையில் உட்கார்ந்து விட்டபோதிலும் நிம்மிக்கு எதிரில் தன் முகத்தைக் காட்டவில்லை. அவனுடைய கால் மட்டும்தான் அவள் கண் பார்வையில் படுகிற மாதிரி நீட்டிக்கொண்டிருந்தது. ஏன் அவன் எழுந்து வந்து, அவளைத் திருப்பித் தாக்கவில்லை? அல்லது இரண்டு திட்டாவது திட்டக் கூடாதா?

அவனிடம் பயப்படாத மாதிரி சவடாலாகப் பேச வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள் நிம்மி. ''என்ன

பெரியவரே, செமையான அடியா?'' என்றாள் ஜன்னலில் முகத்தைப் பதித்து கொண்டு.

''இல்லை, இல்லை. சாதாரண அடிதான்,'' என்று அவன் பதில் கொடுத்தான். வாக்கியமாக அவன் சொன்னபோது அந்தக் குரலில் பரிபூரணமான இளமை நிம்மியைப் பின்னும் கவர்ந்தது.

''பின்னே எழுந்து இந்தப் பக்கம் வாருங்களேன்?'' என்று சீண்டினாள்.

''என்னிஷ்டம், படுத்திருக்கிறேன்,'' என்றவன் காலைச் சற்று மடக்கி எழுந்திருக்க முயன்றான். மறு வினாடியே, ''ஆ!'' என்று பெரும் வேதனையுடன் கூச்சலிட்டான்.

''ஏன் பெரியவரே, ஒரு சாதாரண அடிக்கா இந்தக் கூச்சல் போடுகிறாய்?'' என்றாள் நிம்மி. தான் முன்பின் தெரியாத இடத்தில் சிறைப்பட்டிருக்கிறோம் என்பதும் தனக்குக் காவலிருப்பவன் இந்தக் கிழவன் என்பதும் அவளுக்கு மறந்துவிட்டன. எதிராளியைச் சரியானபடி அடித்து வீழ்த்தியிருக்கிறோம் என்ற குழந்தைத்தனமான பெருமை அவள் மனத்தில் நிரம்பி விட்டது.

''நிம்மி,'' என்று தீனமாக அழைத்தான் அவன்.

''ஓ! என் பெயரெல்லாம் தெரிந்துதான் வைத்திருக் கிறாய்?'' என்றாள் அவள்.

''எனக்கு ஒரு உதவி செய்யேன்.'' பொத்தென்று ஒரு சாவி வளையம் வந்து வீழ்ந்தது அவள் காலடியில், ''என்னால் நகரக்கூட முடியவில்லை. நீ கதவைத் திறந்து கொண்டு வெளியே வா,'' என்றான் அவன்.

''எப்படித் திறப்பது?''

''இரட்டைக் கதவுதான் அது, கொஞ்சம் இழுத்துப் பார். நடுவிலே கைவிடுகிற அளவுக்கு இடைவெளி ஏற்படும்.

உள்ளேயிருந்தபடியே பூட்டில் சாவியை நுழைத்துத் திறந்து விடலாம்.''

''வேண்டாம். வேண்டாம். எனக்கு இந்த அறையே சௌகரியமாகத்தான் இருக்கிறது. நான் வெளியே வரவில்லை'' என்றாள் நிம்மி வேண்டுமென்றே.

''ஐயையோ! விளையாடாதே! ப்ளீஸ்!'' என்றான் அவன்.

நிம்மி அவன் சொல்படி கதவைத் திறந்தாள். மணிக்கட்டில் சிறிது வலித்ததைத் தவிர வேறு சிரமம் இருக்கவில்லை. கதவு திறந்துகொண்டதும், அறையைச் சுற்றிக்கொண்டு மறுபக்கம் வந்தாள். ஜன்னலுக்குச் சற்றுத் தள்ளித் தரையில் நீட்டி விழுந்து கிடப்பவரைப் பார்த்ததும் வியப்பினாலும் அதிர்ச்சியினாலும் அவள் இதயத்துடிப்பே ஒரு வினாடி நின்றுவிட்டது. வாலிபமான குரலா யிருக்கிறதே, எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கிறதே என்றெல்லாம் அவள் நினைத்துக் குழம்பினாளேயொழிய, இவனாக இருக்குமென்று தோன்றவேயில்லை.

''நீங்கள்...! நீங்களா?'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''ஆமாம், உங்கள் தோழி லீலாவதியின் அண்ணன் தான்'' என்றவன், ''அதோ அங்கே விழுந்து கிடக்கிற தாடியையும் மீசையையும் எடுத்துப் பத்திரமாக வையுங்கள். இரவல் வாங்கின சிநேகிதனிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும். இதை நம்பித்தான் தங்கள் நாடகக் கம்பெனியே நடக்கிறது என்று ரொம்ப அலட்டிக் கொண்டான்.''

எட்டத்தில் கிடந்த அந்தப் பொய்த் தாடியையும் மீசையையும் யந்திரம்போல் எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள் நிம்மி. வாயில் சொற்களே வரவில்லை. இவன் எதற்காக நம்மை இங்கே கொண்டுவந்து அடைத்து வைத்தான் என்ற திகைப்பு அவளைக் குடைந்து கொண்டிருந்தது.

''கொஞ்சம் கை கொடு'' என்று கரத்தை நீட்டினான் கல்யாணம். தயக்கத்துடன் நிம்மி அருகில் வந்ததும், ''ஆ! அம்மாடி!'' என்று முகிக்கொண்டே எழுந்து உட்கார்ந்தான். அப்போதும் கூட இடது காலை மடக்க முடியவில்லை.

எவனோ ஓர் அன்னியன் என்று எண்ணியிருந்தபோது நிம்மிக்கு வெறும் அச்சம் மட்டுமே இருந்தது. சினேகிதியின் அண்ணன் என்று கண்டுகொண்டதும் அவள் நெஞ்சில் ஆத்திரம் மூண்டது. டெலிபோனில் பேசியபோதும், நேரில் வீட்டுக்கு வந்தபோதும் வெறும் சண்டைக்காரனாக மட்டுமே தோன்றினான் இவன். இப்போதோ எந்தப் பழி பாவத்துக்கும் அஞ்சாத கயவனாகக் காட்சியளிக்கிறானே! முழங்காலின் பக்கமாகத் தடவி விட்டுக்கொண்டே, ''பலமான அடிதான் போட்டீர்கள்! இல்லை? என்ன நினைக்கிறீர்கள்?'' என்றான் கல்யாணம்.

பற்றிக்கொண்டு வந்தது நிம்மிக்கு. ''நியரஸ்ட் போலீஸ் ஸ்டேஷனில் உங்களை ஒப்படைக்க வேண்டு மென்று நினைக்கிறேன்!''

''அதைக் காட்டிலும் ஒரு டாக்டரிடம் ஒப்படைத்தால் மேலாயிருக்கும்'' என்றான் அவன்.

பெண்ணாகப் பிறந்துவிட்ட தோஷத்தாலோ என்னவோ நிம்மிக்குக் கடுகத்தனை அனுதாபமும் பிறந்தது அவன்பால். காலில் கடும் வேதனையுடன் இருக்கிறான் என்பதை அவனுடைய கலங்கிய கண்கள் துல்லியமாய் எடுத்துக் காட்டியதே காரணம்.

''இருங்கள் அப்படியானால்'' என்றவள், கீழே இறங்கிச் சென்றாள்.

கீழ்க்கட்டிலும் சரி, முன்புறத்திலும் சரி, யாரையும் காணவில்லை. ஓர் இரவு பூரா இந்த வீட்டில் தன்னந்தனியாக

இருந்திருக்கிறோம் என்று எண்ணிப் பார்த்தபோது அவள் மேனி சிலிர்த்து அடங்கியது.

தெருக் கதவைத் திறந்து பார்த்தாள். சிறிய தெருதான். அக்கம்பக்கத்தில் யாரையாவது உதவிக்குக் கூப்பிட்டு, இவனை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டுப் போய்விடலாம் என்று முதலில் நினைத்தாள். ஆனால் தான் யார், ஏன் இங்கே வந்தோம் என்றெல்லாம் விளக்க வேண்டியிருக்குமே?

அவள் குழப்பத்துக்கு முடிவு கட்டுகிற மாதிரி, ''டாக்ஸியா அம்மா பார்க்கிறீங்க?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு டாக்ஸி டிரைவர் வண்டியை நிறுத்தினார் வாசலில்.

''ஆமாம்... கொஞ்சம் மேலே வாருங்கள்...'' என்று கூப்பிட்டாள் நிம்மி. டிரைவர் அவளைப் பின்தொடர்ந்து மாடிக்கு வந்தார்.

சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த கல்யாணத்தைச் சுட்டிக்காட்டி, ''கைத்தாங்கலாய்ப் பிடித்து அழைத்துப் போங்கள்'' என்றாள் நிம்மி.

டாக்ஸி டிரைவர்களுக்கு இதெல்லாம் பழக்கமான நிகழ்ச்சிகள் போலும். எவ்வித வியப்பும் காட்டாமல், கல்யாணத்தின் கையைப் பிடித்துத் தன் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டான். இடுப்பை வளைத்துப் பிடித்துக் கொண்டான். கீழே இறக்கி அழைத்துச் சென்று, டாக்ஸியின் பின் ஸீட்டில் உட்கார்த்தி வைத்துவிட்டு, ''எங்கேம்மா போகணும்?'' என்றார்.

''ஜி.எச்.சுக்கு அழைத்துப் போ'' என்று கூறிக் கதவைச் சாத்தமுயன்றாள் நிம்மி.

''ப்ளீஸ், நிம்மி. என்னோடு ஆஸ்பத்திரி வரையில் வந்து, ஒரு கட்டுப்போட வைத்து, என்னை வீட்டிலே

கொண்டுபோய்த் தள்ளிவிட்டுப் போகக் கூடாதா?'' என்றான் கல்யாணம்.

''ஆஸ்பத்திரிக்கு வேண்டுமானால் வருகிறேன்'' என்று வேண்டா வெறுப்பாகக் கூறிவிட்டு, முன் ஸீட்டில் அமர்ந்து கொண்டாள் நிம்மி...'' ஜி.எச்.சுக்குப் போனதும் லீலாவதிக்குப் போன் செய்து வரவழைக்கிறேன்.''

''ஓ. அது போதும்,'' என்றான் கல்யாணம்.

டாக்ஸி ஓடிக்கொண்டிருந்தது. காலை நேரத்தின் வெளிச்சத்திலும் பரபரப்பிலும் தோய்த்தெடுக்கப்பட்ட தெருக்கள், சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தன. அம்மா என்னவெல்லாம் கவலைப்படுகிறாளோ! அப்பா நிச்சயமாய்ப் போலீசில் எழுதி வைத்திருப்பார்... இந்தக் கல்யாணம் டாக்டரைச் சந்திப்பதற்கு முன்னால் போலீஸ் இன்ஸ்பெக்டரைச் சந்திக்க நேர்ந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை...

''நெவில் ஷூட் என்பவரின் நாவல்களைப் படித்திருக்கிறீர்களா, நிம்மி? ஆஸ்திரேலிய எழுத்தாளர்,'' என்றான் கல்யாணம்.

அந்த எதிர்பாராத கேள்வியைக் கேட்டுத் திகைப்புற்ற வளாக அவனைத் திரும்பிப் பார்த்தாள் நிம்மி. ஆனால், ஏதும் பேசவில்லை.

''டவுன் லைக் ஆலிஸ் என்று ஒரு நாவல் எழுதியிருக்கிறார் அவர். மலேயாவில், யுத்த காலத்தில் நடந்ததாகக் கதை. இரண்டு ஜப்பானிய சோல்ஜர்களிடம் யுத்தக் கைதிகளாக இருக்கிறார்கள் சில வெள்ளைக்காரப் பெண்கள். சோல்ஜர்களுக்கு மேலதிகாரிகள் எவ்வித உதவியும் செய்யாமல் ஓடி விடுகிறார்கள். இந்தக் கைதிகளை என்ன செய்வதென்று தெரியாமல் ஊர் ஊராய் அலைகிறார்கள் அந்த ஜப்பானிய சோல்ஜர்கள். சாப்பாட்டுக்குக்கூட லாட்டரி.

நடுவே காய்ச்சலில் வேறே படுத்துவிடுகிறார்கள். கடைசியில் அந்தக் கைதிப் பெண்கள்தான் அந்தச் சோல்ஜர்களைக் காப்பாற்றி அழைத்துப் போகிறார்கள்...''

எதற்காக இந்தக் கதையைச் சொல்கிறான் என்று நிம்மிக்குப் புரியவில்லை.

''அந்தப் பெண்கள் இஷ்டப்பட்டிருந்தால் அந்த சோல்ஜர்களை சீ போ என்று ஓர் உதை - ஆ! அம்மா!'' என்று கால்களைப் பிடித்துக் கொண்டான் கல்யாணம். தன்னையும் மறந்து அடிபட்ட காலை உதறிவிட்டான் போலும். அல்லது அவளைச் சிரிக்க வைக்க வேண்டுமென்று அப்படிச் செய்தானோ என்னவோ. ஆனால் நிம்மி சிரிக்கவில்லை.

''அந்தக் கைதிகள் நிலைமையில் நீயும், சோல்ஜர்கள் நிலையில் நானும் இருக்கிறோம்.'' என்றான் கல்யாணம்.

ஜெனரல் ஆஸ்பத்திரியின் காஷுவாலிடி வார்டின் வாசலில் டாக்ஸி நின்றது. கல்யாணம் பணம் கொடுத்தான். மருத்துவமனை சேவகர்களில் ஒருவன் கல்யாணத்தைப் பிடித்துக் கொள்ள, கண்ணில் பட்ட ஒரு டாக்டரிடம் அவனை ஒப்படைத்தாள் நிம்மி. ''எதனால் அடி?'' என்று அவர் கேட்டபோது அவளால் சரியான பதில் சொல்ல முடியவில்லை. ஏதோ இரும்புக் கட்டை விழுந்து விட்டது என்று சொல்லி வைத்தாள்.

டாக்ஸிக்காரர் கொடுத்த பாக்கிச் சில்லறை அவள் கையில் இருந்தது. டெலிபோன் எங்கே இருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு அங்கே விரைந்தாள்.

லீலாவதியின் வீட்டுக்குப் போன் செய்தபோது, மணி அடித்துக் கொண்டேயிருந்தது. யாரும் எடுக்கவில்லை. இந்தக் காலை வேளையில் வீட்டிடில் எவரும் இல்லாமலா போனார்கள்? டெலிபோன்தான் பழுதாகியிருக்கும்... அப்பாவுக்குப் போன் பண்ணலாம் என்று டயலில் விரலை

நுழைத்தாள். பிறகு வேண்டாமென்று தோன்றியது. இந்தக் கல்யாணத்தைப்பற்றி எவ்வித முடிவுக்கு வரவில்லை இன்னும், இப்போது அப்பாவைக் கூப்பிட்டால் இவனைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கும். எப்படியும் லீலாவதி கிடைக்காததால் அவனைக் கொண்டு போய் வீட்டில் சேர்ப்பது அவள் பொறுப்பாகி விட்டது. சேர்த்துவிட்டு அப்படியே தன் வீட்டுக்குத் திரும்பிக்கொள்ளலாம் என்று முடிவு செய்தவளாக காஷுவாலிடி வார்டுக்குத் திரும்பினாள்.

காலில் வெள்ளை வெளேரென்ற கட்டுடன், உபாதையினால் கண்ணை மூடியவனாகக் கல்யாணம் பெஞ்சில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். அவனுக்குச் சிகிச்சையளித்த டாக்டர், நிம்மியைக் கண்டதும், ''வெறுமேதான் கட்டுப் போட்டிருக்கிறோம். எக்ஸ்ரே எடுத்து விடுங்கள். நாளைக்கு அதைப்பார்த்துப் பிளாஸ்டர் கட்டுப் போடலாம். எலும்பு முறிந்திருக்குமென்று தோன்றுகிறது'' என்றார்.

என்ன சொல்வதென்றே தெரியவில்லை நிம்மிக்கு. என்னதான் கயவனானாலும் தான் அவ்வளவு பலமாக அடித்திருக்கக்கூடாது என்று உள்ளம் குறுகுறுத்தது.

கல்யாணம் கண்ணைத் திறந்து, ஒரு சோகமான புன்னகையுடன், ''ஒன்றும் பயப்பட வேண்டாமென்று என் கஸின் ஸிஸ்டருக்குச் சொல்லுங்கள் டாக்டர். பாவம், பேயறைந்த மாதிரி இருக்கிறாள் பாருங்கள்'' என்றான்.

''நோ, நோ! நதிங் டூ வொர்ரி'' என்றார் டாக்டர்.

அவர் கொடுத்த தூக்க மாத்திரைகளைப் பெற்றுக் கொண்டு, சீட்டை வாங்கிக்கொண்டு, எக்ஸ்ரே பிரிவுக்குச் சென்று படம் எடுக்கிற வரையில் கல்யாணத்துடன் கூடவே இருக்க நேரிட்டது நிம்மிக்கு. தன்னையும் மீறி அவன்பால் அனுதாபமோ பரிவோ ஏற்படும் போதெல்லாம், 'ரௌடி

மாதிரி என்னை ராத்திரியோடு ராத்திரி தூக்கிக் கொண்டு வந்த ராஸ்கல் இவன்! என்ன கெட்ட எண்ணம் வைத்திருந்தானோ பாவி!' என்று தனக்குள் தானே திட்டிக் கொண்டு, அவன் மீதுள்ள வெறுப்பு நெருப்பு அணைந்துவிடாமல் பாதுகாத்துக் கொண்டாள்.

நேரமாக ஆக, கல்யாணம் வாய்திறந்து பேசுவது அரிதாகிவிட்டது. அடிப்பட்ட இடத்தை இழுத்துப் பிடித்துக் கட்டுப் போட்டிருந்தார்கள். எக்ஸ்ரே எடுக்கப்படும் போது வேறே அந்த இடத்தை அசைக்க வேண்டியிருந்தது. எல்லா மாய்ச் சேர்ந்து, பிராணன் போகிற மாதிரி அவனுக்கு வலித்தது. நிம்மியின் எதிரில் உல்லாசமாயும் வேடிக்கையா யும் இருக்க அவன் செய்த முயற்சியெல்லாம் தோற்றன. வலி தாங்காமல் முனகிக் கொண்டேயிருந்தான்.

மீண்டும் ஒரு டாக்ஸி பிடித்து வந்து, லீலாவதியின் வீட்டிற்கு அவனை அழைத்துச் சென்றாள். வாசலில் வண்டி நின்றதும் இறங்கிக் கொள்ளாமல், டிரைவரை ஹாரன் அடிக்கும்படி கூறினாள். லீலாவதி ஹாரன் சத்தம் கேட்டு வாசலுக்கு வருவாளென்றும், வந்ததும் அவனிடம் அவள் அண்ணனை ஒப்படைத்துவிட்டு வேறு ஏதும் பேசாமல் அதே டாக்ஸியில் தன் வீட்டுக்கு போய்விடுவதென்றும் எண்ணி யிருந்தாள் அவள். அண்ணன் செய்த காரியத்தை அவன் வாயிலாகவே லீலாவதி தெரிந்து கொள்ளட்டும்....

ஆனால் லீலாவதி வாசலுக்கு வந்ததும், அண்ணனின் நிலைமையைக் கண்டதும், நிம்மியைப் பார்த்ததும்...

"ஐயோ! என்னண்ணா நேர்ந்தது! நிம்மியின் விஷயம் எக்கேடோ கெடட்டும். நீ அவர்கள் வழிக்குப் போகாதே என்று எவ்வளவு சொன்னேன்! கேட்காமல் போனாயே! இப்படிப் பண்ணிவிட்டார்களே பாவிகள்!" என்று புலம்பத் தொடங்கினாள்.

''உஷ்! ஒன்றுமில்லை'' என்று எச்சரித்துவிட்டு, நங்கையின் தோளைப்பிடித்துக் கொண்டு படுக்கையறைக்கு நொண்டி நொண்டிச் சென்றான் கல்யாணம்.

இறங்க வேண்டாமென்று எண்ணியிருந்த நிம்மியும் இறங்கிக் கொண்டாள். எல்லாம் கிடக்க, தன்னையே ஏதோ பழி சொல்கிறாளோ இந்த லீலாவதி என்று அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அண்ணனை வசதியாகப் படுக்கையில் கிடத்திவிட்டு, வெளியே வந்தாள் லீலாவதி. ''என்ன நடந்தது? உன் அப்பா விடம் சிக்கிக் கொண்டானா? ஆள் வைத்து அடித்தார்களா?'' என்று படபடப்பாக வினவினாள் நிம்மியிடம்.

''லீலா! நீ என்ன சொல்கிறாய்?'' என்ற நிம்மி, காலையிலிருந்து நடந்ததையெல்லாம் விவரித்தாள்.

''உன் அம்மாவின் வார்த்தையைக் கேட்டதால்தான் இவ்வளவும்!'' என்றாள் லீலாவதி. ''எப்படியாவது உன்னை மாஜிக் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமல் தடுக்க வேண்டுமென்று உன் அம்மா கேட்டுக் கொண்டார்களாம். அதன்பேரில் கல்கத்தாவில் என் திருமணத்துக்காக நிச்சயதார்த்தம் ஏற்பாடாகியிருந்ததைக்கூட ரத்து செய்து விட்டு இங்கே தங்கினான் என் அண்ணா. அவனைப் போய்க் காலை முறித்து விட்டாய் நீ.''

பிரமை பிடித்த மாதிரி சிலையாக உட்கார்ந்திருந்தாள் நிம்மி. இறுதியில் ஒரு வழியாய்ச் சுதாரித்துக் கொண்டு, ''உன் அண்ணன் நேரடியாக என்னிடம் வாதாடியிருக்கலாமே?'' என்றாள்.

''உன் அம்மாவின் கெஞ்சலுக்கே கட்டுப்படாத நீ எவனோ ஒரு கல்யாணத்துக்கா மசியப் போகிறாய்? அத்தோடு, காலேஜ் பூரா நீ பெருமையாய்ச் சொல்லி வைத்திருந்தாயே, இந்தப் பர்ஃபாமென்ஸைப் பற்றி! ஆகவே

என்ன சொன்னாலும் கேட்க மாட்டாய் என்று நானே சொன்னேன்...''

''அதற்காக இப்படித்தான் என்னைக் 'கிட்' நாப் பண்ணுவதா?''

''அவனுக்குத் தோன்றிய வழி அது. அவனுடைய சிநேகிதனின் வீடாம் அது. காலியாக இருந்தது. ஒரு முரடன் மாதிரி நடித்து, 'இனிமேல் நீ மாஜிக் நிகழ்ச்சிக்கு வந்தாயோ உன் உயிருக்கே ஆபத்து' என்று கத்தி முனையில் உன்னை மிரட்டியனுப்பப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந் தான். அதற்குள் எல்லாம் கோளாறாகி விட்டது...''

கல்யாணத்தின் முனகல் பெரிதாக கேட்கத் தொடங்கியது. ''ஐயோ! அம்மா!'' என்று அவன் கத்திக் கொண்டிருந்தான்.

விரைந்து உள்ளே சென்றாள் நிம்மி. இப்போது அவனைப் பார்க்கையில் பழைய வெறுப்பு, கோபம் எல்லாம் பறந்து விட்டன. அம்மாவின் ஒரு பேச்சுக்காக இவ்வளவு ஆபத்துக்களை மேற்கொண்டவன் என்பதோடு, தங்கையின் திருமண ஏற்பாட்டைக்கூடத் தள்ளிப் போட்டவன் என்று அறிந்ததால் அவனிடம் ஒரு தனியான பற்றும் மதிப்பும் பிறந்தன அவள் உள்ளத்தில்.

''தூக்க மாத்திரை கொடுத்திருந்தாரே, சாப்பிட்டீர்களா?'' என்று கேட்டபோது அவள் குரலில் பரிவு நிறைந்திருந்தது.

''எப்படி வரும் தூக்கம்? வலி உயிர் போகிறதே!'' என்று முனகினான் கல்யாணம்.

உதட்டைக் கடித்தபடி ஒரு கணம் அவனையே பார்த்தாள் நிம்மி. பளிச்சென்று ஓர் எண்ணம் உதித்தது. முகமலர்ச்சியுடன் ''ஹிப்னாடிஸமெல்லாம் பைத்தியக் காரத்தனம் என்ற கருத்தைத் தயவு பண்ணி மாற்றிக் கொள்கிறீர்களா?'' என்றாள், அவனருகே முக்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தவாறு.

'இப்போதென்ன வந்தது அதற்கு?' என்று கேட்கிற பாவனையில் கல்யாணத்தின் புருவங்கள் உயர்ந்தன.

''எதிர்ப்பு மனப்பான்மையை விட்டுவிட்டு, எனக்கு இணக்கமாக, என்னோடு ஒத்துழைப்பதாக உறுதி கூறுங்கள். என்னிடம் நம்பிக்கை வைத்து, ஓர் மாபெரும் சக்தியின் முன்னே நிற்கிறோமென்கிற பணிவு உணர்வை உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்...''

''ஏற்படுத்திக் கொண்டால்?''

''என் மனோவசிய சக்தியின் மூலம் உங்கள் வலியை மறக்க வைக்கிறேன். மூன்றே நிமிடத்தில் உங்கள் காலில் துளி வலியும் இல்லாமல் செய்து, அமைதியாகத் தூங்கும்படி செய்கிறேன். சம்மதமா?''

கல்யாணத்தின் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தாள் நிம்மி.

## 12

Add the use of passes; watch the tone of your voice; space out the syllables you utter. be preisstently courteous and encouraging. In that way you will cure a great many patient...

- Thomas F.Adkin

கல்யாணம் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று அறியத் துடித்தவளாகப் படுக்கைக்கு அருகிலேயே உட்கார்ந்திருந்தாள் நிம்மி.

கண்ணை இமைத்தால்கூட உடம்பின் எலும்புகளெல்லாம் நொறுங்குவது போன்ற வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தான் கல்யாணம்.

அவர்கள் வீட்டில் கல்யாணத்துக்கும் லீலாவதிக்கும் துணையாக ஒரு சமையற்காரன் இருக்கிறாரென்று இப்போது தான் நிம்மிக்குத் தெரிந்தது. கல்யாணத்தின் வேதனைக் குரலைக் கேட்டு அவர் உள்ளே தலை நீட்டினார். ''ஏம்மா, ஆஸ்பத்திரியிலே உங்கள் அண்ணனைச் சரியாய்க் கவனித்தார்களோ, இல்லையோ? இப்படித் துடிக்கிறாரே பாவம்? நீங்கள் வேண்டுமானால் நமக்குத் தெரிந்த டாக்டர் யாரையாவது கூப்பிட்டு இவரைப் பார்க்கச் சொல்லுங்களேன்?'' என்றார்.

''டாக்டர் கோவிந்தராஜனைக் கூப்பிடுகிறேன்.'' என்று போனை நெருங்கி லீலாவதி தயக்கத்துடன் நிம்மியைப் பார்த்தாள்.

நிம்மி சிரித்தாள். ''என்னை ஏன் பார்க்கிறாய்?''

''நீ ஒன்றும் தப்பாய் நினைத்துக் கொள்ள மாட்டாயே? உன் ஹிப்னாடிஸ வைத்தியத்தைக் காட்டிலும் அசல் வைத்தியம் செய்யலாமே என்று தோன்றுகிறது. அதனால் எங்கள் டாக்டரை...''

''ஓ! தாராளமாய்க் கூப்பிடு'' என்று புன்னகையுடன் அனுமதி கொடுத்தாள் நிம்மி. ''ஆனால் ஒரு விஷயம். காலில் எப்படிப்பட்ட ஃப்ராக்சர் ஏற்பட்டிருக்கிறது என்பதை எக்ஸ்ரேயில் பார்க்க வேண்டும் என்றுதான் எந்த டாக்டரும் சொல்வார். அது எடுத்தாகி விட்டது. நாளைக்கு ரிஸல்ட் தெரியும். அதுவரை ஊசியோ மாத்திரையோ கொடுத்துத் தூங்க வைக்கப்போகிறார்கள். அவ்வளவுதான்.''

தோழியிடம் பேசும் போது அவள் கழுத்தைச் சாய்த்துக் கொள்ளும் விதம், கண் இமைகள் மூடித் திறக்கின்ற ஒயில், சிவந்த உதடுகள் குவிந்து தெரிகின்ற கவர்ச்சி, இவை கூட இன்பக் கதைகள் பேசுமோ என்று எண்ண வைக்கும்படியாகக்

கைகளும் விரல்களும் ஆடி அசைகின்ற அழகு இவ்வளவை யும் கவனித்த வண்ணமாகவே இருந்தான் கல்யாணம்.

தங்கை டெலிபோன் டயலில் ஆட்காட்டி விரலை வைத்த போது ''வேண்டாம் லீலா'' என்று தடுத்தான். ''நிம்மி சொல்கிற மாதிரி இன்னொரு டாக்டர் வந்து என்ன செய்யப் போகிறார்? நாளை வரையில் நான் வலி தெரியாமல் தூங்கினால் போதும். அதை உன் தோழியால் செய்ய முடியுமென்று நீ காரண்டி கொடுக்கிறாயா?''

''நான் அவள் திறமைகளைக் கண்ணால் பார்த்தவள். நீதான் சுத்த ஸ்கெப்டிக். சண்டை போடுவதற்காகவே இவள் வீட்டுக்குப் போனவன். அப்படியொரு எதிர்ப்பு மனப்பான்மை வைத்திருக்கிற உன்னை நிம்மியினால் என்ன பண்ண முடியும்?'' நீயும் ஒத்துழைக்க வேண்டும்'' என்று குறை கூறும் குரலில் பேசினாள் லீலாவதி.

''நான் நிம்மியைப் பார்க்கப் போன போது, அவள் அம்மாவிடம் தன் பயிற்சியை நடத்திக் கொண்டுதான் இருந்தாள். அதை முழுக்கக் கவனித்திருந்தால் ஒரு வேளை நான் மனம் மாறியிருப்பேனோ என்னவோ. அதற்குள் அவள் அப்பா குறுக்கிட்டுத் தடுத்து விட்டார்...''

அம்மாவைப் பற்றிக் கல்யாணம் பேச்செடுத்ததும் திடுக்கிட்டவளாகத் தன் கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள் நிம்மி. மணி ஒன்பதே கால் ஆகிக்கொண் டிருந்தது. இன்நேரம் வீடு என்ன அமளி துமளிப்பட்டுக் கொண்டிருக்கிறதோ?

வீட்டுக்குத் திரும்பி விட வேண்டும் என்ற பதைப்பு ஏற்பட்ட அதே தருணத்தில் இங்கே இவர்களோடு பேசிக் கொண்டிருப்பதால் கல்யாணம் தனது கால் வலியைச் சற்று மறந்து கொண்டிருக்கிறான் என்பதையும் கண்டாள் நிம்மி. அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அவனை

மனோவசியத்துக்கு ஆளாக்கி, ஒய்வாக நித்திரை செய்யும்படி பண்ணவேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டாள்.

''காலை இப்படி வைத்துக் கொள்ளுங்கள்'' என்று நிம்மி அவன் காலுக்குத் தோதாக ஒரு தலையணையை வைத்தாள்.

''ஒத்துழைக்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?'' கண்களை மூடிய வண்ணமே கேட்டான் கல்யாணம்.

''எதுவுமே செய்ய வேண்டாம். நான் சொல்கிற சொற்களுக்கு மறுப்பு எதுவும் வாயாலும் சொல்லாதீர்கள். மனத்துக்குள்ளும் நினைக்காதீர்கள்.''

''கஷ்டமான காரியம்தான். இருந்தாலும் சரி'' என்று கல்யாணம் பதில் கொடுத்ததும் நிம்மியைக் காட்டிலும் லீலாவதிதான் அதிக ஆறுதல் அடைந்தாள்.

அந்த அறையிலிருந்த இரண்டொரு அலமாரிகளைத் திறந்து எதையோ தேடினாள் நிம்மி.

''என்ன வேண்டும் நிம்மி?'' என்று விசாரித்தாள் லீலாவதி.

''உங்கள் வீட்டில் சிறுவர்கள் யாரும் கிடையாதே, எங்கே கிடைக்கப் போகிறது என்று நினைத்தேன். கிடைத்து விட்டது'' என்று கையிலிருந்ததைத் தோழிக்குக் காட்டினாள் நிம்மி.

படுக்கையிலிருந்தபடியே கல்யாணமும் கவனித்தான். அண்ணன் தங்கை இருவருக்குமே வேடிக்கையாக இருந்தது.

அது ஒரு கோலிக் குண்டு - கண்ணாடிக் கோலி.

''பக்கத்து வீட்டுப் பையன் ஒரு நாள் விளையாடிக் கொண்டிருந்தான் இங்கே. போட்டுவிட்டுப் போயிருக் கிறான்'' என்று லீலாவதி சொல்லிக் கொண்டிருந்தது

நிம்மியின் காதில் விழவில்லை. அவள் முகத்தில் ஒரு கவலை படர்ந்திருந்தது. உள்ளத்தில் ஓர் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

கல்யாணத்தின் விலாப் பக்கத்தில் நெருங்கினாற்போல் முக்காலியைப் போட்டுக் கொண்டு அமர்ந்தவள், ''இந்தக் கோலியைப் பார்த்துக் கொண்டிருங்கள் சில வினாடிகளுக்கு'' என்று கூறி விட்டு, அவனுடைய கண்ணுக்கு நேரே இடது கையால் கோலியை உயர்த்திப் பிடித்துக் கொண்டாள்.

அவனுடைய கரத்தை, வைத்தியர் நாடி பார்ப்பது போல் தன் வலது கையினால் பிடித்துக்கொண்டாள். ஆனால் மேலோடு அல்ல. இறுக்கமாக, தன் இருதயத்தில் பொங்குகின்ற சக்தியை அந்தக் கை மூலமாக அவனுக்குள் ஏற்றுகின்றாற்போன்ற உணர்வு அவளிடம் உண்டாயிற்று.

புரொபசரிடம் பயிற்சி பெற்ற போதும், தோழிகளிடமும் வேலையாட்களிடமும் பரிசோதனைகள் செய்தபோதும் அவள் இதுபோலக் கையைப் பற்றிக் கொண்டதுண்டு. ஆனால் இம்முறை. வெறும் கையைக் கை தொடுகின்ற மாதிரியான உணர்ச்சி ஏற்படவில்லை. தன் சக்தியை அவனுக்குக் கொடுக்கின்றாற் போன்ற மனோபாவத்தைக் காட்டிலும் வித்தியாசமான, இன்ப வேதனையான இன்னோர் உணர்வையும் அவள் அனுபவித்தாள். தன் வயது - அவன் வயது. தன் உடம்பு - அவன் உடம்பு, தன் மனம் - அவன் மனம், தன் அழகு - அவன் அழகு - இப்படி இரண்டிரண்டான ஓர் ஒப்புமை இத்தனை நாளுமில்லாமல் இன்று ஏற்பட்டது. இந்தச் சமயத்தில், தன் மனோவசியத்தால் அவனை வலி மறக்கும்படி செய்ய வேண்டிய வேளையில், அப்படி ஏற்படக்கூடாது என்று அவளுக்குள் ஒரு குரல் எடுத்துச் சொல்லியது. ஆனால் அந்தக் குரலுக்குச் சிரம் தாழ்த்தக்கூடிய சக்தியை அவள் இழந்து கொண்டிருந்தாள்.

''இந்தக் கோலிக் குண்டையே பார்த்துக் கொண் டிருங்கள். நன்றாகப் பாருங்கள். தெளிவாகப் பாருங்கள். அமைதியாக -'' நிம்மியினால் பேச முடியவில்லை. மனப்பூர்வமாக அவள் பேச முயன்றாள். சரளமாகப் பேச முயன்றாள். எதுவும் இயலவில்லைபோல் தோன்றியது. தன் மனோசக்திக்கும் மீறின சக்தியொன்று இருக்கிறதா என்ன? அவளுக்கே தெரியவில்லை. சிந்தை குழம்பியது. எந்த நிமிடத்தில் ஒருமுனைப்பட்ட சிந்தனை இருக்க வேண்டியது அத்தியாவசியமோ அந்தச் சமயம் பார்த்து அது நைலான் போல வழுக்கி வழுக்கி ஓடியது.

''லீலா, ஒரு அகலமான தாம்பாளம் இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''எதற்கு நிம்மி?'' திகைத்தாள் சினேகிதி.

''கொண்டு வாயேன்.''

சமையலறையிலிருந்து, அகன்ற தாமிரத் தாம்பாள மொன்றைக் கொண்டு வந்தாள் லீலாவதி.

தரையில் அதை வைத்தாள் நிம்மி. வழிய வழியத் தண்ணீர் ஊற்றினாள்.

''என்ன செய்கிறாய்?'' என்ற லீலாவதியின் கேள்விக்கும் திகைப்புக்கும் நிம்மி பதில் கூறவில்லை. ஏகாக்கிரமான சித்தத்தைத் தனக்கு வரவழைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரே எண்ணம்தான் அவள் மனமெங்கும் வியாபித்திருந்தது. தண்ணீர் நிறைந்த தாம்பாளத்தின் அருகே மண்டியிட்டு அமர்ந்தாள். ஓரிரு நிமிடங்கள் பிடித்தன - ஊற்றப்பட்ட தண்ணீர் அடங்கி, அதன் சிற்றலைகள் சிறிது சிறிதாக ஒடுங்குவதற்கு. தாம்பாளத்தின் அடிப்பகுதியிலுள்ள ஒவ்வொரு சிறிய வளைவும் மேடுபள்ளமும். தெரிகிற மாதிரி சலனமற்று நின்றது தண்ணீர்.

குனிந்து அதை நோக்கினாள் நிம்மி. கண்ணை இமைக்காமல் தன் முகத்தைத் தானே பார்த்துக் கொண்டாள். அவள் கண்ணும் ஒன்றையொன்று விழுங்கப்போவது போல் கிட்டத்தில் கிட்டத்தில் நெருங்கிக் கொண்டிருந்தன. தண்ணீரில் தெரியும் முகம் கொஞ்சம் கொஞ்சம் மேலெழும்பி வருவது போலிருந்தது அவளுக்கு. 'நான் வெற்றியைத் தேடுகிறேன். வெற்றி எனக்குக் கிட்டியதும், அதைக்கொண்டு எல்லார்க்கும் எப்போதும் நல்லது செய்வேன். அதற்காகவே வெற்றி வேண்டும். வெற்றி வருகிறது. சக்தி வருகிறது. தெய்வத்தைத் தவிர வேறெதற்கும் நான் அடிபணிய மாட்டேன். நான் நினைத்தது கை கூடுகிறது. என் இதயம் வலுப்பெற்று நிற்கிறது. எனக்கு வெற்றி, வெற்றி, வெற்றி, தவிர வேறில்லை...'' மனத்துக்குள் அவள் ஜபித்துக் கொண்டேயிருந்தாள். ஜபிக்க ஜபிக்க, அந்தத் தண்ணீர்ப்பிரதி பிம்பம் அவளை நோக்கி எழும்பி எழும்பி வந்து, இறுதியில் அவள் முகத்தோடு முகமாக ஒன்றிவிட்டாற்போல் ஆயிற்று. கண்கள், நாசி, வாய், செவிகள் - எதுவும் பழையன அல்ல, புத்தம் புதியவை என்று ஒரு கருத்து அவளுக்கு ஏற்பட்டது.

அந்தக் கருத்தைப் பலமாக பற்றிக்கொண்டவளாக, தாம்பாளத்தை விட்டு எழுந்து கொண்டாள். இடுப்பில் குழந்தையைச் சுமந்து கொண்டிருக்கும் தாய் ஒரு பெரும் கூட்டத்தின் நடுவே செல்ல நேரிட்டால் எப்படி சர்வ ஜாக்கிரதையாக, தன் செல்வத்தை நழுவவிட்டு விடக் கூடாதென்ற உறுதியுடன், அணைத்துப் பிடித்துக் கொண்டு செல்வாளோ. அதேபோல நிம்மி, தனக்குப் புதிதாக கிடைத்திருக்கும் பலத்தைத் துளியும் சிதற விட்டுவிடக் கூடாது என்று எண்ணியவளாக, வேறெதிலும் விழியையோ கவனத்தையோ திருப்பாமல், கல்யாணத்தின் கட்டிலை அடைந்தாள். இப்போது முக்காலியில் உட்காரவும் இல்லை. கோலிக் குண்டைக் கல்யாணத்தின் கண்ணெதிரே

பிடிக்கவுமில்லை. அவன் கையைப் பற்றவுமில்லை. செயற்கையான உதவி எதுவும் தனக்குத் தேவையில்லை என்று அவள் தீர்மானித்துவிட்டாள் போலும்.

தன் அழகிய விரல்களை அகல விரித்தாள். அவன் முகத்துக்கு மிகச் சமீபமாக, அந்த முகத்தைப் பொத்தப் போகிற மாதிரி வைத்துக்கொண்டாள்.

கல்யாணத்தின் கண்களை உற்றுப் பார்த்தபடி தனக்குத் தானே அவள் சொல்லிக் கொண்டாள். 'உங்களைக் குணப்படுத்தவே நான் விரும்புகிறேன். உங்களுக்கு வலி தெரியாதிருக்க வேண்டும். நீங்கள் நன்றாய்த் தூங்க வேண்டும். இதைத்தான் செய்ய ஆசைப்படுகிறேன். உங்களிடம் எனக்குப் பிரியமேற்படுகிறது. நீங்கள் கஷ்டப்படாமல் சௌக்கியமாய் இருக்க வேண்டுமென்று என் மனம் விரும்புகிறது. நீங்கள் வலியும் வேதனையும் இல்லாமல், ஆரோக்கியமான வாலிபராக, நன்றாக ஓடி ஆடி நடமாடக் கூடியவராக இருக்க வேண்டும். அந்தக் காட்சியைக் காண நான் விரும்புகிறேன். அதில்தான் எனக்குச் சந்தோஷம்...''

இந்த வாக்கியங்களை அவள் வாய்விட்டுச் சொல்ல வில்லை. ஜபம் போல மனத்துக்குள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டாள். அப்படிச் சொல்லும் போது, அகத்தின் எண்ணம் முகத்தில் பிரதிபலிக்குமென்று ஹிப்னாடிஸப் புத்தகங்களில் படித்திருப்பது அவளுக்கு நினைவுக்கு வந்தது. மனோவசியத்தின் மூலம் நோயைக் குணப்படுத்துவதற்கு முன்னால், ஹிப்னாடிஸக்காரருக்கும் நோயாளிக்கும் இடையே நல்லுறவு திகழ வேண்டும் என்று அவள் வாசித்திருந்தாள். அவளிடம் கல்யாணத்துக்கு ஓர் ஈடுபாடு, ஒரு பிரியமான நினைவு ஏற்பட வேண்டும் என்பதற்காகவே, தான் முதலில் அவனைப்பற்றிச் சந்தோஷ மாகவும் பரிவாகவும் கனிவாகவும் இனிமையாகவும் எண்ணத் தொடங்கினாள். அந்த இனிமை அவளுடைய

வதனமெங்கும் பரவி, கல்யாணத்தின் முகத்துக்குத் தொற்றிக் கொண்டது. அதன் பயனாக, ஒரு மெல்லிய புன்னகை அவன் உதடுகளில் ஓடியது.

அதன் பின்னரே நிம்மி வாய் விட்டுப் பேசலானாள்.

''இந்த நிமிடம் முதல் உங்கள் உடம்பு நான் சொன்னபடியெல்லாம் கேட்கப் போகிறது. கண், காது, மூக்கு, நாக்கு முதலிய புலன்கள்கூட நான் சொல்கிறபடி நடந்து கொள்ளப்போகின்றன. இதோ, இப்போது, கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் உடம்பு நான் சொன்னபடி கேட்கிறது. அது தானாக எதுவும் செய்யாது. நான் செய்யச் சொன்னதை மட்டுமே செய்யும்... அப்படித்தானே?''

கல்யாணம் கண்களை மூடிக்கொண்டு, ''ஆமாம்'' என்றான்.

''உங்கள் உடம்பில் ஒரு பாதி மரத்துப் போகிறது. ஒரு பாதி சுரணையுடன் இருக்கப் போகிறது. இதோ, இந்த இடது பக்கம் மரத்துக் கொண்டிருக்கிறது. மரத்துக் கொண்டிருக் கிறது. அதிலே உணர்வே இல்லை. இல்லை... இடது கையைத் தூக்க உங்களால் முடியாது. தூக்கிப் பாருங்கள். முடியாது. ஊகூம். முடியாது...''

கல்யாணம் இடது கையைத் தூக்க முயலுவது வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால் முடியவில்லை என்பதும் புலப்பட்டது.

''உங்கள் உடம்பின் வலது பக்கம் நல்ல சுரணையுடன் இருக்கிறது. தூக்குங்கள். சுலபமாய்த் தூக்க முடிகிறது. ஆமாம். இதோ தூக்குகிறீர்கள்.''

கல்யாணம் தன் வலது கையை எவ்விதப் பிரயாசையும் இன்றித் தூக்கி விட்டு இறக்கினான்.

''இடது கண்ணும் மரத்ததுதான். அதற்கு ஒரு சக்தியும் கிடையாது. உங்கள் இடது கண்ணுக்கு நிற வித்தியாசம்

தெரியாது. உங்கள் இடது கண்ணால் பச்சை மஞ்சள் நீலம் என்றெல்லாம் கண்டுபிடிக்க முடியாது. உங்கள் இடது கண் அப்படி ஆகிவிட்டது... வலது கண்ணை மூடிக்கொண்டு இடது கண்ணை மட்டும் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் கண்ணுக்கு எந்த வேற்றுமையும் தெரியாது...'' சொல்லிக் கொண்டே தன் புடவைத் தலைப்பை அவன் கண்முன்னே காட்டினாள்.

அது கிளிப் பச்சை நிறத்தில் இருந்தது.

''இது என்ன நிறம்?'' என்றாள் கல்யாணத்திடம்.

''ஏன், சாதாரண வெள்ளை நிறம்தான்'' என்றான், வலது கண்ணை மூடிக்கொண்டிருந்த கல்யாணம்.

ஜாக்கெட்டிலிருந்து பேனாவை வெளியிலெடுத்து, ''இது என்ன நிறம்?'' என்று கேட்டாள்.

''இதுவும் வெள்ளை நிறம்தான்'' என்று பதில் வந்தது கல்யாணத்திடமிருந்து. ஆனால் நல்ல கறுப்பு நிறம் அந்தப் பேனா.

அவனுடைய தலைமாட்டில் சிவப்பு அட்டை போட்ட புத்தகமொன்று இருந்தது. ''வலது' கண்ணைத் திறந்து கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு அந்தப் புத்தகத்தை எடுத்துக் காட்டினாள், ''இது என்ன நிறம்?''

''சிவப்பு'' என்று தவறாமல் சொன்னான் கல்யாணம்.

இவ்வளவும் நடைபெறும்போது, சினேகிதியின் பின்புறம் நின்று கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்தாள் லீலாவதி. தான் காண்பதெல்லாம் கனவா அல்லது உண்மையாகவே நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா என்று அவளால் கண்டுகொள்ள முடியவில்லை. தன் சகோதரனின் வேதனையைக் குறைத்து அமைதியாய் உறங்கும்படி செய்யத் தன் தோழியினால் முடியும் என்ற நம்பிக்கை மட்டும் வளர்ந்து கொண்டேயிருந்தது.

அதே சமயம், மனோவசியத்துக்கு ஆட்பட்டிருப்பவன் தன் அண்ணன் மட்டுமல்ல என்பதையும் லீலாவதி அறிந்தாள். அவன் எப்படி முற்ற முழுக்க வேறோர் உலகத்தில் இருக்கிறானோ அதே போலவே, நிம்மியும் அவனுடைய உலகத்தில்தான் இருக்கிறாள் என்பது புலப்பட்டது. இந்த அறையில், மற்ற மனிதர்கள் இருப்பதையோ, வேறு பொருள்கள் அசைவதையோ, காற்றில் காலண்டர் தாள்கள் படபடப்பதையோ கடியாரம் டிக்டிக்கென ஒலிப்பதையோ, எப்படிக் கல்யாணம் கவனியாமலே இருக்கிறானோ. அதே போல் நிம்மியும், இன்னோரிடத்தில், இன்னொரு சூழ்நிலையில் வசிக்கிறாள் என்பது தெள்ளப் புலப்பட்டது. மனோவசியம் செய்கிற நபரும் மனோவசியம் செய்யப் படுகிற நபரும் மனமொன்றிச் சேர்ந்து, ஒரு மாயமான உலகத்தை உருவாக்குகின்ற இந்த அதிசயம், வேறெந்தத் துறையில், வேறெந்தக் கலையில், வேறெந்த விஞ்ஞானத்தில் நடைபெற முடியும் என்று நினைத்து நினைத்து அதிசயப்பட்டாள் லீலாவதி.

கல்யாணத்தின் உடம்பில், இடது பக்கத்தில், பகுதி பகுதியாகச் சுரணையற்றுப் போகும்படி நிம்மி செய்து வருகிறாள் என்பது தெரிந்தது. இப்படியே கால்கள் பக்கத்துக்கும் வந்து, இடது காலை மரத்துப் போகும்படி செய்வாள் என்று ஊகித்தவளாக, அதை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் லீலாவதி.

''நாக்கை நீட்டுங்கள்'' என்றாள் நிம்மி கல்யாணத்திடம்.

அவன் நீட்டினான்.

''உங்கள் நாக்கிலும்கூட இடது பக்கத்தில் சுரணை யில்லை. அது மரத்துக் கொண்டேயிருக்கிறது. அதிலே என்ன பட்டாலும் தெரியாது'' என்றாள் நிம்மி.

பழ ரசத்துடன் கொடுப்பதற்காக, குளூகோஸ் சர்க்கரை கொண்ட அட்டைப் பெட்டி அருகிலிருந்தது. அதிலிருந்து நிம்மி ஒரு சிட்டிகை எடுத்து, நாக்கின் இடது புறத்தில் வைத்தாள். ''இது என்ன? எப்படி இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''தெரியவில்லை. மரத் தூள் மாதிரி இருக்கிறது'' என்றான் கல்யாணம்.

''உங்கள் நாக்கின் வலது பக்கம் நன்றாய் இருக்கிறது. அது சுரணையுடன் இருக்கிறது. வலது பக்கத்தில் ருசி நன்றாய்த் தெரிகிறது'' என்றபடி நாவின் வலப்புறத்தில் வைத்தாள் இன்னொரு சிட்டிகை. ''எப்படி இருக்கிறது இது?''

''இனிப்பாயிருக்கிறது'' என்று பதிலளித்தான் கல்யாணம்.

''இப்போது இடது கால்...'' என்று நிம்மி பேசத் தொடங்கினாள்.

ஆனால் லீலாவதியின் கவனம் அதில் செல்லவில்லை. தெருவில் வாசல் புறம் ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டதே காரணம்.

ஆனால் நிம்மியும் கல்யாணமும் அதைக் கவனித்த தாகவோ கேட்டதாகவோ தெரியவில்லை. முன்போலத் தங்களுடைய உலகிலேயே ஆழ்ந்திருந்தார்கள்.

லீலாவதி அடிமேலடி வைத்து வெளிப்புறம் வந்து பார்த்தாள்.

வருபவர்கள் புரொபசர் மித்ராவும், நிம்மியின் அம்மாவும்தான் என்பதைக் கண்டு கொண்டதும் திகிலினால் லீலாவதியின் கண்கள் இருண்டன.

# 13

Subjects who are hypnotised frequently by the same person tend to become attached to and dependent on him.

- Nigel Walker

புரொபசரும் அவர் மனைவியும் உள்ளே வருவதைப் பார்த்தவுடனே லீலாவதிக்கு ஏற்பட்ட முதல் எண்ணம், அவர்களை அண்ணனின் அறைவரையில் வராது தடுத்துவிட வேண்டுமென்பதுதான். புரொபசரின் தோற்றத்திலும் தோரணையிலும் ஓர் அமைதி தென்பட்டதெனினும், அது வேண்டுமென்றே வருவித்துக் கொள்ளப்பட்டதுதான் என்று லீலாவதி ஊகித்தாள். அந்தச் சாந்தமான முகத்தின் பின்னே ஒரு கடுமையான சினம் மறைந்திருப்பதை அவள் காண முடிந்தது.

சட்டென்று அறையைச் சாத்தினாள். அவர்கள் உள்ளே வருவதற்கு முன்பே, தான் விரைந்து சென்று, "வாருங்கள் வாருங்கள்" என்று வரவேற்றாள். கல்லூரி நாடகங்களில் அவள் இரண்டொருமுறை நடித்ததுண்டு. அந்தத் திறமைகளை ஞாபகப்படுத்திக் கொண்டு, "ஏது இவ்வளவு தூரம்? நிம்மிக்குக் கல்யாணமா? அழைக்க வந்தீர்களா?" என்றாள், ஏதுமறியாதவள் போல.

ஜெகதாவின் முகத்தில் துளிக்கூட மலர்ச்சி காணப்படவில்லை. வாயைத் திறந்து அவள் பேசவுமில்லை. புரொபசர்தான் உடனே "உன் சிநேகிதிக்குக் கல்யாணம் எங்களுக்குத் தெரியாமல் நடந்தாலும் நடக்கும், உனக்குத் தெரியாமல் நடைபெறுமா?" என்றார் சற்றுக் கேலியாக.

அவருடைய பேச்சின் உட்பொருளை உணர்ந்து கொண்டும் உணராதவள் போல, ''அதென்ன சார் அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?'' என்றாள் லீலாவதி. அவர்களை நடையிலேயே அதிக நேரம் நிறுத்தி வைத்துப் பேச முடியாதே என்று ஒரு பக்கம் மனம் நினைக்க இன்னொரு புறம் இவர்கள் நிம்மியைத் தேடிக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள் என்ற எண்ணம் பலப்பட்டது.

ஜெகதாவுக்கு இந்த நாடகம் பிடிக்கவில்லை போலும். ''லீலாவதி, நிம்மி இங்கே வந்தாளா? அவளை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகத்தான் வந்தோம்'' என்றாள்.

புரொபசர், தன் மனைவியைக் கோபிப்பது போல, ''இங்கே வந்தாளா என்று என்ன கேள்வி?'' எனக் கடிந்து கொண்டார்.

''நிம்மியா? இங்கே வந்தாளா? எப்போது?'' என்று படபடத்தாள் லீலாவதி.

''நேற்று என் மாஜிக் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டியவள் திடீரென்று காணமாற் போய் விட்டாள்'' என்று கூறிய புரொபசர், லீலாவதியின் கண்களை உற்று நோக்கினார், இரையைப் பாம்பு நோக்குவது போல.

லீலாவதி அதற்குப் பயப்படாதவளாக, ''அடாடா! அப்புறம் என்ன பண்ணினீர்கள்? ராத்திரியிலிருந்தா தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்றாள்.

மித்ராவின் கண்கள் முன்னைக் காட்டிலும் மாறுதலடைந்தன. தேவைக்கு மிஞ்சிய சாந்தத்தை அவர் வரவழைத்துக் கொண்டார். ''த்ஸு! நிம்மி வரவர ரொம்ப மோசம், அம்மா. இப்படித்தான் எங்காவது சிநேகிதி வீடு அப்படி இப்படி என்று உட்கார்ந்து கொண்டு விடுகிறாள். நான்கூட அதிகம் கவலைப்பட மாட்டேன். இதோ

இருக்கிறாள் பார் நிம்மியின் அம்மா. இவளுக்கு உயிரே போய் விடுகிறது கவலையில்!'' என்று சலித்துக் கொண்டு விட்டு, ''அப்போ... நிம்மி இங்கே வரவில்லை என்கிறாய்?'' என்றார்.

''இல்லை சார்.'' என்று பதிலளிப்பதற்குள் லீலாவதிக்கு வியர்த்துக் கொட்டி விட்டது. காச்சு மூச்சென்று கத்தாமல், ரொம்ப அமைதியாக புரொபசர் நடிப்பது அவள் ரத்தத்தை உறைய வைத்தது. மேலும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, ''வீட்டுக்குள் வாருங்களேன்'' என்று அழைத்தாள்.

''தாங்ஸ். இன்னொரு சந்தர்ப்பத்தில் வருகிறேன். இப்போது நம்மி கவலைதான் பெரிதாயிருக்கிறது'' என்று கூறிவிட்டு ஜெகதாவின் பக்கம் திரும்பினார் புரொபசர்.

''சொன்னேனே, கேட்டாயா? 'லீலாவதியெல்லாம் ரொம்பப் பொறுப்பான, பெண், நிம்மி அங்கே போயிருந் தால், லீலாவதியே போன் செய்து கவலைப்படாதீர்கள் என்று சொல்லியிருப்பாள்' என்று சொன்னேன்! நீ கேட்கவில்லை. சரி, சரி, வா போகலாம்'' என்றார்.

நெருப்பைக் கக்க வேண்டிய சமயத்தில் பன்னீரைத் தெளிக்கும் அவருடைய போக்கு ஜெகதாவைக் குழம்ப வைத்திருந்தது. என்னென்ன கொடுமைகளுக்காக அவர் இப்படித் தளம் அமைக்கிறாரோ என்ற திகில் அவளை நடுங்கச் செய்ததால், ''ஏண்டியம்மா லீலாவதி, நிம்மியை... நீ... உன் அண்ணன்...'' என்று தடுமாறினாள்.

அந்த அன்னையின் தவிப்பு லீலாவதிக்கு நன்கு புரிந்தது. சாடை காட்டலாம். ஆனால் அதைப்புரிந்துகொள்ள இயலாத அப்பாவி இவள் என்பது நன்கு தெரிகிறதே! 'இங்கே தான் இருக்கிறாள் உங்கள் மகள்! கவலைப் படாதீர்கள்!' என்று தேற்றத் துடித்தது அவள் நெஞ்சு. புரொபசரின் முன்னிலை யில் உண்மையை வெளிப்படுத்தாதே என்று தடுத்தது அறிவு.

அவள் பதில் கூறுமுன்பு புரொபசரே, ''என்ன ஜெகதா நீ, குழந்தை மாதிரி? உன் பெண்ணை வீட்டுக்குள் ஒளித்து வைத்துக் கொண்டு இல்லை என்பார்களா? சரி, சரி, வா நிம்மிக்கு இன்னும் எவ்வளவோ சினேகிதிகள். ஒவ்வொரு வராய் விசாரிக்கலாம்: பொறுப்புணர்ச்சி இல்லாத மகளைப் படைத்தால் இப்படித்தான் கஷ்டப்படவேண்டும்'' என்றவர், ''நாங்கள் வருகிறோம், அம்மா. ஸாரி ஐ கேவ் யூ ஆல் திஸ் ட்ரபிள்'' என்று லீலாவதியிடம் கூறிவிட்டுக் காருக்குத் திரும்பினார். ஜெகதாவும் வேறு வழியின்றி, ஆனால் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்று காரில் ஏறிக் கொண்டாள்.

கார் புறப்பட்டது. புரொபசர் ஒரு புன்னகையுடன் கையை ஆட்டி விட்டு விடை பெற்றுக் கொண்டார்.

லீலாவதிக்கு ஓர் ஐயம் உதித்தது.

அண்ணனின் அறைக்குத் திரும்பாமல் வீட்டின் பின் புறத்திலுள்ள படிக்கட்டு வழியாக மாடிக்குச் சென்றாள். அதற்கும் மேலேயுள்ள மொட்டை மாடியை அடைந்தாள். சுவர் ஓரமாக மறைந்த வண்ணம் தெருக் கோடியை நோட்டமிட்டாள்.

அவள் ஊகித்தது சரிதான். தெருவின் திருப்பத்தில் காரை நிறுத்தியிருந்தார் புரொபசர். சில நிமிடங்களில் நிம்மி இந்த வீட்டிலிருந்து வெளிப்படுவாள் என்று அவர் திட்டமிட்டுக் கொண்டு காத்திருக்கிறார் என்று புரிந்து கொண்டாள். அவர் இஷ்டப்பட்டிருந்தால் தடதடவென்று வீட்டுக்குள் நுழைந்து நிம்மியைக் கையும் களவுமாகப் பிடித்திருக்க முடியும். ஆனால் என்றென்றைக்கும் அகற்ற முடியாத ஒரு கசப்பு தந்தைக்கும் மகளுக்குமிடையே ஏற்பட்டுவிடக் கூடும். அப்படி ஏற்படக்கூடாதென்று புரொபசர் விரும்புகிறார். ஏன்?

எதுவானாலும் புரொபசர் சென்ற பிறகே நிம்மியை அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்தவளாக, அண்ணன் எப்படி இருக்கிறானோ என்ற கவலையுடன் வேகமாகக் கீழிறங்கி வந்தாள் லீலாவதி.

வெளியே என்ன இடி இடித்தாலும், எப்படிப்பட்ட பூகம்பம் வெடித்தாலும், உணராதவள் போல இருந்தாள் நிம்மி.

''இப்போது உங்கள் காலில் வலியே இல்லை. கொஞ்சம் கூட இல்லை. காலில் அடிபட்டிருப்பதாக நீங்கள் நினைத்திருப்பதெல்லாம் வெறும் பிரமை; உங்கள் காலில் எவ்விதக் கோளாறும் இல்லை. நீங்கள் இப்போது காலை நன்றாய் ஆட்ட முடிகிறது. அசைக்க முடிகிறது. இதோ நகர்த்துகிறீர்கள். துளியும் வலிக்கவில்லை...'' என்று அவள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

லீலாவதி அண்ணனைக் கவனித்தாள். என்ன ஆச்சரியம்! கல்யாணத்தின் முகத்தில் வேதனையின் அறிகுறிகள் பெருமளவுக்குக் குறைந்திருந்தன. அரைத் தூக்கதில் இருப்பவன் போல் கண்களைப் பாதி மூடிக் கொண்டிருந்தான்.

''உங்கள் காலில் வலியே கிடையாது. கொஞ்சமும் இல்லை. நீங்கள் இப்போது காலை அசைக்கிறீர்கள்...''

பிரமிப்பு, லீலாவதியைச் சிலையாக்கிற்று. எந்தக் காலை இம்மியளவு அசைத்தாலும் சித்திரவதைக்கு ஆட்பட்டவன் போல் துடித்தானோ, அதே காலை இப்போது ஊஞ்சல் போல ஆட்டிக் கொண்டிருந்தான் கல்யாணம்! அதே காலைக் கட்டிலின் சட்டத்தின் மீது தூக்கிப் போட்டான். அதே காலை இப்படியும் அப்படியும் புரட்டினான்!

தோழியிடம் ஆர்வத்துடன் ஏதோ சொல்ல நினைத்தாள் லீலாவதி. ஆனால் அவள் ஒருத்தி அருகில் இருப்பதாகவே நிம்மி கருதவில்லை.

''தூங்குங்கள். இனிமையான அமைதியான எண்ணங்களுடன், நிம்மி உங்கள் இமைகளைக் கவ்வுகிறது. உறக்கம் உங்கள் உடம்பைத் தழுவுகிறது. சிறிது சிறிதாக நீங்கள் தூக்கத்தில் ஆழ்கிறீர்கள். தூங்குங்கள், நன்றாய்த் தூங்குங்கள். உலகை மறந்து துயிலுங்கள்...''

கல்யாணத்தின் இமைகள் கீழிறங்கின. மேலும் கீழுமான இமைகள் ஒட்டிக் கொண்டன. அவன் தேகத்தின் விறைப்புத் தளர்ந்து, அங்கங்கள் தொய்ந்தன. பரிபூரண ஆரோக்கியமுள்ளவனைப்போல அவன் அடர்ந்த, உறக்கத்தில் ஆழ்வது வெளிப்படையாகத் தெரிந்தது.

''நிம்மி!...'' உணர்ச்சி வசப்பட்டபவளாக, சிநேகிதியின் கைகளைப் பற்றிக் கொண்டாள் லீலாவதி, ''பெரிய பெரிய டாக்டர்களால் கூடச் செய்ய முடியாத அற்புதத்தை நீ சாதித்துவிட்டாய் நிம்மி...''

அப்போதுதான் லீலாவதி கவனித்தாள் - நிம்மியும் ஒருவ'கையான உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்கிறாள் என்பதை... ஹிப்னாடிஸக் கலையில், வசியப்படுத்துகிறவரும் வசியத்துக்கு உள்ளாகிறவரும் சேர்ந்து ஒரே உலகத்தில் பிரவேசிக்கிறார்கள் என்ற உண்மை முதன் முறையாக லீலாவதிக்குப் புரிந்தது.

நிம்மியின் முகத்தில் திடுப்பென்று ஒரு பிரகாசம் ஏற்பட்டது. கனவிலிருந்து எழுந்து கொண்டவள் போலக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''நான் ஒன்றும் செய்யவில்லை, லீலா. அவரே அவரைத் தூங்க வைத்துக் கொள்ள நான் உதவினேன்'' என்றாள்.

''உன் அப்பாவும் அம்மாவும் எங்கே உள்ளேயே வந்துவிடுவார்களோ என்று பார்த்தேன். ஆனால் அவர்...''

''அப்பாவும் அம்மாவுமா? வந்தார்களா என்ன?'' என்று நிம்மி திகைத்தாள்.

நிம்மி எவ்வளவு தூரம் தனது மனோவசிய உலகில் அமிழ்ந்திருந்தாள் என்பதை லீலாவதி உணர்ந்து கொண்டு, ''ஆமாம். நீ இங்கே வரவில்லையென்று சொல்லி அனுப்பி விட்டேன். உன் அம்மாவை ரொம்ப விரட்டியிருப்பார் போலிருக்கிறது. அவர் சொன்ன தகவலை வைத்துக் கொண்டுதான் இங்கே உன் அப்பா வந்திருக்க வேண்டும். நீ இங்கே இல்லையென்று நான் சொன்னதும் தகராறு செய்யாமல், சரியென்று போய்விட்டார். ஆனால் தெருக் கோடியில் மறைவாய்க் காத்துக் கொண்டிருக்கிறார் உனக்காக'' என்றாள்.

நிம்மிக்குப் பரபரப்பு ஏற்பட்டது. ''சரி, உன் அண்ணன் தூங்கி விட்டார். நான் வீட்டுக்குத் திரும்புகிறேன். அப்பா இருக்கிறாரா போய் விட்டாரா என்று மறுபடி பார்த்து வந்து சொல்லேன்'' என்றாள்.

லீலாவதி மாடிக்குச் சென்று பார்த்துவிட்டுத் திரும்பினாள். புரொபசரின் கார் தெருக்கோடியில் காணோம். போய்விட்டார்.

மெல்லிய போர்வை கொண்டு கல்யாணத்தின் காலை மூடினாள் நிம்மி. ''நாளைக் காலை மறுபடி ஆஸ்பத்திரிக்குப் போய்க் காட்ட வேண்டும். எக்ஸ்ரேயைப் பார்த்துச் சிகிச்சை தருவார்கள்'' என்றவள், லீலாவதியின் கைகளைப் பற்றிக் கொண்டாள். ''என்னால்தான் உங்களுக்கெல்லாம் இவ்வளவு கஷ்டம். என்னை மன்னித்து விடு லீலா'' என்றாள்.

''சீ, சீ! பைத்தியம்!'' என்று லீலாவதி சிரித்தாள். ''கஷ்டத்துக்கு நீ காரணம் என்றால், அதை நிவர்த்தித்ததும் நீதானே! என் அண்ணாவின் கால் வலியை எப்படித்தான் நீக்கினாயோ! போகட்டும். நாளைக்கு என்னோடு ஆஸ்பத்திரிக்கு நீயும் வரவேண்டும் நிம்மி. எனக்கு ஆஸ்பத்திரி விஷயங்கள் எதுவும் தெரியாது.''

''நான் மட்டும் எக்ஸ்பர்ட்டா என்ன?'' நிம்மியின் பார்வை கல்யாணத்தை நோக்கிச் சென்றது. சாந்தம் படிந்த அந்த முகம் அவள் மனத்தை நெகிழ்வித்தது. ''கட்டாயம் வருகிறேன், லீலா. அதுவரை ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொள்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

''நிம்மி!''

ஹால் நிலைப்படியைத் தாண்டி உள்ளே நுழைவதற்குள், ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்டார் புரொபசர் மித்ரா.

''ஜெகதா! ஜெகதா! குழந்தை வந்து விட்டாள் பார்! நம்ம நிம்மி வந்து விட்டாள்!'' என்று உற்சாகத்துடன், குரல் தழுதழுக்கக் கூவும் தந்தையைப் பார்த்தாள் நிம்மி. அவருடைய கண்களில் ஈரம் பளபளத்தது. உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

எதற்கும் கலங்காத கடின சித்தம் படைத்த புரொபசரா இப்படி ஆடிப் போனார்! மலை கலங்கினாலும் மனமிடியாத மித்ராவா இப்படியொரு நெகிழ்ச்சிக்கு ஆட்பட்டார்! நிம்மியினால் நம்ப முடியவில்லை.

அதைக் காட்டிலும் ஆச்சரியம் இன்னொன்று; அவள் எதிர்பார்த்து வந்தது, குமுறும் எரிமலையை. கண்டதோ குளிர் பூஞ்சோலையை. இந்தக் காட்சி உண்மையானதா அல்லது அரங்கத்தில் போடப்பட்ட ஸெட்டா?

ஜெகதா உள்ளேயிருந்து ஓடிவந்தாள். என்றைக்கும் பார்த்திராத காட்சியாக நிம்மியை அணைத்துக் கொண்டே கண்ணீரைத் துடைத்துக் கொள்ளும் புரொபசரைக் கண்டு அவள் திகைப்பு எல்லையற்றதாயிற்று.

''ஜெகதா! நிம்மி வந்து விட்டாள்!'' புரொபசர் அவளைத் தன்னிடமிருந்து விடுவித்து அவள் தாயிடம்

ஒப்படைத்தார். ''நிம்மி! உன் அம்மா இரவெல்லாம் எப்படித் துடித்து விட்டாள் தெரியுமா? என்ன நிம்மி நேர்ந்தது உனக்கு? பாதி ஷோவில் எங்கே போய்விட்டாய்? ராத்திரியெல்லாம் எங்கே இருந்தாய்?''

அவருடைய கேள்விகளில் வெளிப்பட்ட பாசத்தையும் பரிவையும் கண்டபோது நடந்ததையெல்லாம் அப்படியே ஒப்பித்து விடலாமா என்று ஒரு வினாடி தோன்றியது நிம்மிக்கு. ''அப்பா...'' என்று ஆரம்பித்தவள் உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். ஒரு குற்ற உணர்வு அவளை ஆட்டிப் படைத்தது.

''என்னம்மா நிம்மி?'' என்றார் புரொபசர் மீண்டும்.

''என்னவென்றே தெரியவில்லையே அப்பா! பர்ஃபாமென்ஸ் நடக்கும் போது யாரோ கூப்பிடுகிறார்கள் என்னை என்று ஓர் ஆள் வந்து சொன்னான். போனேன். ஒரு கார் இருந்தது. எட்டிப் பார்த்தேன். அவ்வளவுதான் தெரியும்.''

''ஐயையோ! அப்புறம்?''

''காலையில் சுள்ளென்று வெய்யில் அடித்தது. கண் விழித்துப் பார்த்தால், மெரினாவில் உழைப்பாளர் சிலைக்குப் பின்னால் படுத்திருக்கிறேன். உடனே ஒரு டாக்சியைப் பிடித்து வீடு வந்து சேர்ந்தேன். எதற்காக, யார் அப்படிச் செய்தார்கள் என்று புரியவில்லை.''

''நீ பாவம். குழந்தை, உனக்குப் புரியாது. என் பெயரையும் புகழையும் கெடுக்க வேண்டுமென்று எவ்வளவோ சதி செய்கிறார்கள். அதிலே இதுவும் ஒன்று. போகிறார்கள்! கடவுள் கூலி தருவான். நான் போலீஸில் கூடப் புகார் கொடுக்கப் போவதில்லை.''

''ஆமாம்பா, கொடுக்க வேண்டாம்'' என்று சற்று அவசரமாகவே கூறினாள் நிம்மி.

''ஜெகதா! குழந்தையை அழைத்துப் போ. எங்கே அந்த வேலைக்கார மடையன்கள்? சட்டென்று ஹாட்டாய் ட்ரிங்க் ஏதாவது கொண்டு வந்து தரக் கூடாது?''

''வேண்டாமப்பா. எனக்கு ஒன்றுமில்லை. குளித்துவிட்டுச் சாப்பாடு சாப்பிட்டு விடுகிறேன்'' என்று அம்மாவுடன் சென்றாள் நிம்மி.

''இன்றைக்கு காலேஜ் போக வேண்டாம், நிம்மி! ரெஸ்ட் எடுத்துக் கொள்ளம்மா'' என்று தந்தை சொல்வது அவள் காதில் விழுந்தது.

அவ்வளவு நேரமும் ஜெகதா வாயே திறக்கவில்லை. நிம்மி சொல்வதை நம்புவதா வேண்டாமா என்ற குழப்பமான மனநிலையில் அவள் இருந்தாள். மிகக் கொடூரமான சித்திரவதை செய்யப் போவதாக அவளை மறைமுகமாக பயமுறுத்தி, நிம்மியையும் கல்யாணத்தையும் பற்றித் தெரிந்து கொண்ட புரொபசர், ஏன் பிற்பாடு தன் கோபத்தை அடக்கிக் கொண்டார்? எதற்காக அப்படிக் குளிரக் குளிரப் பேசினார் அந்த லீலாவதியிடம்? ஜெகதாவுக்குப் புரியவில்லை.

இரவு நிம்மி படுக்கைக்குச் சென்ற பிறகுதான் ஓரளவு தைரியம் ஏற்பட்டது ஜெகதாவுக்கு.. மகளின் அருகே கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள். நிம்மியின் நெற்றியில் புரண்டு விழும் கூந்தலை ஒதுக்கி விட்டபடி ''நான் கேட்கிறதற்காகக் கோபிக்காதே... வந்து... நீ அந்த லீலாவதியின் வீட்டில் தானே இருந்தாய்?'' என்றாள்.

''ஆமாம்மா'' என்று சொல்ல நினைத்த நிம்மி, இப்போதும் அடக்கிக் கொண்டாள். அப்பா கொஞ்சம் மிரட்டினால் எதையும் சொல்லி விடுகிறவள் அம்மா என்று

தெரிந்து விட்டது. ஆகவே இவளிடமும் சொல்லக் கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டாள்.

''இல்லையம்மா... அப்பாவிடம் நான் சொன்னதுதான் உண்மை. நடந்தது அதுதான்'' என்றாள் அழுத்தமாக.

நெடு நேரம் மகளின் உடம்பைத் தடவிக் கொடுத்தவாறு மௌனமாக உட்கார்ந்திருந்தாள் ஜெகதா. பிறகு, ''சரி, தூங்கு'' என்று கூறிவிட்டு, விளக்கை அணைத்து விட்டுச் சென்று விட்டாள்.

நிம்மி படுக்கையில் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தாள். தன்னுள் ஏற்பட்டுள்ள மாறுதலை அவளால் உரண முடிந்தது. இதுவரை அவள் அப்பாவிடமோ அம்மாவிடமோ பொய் பேசியது கிடையாது. பேசவேண்டிய அவசியமும் ஏற்பட்டதில்லை. இப்போது முதன் முறையாக உண்மையை மறைத்துப் பொய் பேசியிருக்கிறாள்! அதுவும் எவ்வளவு கோவையாக, ஒழுங்காக, கட்டுக் கதை கற்பனை சேர்த்திருக்கிறாள்! இம்மாதிரியான பித்தலாட்டம் செய்யக் கூடிய திறமை தனக்கு எப்போது வந்தது? இதற்கெல்லாம் காரணம் -

அந்த ஒருவன். கல்யாணம்.

அவனுக்குத் தீங்கு ஏதும் நேராமல் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கம்.

நிம்மியின் மனம் குறுகுறுத்தது. நேற்று ஒரே ஒருநாள் சந்தித்த ஒருவனுக்காக, 'பத்தொன்பது வருடமாகப் பழகிவரும் தாய் தந்தையரை ஏமாற்றச் சொல்கிறதே, இந்த உணர்ச்சிக்குப் பெயர்தான் அந்த இதுவா?

நிம்மிக்கு மேனி சிலிர்த்தது.

''அப்பா! நான் போய் விட்டு வருகிறேன்!''

நிம்மியின் குரலைக் கேட்டுத் தினசரித்தாளைத் தாழ்த்தினார் புரொபசர். ''என்னம்மா, காலேஜுக்கா? அதுக்குள்ளேயா?''

''ஆமாம்பா... ஸ்பெஷல் கிளாஸ் இருக்கிறது...''

''டிரைவர் இன்னும் வரவில்லையே? கார் வேண்டாம்?''

''நான் டாக்ஸியில் போய்க் கொள்கிறேன், அப்பா! வரட்டுமா?''

''இரு.'' புரொபசர் மித்ரா தன் மேஜை செருகறையிலிருந்து ஒரு சிறிய தாளை எடுத்து வந்தார். ''இது உன் கைப்பையிலிருந்து நேற்று விழுந்தது நிம்மி.''

அவள் பார்த்தாள். நாக்கு உலர்ந்தது.

ஆஸ்பத்திரியில் கல்யாணத்தை எக்ஸ்ரே எடுத்தற்கான ரசீது அது.

## 14

You can do whatever you will to do, if only you will be sufficiently active. Success and wealth are not reached by pure intelligence but by practical exercise of the will. -W.W.Atkinson

உலகத்தில் எல்லா அசைவுகளும் நின்று விட்டாற் போலவும், எல்லா ஓசைகளும் செத்து விட்டாற் போலவும், தானும் தன் தந்தையும் மட்டுமே எதிரும் புதிருமாக நிற்கிறாற் போலவும் இருந்தது நிம்மிக்கு.

எக்ஸ்ரே எடுத்ததற்கான ரசீதை லீலாவதியிடம் கொடுக்காமல் பையில் போட்டு எடுத்து வந்தது எப்படிப் பட்ட மடத்தனம்!

ஆச்சரியப்படத்தக்க விதத்தில் புரொபசரே கை கொடுத்தார். அவளுக்கு. ''யாரோ சிநேகிதி வைத்திருந்ததை

ஞாபக மறதியாக எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய்! அப்படித் தானே?''

''அ... வந்து... ஆமாம்பா...'' சிரிக்க முயன்றாள் நிம்மி.

''உன்னைப் போய் மகாபெரிய ஹிப்னாடிஸ்டாகப் பண்ணலாம் என்று நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேன் பார்!'' என்றார் புரொபசர்.

புயலாக வந்ததென நினைத்தது தென்றலாய் மாறியது எவ்வாறு? புலியாய் உறுமப் போவதாக எண்ணியது பூனையாய்க் கீச்சிடுவது எப்படி? புரொபசரின் போக்கு நிம்மிக்குப் பிடிபடவில்லை. ஆயினும், இப்போதைக்குத் தப்பினோம் என்ற மகிழ்ச்சி மற்ற எண்ணங்களைப் போக்கடித்தது.

''உங்கள் கனவை நனவாக்கிக் காட்டுகிறேன், பாருங்கள்!'' என்று பதிலுரைத்தாள்.

''பார்த்தாயா! இப்போதுதான் நினைவு வருகிறது. நீ மென்ட்டல் எக்ஸர்ஸைஸ்கள் செய்து ரொம்ப நாளாகிறது. சாயந்தரம் காலேஜிலிருந்து சீக்கிரம் திரும்பி விடு. வந்ததும் பயிற்சி ஆரம்பிக்கலாம்'' என்றார் புரொபசர்.

''ஓ கே அப்பா!'' என்று உற்சாகமாகப் பதில் தந்துவிட்டுப் புறப்பட்டாள் நிம்மி.

தெருக் கோடி திரும்புகிற வரையில், தந்தையின் கண்கள் தன் முதுகைத் துளைத்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வே அவளுக்கு இருந்தது. கையும் களவுமாக அகப்பட்ட அவளைப் பின்னரும் எதுவும் கேட்காமல் விட்டுவிட்டது புரொபசரின் இயல்புக்கே விரோதம். வேறு ஏதோ நோக்கத்துடன்தான் இப்படி விட்டுப் பிடிக்கிறார் என்று அவளுக்குப் புரிந்தது. ஆனால் அது என்னவென்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

டாக்ஸி பிடித்துக் கொண்டு கல்யாணத்தின் வீட்டை அடைந்தபோது வாசலிலேயே காத்திருந்தாள் லீலாவதி.

''எப்படி இருக்கிறார்?'' என்று நிம்மி விசாரித்தாள், டாக்ஸியிலிருந்து காலை வெளியே எடுத்து வைக்கு முன்பே.

''ராத்திரி முழுதும் நன்றாகத் தூங்கினார். ஒரு முனகல்கூட இல்லை. ஆனால் காலை ஏழு மணிக்கெல்லாம் எழுந்து கொள்வார் என்று சொன்னாயே எழுந்திருக்க வில்லையே? இரண்டு மூன்றுதரம் கூப்பிட்டேன். அண்ணா கண்ணைத் திறக்கவில்லை'' என்றாள் லீலாவதி.

''அப்பிடியா?'' ஆச்சரியமும் கவலையும் கொண்டவளாகக் கல்யாணத்தின் அறைக்கு விரைந்தாள் நிம்மி. முந்தின தினம் அவனை ஹிப்னாடிஸம் மூலம் தூங்கச் செய்த போது, ''நாளைக் காலை ஏழு மணிக்கு நீங்கள் கண் விழிப்பீர்கள்'' என்று பலமுறை சொன்னாளே? ஏன் அந்த நேரத்துக்கு அவன் விழித்துக் கொள்ளவில்லை? அவளுடைய ஹிப்னாடிஸம் பலிக்கவில்லையா என்ன?

''கல்யாணம்... மிஸ்டர் கல்யாணம்!'' மெல்ல அவன் தோளில் தட்டினாள் நிம்மி.

சட்டெனக் கண்ணைத் திறந்தான் கல்யாணம். ''ஹலோ!'' என்று புன்னகை செய்தான். ''அப்பாடா! கண்ணை இறுக மூடிக்கொண்டுதூங்குகிற மாதிரி பாசாங்கு செய்வது எவ்வளவு கஷ்டமாயிருந்தது தெரியுமா?''

''பாசாங்கா செய்தீர்கள்? எதற்காக?''

''நிம்மி! விழித்தால் உன் அழகான முகத்தில்தான் விழிப்பது என்று தீர்மானமாக இருந்தேன்!''

குப்பென்று நாணம் படர்ந்து நிம்மியின் கன்ன மெல்லாம் செம்மையாயிற்று. லீலாவதி அந்தப் பேச்சைக் கேட்டிருப்பாளோ என்று வெட்கமுற்றவளாகத் திரும்பிப்

பார்த்தாள். அப்போதுதான் அவள் உள்ளே வந்து கொண்டிருந்தாள். ''என்ன, எழுந்து கொண்டானா இப்போதாவது?'' என்று கேட்டவாறு.

''ஓ, சீக்கிரம் இவரை அழைத்துச் சென்று காப்பி பலகாரம் கொடு. ஒன்பதுக்கெல்லாம் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும்'' என்றாள் நிம்மி.

சகோதரியைப் பிடித்துக் கொண்டு தத்தித் தத்தி நடந்தான் கல்யாணம். நடுநடுவே அவன் விழுந்து விடுவான் போல் தோன்றிய போதெல்லாம் சட்டென்று நிம்மி அவனைப் பிடித்துக் கொண்டாள். அந்தச் சமயங்களில் அவன் உதட்டில் குறும்பு தவழ்வதையும் தன் உள்ளத்தில் ஒரு சிலிர்ப்பு உதிப்பதையும் கண்டாள் நிம்மி.

''உன் அப்பாவிடம் என்ன சொல்லிச் சமாளித்தாய் நிம்மி?'' என்று லீலாவதி விசாரித்தாள்.

''நினைவு நீச்சு இல்லாமல் கடற்கரையில் கிடந்ததாகச் சொன்னேன்'' என்று நிம்மி கூறியதைக் கேட்டு அவர்கள் இருவரும், ''பலே! பலே!'' என்று சிரித்தார்கள். தன் தந்தையை அப்படி ஏமாற்றியதோடு, நாலு பேரின் சிரிப்புக்கும் இலக்காகியிருக்கிறோமே என்று நினைத்து நிம்மிக்கு வருத்தம் ஏற்பட்டது. கல்யாணத்தின் மீதும் லீலாவதியின் மீதும் கோபமும் உதித்தது.

மருத்துவ மனையில் அரை நாள் செலவழிந்தது. ஆனால் கல்யாணத்துக்காக ஓடுவதும் விசாரிப்பதும் அலைவதும் கவலைப்படுவதும் தனக்கு இன்பமான தொல்லையாக இருப்பது ஏன் என்று விளங்கவில்லை நிம்மிக்கு.

கல்யாணத்தின் முழங்காலுக்குக் கீழே 'சிறிய பிராக்சர்' தான் ஏற்பட்டிருக்கிறது என்று கூறி, பிளாஸ்டர் கட்டுப்

போட்டார்கள். அசையாமல் பதினைந்து நாள் படுத்திருந்தால் போதுமென்று தெரிவித்தார்கள்.

வீடு திரும்பி, படுக்கையில் கல்யாணத்தைக் கிடத்தியதும், சூடாய்க் காப்பி போட்டு எடுத்து வருவதாகச் சொல்லி லீலாவதி உள்ளே சென்றாள்.

''நிம்மி'' என்று தாழ்ந்த குரலில் அழைத்தான் கல்யாணம். அந்தத் தொனியில் ஒரு மர்மமான, கிளு கிளுப்பான உணர்ச்சி புதைந்திருந்தது. ''நிம்மி, என்ன உயிர் போகிற மாதிரி வலிக்கிறது தெரியுமா? பிளாஸ்டர் கட்டுப் போடுகிறபோது அந்த டாக்டர் என் காலை இழு இழு என்று இழுத்து - அம்மம்மா! நிம்மி! உன் ஹிப்னாடிஸ சக்தியைக் கொண்டு என் வலியை மறக்க வைத்துத் தூங்கச் செய்தாயே, அதே போல் இந்த எலும்பு முறிவுக்கும் ஒரு சிகிச்சை கொடுக்க முடியாதா?''

கல்யாணம் அதை வேடிக்கையாகத்தான் கேட்டா னெனினும் நிம்மி அதை 'ஸீரிய' ஸாகவே எடுத்துக் கொண்டாள். ''ஹிப்னாடிஸத்தின் மூலம் எந்த வைத்தியமும் செய்ய முடியும் என்று நான் படித்திருக்கிறேன். ஆனால் அந்தச் சக்தி எனக்கு இருக்கிறதா என்பது சந்தேகம்... உங்களை இப்படி முடமாக்கியதே போதாதா? சிகிச்சைக்கு வேறு பரீட்சை செய்ய வேண்டாம் என்றுதான் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனேன்...''

பேசப் பேச அவள் குரல் தழுதழுத்துக் கொண்டே வருவதைக் கவனித்தான் கல்யாணம். ''எதற்காக வருத்தப் படுகிறாய் நிம்மி? என் காலில் அடித்ததற்காகவா? அப்படி அடித்திராவிட்டால் இப்படி உன் பக்கத்திலிருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்குமா?'' அவன் கைகள் அவள் கைகளைப் பற்றியபோது நிம்மியின் இதயம் படபடத்தது.

பயம், பரவசம் இரண்டும் அவள் உள்ளத்தில் அலை மோதின. அந்தக் கொந்தளிப்பினால் அவளுக்குப் பேச்சு வரவில்லை.

''சாயந்தரம் காலேஜ் விட்டதும் வருவாயா? நீ வந்துதான் என்னைத் தூங்கப் பண்ண வேண்டும்!'' என்றாள் கல்யாணம்.

''சரியான பச்சைக் குழந்தை தான்!'' என்று மனம்விட்டு, வாய்விட்டுச் சிரித்தாள் நிம்மி. ''ஆனால் தாலாட்டுப் பாடி உங்களைத் தூங்க வைப்பதைக் காட்டிலும் முக்கியமான வேலை இருக்கிறது எனக்கு. அப்பா சீக்கிரமாய் வரச் சொல்லியிருக்கிறார் ஹிப்னாடிஸப் பயிற்சிக்காக.''

அவளுடைய விரல்களுடன் விளையாடிக் கொண்டே, ''முதன் முதலாக உன்னைப் பார்க்க வந்தபோது, நீ அதுதானே செய்து கொண்டிருந்தாய்? நான்தான் பாதியில் குறுக்கிட்டுக் கெடுத்து விட்டேன்'' என்றான் கல்யாணம். ''உன் அம்மாவிடம் ஏதோ பரிசோதனை செய்து கொண்டிருந்தாயே என்ன அது?''

''ஹிப்னாடிஸப் பயிற்சிகளில் அதுவும் ஒன்று. 'ரீகால் ஆஃப் ஃபெயிண்ட் மெமரீஸ்' என்று சொல்வார்கள். ஒருவரை மனோவசியப்படுத்தி, பற்பல வருடங்களுக்கு முன்பு நடந்ததை - அவர்களுக்கே மறந்து போயிருப்பதை - சொல்லும்படி செய்ய முடியும். என் அம்மாவை ஹிப்னடைஸ் பண்ணி, ஒரு குறிப்பிட்ட தினத்தில் என்ன நடந்தது என்று சொல்ல வைக்கும்படி அப்பா கூறினார். அதன்படி நான் அம்மாவைப் பரிசோதனை செய்து கொண்டிருந்தேன்...''

கேட்டுக் கொண்டிருந்த கல்யாணத்தின் கண்கள் குறுகின. அவன் மனத்தில் ஏதோவொரு ஐயம் முளைத்தது. ''அதற்கு உன் அம்மாதான் தேவையா? வேறு யாரிடமும் பரிசோதனை செய்யும்படி சொல்லவில்லையா உன் அப்பா?''

''இல்லையே?''

உதட்டைச் சுழித்துக்கொண்டு சற்று நேரம் பேசாதிருந்தான் கல்யாணம். பிறகு, ''உன் திறமையைப் பரீட்சிப்பதைக் காட்டிலும், உன் அம்மாவிடமிருந்து ஏதோவொரு ரகசியத்தை அறியத்தான் உன் அப்பா அதிக தீவிரம் காட்டுகிறார் என்று தோன்றுகிறது'' என்றான் மெதுவாக.

நிம்மி திடுக்கிட்டாள். ''ரகசியமா? என்ன ரகசியம் அம்மாவுக்கு?''

''நிம்மி! உன்னிடம் பருவத்துக்குரிய வனப்பெல்லாம் வந்திருக்கிறதே தவிர, உலகத்தின் சூதுவாதுகள், சூழ்ச்சிகளைப் பற்றி அறியாத குழந்தையாகவே இருக்கிறாய் நீ! ஒரு கணவனுக்குத் தன் மனைவியிடம் எப்படிப்பட்ட சந்தேகங்களெல்லாம் பிறக்க முடியும் என்பது உனக்குத் தெரியாது...''

''என்னென்னவோ சொல்கிறீர்களே...'' என்று நிம்மி குழம்பிக் கொண்டிருக்கும்போது லீலாவதி வருகின்ற ஓசை கேட்டது.

''ஏதோ மனசில் தோன்றியதைச் சொன்னேன். நிம்மி. அது தப்பாகவும் இருக்கக் கூடும். அதையே எண்ணிக் குழம்பிக் கொண்டிராதே'' என்று எச்சரித்தான் கல்யாணம்.

ஆனால் நிம்மியின் உள்ளத்தில் அது உறுத்திக் கொண்டேயிருந்தது.

கல்லூரியிலிருந்து திரும்பியதும் நிம்மி நேரே தன் அறைக்குச் சென்று புத்தகங்களை அலமாரியில் வைத்தாள். முகம் கழுவி, உடை மாற்றிக்கொண்டு அப்பாவிடம் மனோவசியப் பயிற்சிக்குச் செல்ல வேண்டும் என்ற முடிவுடன் இருந்த போதிலும், கல்யாணம் சொன்ன

விஷயங்கள் அவள் மனத்தில் சஞ்சலம் மூட்டிக்கொண்டே யிருந்தன.

அப்படிக்கூட இருக்குமா என்ன? அப்பாவுக்கு அந்த மாதிரியெல்லாம் சந்தேகம் ஏற்பட்டிருக்க முடியுமா? அதற்காகவா தனக்கு இப்படிப் பயிற்சிகள் கொடுத்துப் பரீட்சை நடத்துகிறார்? அவளால் நம்ப முடியவில்லை.

''நிம்மி, வந்து விட்டாயா? நல்ல வேளை.''

ஜெகதாதான் உள்ளே வந்தாள். அவளை ஏறிட்டுப் பார்க்கக்கூடக் கூச்சமாக இருந்தது நிம்மிக்கு. தூய்மையின் வடிவமாக, கண்ணியத்தின் உருவமாக, ஒழுக்கத்தின் சாரமாகத்தான் அன்னையை அவள் நினைத்துக் கொண்டு வந்திருக்கிறாள் இத்தனை காலமும். இப்போது அம்மாவைப் பற்றி வேறோர் விதமாக எண்ண நிம்மியின் மனம் கூசியது. அப்படி எண்ணக் கூடியவர்களுக்கு மறைமுகமாக உதவி செய்கிறோமோ என்ற சந்தேகம் அவளை மேலும் கலங்கச் செய்தது.

''எங்காவது காலேஜில் ஸ்போர்ட்ஸ், சொற்பொழிவு என்று சொல்லிக் கொண்டு உட்கார்ந்து விடப்போகிறாயே என்று நினைத்திருந்தேன். சீக்கிரமாக வந்து விட்டாய். போய் டிபன் சாப்பிட்டு விட்டு வா'' என்றாள் ஜெகதா.

''ஏம்மா, எங்காவது வெளியில் போக வேண்டுமா?'' இப்போதும் கூட அம்மாவை நேரே பார்க்காமல் கேட்டாள் நிம்மி.

''ஆமாம், மெரினாவுக்குப் போய் வரலாம், வா. டிரைவரிடம் சொல்லி வைத்திருக்கிறேன். நாம் இரண்டு பேரும் சேர்ந்து வெளியில் போய், கலகலவென்று இரண்டு வார்த்தை சந்தோஷமாகப் பேசி, எத்தனை நாளாகிறது!''

தாயின் ஆதங்கம் பூராவும் அந்த வார்த்தைகளில் தென்பட்டதால் நிம்மிக்கு என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை. ''ஆமாம்மா, ரொம்ப நாளாயிற்று... ஆனால் இன்றைக்கு வேண்டாம். நாளைக்குக் கட்டாயம் போகலாம்'' என்றாள்.

ஜெகதாவின் முகம் இருண்டது ஏமாற்றத்தினால். ''ஏன், இன்றைக்கு வேறு வேளை இருக்கிறதா உனக்கு?''

''ஊம்... வந்து... ஹிப்னாடிஸப் பயிற்சிகளை அப்படியே விட்டுவிட்டேன் என்று அப்பா கோபித்துக் கொண்டார்... சாயந்தரம் நிச்சயமாய்ச் செய்கிறேன் என்று சொல்லியிருந்தேன்.''

''நிம்மி...!''

''என்னை மன்னித்து விடு, அம்மா. அப்பாவின் பேச்சைத் தட்ட முடியவில்லை...''

ஜெகதா ஒரு பெருமூச்சுடன், ''திரும்பத் திரும்ப நான் எதைத் தடுக்கிறேனோ அதையே செய்கிறாய். என் விதியும் உன் தலையெழுத்தும் அப்படி இருந்தால் யார் என்ன பண்ண முடியும்?'' என்று கூறிவிட்டு அறையை விட்டுக் கண்ணைத் துடைத்துக் கொண்டே சென்று விட்டாள்.

''என்ன, அம்மா தன் வழக்கமான மயான காண்டத்தை நடத்திவிட்டுச் செல்கிறாளா?'' கிண்டலாகக் கேட்ட வண்ணம் உள்ளே வந்தார் புரொபசர் மித்ரா.

அம்மாவைப் பார்க்கிறபோது ஏற்பட்ட தயக்கம் தந்தையைப் பார்க்கும் போது ஏற்படவில்லை நிம்மிக்கு. நன்றாகத் தலை நிமிர்ந்து. அவருடைய கண்களை நேருக்கு நேரே சந்தித்தாள். முதல் தடவையாக, அந்த முகத்தில் ஒரு குரூரமும் கொடூரமும் தென்படுகின்ற மாதிரி இருந்தது. அல்லது கல்யாணத்தின் பேச்சினால் தனக்கு ஏற்பட்டுள்ள பிரமையோ என்னவோ!

பேசாது அவரைப் பின்தொடர்ந்தாள். தன் அன்னைக்கும் தந்தைக்குமிடையே நிலவுகின்ற வினோதமான பகைமையை நினைத்து அவள் மீண்டும் குழம்பியிருந்தது.

பின்கட்டு வெராந்தாவின் கடைசி அறையைத் திறந்தார் புரொபசர். ஜன்னல்கள் மூடப்பட்டு இருந்ததால் கும்மென்ற வெப்பம் அவர்களைத் தாக்கியது. கண்கள் இருட்டுக்குப் பழக்கப்படச் சில வினாடிகள் பிடித்தன.

சுவரோரமாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்த மணைப் பலகையை எடுத்துப் போட்டு, ''உட்கார்'' என்றார் புரொபசர்.

நிம்மிக்கு அது உடனே காதில் விழவில்லை. ''ஊம்? என்னப்பா சொன்னீர்கள்?'' என்று கேட்டுத் தந்தையைப் பார்த்தாள்.

''நிம்மி! இன்று உன் மனம் கண்டபடி அலை பாய்ந்து கொண்டே இருக்கிறது. என்ன விஷயம்?''

கடுமையாக வெளிப்பட்ட தந்தையின் கேள்வி நிம்மியைச் சுதாரிக்க வைத்தது. ''...இல்லையே அப்பா! நான் சரியானபடிதான் இருக்கிறேன்'' என்றவள், சான்றுக்காக, ஒரு பொய்ச்சிரிப்பையும் வெளிப்படுத்தினாள்.

''மனோவசியக் கலைக்கு முதல் பாடம், தன் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது என்று எவ்வளவு முறை சொல்லித் தந்திருக்கிறேன் உனக்கு? உன் மனத்தை நீ கட்டுப்படுத்திய பிறகுதான் பிறர் மனத்தை வசியப்படுத்த முடியும். அரிச்சுவடியே மறந்து விட்டது உனக்கு'' என்றபடி புரொபசர் வாசற் கதவைச் சாத்தினார். கொஞ்ச நஞ்சமிருந்த வெளிச்சமும் அத்துடன் செத்தது. ''கேள்! அறிவு, விட்டத்துக்கு விட்டம் தாவக் கூடாது. சிந்தனை கண்டபடி சிதறி ஓடக்கூடாது. எதை நினைத்தாலும் அதைப்பற்றியே நினைக்க வேண்டும். அதற்குப் புறம்பான இன்னொன்றை,

அதைத் தவிர மற்றொன்றை நினைக்கக் கூடாது. ஏகாக்கிரமான சித்தம் - ஒருமுனைப்பட்ட எண்ணம் - அதுதான் முதல் தேவை. அது இல்லை உன்னிடம்.''

''இருக்கிறது அப்பா.''

''சொன்னால் சரியாகிவிடுமா? சில நிமிடம் அதைப்பயிற்சி செய். கால்களை மடக்கி, சப்பணமிட்டு உட்கார்.''

''உட்கார்ந்தேன், அப்பா.''

''இடது கையை மடியில் வைத்துக் கொள்.''

''வைத்துக் கொண்டிருக்கிறேன்.''

''வலது கையை வலது முழங்காலின் மீது வைத்துக் கொள்.''

''ஆயிற்று அப்பா.''

''இனி, இந்த வினாடியிலிருந்து உனக்கு அந்த வலது கையைத் தவிர வேறெதைக் குறித்தும் சிந்தனை போகக் கூடாது.''

''சரி அப்பா.''

''வலது முழங்கால் மீது இருக்கும் அந்த வலது கையைப் பற்றித்தான் உன் எண்ணம் இருக்க வேண்டும்.''

''எப்படிச் செய்வது அதை?''

''அப்படிக் கேள்'' என்றார், புரொபசர் உற்சாகத்துடன். ''அந்தக் கையின் வடிவத்தை, கற்பனைச் சித்திரமாக மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்திக் கொள். அதன் வளைவுகள், விரல்களின் நீளம், பருமன், நிறம், மேடு பள்ளம், நகத்தின் கூர்மை, ரேகைகளின் ஓட்டம், சருமத்தின் மென்மை, மணம் - இவைகளையெல்லாம் ஒவ்வொன்றாக நினைத்து நினைத்துப் பார். வலது கை, வலது கை, வலது கை! இதைத் தவிர வேறொன்றும் -''

வெளியே யாரோ சிரிக்கிறாற் போலச் சத்தம் கேட்டது. பிரமையா நிஜமா? புரொபசரின் பேச்சு அரை வினாடிக் காலம் தடைப்பட்டுப் பிறகு தொடர்ந்தது.

''அந்த வலது கைதான் உன் மொத்த உடம்பும் என்று எண்ணிக்கொள். வேறு உறுப்புக்களே உன்னிடம் கிடையாது. உன் கண், காது, மூளை எல்லாம் அந்த வலது கைக்குள் புகுந்து விட்டாற் போல் நினை. நீயென்பது அந்த வலது கைதான் என்றால் எப்படியிருக்குமோ அப்படிச் சிந்தனைகளை யெல்லாம் அந்த வலது கைக்கு ஒரு முகப்படுத்து. கையைச் சிறிதும் அசைக்காமலே அதில் பலவகையான ஸ்பரிசங்கள் ஏற்படுவதுபோல் கற்பனை செய்...''

நிசப்தம் ஆட்கொண்டது அந்த அறைக்குள்ளே. இருட்டிலே சஞ்சரிக்கும் சிறுத்தைப் புலி போல, இரு வருடைய மூச்சுக் காற்று ஒன்று மட்டுமே அந்த அறைக் குள்ளே நடமாடிற்று. வெப்பத்தினாலும் புழுக்கத்தினாலும் பெருகுகின்ற வியர்வை, காற்றோடு கலந்து துர்க்கந்தமாகி, கயவனின் நெஞ்சம் துரத்த மறுக்கும் தீயெண்ணத்தைப் போல அந்த அறைக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தது.

''ஆயிற்றா?''

''ஆமாம்பா. இப்போது நீங்கள் கேட்ட வரையில் என் சிந்தனை துளியும் விலகவில்லை அகலவில்லை. வலது கையைப்பற்றியே எண்ணமிட்டேன்'' என்றாள் நிம்மி.

''நல்லது. இனி ஏதாவது ஒரு எண்ணை நினைத்துக் கொள் - ஒன்பதுக்குள்.''

''நினைத்துக் கொண்டேன்.''

''என்ன எண்?''

''எட்டு.''

''சரி. அந்த எட்டை மனசுக்குள் எழுதிப் பார்த்துக் கொள். எப்படி வளைந்து, எப்படி இறங்கி, எப்படி ஏறி,

எப்படி வட்டமாகச் செல்கிறது என்று சின்னஞ்சிறு அம்சங்களையெல்லாம் விரிவாகச் சிந்தனைச் செய்.''

முன்போலவே சிறிது அவகாசம் கொடுத்தார் புரொபசர். ''முடிந்ததா? அடுத்தபடி, எட்டு என்றவுடனே உனக்கு என்னென்ன தோன்றுகிறதோ அதையெல்லாம் நினைத்துக்கொள். எட்டாம் நம்பர் பஸ், எட்டு வயதுப் பையன். ஆக்டகன் - இப்படிச் சிந்தனை செய். ஆனால் அதைத் தாண்டி அப்பால் போகாமல் திரும்ப எட்டுக்கே வந்துவிடவேண்டும். புரிகிறதா?''

''சரி அப்பா.''

முன்போலவே நிசப்தம் நிலவியது அறைக்குள். ஆனால் நீண்ட நேரமல்ல. அந்தச் சிரிப்பொலி மீண்டும் கேட்டது. அப்போது அறைக்கு அருகே கேட்டது. இப்போது தொலைவில் கேட்கிறது.

புரொபசருக்கு இருக்கை கொள்ளவில்லை. கதவை மெல்லத் திறந்து கொண்டு வெளியே வந்தார்.

ஹா ஹ்ஹாஹா.

அந்தச் சிரிப்பு எந்தக் கண்டத்திலிருந்து வருகிறதென்று சட்டெனப் புரிந்துவிட்டது புரொபசருக்கு.

நீலகண்டன்.

பக்கத்தில் இருந்தது அவருடைய அறை. ஆனால் எப்போதும்போல் பூட்டப்பட்டிருக்கவில்லை.

''வா, வா'' மதுக்கோப்பையும் கையுமாக இருந்த நீலகண்டன், திகைப்புடன் எட்டிப் பார்த்த புரொபசரை வரவேற்றார்.

''கொஞ்சம் முன்னால் சிரித்தது நீதானா?'' என்றார் புரொபசர்.

''ஆமாம். நிம்மிக்கு நீ பயிற்சி கொடுத்துக் கொண் டிருப்பது காதில் விழுந்தது, சிரித்தேன்'' என்றார் நீலகண்டன். சிவப்புத் திரவம் அவர் உதட்டில் பளபளத்து, மோவாயில் வழிந்தது. ''முட்டாள்! முட்டாள்!'' என்று மீண்டும் நகைத்தார்.

தகரப் பீப்பாய்கள் உருளுவது போல நீலகண்டனின் சிரிப்பு அலை அலையாக ஒலித்துக் கொண்டேயிருந்தது.

## 15

It is clear that hypnotism can be characterised as an interpersonal influence situation. In all cases at least two persons are involved, the hypnotist and the subject.

- John Mann in 'Changing Human Behavior'

ஓயாது, அடுக்கடுக்காக வரும் நீலகண்டனின் சிரிப்பு, புரொபசர் மித்ராவின் எரிச்சலைத் தூண்டி விட்டது.

''நிறுத்தப் போகிறாயா இல்லையா, உன் பைத்தியக் காரச் சிரிப்பை!'' என்று அதட்டியவர் விருட்டென்று அவர் கையிலிருந்து விஸ்கி புட்டியையும் கோப்பையையும் பறித்தார்.

விளக்கு அணைக்கப்பட்ட மாதிரி சட்டென்று நீலகண்ட னின் சிரிப்பு நின்றது. குழந்தையைப்போல உதட்டைப் பிதுக்கிக் கொண்டார். ஏமாற்றத்தினால் அவர் முகம் வாடியது.

''சரி, சரி, சிரிக்கவில்லை. இனி மேல் சிரிக்க மாட்டேன். நீ பாட்டுக்குப் பாட்டிலை எடுத்துக்கொண்டு போய்விடாதே'' என்று மன்றாடிய வண்ணம் கையை

நீட்டினார். ''கொடுத்து விடு! என் ஆருயிர் நண்பனில்லையா நீ? என்னை வாட்டாதே. கொடுத்துவிட்டுப் போ. இனிமேல் சிரிக்க மாட்டேன்.''

புரொபசர் மித்ரா அவருடைய மேஜைமீது திரும்ப வைத்தார் விஸ்கி புட்டியை. ''இனிமேல் சிரிக்காமலிருப்பது இருக்கட்டும். இதுவரை சிரித்தது எதற்காக என்பதைச் சொல்லு.''

''என்னைத்தான் பைத்தியக்காரன் என்கிறாயே! பைத்தியக்காரன் எதற்கு வேண்டுமானாலும் சிரிப்பான். விட்டுவிடு'' என்றார் நீலகண்டன்.

''நீயா பைத்தியம்! வாய் தவறிச் சொல்லிவிட்டேன். எட்டு ஊரைப் பைத்தியமடிப்பாய் நீ!'' என்றார் மித்ரா வெறுப்புடன் ''சொல்லு, எதற்காகச் சிரித்தாய்?''

கோப்பை வழிய மதுவை ஊற்றிக்கொண்டு இளித்தார் விகாரமாக நீலகண்டன். ''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை. நிம்மியைக் கொண்டு என்னென்னவோ வித்தைகளை யெல்லாம் செய்ய முயலுகிறாயே என்று நினைத்தேன். சிரிப்பு வந்தது.''

''ஏன்? என் முயற்சியிலே என்ன தப்பைக் கண்டாய்?''

குடிகாரனின் புத்தி எப்படி வேண்டுமானாலும் மாறும் என்பதைப புரொபசர் மறந்துவிட்டார்.

''ஏனப்பா என் உயிரை எடுக்கிறாய்?'' என்று திடீரென்று சீறினார் நீலகண்டன். ''உனக்கும் கடவுள் அறிவைக் கொடுத்திருக்கிறான், கண்ணைக் கொடுத்திருக் கிறான், காதைக் கொடுத்திருக்கிறான். யோசனை செய்து பாரேன். அல்லது அனுபவத்தில் தெரிந்துகொள்ளேன்!''

புரொபசர் பின்னடைந்து போனார் அந்த வினாடியே. நீலகண்டனை அளவுக்கு மீறிச் சீண்டிவிட்டோம்

போலிருக்கிறது என்று உணர்ந்தவராக, உருவமில்லாத வெறும் முனகல்களை வெளியிட்டுப் புறப்பட்டார். ஆனால் கதவைச் சாத்திக்கொண்டு செல்லுகையில் இன்னொரு நினைவு ஏற்படவே மீண்டும் எட்டிப் பார்த்தார்.

''இந்த அறைக்கதவு பூட்டியே இருந்ததே, யார் திறந்தது?'' என்று வினவினார்.

நீலகண்டனின் முகத்தில் இப்போது சீற்றம் அகன்று விட்டது. சாந்தம் நிலவியது. ''நான்தான் திறந்துவைக்கச் சொன்னேன், ஜெகதாதான் திறந்து வைத்தாள்.''

''எப்போது? எதற்காக?''

''நேற்று சமையற்காரன் சாப்பாடு கொண்டுவந்தபோது ஜெகதாவும் வந்திருந்தாள். 'ஏன் உன் புருஷன் என்னைப் பூட்டியே வைத்திருக்கிறான்?' என்று கேட்டேன். தெரியாது என்றாள். 'நான் எங்கேயும் ஓடிவிட மாட்டேன், திறந்தே வைத்திரு' என்றேன். சமையல்காரனிடம் சொல்லிவிட்டுப் போனாள். அதிலிருந்து திறந்துதான் கிடக்கிறது.''

நீலகண்டனையே பார்த்தபடி பேசாது நின்றிருந்தார் புரொபசர்.

''உனக்கும் சொல்கிறேன். அறையை எதற்காகப் பூட்டுகிறாய்? நீ முதல் நம்பர் பைத்தியக்காரன். சொர்க்கம் போலிருக்கிற இந்த வாழ்க்கையை விட்டுவிட்டு நான் ஓடிப்போவேன் என்று எதற்காக நீ நினைக்கிறாய்! எந்தச் சொர்க்கத்துக்கு ஓடினாலும் இந்தத் தேவாமிர்தம் தட்டில்லாமல் எனக்குக் கிடைத்துக் கொண்டிருக்குமா?'' விஸ்கி புட்டியைத் தூக்கிக் காட்டினார் நீலகண்டன். ''மித்ரா, இந்த வீட்டுக்குள்ளே என்னை அடைத்தே வைத்திருக்க, இதைக்காட்டிலும் பலமான பூட்டும் சாவியும் கிடையாது! என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினால்கூட இங்கேதான் திரும்பி வருவேன்!''

முன்போலவே கபகபவென்று சிரிக்கத் தொடங்கினார் நீலகண்டன்.

நிற்க நிற்கத் தன்னுள் ஆத்திரம்தான் பெருகுகின்றது என்பதைத் கண்டார் புரொபசர், கதவினருகில் உள்ள அலமாரியில் பூட்டும் சாவியும் இருந்தன. அவற்றை எடுக்கச் சென்றவர், எண்ணத்தை மாற்றிக்கொண்டவராக, கதவைப் பூட்டாமலே வெளியேறினார். பற்களைக் கெட்டியாகக் கடித்துக்கொண்டிருந்ததால் நறநறவென்ற ஓசைகூடக் கேட்டது. வாணலியில் புரட்டிப் புரட்டி வறுக்கப்படுவது போன்ற இந்தச் சித்திரவதைக்கு விரைவிலேயே ஒரு முடிவு கட்டி விடவேண்டும் என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்வதுகூட வெளியே கேட்டு விடும்போல அவ்வளவு தீவிரமாக இருந்தது.

நிம்மியை விட்டுவிட்டு வந்திருந்த அறைக்குள் அவர் திரும்பிய போது அவள் இன்னும் அதே நிலையில்தான் இருந்தாள். அவளுடைய இடது கை மடியிலும், வலது கை முழங்காலின் மீதும் கிடந்தன. கதவைத் திறந்ததால் உட்புகுந்த சிறிய வெளிச்சத்தில், அவளுடைய மேனி சற்றும் தொய் வில்லாமல், பஞ்ச உலோகத்தில் வடிக்கப்பட்ட விக்கிரகம் போல நேர்த்தியும் உறுதியும் வாய்ந்ததாக நிமிர்ந்து அமர்ந்திருப்பதைக் கண்டார் மித்ரா. அவளுடைய மூடிய கண்களையும் விசாலமான நெற்றியையும் மெல்லச் சிலுசிலுக்கும் கூந்தலையும் கவனித்தவாறு யோசித்தார். தன் எண்ணங்களை இவள் மூலமாக ஏன் நிறைவேற்றிக்கொள்ள முடியாது? ஏன் அதை நகைப்புக்கிடமான விஷயமாக நீலகண்டன் நினைக்க வேண்டும்?

''நிம்மி!'' என்று அழைத்தார்.

பதிலில்லை.

''நிம்மி!'' என்று இன்னொரு முறை பலமாய்க் கூப்பிட்ட பிறகே அவள் அசைந்தாள். கண்களைத் திறந்தாள். அசையாது கிடக்கும் வலது கையின்மீது அவள் பார்வை சில வினாடிகளுக்கு நிலைத்தது. பிறகு, ''நான் வேறு, என் வலது கை வேறு என்ற நினைப்பிலிருந்து விடுபடுவதே பெரும் பிரயத்தனமாக இருக்கிறது'' என்றாள் புன்சிரிப்புடன்.

''கங்கிராசுலேஷன்ஸ்!'' என்று பாராட்டி, கையை நீட்டினார் புரொபசர் அவள் எழுந்திருப்பதற்காக.

அதைப் பிடித்துக்கொண்டு ஒரு குழந்தைபோல உற்சாகத்துடன் குதித்துக்கொண்டே எழுந்துகொண்டாள் நிம்மி. ''எவ்வளவு மார்க் கொடுப்பீர்கள் அப்பா?''

''இன்னும் இரண்டு டெஸ்ட் பாக்கி இருக்கிறதே!'' என்றார் புரொபசர். ''என்னோடு வா.''

''எங்கே அப்பா?''

''வாயேன்.''

படியேறி மாடியை அடைந்தவர், அதற்கும் மேலுள்ள மொட்டை மாடிக்கு நிம்மியை அழைத்துப் போனார். அங்கிருந்து பார்த்தபோது, அந்தத் தெரு முழுமையும் தெரிந்தது.

கைப்பிடிச் சுவரில் கையை ஊன்றிக்கொண்டு, ''அப்படிப் பார்'' என்றார் புரொபசர்.

நிம்மி கவனித்தாள். அவர்களுடைய தெரு எப்போதுமே அமைதியாக இருக்கும். அடுத்தாற் போலுள்ள புரொபசரின் 'தொழிற்சாலை'யை விட்டு விட்டால் மற்ற எல்லாம் பங்களாக்கள்தான். இருபுறமும் நிழலான மரங்கள் உண்டு.

ஆறேழு பங்களாக்கள் தாண்டிய பிறகு அந்தத் தெருவை ஒரு குறுக்குத் தெரு வெட்டியது. அந்தச் சந்தியில், தெரு

ஓரமாக, ஒரு சிறிய மதகு இருந்தது. அந்த மதகுச் சுவர்மீது ஓர் ஆள் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான். பார்ப்பதற்குத் தொழிலாளி போன்றிருந்தானே தவிர, அவனுடைய முகம் தெரியவில்லை. நிம்மியின் பக்கம் முதுகைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

''உன் மனோவசிய சக்தி எவ்வளவு வலுவாயிருக்கிறது என்பதற்கு இன்னொரு பரீட்சை இது என்றாள் புரொபசர் மித்ரா. ''அதோ, அந்த ஆள்முகத்தைத் திரும்பி உன்னைப் பார்க்க வேண்டும்.''

நிம்மி சிரித்துவிட்டாள். ''கவண் வைத்துக் கல் எறியவேண்டுமா அப்பா?''

''உன் மனம்தான் கவண். எண்ணம்தான் கல். அவனைத் திரும்பும் படி செய்யவேண்டும் என்ற எண்ணத்தைத் தீவிரமாகச் சிந்தனை செய். அவனுடைய கழுத்தின்மீது உன் பார்வையைப் பதித்துக்கொள். கத்தியால் குத்தினாற்போல அந்த ஒரு இடத்திலேயே கண்களை நிலைநாட்டிக்கொள். திரும்பிப் பார், திரும்பிப் பார், திரும்பிப் பார் என்று இடைவிடாமல் ஜபம்போலச் சொல்லிக் கொண்டேயிரு. உன் உச்சாடனம் கதிர்கள்போல அடுக்கடுக்காக, அலையலையாக புறப்பட்டு அவன் பிடரியைத் தாக்கி, நீ கண்ணைச் செலுத்துகின்ற பகுதியைச் சுரீரென்று பொசுக்கினாற்போல் செய்ய வேண்டும். செய்து பார்.''

நிம்மியிடமிருந்து சிரிப்பு மறைந்துவிட்டது. அவள் வதனத்தில் ஒரு கடுமையும் தீவிரமும் படர்ந்தன. தந்தை சொல்லித் தந்தபடி சிந்தனையை ஒன்றுகுவித்து, அந்த மதகடி ஆளின் கழுத்திலே பார்வையைப் பதித்தாள். அவளுடைய உதடுகள் வெகு வேகமாக, ஆனால் துளி சத்தமும் வெளிப் படாமல் அசைந்தன. சுமார் முப்பது வினாடிகள் தான்.

என்ன ஆச்சரியம்!

அவன் திரும்பினான். முகத்தை உயர்த்தி, மாடியில் நின்றிருந்த புரொபசரையும் நிம்மியையும் பார்த்தான். நிம்மி வேறுபுறம் திரும்புகிற வரையில் அவர்களையே பார்த்தவாறிருந்தான்.

''அப்பா!'' என்றாள் நிம்மி. வியப்பும் பிரமிப்பும் மேலிட்ட குரலில், ''எப்படியப்பா இது நடைபெற்றது? என்னால் நம்ப முடியவில்லை!''

அவள் கைகளைக் குலுக்கினார் புரொபசர். ''நிம்மி! இதெல்லாம் பாதிக்கு மேல் நான் புத்தகங்களில் படித்தவை. மறு பாதி நீலகண்டன் சொல்லித் தந்தவை. ஆனால் உன் அளவுக்கு மனோவசிய சக்தி எனக்கு என்றைக்குமே ஏற்பட்டது கிடையாது. அதனால்தான் நீயாவது வெற்றி பெறவேண்டும் என்று ஆசைப்பட்டேன். பாடுபட்டேன்.''

''இப்போதாவது மார்க் போடுவீர்களா?''

''நூற்றுக்கு இருநூறு போடத் தயார்'' என்றார் புரொபசர். ''கீழே போகலாம் வா.''

தந்தையைத் தொடர்ந்து கீழிறங்கி வந்தாள் நிம்மி. புரொபசர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''நிம்மி, பழைய நினைவுகளைக் கிளறி வெளிக்கொண்டு வரும் சோதனையை முன்பு நீ செய்தாயல்லவா அம்மாவிடம்?''

''ஆமாம்...'' என்றாள் நிம்மி தயக்கத்துடன். ஏனோ ஓர் இனம் தெரியாத அச்சம் அவள் இதயத்தில் படரத் தொடங்கியது.

''யாருக்கும் எளிதில் கிட்டாத சக்தி அது. உன்னுடைய அஜாக்கிரதையினாலும் அலட்சியத்தினாலும் நீ அதை இழந்து விடக்கூடாது என்பதுதான் என் ஒரே கவலை. அதற்கு முன்னால் மற்ற மனோசக்திகள் உன்னிடம் வற்றிவிடாதபடி இருக்கிறதா என்றுதான் பரீட்சை பார்த்தேன். இருக்கிறது.''

''தாங்ஸ், அப்பா. காலேஜ் நோட்ஸ்கள் ஒரு வண்டி என் சினேகிதிகளிடம் இரவல் வாங்கி வந்திருக்கிறேன். காப்பி பண்ணவேண்டும்'' என்று புறப்பட முயன்றாள் நிம்மி.

''முக்கியமான பரீட்சையின் போது நழுவப் பார்க்கிறாயே?'' என்று செயற்கையாகச் சிரித்தார் புரொபசர். ''அன்று பாதியில் நின்றுவிட்டது நம் பரிசோதனை. விட்ட இடத்தில் ஆரம்பிக்க வேண்டாமா?''

பல்வகை உணர்ச்சிகளும் யோசனைகளும் எண்ணங்களும் நிம்மியின் இருதயத்துக்குள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. அப்பாவின் நோக்கத்தில் ஓர் அரக்கத்தனமான அம்சம், ஈனத்தனமான பகுதி, குடிகொண்டிருக்கிறதென்று கல்யாணம் சொன்னது சரிதான், சரிதான் என்று அவள் நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து ஒரு குரல் ஓயாது அலறியது.

''என்ன தயங்குகிறாய்?'' என்றார் புரொபசர்.

''ஒன்றுமில்லை, அப்பா.''

''உனக்கு அந்தச் சக்தி இருக்குமோ, போயிருக்குமோ என்று சந்தேகப்படுகிறாயா? கவலைப்படாதே. நிச்சயமாய் உன்னால் முடியும். அதற்காகத்தானே மற்றப் பரீட்சைகளை நடத்தினேன்!''

''ஆமாம், ஆமாம்.''

''சரி, நீ போய் ஆயத்தங்கள் செய். பின்னாலேயே வருகிறேன்'' என்றார் புரொபசர்.

நிம்மி ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாக அந்த அறையை விட்டு வெளியேறிச் சென்றாள். அவள் செல்வதைத் திருப்தியுடன் பார்த்துக் கொண்டார் மித்ரா. அவருடைய தடித்த உதடுகளில் ஒரு மெல்லிய புன்னகை பரவியது. 'நடுநடுவே என்னவோ முரட்டுப் பிடிவாதம் வருகிறதே தவிர, குழந்தைதான் இவள்' என்று தனக்குத்தானே

சொல்லிக் கொண்ட மாதிரி தலையை ஆட்டினார். பிறகு ஸ்டூல் பீரோவைத் திறந்து, செருகறையை வெளியிழுத்து, பத்திரப்படுத்தி வைத்திருந்த ஒரு பழைய டயரியை எடுத்துப் புரட்டினார். சற்று முன்பு மகளுடன் பேசிக் கொண்டிருந்த தருணங்களில் பேசிக்கொண்டிருந்த தருணங்களில் மறைந்திருந்த ஒரு கடினம் அவர் முகத்தை இரும்பாக்கியது. தண்ணீர் வற்ற வற்ற, அடியிலிருக்கும் அழுக்குகள் புலனாவது போல, அவர் உள்ளத்தின் மென்மையான உணர்வுகள் வறள, வறள, அடியிலுள்ள பேய்த் தன்மைககள் பல்லிளிக்கத் தொடங்கின.

டயரியை உள்ளே வைத்துப் பழையபடி பூட்டிவிட்டு நிம்மியின் அறையை நோக்கி நடந்தார். அந்த நடையில் வேகம்தான் தென்பட்டதே தவிர, ஆத்திரம் மறைந்திருந்தது.

கதவை ஒருமுறை தட்டிவிட்டு நிம்மியின் அறைக்குள் நுழைந்தார். திகைத்தார், அறையின் மறுகோடியில் நாற்காலியில் அமர்ந்திருப்பவரைக் கண்டதும்.

''நிம்மி, அம்மாவை அழைத்து வரவில்லை?'' என்றார், எச்சரிக்கையாகப்பதற்றத்தை அடக்கிக் கொண்டு.

''அம்மா சமையற்காரரிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். வேலையாயிருப்பவளைக் கூப்பிட வேண்டாமென்று நம்ம டிரைவரை அழைத்து வந்தேன் அப்பா.'' நிம்மியும் தன் உள்ளக்கிடக்கையைச் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு அமைதியாகவே பதிலளித்தாள்.

நாற்காலியில் ஒடுங்கினாற் போல் உட்கார்ந்திருந்த கார் டிரைவர், புரொபசரைக் கண்டவுடனே எழுந்து கொண்டான் பயத்துடன், தந்தையும் மகளும் பேசிக் கொள்ளும் பேச்சில் சூடும் காரமும் ஒளிந்திருப்பதை அவனுடைய மந்தமான

அறிவுகூடப் புரிந்து கொண்டு விட்டது. அதற்குக் காரணம் தான்தான் என்று ஊகித்துக்கொண்டதும் அவன் உடம்பு நடுங்கவே ஆரம்பித்து விட்டது.

''போ வெளியில்'' என்று புரொபசர் சொல்லி முடிக்கு முன்பே, உயிர்தப்பிய மகிழ்ச்சியுடன்அவன்ஓட்டம் பிடித்தான்.

''ஏனப்பா, அவனுக்கென்ன?'' என்றாள் நிம்மி.

''விளையாடுகிறாயா?'' கோபத்தினால் ஜிவுஜிவு வெனச்சிவந்திருந்தது புரொபசரின் முகம். ''உன் அம்மாவைத் தானே கூப்பிட்டுக் கொண்டுவரச் சொன்னேன்?''

நிம்மிக்குக் காலோடு தலை நடுக்கம் கண்டுவிட்ட போதிலும், மனத்துக்குள் ஏற்படுத்திக் கொண்டிருந்த உறுதி அதை மறைத்தது. தந்தையின் கோபத்திலிருந்து கல்யாணம் கூறியது உண்மைதான் என்று புரிந்ததால், அந்த அநீதியை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற தீர்மானமும் அவளுக் குள் வலுப்பெற்றது. ''என்னப்பா சொல்கிறீர்கள் நீங்கள்'' என்று களங்கமற்ற குழந்தை கேட்பது போலவே கேட்டாள். முதல் ரக நடிகையினால்கூடக் காட்ட முடியாத திகைப் புணர்வைக் காட்டின அவள் கண்களும் உதடுகளும். ''அந்தத் தெருக்கோடியில் உட்கார்ந்திருந்த ஆளைத் திரும்பிப் பார்க்க வைக்கவில்லையா? அவன் முன்பின் தெரியாத யாரோ ஒருவன்தானே? நம்முடைய மனோசக்தியைப் பரீட்சிக்க யாராயிருந்தால் என்ன?''

''நிம்மி! நீ அறிந்து பேசுகிறாயா, அறியாமல் உளறுகிறாயா?'' என்று உறுமினார் மித்ரா.

''அறிந்துதான் பேசுகிறேன். இந்த டிரைவருக்கும் ஒரு கடந்த காலம் இருக்கத்தானே இருக்கும்? 'ஹிப்னாடிக் ரிக்ரஷனு'க்கு உட்படுத்தினால், இவனும் தன் கடந்தகால

வாழ்க்கையைச் சொல்லத்தானே போகிறான்? அது போதாதா என் சக்தியைப் பரீட்சித்துக் கொள்ள?''

''நிம்மி!'' அவள் தோள்கள் இரண்டையும் தன் உருக்குக் கரங்களினால் இறுக்கிப் பிடித்து உலுக்கினார் மித்ரா. காய்ந்த சருகுகள் பொடியாகிப் பொலபொலவென்று உதிர்வது போல் நிம்மியின் எலும்புகள் நொறுங்கிக் கொண்டிருந்தன. இருந்தாலும் தன் அப்பாவி வேடத்தைக் கைவிடக் கூடாதென்று முகத்தில் புன்னகையையும் திகைப்பையும் அப்படியே வைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

''நிம்மி! உனக்கு இவ்வளவு வித்தைகளைக் கற்றுத் தந்த பிறகு, இத்தனை பயிற்சிகளுக்குப் பழக்கிய பிறகு, நீ சொல்லி நான் கேட்கவேண்டியதில்லை. நான் என்ன சொல்கிறேனோ, எதை விரும்புகிறேனோ அதைத்தான் நீ செய்ய வேண்டும். இந்த ரிக்ரஷன் பரிசோதனைக்கு உன் அம்மா வேண்டும் என்று நான் சொன்னால் அம்மாவைத் தவிர வேறு யாரும் கூடவே கூடாது! புரிகிறதா?''

மிரள மிரள விழித்தாள் நிம்மி. ''புரிகிறது அப்பா...'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''இன்னொன்றும் சொல்லிவிடுகிறேன், கேள். இந்த இரண்டுமூன்று நாட்களுக்குள் நீ எங்கெங்கே சென்றிருந்தாய், என்னென்ன செய்தாய் என்பது எனக்குத் தெரியும். இந்தப் புரொபசர் மித்ராவுக்கு ஓராயிரம் காதுகள், ஈராயிரம் கண்கள்! இருந்த இடத்திலிருந்து அங்குலமும் நகராமலே உலகத்தில் நடப்பது மொத்தத்தையும் அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலும் வசதியும் ஒற்றர் படையும் இந்த மித்ராவுக்கு உண்டு. நீ எதையெதை என்னிடம் மறைத்திருக்கிறாய் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டும் நான் பேசாமலிருக்

கிறேன் என்றால், அது, என் இஷ்டத்துக்கு நீ வளைந்து கொடுப்பாய் என்கிற ஒரே காரணத்துக்காகத்தான். அந்த நம்பிக்கை தகருகின்ற மறுவினாடியே உன் சுதந்திரங்கள் வெட்டப்பட்டுவிடும்! ஞாபகத்தில் வைத்துக் கொள்!'' முத்தாய்ப்பு வைத்தாற் போலத் தரையை ஓர் உதை உதைத்துவிட்டு, ஆங்காரத்துடன் போய்விட்டார் புரொபசர்.

அந்தத் திசையையே பார்த்தபடி வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள் நிம்மி. கசாப்புக் கடையின் நட்ட நடுவே திடீரெனக் கொண்டு போய் நிறுத்தப்பட்ட குழந்தையைப் போல, கற்பனையிலும் எண்ணியிராத ஓர் அருவருப்பான உலகத்தைக் கண்டு அதிர்ச்சியினால் தடுமாறிப் போனாள் அவள்.

இருள் அவளுடைய அறையைச் சூழ்ந்து கொண்டது. வெளியுலகம் ஓய்ந்து கொண்டிருந்தது. தெருவிலே, கடைசிக் கதவுகள் சாத்தப்பட்டன. கடைசிப் பேச்சுக்கள் நிறுத்தப்பட்டன.

பிரமையினால் கல்லாகி, மரக்கட்டிலும் அவளும் வேறல்ல என்னுமளவுக்கு நிம்மி சலனமற்றுக் கிடந்த சமயத்தில் -

அறைக்குள் யாரோ நுழைந்தார்கள். தடாலென்று அவள் காலடியில் விழுந்தார்கள்.

''நிம்மி! அப்பா சொன்ன படியே செய்! சொன்னபடியே செய்!''

அம்மாவா...!

பதறி எழுந்தாள் நிம்மி.

•

# 16

For many years, fairgronund hypnotists used crabs, stroking them from the head to the tail. The hypnotized crabs would remain standing of their heads.

- P.Daco

தான் காண்பது கனவு என்ற எண்ணம்தான் நிம்மிக்கு முதலில் உண்டாயிற்று. என்னென்னவோ குழப்பங்களுடன் கண்ணுறங்கியதால், அரைகுறையான தூக்கத்தின் நடுவே இப்படியொரு பிரமை ஏற்படுகின்றதுபோலும் என்று ஒரு வினாடி அவள் கருதினாள்.

ஆனால் இருட்டின் நடுவே பார்வை பழக்கப்பட பழக்கப்பட, அம்மாவின் ஈரமடைந்த கண்களைத் தனது கைகளும் மடியும் ஸ்பரிசிக்க ஸ்பரிசிக்க, நடப்பதனைத்தும் உண்மைதான் என்று நிம்மிக்குப் புரிந்தது.

தரையிலே அமர்ந்து, கட்டிலின் விளிம்பில் தலையைச் சாத்திக் கொண்டு கேவிக் கேவி அழுகின்ற அன்னையை, தோளைப் பற்றித் தூக்கினாள் நிம்மி. அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்த்தி வைத்தாள்.

அப்போதுதான் அவள் கையில் ஒரு சிறிய அட்டைப் பெட்டி இருப்பதைக் கண்டாள். கைக்குக் கனமாயிருக்கிற தென்று தெரியவில்லை. அம்மா வரும் போது அதையும் கொண்டு வந்திருக்கிறாள் என்றுமட்டும் தெரிந்தது.

அந்தப் பெட்டியை மடியில் வைத்துக்கொண்டு இறுக்கமாகப் பற்றியபடி'' ''நிம்மி! இந்த அவல வாழ்க்கையை என்னால் பொறுக்க முடியவில்லை. என்னைக்

காப்பாற்று. உன்னை என் பெண்ணாக நினைக்கவில்லை. எனக்கு உயிர் கொடுக்க வந்த தெய்வமாக நினைக்கிறேன். தயவு பண்ணி அப்பா சொன்னபடி செய். என்னை மனோவசியம் பண்ணு. என்னிடமிருந்து என்ன விஷயத்தை வரவழைக்கவேண்டுமென்று சொல்கிறாரோ அதை வரவழை'' என்று புலம்பலானாள் ஜெகதா.

''இரு அம்மா'' என்று எழுந்துகொண்ட ஜெகதா, அறைக் கதவைத் தாளிட்டுவிட்டுப் படுக்கைக்குத் திரும்பினாள். மிகமிக லேசாயிருந்த வெளிச்சமும் ஒழிந்துவிட்டது. மூச்சுக் காற்றையும் தேம்பும் ஒலியையும் கொண்டுதான் ஜெகதா உட்கார்ந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது.

''என்னம்மா நேர்ந்தது திடீரென்று?'' -அன்னையின் கைகளைப் பிடித்துக்கொண்டு கேட்டாள் நிம்மி. அந்த அட்டைப் பெட்டி மறுபடி தட்டுப்பட்டது.

''ஒன்றும் நேரவில்லை, நிம்மி'' என்று ஒரு வெறுப்புச் சிரிப்புடன் பதிலளித்தாள் ஜெகதா, ''கொஞ்சம் முன்னால் உன்னைச் சாப்பிடக் கூப்பிடுவதற்காக இங்கே வந்தேன். உன் அப்பாவுக்கும் உனக்கும் நடைபெற்ற விவாதம் என் காதில் விழுந்தது.''

திக்கென்றது நிம்மிக்கு.

''நிம்மி, அப்போது என் மனம் பட்ட பாட்டை எப்படிச் சொல்வேன் உனக்கு? பல வருஷங்களாக - நீ பிறந்தது முதற்கொண்டே - புரொபசருக்கு என்மீது ஒரு தீராத வெறுப்பு இருந்து வந்திருக்கிறது. ஆனால் அதற்கு இப்படி ஓர் அருவருப்பான காரணம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை...''

நிம்மி திடுக்கிட்டாள். ஒரே வினாடிக்குள் பல எண்ணங்கள் அவள் மனத்தில் பொங்கின.

அம்மாவின் கடந்த கால வாழ்க்கையை அப்பா ஏன் அறிந்து கொள்ள முயலுகிறார் என்பதைப் பற்றிக் கல்யாணம் சொன்னது வெறும் ஊகம்தான்.

ரிக்ரஷன் பரிசோதனைக்கு அம்மா தேவையில்லை, டிரைவரேகூடப் போதும் என்று சொன்னபோது புரொபசருக்கு வந்த திடீர்க் கோபம், கல்யாணத்தின் ஊகம் சரிதான் என்று எடுத்துக் காட்டிற்று.

இப்போது அம்மாவின் பேச்சு அதை இன்னும் ஊர்ஜிதப்படுத்தி விட்டது. இருந்தாலும் அதைப் பற்றிப் பேச நிம்மி கூசினாள். தனக்கு எதுவும் புரியவில்லை என்று வேஷம் போடவே அவள் விரும்பினாள். குருவி தலையில் வைக்கப்பட்ட பனங்காயைப்போல, பெரியவர்கள் உலகத்தின் கசப்பான உண்மைகள் அவளுடைய குழந்தையுள்ளத்தை அழுத்தி வதைத்தன.

போலியாக ஒரு சிரிப்பை வரவழைத்துக்கொண்டாள். ''என்னென்னவோ உளறுகிறாயே அம்மா? நீ சுத்த இது! ஹிப்னாடிஸத்தைப்பற்றி உனக்கு எதுவுமே தெரியாது! சிற்சில பேரைத்தான் எளிதாக மனோவசியம் பண்ண முடியும். சிற்சிலரிடம் பரிசோதனைகள் செய்தால்தான் வெற்றி தோல்வி தெரியும். அந்தமாதிரி நபர்களில் நீயும் ஒருத்தி. அதனால்தான் அப்பா உன்னைச் சொன்னாரே தவிர நீ நினைக்கிறாற்போல் அருவருப்பான காரணம் எதுவுமில்லை. என்ன இருக்க முடியும் அப்படி?'' என்றாள்.

இகழ்ச்சி நிறைந்த நகைப்பொன்றுதான் ஜெகதாவிடமிருந்து வெளிப்பட்டது பதிலுக்கு. ''என்னை ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டு உன்னையும் ஏமாற்றிக் கொள்ளாதே, நிம்மி! ஒரு தாயார் என் பெண்ணிடம் பேசக்கூடிய விஷயம் இல்லைதான் இது. ஆனாலும் இவ்வளவு தூரம் நடந்தபிறகு எதை மறைத்து என்ன புண்ணியம், சொல்லு! உன்

அப்பாவுக்கு என் மீது மட்டமான சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. நான் எப்போதோ ஒருமுறை அவருக்குத் துரோகம் செய்து விட்டேன் என்று நினைக்கிறார்...''

நிம்மிக்கு உடம்பு சிலிர்த்தது.

தடாலென்று அந்தப் பச்சையான வார்த்தையைச் சொல்லி, சாட்டையால் அடித்த மாதிரி துடிக்க வைத்து விட்டாளே அம்மா!

ஏதோ சொல்ல நினைத்தாள். ஆனால் ஜெகதா இடம் கொடுக்கவில்லை.

''ஒன்று, தன் சந்தேகம் தவறானது என்று தெரிந்து கொண்டு வேதனையிலிருந்து அவர் விடுபட வேண்டும். அல்லது, சந்தேகம் உண்மைதான் என்று நிச்சயப்படுத்திக் கொண்டு எனக்கு என்ன தண்டனை வழங்க முடியுமோ அதை வழங்கிவிட வேண்டும். அதற்குத்தான் உன் ஒத்துழைப்பை நாடுகிறார், உன் அப்பா. உனக்கு ஹிப்னாடிஸம் கற்றுத் தருகிறேன் என்று அவர் ஆரம்பித்த போது, குடும்பப் பெண்ணாக வாழவேண்டியவள் கூத்தாடிப் பெண்ணாகக் கெடக் கூடாதே என்றுதான் நான் எதிர்த்தேன். இப்படியொரு கேவலமான நோக்கத்துடன்தான் அவர் செய்கிறார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. நிம்மி! நான் பெற்ற, நான் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த, என் ரத்தத்துக்கு ரத்தமான, சதைக்குச் சதையான, என் பெண்ணை வைத்தே என்னைப் பரீட்சை பண்ணுவார் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை, கண்ணே!''

ஒரு கேவலுடன் ஜெகதாவின் பேச்சுத் தடைப்பட்டது.

''என்னம்மா நீ, குழந்தை மாதிரி?'' என்று கடிந்து கொண்டு தாயின் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டாள் நிம்மி.

மகளின் மடியில் தலையைப் புதைத்துக் கொண்டாள் தாய். முதுகு குலுங்கிக் குலுங்கித் துடித்தது சில நிமிடங்களுக்கு. பிறகு தானாகவே அடங்கியது. பரிவுடன் தலையைக் கோதிவிடும் மகளின் கைகளைப் பிடித்துக் கொண்டாள் ஜெகதா.

''நானும் நினைத்து நினைத்துப் பார்க்கிறேன், இந்த இழிவான சந்தேகம் அவர் மனத்தில் எப்போது எதனால் முளைத்திருக்கும் என்று. நார் நாராய்க் கிழிகிற மாதிரி என் மண்டையைப் பிய்த்துக் கொள்கிறேன். புரியவில்லை.''

''சும்மா இரு. நீ தலை மயிரைப் பிய்த்துக் கொள்ளவும் வேண்டாம். உனக்குப் புரியவும் வேண்டாம்'' என்று உரிமையுடன் அதட்டிவிட்டு, மண் கூஜாவிலிருந்து தண்ணீர் சரித்து வந்து அம்மாவுக்குக் கொடுத்தாள் நம்மி.

''முதலில் கொஞ்சம் குடி. உன் தொண்டையெல்லாம் காய்ந்திருக்கிறது.''

ஜெகதா மறுக்காமல் அதைப் பருகினாள். கையை நனைத்துக் கண்களையும் துடைத்துக் கொண்டாள். அவள் குரல் ஓரளவுக்குச் சீர்ப்பட்டது. ''அன்றைக்கு அப்பாவோடு வந்து என்னை ஹிப்னாடிஸம் பண்ணி, கேள்விகளெல்லாம் கேட்டாயே? அப்போது நான் என்னென்ன சொன்னேன்?'' என்றாள்.

நிம்மி நினைவுபடுத்திக் கொண்டு, ''உன் கல்யாணத்துக்கு முன்பே அப்பா உன் வீட்டுக்கு வந்ததுண்டு என்று ஏதோ சொன்னாய்'' என்றாள்.

''ஆமாம்... கேள்... மனோவசியம் எதுவும் பண்ணாமலே, எனக்கு ஞாபகமிருக்கிறதையெல்லாம் சொல்கிறேன்... உன்னுடன் பேசுகிற போது எனக்கும் சில குழப்பங்கள் நீங்குகிறமாதிரி இருக்கிறது நிம்மி! உனக்கு ஒன்றும் தொந்தரவில்லையே?''

''சே! சே! சொல்லும்மா'' டம்ளரை வாங்கிக் கொண்ட போது, அம்மாவின் அருகேயிருக்கும் அந்த அட்டைப் பெட்டி நிம்மியின் கையில்பட்டது. என்னதான் இருக்கிறது அதற்குள்? எதற்காக இங்கே கொண்டு வந்திருக்கிறாள்? கேட்கலாமா என்று நினைத்தாள். எப்படியும் அம்மா அதைச் சொல்லத்தான் போகிறாள் என்று தோன்றியது. அவளாகவே சொல்லட்டும் என்றிருந்தாள்.

''நீயும் உன் அம்மா அப்பாவும் அப்போது மாம்பலத்தில் இருந்தீர்கள். இல்லையா?'' என்று எடுத்துக் கொடுத்தாள்.

''ஆமாம், கல்யாணத்துக்கு முன்பே உன் அப்பா எனக்குத் தூரத்து உறவினர்தான். நான் வேலை தேடிக் கொண்டிருந்தேன். என்னை வேலைக்கு அனுப்புவதில் என் அம்மாவுக்கு விருப்பமில்லை. உன் அப்பா அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தார். ஆகவே அவருக்கு என்னைக் கல்யாணம் செய்து வைத்துவிடலாம் என்று ஒருநாள் என் அம்மா என் அப்பாவிடம் சொன்னாள்.''

''நீ அப்போது அவர்கள் அருகில் இருந்தாயா? உன் அம்மா என்னென்ன வாக்கியம் சொன்னாள்? உன் அப்பா என்ன பதில் சொன்னார்?'' என்று விசாரித்தாள் நிம்மி.

அவளை வினோதமாகப் பார்த்தாள் ஜெகதா. ''அம்மாவும் அப்பாவும் பேசிக்கொண்டபோது நான் பக்கத்தில்தான் இருந்தேன். ஆனால் அம்மா என்னென்ன வாக்கியம் பேசினாள் என்று இவ்வளவு வருடம் கழித்து எப்படி நிம்மி எனக்கு நினைவிருக்கும்?''

நிம்மியின் இதழில் புன்சிரிப்பு அரும்பியது. ''ஹிப்னாஸிஸில் இருக்கும் போது மட்டும்தான் அந்தமாதிரி சின்னச் சின்ன விஷயங்களெல்லாம் நினைவுக்கு வரும்!''

என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். ''ஊம், அப்புறம் சொல்லு'' என்று தாயைத் தூண்டினாள்.

''அம்மா அடிக்கடி சொன்னதால், அவள் விருப்பப் படியே என் அப்பா என் கல்யாணத்தை நடத்தி விட்டார். இருந்ததையெல்லாம் திரட்டிப் போட்டு, ஊரிலிருந்து நிலத்தை விற்று எப்படியோ முடித்துவிட்டார். உன் அப்பாவுக்கு அப்போது ஒரு வேலையும் கிடையாது. வயலின் வாசிப்பார் நன்றாய். ஆனால் மாசத்துக்கு ஒரு சான்ஸ் கூடக் கிடையாது. கிடைத்தாலும் பத்தோ இருபதோதான் வரும். கல்யாணத்துக்குப் பிறகு காலணாகூட உதவிசெய்ய முடியாது என்று என் அப்பா சொல்லிவிட்டார். என் அம்மாவுக்கு ஒரு வழியும் தெரியவில்லை. என் வாழ்க்கையைக் கெடுத்து விட்டதாக அழுது புலம்பிக்கொண்டே செத்துப்போனாள். கொஞ்ச நாளில் அப்பாவும் போய் விட்டார். கல்யாணமான நாலாவது மாதமே, யாருமில்லாத அனாதையாக, பைசா சம்பாதிக்காத கணவருடன், நான் நடுத்தெருவில் நிற்கும்படி ஆயிற்று...''

ஜெகதா சிறிது நிறுத்தினாள். நினைவுகளின் கடுமையைத் தாள முடியாதது போல் அவள் சிரம் தாழ்ந்திருந்தது. அன்னை எப்படிப்பட்ட துயரங்களைத் தாங்கியிருக்கிறாள் என்ற வியப்பும், இன்னும் என்னென்ன சொல்லப் போகிறாளோ என்று அறியும் ஆவலும் கண்களில் பளபளக்க அவளையே பார்த்தவாறு படுக்கையில் சாய்ந்து கொண்டிருந்தாள் நிம்மி.

''கல்யாண தினத்தன்று மட்டும்தான் உன் அப்பாவின் சினேகிதர் நீலகண்டன் வந்திருந்தார். பெரிய இடத்துக் கல்யாணங்களில் சாயந்தரம் பாட்டுக் கச்சேரி வைப்பது போல, எங்கள் கல்யாணத்தில் அவர் ஒரு மாஜிக் ஷோ நடத்தினார். சீட்டுக் கட்டு, கண்ணாடி டம்ளர், கைக்குட்டை இந்த மாதிரி என்னென்னவோ வைத்துக்கொண்டு,

வேடிக்கை காட்டினார். அதற்குப் பிறகு அவரை நான் பார்க்கவேயில்லை. நாலு மாதம் கழித்து ஒரு நாள் அன்றைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று நான் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தபோது, நீலகண்டன் வந்தார். எங்களைக் காட்டிலும் அதிகமாக அவர் திண்டாடிக் கொண்டிருக்கிறார் என்று பார்த்தவுடனே தெரிந்துவிட்டது. ஆனால் சட்டைப் பையில் என்னவோ துருத்திக்கொண்டிருந்தது. 'இதோ, இவைகளை எந்தச் சௌகர் கடையிலாவது வைத்து எனக்குப் பணம் வாங்கிக்கொடு' என்று சட்டைப் பையிலிருந்து அதை எடுத்துக் கொடுத்தார் உன் அப்பாவிடம். நான் எட்டிப் பார்த்தேன். மூச்சே நின்று விட்டது ஆச்சரியத்தில். எனக்கு மட்டுமில்லை. உன் அப்பாவுக்கும் தான்.''

''என்ன கொண்டு வந்திருந்தார் அவ்வளவு அதிசயமாய்?'' என்று நிம்மி கேட்டாள்.

''மெடல்கள்! வெள்ளிப் பதக்கம், தங்கப் பதக்கம்!'' என்று தொடர்ந்தாள் ஜெகதா. ''சும்மா ஏதோ வேடிக்கையாக மாஜிக்குகள் செய்வார் என்றுதான் உன் அப்பா அதுவரை நினைத்திருந்தாராம் நீலகண்டனைப்பற்றி. ஆனால் அவர் அபூர்வ வித்தைகளைக் கற்று, பல பெரிய மனிதர்களிடம் செய்துகாட்டி, மெடல்களும், பரிசுகளும் வாங்கியிருக்கிறார். ஆனால் அவ்வளவு திறமைகளும் உபயோகப்படாதபடி அவரைக் கெடுத்துக் கொண்டிருந்தது ஒரு பழக்கம்.''

''குடிப் பழக்கம்?''

''ஆமாம். தட்டில்லாமல் மதுகிடைத்துக் கொண்டிருக்க வேண்டும் அவருக்கு. அது ஒன்றுதான் அவருக்குக் கவலை. உன் அப்பாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. குரூரமான யோசனைதான். 'நீலகண்டா, உனக்கு மது ஒன்றுதான் வேண்டும். எனக்கோ புகழும் பணமும் பிழைக்க வழியும் வேண்டும். உனக்குத் தெரிந்ததையெல்லாம் எனக்குக் கற்றுக்

கொடு. நான் உன்னைக் கவலையில்லாமல் வைத்துக் கொள்கிறேன்' என்று சொன்னார். உடனே நீலகண்டன் சம்மதித்தார். அன்று முதல் அவர் குருவாகவும் உன் அப்பா சீடனாகவும் இருக்கத் தொடங்கினார்கள். மாஜிக் தொழிலை விஸ்தரித்துப் பெரிய அளவில் நடத்துவதற்குத் திட்டம் போட்டார் உன் அப்பா. நீலகண்டனின் மெடல்களை விற்றுத் தேவையான முதல் திரட்டினார். ஒரே வருடம்தான். உன் அப்பா முதல்தரமான மாஜிக்காரராக ஆனார். நீலகண்டன் முதல்தரமான குடிகாரராக ஆனார்.'' ஜெகதா மறுபடியும் சிரித்தாள் வெறுப்புடன்.

''ஒரு வருடத்துக்கு எல்லாம் கற்றுக் கொண்டு விட்டார் என்று சொன்னாயே? அதற்குப் பிறகும்...'' கேட்க நினைத்ததை முழுதும் கேட்காமல் நிறுத்திக் கொண்டாள் நிம்மி.

''ஆமாம். நாங்கள் எங்கே குடிமாறினாலும் அவருக்கு ஒரு தனி அறை உண்டு - அவருக்கு அவருடைய மதுப் புட்டிகளுக்கும் சேர்த்து! சில சமயம் பர்மிட் உண்டு. பல சமயம் கிடையாது. நீலகண்டனுக்கு வெறும் மாஜிக் மட்டுமில்லாமல் மனோவசியத்திலும் நல்ல பயிற்சி இருந்தது. அதையும் உன் அப்பாவுக்கு சொல்லிக் கொடுத்தார். நீலகண்டனிடம் இல்லாத விடா முயற்சியும் லட்சியமும் பணத்தாசையும் உன் அப்பாவிடம் இருந்தன. நல்ல மரத்தைக் கொம்பாகப் பற்றிக் கொண்டு நச்சுக் கொடி படருகிற மாதிரி, நீலகண்டனைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து, அந்த அழிவையே தனக்கு உரமாக்கிக் கொண்டு கிளைத்துச் செழித்து புரொபசர் என்ற பட்டத்துடன் உன் அப்பா பிரகாசிக்க ஆரம்பித்தார்.''

அடுத்த ஹாலிலிருந்த கடியாரம் மணி பதினொன்றா வதை அறிவித்தது. தெருப் பக்கத்துக் கேட்டைச் சாத்தினான்

கூர்க்கா. இருபுறமும் பிரகாசமாக எரியும் 'டோம்' விளக்குகள், ஜன்னல் வழியே அனுப்பிக்கொண்டிருந்த சிறிய வெளிச்சமும் மடிந்துவிட்டது.

ஜெகதா தொடர்ந்தாள்: ''எல்லா வித்தைகளும் கற்றுக்கொண்ட பிறகும் நீலகண்டனை ஏன் வீட்டோடு வைத்துக்கொண்டார் என்று எனக்கு வெகுநாட்களாக ஒரு புதிர்தான். நாங்கள் எங்கே ஜாகை மாறினாலும் அவரையும் அழைத்து வந்தார் உன் அப்பா. வீட்டோடு வைத்துக் கொண்டு சாப்பாடு, மது எல்லாம் குறைவில்லாமல் கொடுத்து வந்தார். அப்போது நீ என் வயிற்றில் உண்டாகி யிருந்த சமயம். உன் அப்பாவுக்குப் பெயரும் பணமும் பெருகிக் கொண்டிருந்தது. இனி என் வாழ்க்கையில் துன்பம் இல்லை என்று மகிழ்ச்சியடைய ஆரம்பித்திருந்தேன். உன் அப்பா என்னைச் சந்தேகக் கண்ணோடு பார்க்க ஆரம்பித்ததும் அப்போதுதான் என்று எனக்கு இன்றைக்குத்தான் புரிகிறது. நிம்மி, மறுபடியும் உன்னிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். உன் அப்பா சொல்கிறபடி செய். என்னை மனோ வசியம் பண்ணு! என்ன உண்மையை வெளிப்படுத்த வேண்டுமோ அதை வெளிப்படுத்திவிடு.''

''தூ! எனக்குக் குமட்டல் வருகிறது!'' என்று தலையைத் திருப்பிக் கொண்டாள் நிம்மி. ''அப்பாவின் கேவலமான சந்தேகத்தைத் தீர்க்க நான்தான் அகப்பட்டேனா? அவ்வளவு கீழ்த்தரத்துக்கு இறங்க நான் தயாராயில்லை. வேண்டு மானால் இவ்வளவையும் நீயே அவரிடம் சொல்லு! சே! மனிதரா அவர்!''

''நிம்மி! புரியாமல் பேசுகிறாயே?'' என்று பதைத்தாள் ஜெகதா. ''சுய உணர்வோடு இருந்துகொண்டு நான் என்னதான் ஆயிரம் சத்தியம் செய்தாலும் அவருக்கு ஒப்புக்கொள்ளத் தோன்றாது. என்னை நீ ஹிப்னடைஸ் பண்ணி, என்னையே

அறியாமல் என் வாயிலிருந்து விஷயங்கள் வரவேண்டும். எந்தெந்தத் தினத்தில் என்னென்ன நடந்தது என்று அவர் நினைத்திருக்கிறாரோ, அந்தந்த தினத்தில் அப்படி அப்படி நடைபெறவில்லை என்று நான் விவரிக்கவேண்டும். அதன் பிறகுதான் அவருக்கும் நிம்மதி, எனக்கும் நிம்மி...''

''என் நிம்மதி? அதைப்பற்றி யாருக்குமே அக்கறை கிடையாதா?'' என்ற வெறியுடன் இரைந்தாள் நிம்மி. ''பெற்றத் தாய்க்கு ஒரு பரீட்சை! அதற்கு நான் கருவி! முடியாதம்மா! முடியவே முடியாது!''

''அப்படியானால் உன் அப்பாவின் பரிசை உபயோகப்படுத்த வேண்டியதுதான். வேறு வழியில்லை.''

''பரிசா? என்ன பரிசு அம்மா?''

''நீயும் அப்பாவும் பேசுவதைக் கேட்டு மனமுடைந்து வெகுநேரம் தோட்டத்தில் போய் உட்கார்ந்திருந்தேன். பிறகு திரும்பி வந்து என் அறைக்குப் போனேன். கட்டிலில், என் தலைமாட்டில், உன் அப்பா எனக்காக ஒரு பரிசும் ஒரு வாழ்த்துச் செய்தியும் வைத்திருந்தார். அதை நீ பார்க்க வேண்டாமா?''

அட்டைப் பெட்டியைப் பிரிக்கும் ஓசை கேட்டது. திகைத்தவளாக நிம்மி காத்திருந்தாள், அடுத்து என்ன வரப்போகிறதென்று.

''தொட்டுப் பார்.'' மகளின் கையைப் பிடித்து அட்டைப் பெட்டிக்குள் துழாவச் செய்தாள் ஜெகதா.

''அம்மா!'' சில்லென்ற எஃகையும் அதன் வடிவத்தையும் உணர்ந்த மாத்திரத்தில் குரல் நடுங்கக் கூவிவிட்டாள் நிம்மி. ''அம்மா... இது...''

''ஆமாம், நிம்மி. கைத்துப்பாக்கிதான்'' என்று உறுதியான குரலில் கூறினாள் ஜெகதா. முடிந்த அளவுக்கு

அழுது துயரப்பட்டு ஆகிவிட்டதாலோ என்னவோ, அவள் பேச்சில் ஒரு விசித்திரமான அமைதி தென்பட்டது. ''பரிசுடன் வைத்திருந்த செய்தியைப்படிக்க வேண்டாமா? விளக்கைப் போடு'' என்றாள்.

நிம்மி அசையவில்லை. அட்டைப் பெட்டிக் குள்ளிருந்த கைத்துப்பாக்கியின்மீது அவள் விரல்கள் ஒட்டிக் கொண்டு விட்டனவா என்ன? கையை எடுக்காமலே பீதியில் ஆழ்ந்திருந்தாள்.

ஜெகதாதான் விடிவிளக்கைப் போட்டாள். சவ்வுக் காகிதத்தைப் பரப்பினாற்போல சிவப்பு வெளிச்சம் அறையெங்கும் பரவியது. அந்த மங்கலான ஒளியில், கொடிய ஐந்து ஒன்று சுருண்டு படுத்திருப்பதுபோலக் காட்சியளித்தது அந்தக் கைத்துப்பாக்கி.

அதன் கீழேயிருந்த ஒரு காகிதத் துண்டை எடுத்து மகளிடம் தந்தாள் ஜெகதா. ''படித்துப் பார்.''

படித்தாள் நிம்மி.

> **''ஆதாரங்கள் வைத்துக் கொண்டு, அணுஅணுவாய்ச் சித்திரவதை செய்து, உன் உயிரை என் கையாலேயே வாங்கவேண்டு மென்றுஆசைப்பட்டேன். முடியாதுபோலிருக்கிறது. உன் வாழ்க்கையை நீயே முடித்துக்கொள்.''**

கீழே கையெழுத்து இல்லையேயொழிய, அந்தச் சாய்வான நீளமான எழுத்து புரொபசருடையதுதான் என்பது சந்தேகமின்றிப் புலப்பட்டது நிம்மிக்கு. இருந்தாலும், ''அப்பாவா இப்படி எழுதினார்?'' என்று அவள் உதடுகள் முனகின.

''என் வாழ்க்கையை நானே முடித்துக்கொள்வதில் எனக்குக் கடுகத்தனையும் வருத்தமோ ஆட்சேபமோ

கிடையாது நிம்மி'' என்றாள் ஜெகதா. ''நான் தொலைந்தால் புரொபசருக்கு நிம்மதி என்பது நிச்சயமானால் நான் என் உயிரைப் போக்கிக்கொள்ளத் தயார். ஆனால் ஏதோ ஆதாரங்கள் வைத்துக் கொண்டு என்னை அணுஅணுவாய்ச் சித்திரவதை செய்ய ஆசைப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார் பார், அந்த ஆதாரங்கள் என் மரணத்துக்குப்பிறகும் கிடைக்கப் போவதில்லையே அவருக்கு! மனசில் இன்னும் இன்னும் உளைச்சல்தானே...''

''அதனால்? அதனால்?''

''நான் குற்றமற்றவள் என்று ருசுப்பிப்பதற்காவது எனக்கு உதவி செய். அல்லது உன் அப்பாவின் இஷ்டப்படி என் வாழ்க்கையை முடித்துக் கொள்ளவாவது விட்டுவிடு'' என்றாள் ஜெகதா.

# 17

Subjects under hypnotic instructions will relive with realism and authenticity situations that occurred when they were young children; Experiences not consciously remembered are easily recovered.

- John Mann

''சரி அம்மா. உன் இஷ்டப்படியே செய்கிறேன். நீ உயிரை விட வேண்டாம்'' என்றாள் நிம்மி. வேறெதுவும் தோன்றவில்லை அவளுக்கு.

அட்டைப்பெட்டிக்குள் இருந்த கைத்துப்பாக்கியை அவள் விரல்கள் இன்னும் துழாவிக்கொண்டுதான் இருந்தன. அறைக்கு நிலவிய முழு இருட்டில் அவளால் அம்மாவின்

முகத்தைப் பார்க்க முடியவில்லை. என்றாலும் அதிலே ஏற்பட்டிருக்கக் கூடிய ஆறுதலையும் நிம்மதியையும் அவளால் ஊகிக்க முடிந்தது.

கைத்துப்பாக்கி இருந்த அட்டைப்பெட்டியை மூடி அம்மாவிடம் திருப்பிக் கொடுத்தாள் நிம்மி. ''இரு, வருகிறேன்'' என்று கூறி வெளியே வந்தாள்.

மாடியில் புரொபசரின் படுக்கை அறை இருந்தது. ஸ்லிப்பர்கள் ஓசைப்படுத்தாபடி கையிலெடுத்துக் கொண்டாள். ஒவ்வொரு படியாக அடிமேலடி வைத்து மாடியை அடைந்தாள்.

புரொபசரின் அறைக்குள் விடிவிளக்கு மட்டுமே எரிந்துகொண்டிருந்தது. மெல்லிய குறட்டையொலி நிம்மியின் செவிகளை எட்டியது. நன்கு தூங்குகிறார் என்று நிச்சயம் செய்துகொண்டவளாகக் கீழே இறங்கி வந்தாள்.

''சரி அம்மா. நீ உன் ரூமுக்குப் போய் நிம்மதியாய்த் தூங்கு. நீ இங்கே வந்ததும் என்னிடம் பேசினதும் துப்பாக்கியைக் காட்டியதும் அப்பாவுக்குத் தெரியவே வேண்டாம். தெரிந்துவிட்டால், நிஜமான ஹிப்னாஸிஸில் நீ சொல்வதைக்கூட நாம் பேசிவைத்துக் கொண்டு செய்கிறோம் என்று நினைத்துக் கொள்வார். எதையும் நம்பமாட்டார்'' என்ற நிம்மி, அம்மாவை அழைத்துச் சென்று அவளுடைய அறையில் படுக்க வைத்துவிட்டுத் திரும்பினாள்.

தாயை நிம்மதியாகத் தூங்கச் சொல்லிவிட்டாளே தவிர அவளுக்கும் உறக்கத்துக்கும் மைல் கணக்கான இடைவெளி ஏற்பட்டுவிட்டது. கட்டிலில் மல்லாந்து படுந்திருந்தாள். மார்பின் மீது ஒரு தலையணையைப் போட்டுக் கொண்டு அதை அணைத்துப் பிடித்தவாறு வெகு நேரம் விழித்துக் கொண்டிருந்தாள். கடந்த சில மணி நேரங்களுக்குள்ளாக ஏற்பட்டுவிட்ட அனுபவங்களும் தெரிந்து கொண்ட

தகவல்களும் அனுபவித்து விட்ட உணர்ச்சிகளும், நூற்றுக் கணக்கான பிறவிகள் எடுத்து நூற்றுக்கணக்கான வாழ்க்கைகள் வாழ்ந்து விட்டாற் போன்ற மனச்சுமையை அவளிடத்தே ஏற்படுத்தின. ஆனால் நடந்துவிட்ட விஷயங்களைக் காட்டிலும், நடக்கவிருப்பவை பற்றியே அவள் அதிகம் கவலை கொண்டாள்.

அப்பாவுடன் எப்படித் திரும்பச் சமாதானம் செய்து கொள்வது? 'அம்மாவை ஹிப்னடைஸ் பண்ண நான் ரெடி அப்பா!' என்று ஏதுமறியாதவள் போல எப்படித் தெரிவிப்பது?

நிம்மியின் குழப்பங்களே அவளுக்குத் தாலாட்டாக அமைந்தன போலும். சிந்தனையில் சோர்வுற்றவளாகக் கண்ணயர்ந்தாள் இறுதியில்.

அவளை எழுப்பியது சோவென்ற மழைச்சத்தம்தான்.

கைக்கடியாரம் விடிகாலை ஐந்து மணியாகிறது என்று காட்டியது. ஆனால் வெளிச்சம் நன்கு பரவவில்லை.

மழை சற்று நின்றது. ஆனால் கத்தியால் வெட்டுகிற மாதிரி குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. நைட் டிரஸ்ஸாக அணிந்திருந்த பைஜாமாவின் கால்களை மேலே தூக்கிச் சுருட்டிவிட்டுக் கொண்டாள் நிம்மி. தோட்டத்தில் இறங்கி, மழைத் தண்ணீரைத் துழாவியபடியே வாசல்புறத்தை அடைந்தாள்.

சிலுசிலுவென்று பன்னீர் தெளிக்கிறமாதிரி தூறிக் கொண்டிருந்தது. தலைமீது கைக்குட்டையை விரித்து மோவாயின் கீழே முடிச்சுப் போட்டுக் கொண்டு தெருவின் இருபுறத்தையும் வேடிக்கை பார்த்தபோது -

தடதடவென்று தெருவின் மறுகோடியிலிருந்து சிலபேர் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கைகளில்

கிழிசல் பாய்கள்; தகரப்பெட்டிகள்; அலுமினியப் பாத்திரங்கள்; துருப்பிடித்த குவளைகள்.

ஒரு கிழவி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, ''ராவு மழையிலே குடிசைக்குள்ளாற தண்ணீ பூந்திடுச்சு, தாயே!'' என்று புலம்பிக்கொண்டே ஓடினாள்.

''இந்தா, இந்தா! இப்படி வாருங்கள்'' என்று சட்டெனச் சொல்லிவிட்டாள் நிம்மி. ''இதோ கார்ஷெட் காலியாய்த்தான் இருக்கிறது!''

''அடேய்! வாங்கடா! வாங்கடா!'' என்று ஒருவரையொருவர் கூவி அழைத்துக்கொண்டு அனைவரும் ஓடிவந்தார்கள். புரொபசரின் பங்களாவுக்குள்.

சில வருடங்களுக்கு முன்பு, இரண்டு கார்கள் இருந்தன புரொபசரிடம். அவற்றுக்காகவே இரண்டு 'ஷெட்'டுகளும் இருந்தன. பிறகு ஒரு சார் அனாவசியம் என்று விற்று விட்டதால். அதற்கான ஷெட் மட்டும் சும்மாவே இருந்தது.

குழந்தைகளும் பெண்களுமாகச் சுமார் இருபது பேர் அந்த இடத்தில் ஒதுங்கிக்கொண்டார்கள்.

''மழை நன்றாய் நின்றபிறகு புறப்பட்டுப் போங்கள். கார்ப்பரேஷன் ஸ்கூலில் உங்களுக்காக ஏதாவது ஏற்பாடு செய்திருப்பார்கள்'' என்று கூறிவிட்டுத் திரும்பிய நிம்மி-

எதிரே புரொபசர் வந்து கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டு நின்றாள். அவரைக் கேட்காமல் இந்தக் காரியம் செய்துவிட்டோமே என்ற அச்சம் உதித்தது அவள் உள்ளத்தில்.

ஆனால் மித்ராவின் உதட்டில் புன்சிரிப்புதான் பரவியிருந்தது. ''நல்ல காரியம்தான் செய்தாய், நிம்மி! ரியலி ஐ அம் ப்ரௌட் ஆஃப் யூ'' என்று அவள் கைவிரல்களைப் பிடித்துக் குலுக்கினார்.

தந்தை எவ்வெப்போது நடிக்கிறார், எவ்வெப்போது இயல்பாக இருக்கிறார் என்று கண்டுகொள்வது இனிமேல் கஷ்டமாய்த்தான் இருக்கும் என்று புரிந்து விட்டது நிம்மிக்கு. என்றாலும் இப்போதைக்கு அவரது பேச்சை அப்படி அப்படியே எடுத்துக்கொள்வதுதான் நலம் என்று தீர்மானித்துக்கொண்டாள். அவரைப்போலவே தானும் முந்தின சண்டைகளை அடியோடு மறந்துவிட்டாற்போல, ''நல்ல காலம் அப்பா! பரிதாபமாயிருக்கிறது என்று இவர்களை உள்ளே வரச்சொல்லிவிட்டேனே தவிர நீங்கள் என்ன சொல்வீர்களோ என்று பயந்துகொண்டேயிருந்தேன்'' என்றாள். அப்படிச் சொல்லும்போதே தன் முகத்தில் குழந்தைத்தனமும் சிரிப்பும் தவழுகிறமாதிரி செய்து கொண்டாள்.

''என்னையா அப்படி நினைத்தாய்! ஹூம்!'' என்று விளையாட்டாக உதட்டைப் பிதுக்கினார் மித்ரா. ''நீ இடம் மட்டும்தான் கொடுத்தாய். நான் என்ன செய்தேன் தெரியுமா?''

''என்னப்பா செய்தீர்கள்?''

''சமையற்காரனை எழுப்பி, இவர்கள் அவ்வளவு பேருக்கும் டீ போட்டுக் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன்.''

''ஒண்டர்ஃபுல் அப்பா!'' என்று உண்மையான மகிழ்ச்சியுடன் தந்தையின் கரத்தைக் குலுக்கினாள் நிம்மி.

''மழையில் நிற்கவேண்டாம். உடம்புக்கு ஆகாது. வா போகலாம்'' என்றார் புரொபசர். இருவரும் பங்களாவுக்குள் நுழைந்து, வெராந்தாவில் நின்று கொண்டார்கள்.

சமையற்காரன் பெரிய எவர்ஸில்வர் பக்கெட்டில் தேனீர் எடுத்துச் செல்வதையும், ஷெட்டில் ஒண்டியிருக்கும் ஜனங்களுக்கு வழங்குவதையும், கூச்சலும் ஆரவாரமுமாக அவர்கள் வாங்கிக் குடிப்பதையும் வெராந்தாவில் இருந்தபடியே கவனித்தாள் நிம்மி.

கிராதிக் கட்டையின்மீது இரு கைகளையும் ஊன்றிக் கொண்டிருந்த புரொபசர், ''ஊரார் குழந்தைக்கு நான் டீ வழங்கினால், என் குழந்தைக்கும் நாளை யாராவது டீ வழங்குவார்கள்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்கிற மாதிரி பேசினார்.

திகைப்புடன் அவர் முகத்தைப் பார்த்த நிம்மி, ''உங்கள் குழந்தைக்கு இப்படிப்பட்ட நிலைமை எதுவும் வராது. கவலைப்படாதீர்கள்'' என்றாள்.

''அதெப்படி நிச்சயமாய்ச் சொல்ல முடியும் நிம்மி?'' என்றார் புரொபசர். அவருடைய குரல் மெதுவாயும் ஆழமாயும் இருந்தது. ''கொஞ்ச நாளாய் என் மனம் எவ்வளவு கொந்தளிப்பாக இருக்கிறது என்று உனக்குத் தெரியாது... எந்தத் துறையினால் நான் இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்தேனோ அந்தத் துறைக்கு நான் எதுவும் திருப்பிச் செய்யவில்லை என்று உறுத்திக்கொண்டிருந்தது... ஒரு வாரம் முன்பு ஓர் எண்ணம் தோன்றியது...''

''என்னப்பா?''

''சொன்னால் நீ அதிர்ச்சி அடைவாய். 'என்னை இப்படி நிர்க்கதியாக நிறுத்தலாமா அப்பா' என்று சண்டைக்கு வருவாய்...''

''புதிர்மேல் புதிராய்ப் போடுகிறீர்கள்!''

''நாம் வாழ்க்கையே புதிர்தான்!'' வெறுப்புடன் சிரித்தார் புரொபசர். ''என் மனத்துக்கு நிம்மதி ஏற்படுவதற்காக ஒரு காரியம் செய்வதாக இருக்கிறேன். என் சொத்தில் ஒரு பாதியை இந்திய மாஜிக் சங்கத்துக்கும் இன்னொரு பாதியை ஹிப்னாடிஸ்ட் அசோசியேஷனுக்கும் எழுதி வைக்கலாம் என்று...''

''அப்பா!'' என்று கூவினாள் நிம்மி.

''அதனால்தான் சொன்னேன். அதோ அந்த ஏழை ஜனங்களைப் போலவே நாளைக்கு என் பெண்ணுக்கும் ஒரு நிலைமை ஏற்பட்டால், இப்போது நாம் உதவுகிற மாதிரி நாளைக்கு வேறு யாரோ உதவுவார்கள்...'' புரொபசர் மித்ரா தலையைக் குனிந்து கொண்டு நிம்மியின் முகத்தைப் பார்க்காமல் பேசினார்.

பார்த்திருந்தால், ஒரே வினாடிக்குள் நிம்மியின் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த நிம்மதி அவள் முகத்திலும் பிரதிபலித்திருப்பதைக் கண்டிருப்பார்.

'உன்னை அனாதைப் பிச்சைக் காரியாகத் தெருவில் விரட்டப் போகிறேன்' என்று மிரட்டாமல் மிரட்டுகிறார் அப்பா என்று நிம்மி ஊகித்து விட்டாள். இருவர் விளையாடக் கூடிய விளையாட்டு அது என்றும் அவளுக்குத் தெரிந்து விட்டது. 'அம்மாவை 'ரிக்ரஷ'னுக்கு ஆளாக்குவதற்கு நான் இணங்கி விட்டேன்' என்று எப்படித் திடுதிப்பென்று புரொபசரிடம் சொல்வதெனத் தெரியாமல் தான் தவித்துக் கொண்டிருந்தாள் அவள். தந்தையின் மறைமுகமான மிரட்டல் அவளுக்குக் கை கொடுத்து விட்டது. தானும் மறைமுகமாகப் பயப்படுகிற மாதிரி அவரிடம் காட்டிக் கொள்ள வேண்டியதுதானே! அந்த எண்ணம் அவள் உள்ளத்தில் உற்சாகத்தை எழுப்பி, வதனத்தில் பிரதிபலிக்க வைத்தது. சிரமத்துடன் அவற்றை மறைத்துக் கொண்டாள்.

''உங்கள் வேதனையை உணராமல் நேற்று என்னென்னவோ எதிர்த்துப் பேசி விட்டேன். அப்பா, என்னை மன்னியுங்கள்'' என்றாள்.

''அம்மா ராத்திரி வந்து உன்னிடம் ஏதாவது சொன்னாளா நிம்மி?'' என்று கேட்டார் புரொபசர்.

''அம்மாவா? இல்லையே? ஏன்? எதைப்பற்றி?'' அடுக்கடுக்கான எதிர்க் கேள்விகளை வீசி, தன் பொய்யைச் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டாள் நிம்மி.

''ஒன்றுமில்லை, சும்மாதான் கேட்டேன்'' என்றார் மித்ரா.

''நான் உங்களிடம் நடந்து கொண்ட முறை தவறென்று என் மனச்சாட்சியே சொல்லிவிட்டது அப்பா'' என்றாள் நிம்மி. ''நீங்கள்தான் எனக்கு எல்லாம் கற்றுக் கொடுத்தீர்கள். நீங்கள்தான் என் குரு. நீங்கள் கழித்த கோட்டைத் தாண்டாமல் இருந்ததால்தான் எனக்கு எல்லா வித்தைகளும் கை வந்தன. அப்படியிருக்க, அம்மாவிடம் 'ரிக்ரஷன்' சோதனை செய் என்று நீங்கள் சொன்னால், நான் வேறோர் ஆளிடம் செய்கிறேன் என்று எதிர்த்துப் பேசியது எவ்வளவு அதிகப் பிரசங்கித்தனம்! என்னைப்பற்றி எனக்கே வெட்கமாயிருக்கிறது அப்பா!'' ஓரக்கண்ணால் புரொபசரை அளவெடுத்துக் கொண்டே நிம்மி பேசினாள்.

'நிம்மி! அப்படியானால் உன் அம்மாவிடம் இப்போதே போகலாமா?'' என்று புரொபசர் மகிழ்ச்சியுடன் கூவுவார் என்று அவள் எதிர்பார்த்திருந்தால், ஏமாற்றம்தான் மிச்சமாகியிருக்கும்.

''பழசைப்பற்றி இப்போதென்ன பேச்சு?'' என்று அக்கறை இல்லாதவர் போல வீட்டுக்குள் திரும்ப முயன்றார் புரொபசர்.

''அதெல்லாமில்லை. இனிமேல் நீங்கள் போட்டால் போட்டதுதான் ஆர்டர். சாயந்தர நேரம் நான் ஹிப்னாடிஸத்துக்கு ஏற்றது என்று சொல்வீர்கள் இல்லையா? அதனாலே காலேஜிலிருந்து வந்ததும் அம்மாவை வைத்துக் கொண்டு எக்ஸ்பரிமெண்ட் ஆரம்பிக்கப் போகிறேன்'' என்றாள் நிம்மி.

''உன் இஷ்டம்'' என்று வேண்டா வெறுப்பாக ஒப்புக் கொள்கிற மாதிரி பதிலளித்தார் மித்ரா.

காலேஜுக்குப் புறப்படுகிற வரையில் அம்மாவிடம் அதிகமாய்ப் பேசாமலே எச்சரிக்கையாக இருந்தாள் நிம்மி. மாலையில் திரும்பி வந்ததும் அம்மாவிடம் ஹிப்னாடிஸத்தைப் பிரயோகிக்க வேண்டியது; பழைய நிகழ்ச்சிகளை அவள் பேசுமாறு செய்ய வேண்டியது; புரொபசர் அதைக் கேட்டுத் தன் தவறான கருத்துக்களைப் போக்கிக்கொள்ள வேண்டியது. பிறகு எல்லாம் நல்லபடி முடிந்துவிடும். இந்த வீடு பழையபடி களையும் ஜீவனும் உள்ளதாக ஆகிவிடும். நிம்மி எப்போதும் போல் குஷியும் உற்சாகமும் உள்ளவளாக, கவலையற்ற சிட்டுக் குருவியாகப் பறந்து திரியலாம். பிறகு கவலையில்லை, கசப்பில்லை. போராட்டங்கள் இல்லை. மகிழ்ச்சி, மகிழ்ச்சி, மகிழ்ச்சிதான்.

இப்படிப்பட்ட எண்ணங்கள் நிறைந்ததும் நிம்மியின் உள்ளம் துள்ளியது. உற்சாகத்துடன் கல்லூரிக்குச் சென்றாள். இரண்டாவது மணியின் போது லீலாவதி அவளிடம், ''அண்ணா உன்னைப்பற்றித்தான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். உன் வீட்டில் ரகளை எதுவுமில்லையே?'' என்று விசாரித்தாள்.

''ரகளையா? அப்படியென்றால் என்ன அர்த்தமென்று உன் அண்ணாவை டிக்ஷனரியைப் பார்த்துச் சொல்லச் சொல்!'' என்று வேடிக்கை செய்தாள் நிம்மி. அதே சமயம் கல்யாணத்துக்குக் கால் குணமடைந்து வருகிறதா என்று கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

எல்லாம் நல்லபடியாக முடிவடைந்து விட்டால் ஒருநாள் கல்யாணத்தை வீட்டுக்கு அழைத்து வரலாம்; அப்பாவுக்கு அறிமுகம் செய்து வைக்கலாம்...

நிம்மியின் இன்பக் கற்பனைகள் அடுக்குமேல் அடுக்காக, கோட்டை கோட்டையாக எழும்பிக் கொண்டே யிருந்தன.

''ஹலோ மம்மி!'' குதித்துக் கொண்டே உள்ளே நுழைந்தாள் நிம்மி. ''கெட் அப்! கையிலிருக்கிற பாத்திரத்தைக் கீழே போடு! என் ரூமுக்கு வா! ஊம், ஊம்! க்விக்!'' கையைப் படக் படக்கென்று வேகமாகச் சொடுக்கினாள்.

''என்ன நிம்மி விளையாட்டு மறுபடி?'' சமையலறை யில் வேலையாகவிருந்த ஜெகதா அலுத்துக் கொண்டாள்.

பின்கை கட்டியவாறு வெளியே உலாத்திக் கொண் டிருந்தார் புரொபசர்.

''ஸ்! ஒன்றும் தெரியாத மாதிரி பேசாதே! என் ஹிப்னாடிஸப் பயிற்சிக்கு நீதானே வேண்டும்? அன்று நான் பாதியில் விட்டதை எப்போது முடிப்பது?'' என்றாள் நிம்மி.

அவள் கண்ணைச் சிமிட்டுவதைப் புரிந்து கொண்டாள் ஜெகதா.

''சே!'' என்ற கையிலிருந்த பாத்திரத்தை ணங்கென்று அலமாரியில் வைத்தாள் உடனே. ''உன்னைச் சொல்லிக் குற்றமில்லை... உன் அப்பா...'' என்று ஆரம்பித்தவள், அப்போதுதான் புரொபசரைக் கவனித்தவள் போல்பாதியில் நிறுத்திக்கொண்டு, ''சரி, வா'' என்றாள் சலிப்புடன்.

அன்னொரு நான் பரிசோதனை நடைபெற்ற அதே இடத்துக்கு இருவரும் திரும்பினார்கள். அதே கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள் ஜெகதா.

'ஆரம்பிக்கலாம்' என்று சைகை காட்டினார் புரொபசர்.

தாயை நெருங்கினாள் நிம்மி. ஜெகதாவின் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை, தொட்டும் தொடாமலும் ஓடின அவளது கைவிரல்கள்.

''நீ இப்போது உன் வசமிழந்து என் வசமாகிறாய். நான் என்னவெல்லாம் சொல்கிறேனோ அதன்படியெல்லாம் நீ செய்வாய்.''

அம்மாவின் புருவங்களுக்கு நடுமத்தியில், நாசி மேற் பக்கத்துக் குழியில், தன் பார்வையைப் பதித்தவாறு பேசினாள். இமைக்காமலே இருக்கவும், விழிகளை ஊசிமுனையளவுகூட அசைக்காமல் நிறுத்திக் கொள்ளவும் சக்தி பெற்றிருந்த அவளுக்கு, கடகடவென்று பேசிக் கொண்டே போவதும் சுலபமாகத்தான் இருந்தது.

அவள் பேசப் பேச, ஜெகதாவின் உடம்பு மெல்ல ஆடியது. அவளுடைய விழிகள் மகளையே பார்த்தபடி அசைவற்று நின்றன.

''இப்போது உன் வயதைக் குறைத்து, உன்னுடைய இளமைப் பிராயத்துக்கு அழைத்துப் போகப் போகிறேன். இப்போது உனக்கு வயது இருபத்தைந்து... இருபத்தைந்து... புரிகிறதா?... உனக்கு வயது இருபத்தைந்துதான் ஆகிறது. நீ இப்போது எங்கே இருக்கிறாய்? சொல்.''

ஜெகதா தன் கண்களைச் சுழற்றினாள். எதனாலோ மிரண்டவள் போல. ''நிம்மி... எனக்கு ஒன்றும் புரியவில்லை...'' என்று தடுமாறினாள்.

நிம்மி சிரித்தபடி, ''உன் வயது இருபத்தைந்து... இப்போது இருபத்தைந்து... இப்போது இருபத்தைந்து... நீ காலத்தில் பின்னோக்கிச் செல்கிறாய். நான் உன்னை அழைத்துப் போகிறேன். உன் வயது இருபத்தைந்து. தெரிகிறதா?'' என்றாள்.

''இல்லை நிம்மி, எனக்கு எதுவும் தெரியவில்லை. நான் இருக்கிற படிதான் இருக்கிறேன்... நீ பேசுவதும் இந்த அறையும் ஜன்னலும் நேரமும் வெளிச்சமும் அப்படியேதான்

இருக்கின்றன. எனக்கு வயது குறைவதாக எதுவும் தெரியவில்லை...''

சற்று எட்ட நின்றிருந்த புரொபசர் இப்போது உள்ளே வந்தார். முகத்தில் திகைப்புப் படர அருகே அவர் வந்து நிற்பதைக் கவனித்தாள் நிம்மி.

என்ன வந்தது அம்மாவுக்கு? ஏன் 'ரிக்ரஷன்' வேகமாக நடைபெற வில்லை?

நிம்மி தன் மனத்தை மீண்டும் சமனப்படுத்திக் கொண்டாள். தாயின் கையைப் பற்றிக்கொண்டு, கட்டை விரலின் நுனியை அழுத்திக் கசக்கினாள். திருகினாள்.

''இப்போது சொல். உனக்கு வயது இருபத்தைந்தாகிறது. இருபத்தைந்துதான். நான் சொல்கிறேன். உனக்கு இருபத்தைந்து வயதுதான்.''

''ஐயோ நிம்மி! சத்தியமாக எனக்கு எதுவும் தோன்றவில்லையே! இப்போது இருப்பதும் நடப்பதும் பேசுவதும் தான் தெரிகிறது!'' என்று கூச்சலிட்ட ஜெகதா கட்டிலிலிருந்து இறங்கித் தரையில் அமர்ந்து கொண்டு, பயத்துடன் நாற்புறமும் பார்த்தாள்.

நிம்மிக்கு வெகு நெருக்கமாகக் குனிந்தார் புரொபசர். அவருடைய உஷ்ணமான மூச்சுக் காற்று, தன் கழுத்தைத் தீய்ப்பது போல் உணர்ந்தாள் நிம்மி.

''அம்மா!'' நிம்மிக்கு நாக்கு உலர்ந்தது. இதயம் படபடத்தது. தந்தைக்குத் தெரியாமல், அம்மா மட்டுமே கண்டு கொள்ளும் விதத்தில் பல்லைக் கடித்து விழிகளை உருட்டினாள்.

''கவனி! இப்போது உன் வயது குறையப் போது நிச்சயம்! நீ என் பின்னாலேயே வருகிறாய் பார்! வருடங்கள் திரும்பி வருகின்றன! உனக்கு வயது குறைகிறது, குறைகிறது,

குறைகிறது. ஒன்று, இரண்டு, மூன்று...'' அம்மாவின் இரண்டு பொட்டிலும் பெருவிரலை அழுத்திக்கொண்டு, சுட்டுவிரலால் புருவங்களுக்கு மேலிருந்து கீழாகத் தேய்த்தாள்.

''நிம்மி! உன்மீது ஆணையாகச் சொல்கிறேன்! என்னிடம் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. நான் உன் மனோவசியத்துக்கு ஆட்படவில்லை. ஆட்பட முடியவில்லை, நிம்மி!''

திடீரென்று அறைக்கு வெளியே ஒரு சிரிப்புக் கேட்டது. அன்று கேட்ட அதே சிரிப்பு.

புரொபசர் மித்ரா வெளியே பாய்ந்தார்.

அறையைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தார் நீலகண்டன். சிரித்தது அவர் தான் என்று தெரிந்தது.

''நீலகண்டா! நில்! நில்! எதற்காகச் சிரித்தாய்?''

புரொபசரின் உலுக்கும் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார் நீலகண்டன். பங்களாவின் பின் புறமிருக்கும் தனது அறையை நோக்கிச் சென்றார் - சிரிப்பை நிறுத்தாமலே.

மித்ராவும் விடவில்லை. பின்னாலேயே சென்று மீண்டும் நீலகண்டனை அழுந்தப் பிடித்தார் தோளில். அவருடைய போதையைத் தெளிவிப்பதற்காகப் பளீரென்று இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி அறைந்தார்.

''சொல்லு நீலகண்டா! எதற்குச் சிரித்தாய்? சொல்லாவிட்டால் இங்கே ஒரு கொலை விழும்! சொல்லு!'' என்று கத்தினார் பேய்த்தனமாக.

ஒரு வினாடி நீலகண்டனின் சிரிப்பு நின்றது. ''நிம்மியைக் கொண்டு ஜெகதாவை ரிக்ரஷன் செய்யப் பார்க்கிறாய்? அப்படித்தானே?''

''ஆமாம்.''

''அது நடக்காது. நிம்மி பழைய நிம்மியல்ல. ரிக்ரஷன் செய்யும் அளவுக்கு மனோவசிய சக்தி பெற வேண்டுமானால், ஹிப்னாடிஸ்டின் மனம் களங்கமற்ற தூய்மையுடன் இருக்க வேண்டுமென்று உனக்குச் சொல்லியிருக்கிறேனில்லையா?''

''சரி, சொல்லியிருக்கிறாய். அதனாலென்ன?''

''நிம்மி அந்தப் பரிசுத்த உள்ளத்தை இழந்து விட்டாள்! அடேய் முட்டாள்! உனக்கு ஆயிரம் கண்களும் ஆயிரம் காதுகளும் இருப்பதாகப் பீற்றிக் கொள்கிறாயே தவிர, உன் சொந்த மகளின் மனசில் ஏற்பட்டு விட்ட மாறுதல் உனக்குத் தெரியவில்லையா? முட்டாள்! முட்டாள்!''

''நிம்மிக்கு என்ன நேர்ந்திருக்கிறது!''

''காதல்! காதல் வசப்பட்டிருக்கிறாள் உன் மகள்! அந்த உள்ளம் இனி அந்தக் காதலனுக்குத்தான் சொந்தம். சுதந்திரமான, சுயேச்சையான எதையும் சாதிக்க நிம்மியின் மனத்தினால் முடியாதடா, மடையா! அது தெரியாமல், கல்லிலிருந்து நார் உரிக்கப்பார்க்கிறாயே என்று நினைத்தேன். சிரிப்பு வராமல் வேறென்ன வரும், சொல்லு!''

நீலகண்டன் சிரிக்கத் தொடங்கினார் முன் போலவே.

# 18

The dimensions of the unconscious mind are still not clear; nor have they been plumbed to their depth. Any disturbance to the mind of the operator must needs communicate itself to the mind of the subject.

- Sundar Das

நீலகண்டன் தன் சிரிப்பை நிறுத்திக்கொண்டு அலமாரியைத் திறந்தார். வனப்பான வடிவமுள்ள பல மதுப்புட்டிகள் அந்தத் தட்டுக்களை அடைத்திருந்தன. தீர்ந்து போன புட்டிகள் கீழ்த்தட்டிலும், தீர்க்கவேண்டிய புட்டிகள் மேல் தட்டிலுமாக வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிந்து கொள்ளு மளவுக்கு அவர் நிதானத்தில் இருந்தார். மேல்தட்டிலிருந்து ஒரு புதுப்புட்டியை எடுத்துக்கொண்டவர் மித்ராவைப் பார்த்தார்.

மேஜை விளிம்பை இரு கைகளாலும் அழுத்திய வண்ணம் வெறித்த நோக்குடன் நின்றிருந்த புரொபசர், ''நிம்மிக்குக் காதலா? யாரிடம்? உனக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினார் இறுதியில்.

நீலகண்டன் சிறிய கிளாஸைத் தேடிக்கொண்டிருந்தார், மதுவை ஊற்ற. அது அகப்படாமற் போகவே, புட்டியையே வாயில் வைத்துக்கொண்டு ஒரு மடக்கு விழுங்கினார்.

''எப்படித் தெரியும் என்கிறாயா? நான் சுதந்திர மனிதனாக இருப்பதால் தெரியும்? எனக்கு இரண்டே கண்தான், இரண்டே காதுதான். ஆனால் அவைகளை வீணடிக்காமல் உபயோகிக்கிறேன். உன்னைப் போல் எனக்கு ஆராய்ச்சியா, படிப்பா, மண்ணாங்கட்டியா? யார் யார் எங்கெங்கே போகிறார்கள், என்னென்ன பேசிக்கொள் கிறார்கள் என்பதைக் கவனிக்கிறேன். ஏன், சில சமயம் யார் யார் என்னென்ன நினைக்கிறார்கள் என்பதைக்கூடக் கவனிக்க முடிகிறது என்னால்!'' என்று பதில் கூறினார் நீலகண்டன்.

இரண்டாவது மடக்குக்காக மதுப்புட்டியை உயர்த்தி னார் அவர். ஆனால் மித்ரா அதற்கு இடம் கொடுக்கவில்லை. முரட்டுத்தனமாக அதைப்பறித்துக் கீழே வைத்தார். ''யாரிடம் நிம்மிக்குக் காதல் என்று கேட்டேன்!''

''சமீப காலமாய் அவள் நெருங்கிப் பழகும் வாலிபன் ஒருத்தனே ஒருத்தன்தான். அவன் பெயர் கல்யாணம்!''

''கல்யாணம்!'' பொடிப்பொடியாக நொறுங்கி விழுந்து விடுவதைபோலப் பற்களை நறநறத்தார் புரொபசர் மித்ரா. ஜொலிக்கும் கண்ணிலிருந்து புறப்பட்ட தீப்பொறி, அடர்ந்த புருவங்களை எரித்து விடுகிற மாதிரி ஒரு கொடூரப் பளபளப்பு அவருடைய முகத்தை வியாபித்தது. 'கல்யாணம்! என் வாழ்க்கையின் முக்கியமான கட்டங்களிலேயெல்லாம் குறுக்கிட்டுக் கெடுத்துவரும் பொடியன்!' என்று அவர் ஆத்திரத்துடன் முணுமுணுத்தது நீல கண்டனுக்குக் கேட்க வில்லை. கேட்டிருந்தாலும் அவர் பொருட்படுத்த வில்லையோ என்னவோ! புரொபசர் பறித்து வைத்துக் கொண்ட புட்டியின்மீதே அவர் நாட்டம் நிலைத்திருந்தது.

''எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். கோபிக்காதே. அதைக்கொடுத்துவிடு'' என்று கையை நீட்டினார் அவர்.

''இரு. இனிமேல் ஒருநாளும் நிம்மிக்கு ஹிப்னாடிஸ சக்தி வராதா?'' என்று கேட்டார் புரொபசர்.

''வெறும் காதல் மட்டுமிருந்தால் நிம்மி இப்படி ஆகமாட்டாள். ஆனால் காதலையொட்டி, வேறு குழப்பங் களும் அழுக்குகளும் அவள் மனத்தில் ஏற்பட்டுவிட்டன. பயம், கவலை, பொய், ஏமாற்று - இப்படி அவளிடம் முன்பில்லாத சஞ்சலங்களெல்லாம் இப்போது அவள் இருதயத்தில் கூத்தாடுகின்றன. ஹிப்னாடிஸம் ஒரு பொம்மலாட்டம், மித்ரா! கயிற்றைப் பிடித்திருப்பவன் ஹிப்னாடிஸ்ட். பொம்மைதான் ஸப்ஜக்ட். ஆட்டுகிற எஜமானுக்கே பிடியில் உறுதி இல்லாதபோது, அவனே தடுமாறுகிறபோது, பொம்மை எப்படி ஒழுங்காக ஆடும்?... மித்ரா, பாட்டிலைக் கொடுத்துவிடு தயவு பண்ணி!''

யந்திரம்போல நீலகண்டனின் கையில் மதுப் புட்டியைத் திரும்பக் கொடுத்தார் புரொபசர். மாதக் கணக்காக வெய்யிலிலேயே கிடக்கும் பாறையைப்போல, அவருடைய முகம் உயிர்க்களையை இழந்து இறுகியிருந்தது. ''நிம்மியின் மனத்திலிருந்து இந்தக் காதல் போய்விட்டால்?'' என்றார்.

''எப்படிப் போகும்?'' நகைத்த வண்ணம் மதுவை ருசித்தார் நீலகண்டன், ''அந்தப் பையன் - அவன் செத்தால் போகும்!''

நெருப்பை மிதித்தமாதிரி விருட்டென்று நண்பனைப் பார்த்தார் மித்ரா. ''அதுவாவது நிச்சயம்தானா? அந்தக் கல்யாணம் செத்தால் நிம்மிக்கு மனோவசிய சக்தி திரும்பி விடுமா? அதையாவது நீ உறுதி கூற முடியுமா?''

''ஸாரி, மை டியர் மித்ரா! என்னை என் சாம்ராஜ்யத்துக்குப் போகத் தயவுசெய்து விட்டுவிடு'' என்று நீலகண்டன் கெஞ்சினார். ''காதலன் செத்துப் போனால், கொஞ்ச நாள் சோகத்தில் ஆழ்ந்துவிட்டுப் பிறகு சரியானாலும் ஆகிவிடுவாள். ஆனால் என்னை உத்தரவாதம் கேட்காதே.''

நண்பர் மது அருந்தும் கோலத்தைக் கவனிக்கிறமாதிரி சிறிது நேரம் நின்றிருந்தார் புரொபசர். அவருடைய பார்வைதான் அந்தத் திசையில் இருந்ததே தவிர, உண்மையில் நீலகண்டனையும் ஊடுருவிக்கொண்டு, அவருக்கருகில் இருந்த மேஜையையும் நாற்காலியையும் கட்டிலையும் சுவரையும் தாண்டிக்கொண்டு, எங்கெங்கோ பயணம் சென்றன அவருடைய சிந்தனைகள்.

நீலகண்டன் கட்டிலில்படுத்துக்கொண்டுவிட்டார், மார்போடு தன் காதலியை அணைத்தவண்ணம். இனி அவரை இப்போதைக்கு எழுப்ப முடியாது.

புரொபசர் வெளியே வந்தார். கதவைச் சாத்தினார்.

நிம்மியின் அறைக்குள் குழப்பத்துடன் நுழைய விருந்தவர் சற்று நின்றார். உள்ளே தாயும் மகளும் பேசும் பலமான கிசுகிசுப்பு அவர் காதில் விழுந்தது.

''எனக்கு என்ன ஆயிற்றென்றே புரியவில்லை, அம்மா! திடீரென்று என் ஹிப்னாடிஸ சக்தி எங்கே ஒளிந்து கொண்டது?'' என்று பதற்றமாகச் சொல்லிக்கொண்டிருந்தாள் நிம்மி.

ஆனால், ஜெகதாவின் குரலில் ஒருவித நிம்மதி தென்பட்டது. ''பரவாயில்லை, விட்டுவிடு. எனக்கு என்ன நேருகிறதோ நேரட்டும். உன்னைப்பற்றி இரவு பகலாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேனே, அது ஒழிந்தது; அணு அணுவாய் என்னை நானே சித்திரவதை செய்து கொண்டிருந்தேனே, அது இல்லை இனிமேல்.''

''என்னம்மா சொல்கிறாய் நீ?''

''புரியவில்லையா நிம்மி? உனக்கு இந்த மந்திரவாதி வாழ்க்கையும் மனோவசிய வாழ்க்கையும் கூடாதென்று தானே உன் அப்பாவிடம் போராடிக்கொண்டிருந்தேன்? உன் திறமைகள் இப்போது தானாகவே விலகிவிட்டன. இனிமேல் புரொபசருக்கு உன்னால் பிரயோசனம் இல்லை. விட்டு விடுவார். நான் கனவு கண்டபடி நீ கண்ணியமான குடும்ப விளக்காகப் பிரகாசிப்பாய். அதுபோதும் கண்ணே எனக்கு! ஒவ்வொரு துன்பத்திலும் ஒரு இன்பம் மறைந்திருக்கும் என்பார்கள். அதன் அர்த்தம் இப்போதுதான் நிம்மி எனக்கு விளங்குகிறது.''

புரொபசர் தன் வருகையை அறிவிக்கிறமாதிரி செருமிக் கொண்டார் தொண்டையை. ஒரு நொடியில் தன் முகபாவத்தைத் தலைகீழாக மாற்றிக் கொண்டார். ஏமாற்றமும் ஆத்திரமும் நிறைந்தவராகச் சில வினாடிகளுக்கு

முன் காட்சியளித்த அவர், இப்போது அன்பும் பரிவும் இரக்கமும் இனிமையும் நிறைந்தவராகத் தன்னை மாற்றிக்கொண்டார். நற்பண்புகளை எல்லாம் ஒரு ஜோதி என்று வர்ணிக்க முடியுமானால், அந்த ஜோதி அவரிடம் காலோடு தலை பளபளத்துக் கொண்டிருந்தது.

தலையைத் தாழ்த்திக்கொண்டு உள்ளே வந்தவர், ''உன் அம்மா சொல்வது கரெக்ட்தான் நிம்மி'' என்றார் குரல் தழுதழுக்க.

ஏறிட்டு நோக்கினார்கள் அவரை, தாயும் மகளும். அவருடைய பேச்சிலும் தோற்றத்திலும் ஏற்பட்டிருந்த மாபெரும் புரட்சி அவர்களால் நம்பக்கூடியதாக இல்லை. ஆனால் புரொபசர் தொடர்ந்து பேசப் பேச, இரண்டு பேதைகளின் உள்ளங்களும் பாகாய்க் கரைந்து, மெழுகாய் உருகலாயின.

''யாரோ சிரிக்கிற மாதிரி இருந்ததே என்று வெளியே போய்ப் பார்த்தேன். நீலகண்டன்தான்'' என்று சொல்லலானார் புரொபசர், அறையின் நீள அகலங்களை அளக்கிறாற் போல் நடந்து கொண்டே. ''அவனுடன்தான் இத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்தேன். 'எதற்கடா சிரிக்கிறாய்?'' என்றால், நீ ஆயிரம் தான் மந்திர தந்திரமும் மனோவசியம் கற்றிருந்தாலும், தெய்வத்தின் ஆணைகளை மாற்ற முடியாதடா முட்டாள்!'' என்று கூறிவிட்டுச் சிரிக்கிறான். 'இறைவனின் அரங்கத்தில் உன் கதையும் என் கதையும் நிம்மி கதையும் ஜெகதா கதையும் என்றைக்கோ நடந்து முடிந்தாகி விட்டது. நாமெல்லாம் அதைத் திரும்ப நகலெடுத்து நடித்துக்கொண்டிருக்கிறோம். கதையை இப்படி மாற்றலாமா அப்படி மாற்றலாமா என்று நினைப்பதெல்லாம் பைத்தியக் காரத்தனம்!' என்றான் நீலகண்டன். நிம்மி, அவன் குடிகாரன் தான். ஆனால் போதையின்போதுதான் சத்தியமான

வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வருகின்றன. என் முட்டாள்தனங்கள் எனக்கு இப்போதுதான் புரிகிறது...''

நிம்மியும் ஜெகதாவும் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தவாறிருந்தார்கள். 'என்னை மன்னித்துவிடுங்கள்' என்று வாய்விட்டு அவர் சொல்லவில்லை. ஆனால் அவருடைய உடம்பின் ஒவ்வோர் அணுவும் அவர்களிடம் மன்னிப்புக் கேட்பது போல் பாவம் காட்டின.

நிம்மியின் அருகில் வந்து அவள் தோள்மீது ஒரு கையும், ஜெகதாவின் தோள்மீது மறு கையும் அன்புடன் வைத்தார் புரொபசர். ''நிம்மி, உனக்கு அமைதியான பாங்கான குடும்ப வாழ்க்கைதான் கடவுள் வித்திருக்கிறானோ என்னவோ. அதை மாற்ற நான் யார்? விடு. நானும் இனி அதைப்பற்றி மனத்தை உழப்பிக்கொள்ளப் போவதில்லை. நீங்களும் அலட்டிக்கொள்ள வேண்டாம்.''

''அப்பா...'' என்றாள் நிம்மி, என்ன பேசுவதென்று தெரியாமல்.

புரொபசர் தன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டார், தளும்பும் கண்ணீரை அவர்களுக்குக் காட்ட வெட்கப்பட்டமாதிரி. பிறகு எழுந்து கொண்டார். கைக் குட்டையை எடுத்துக் கொண்டு முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

''சமையல் ரெடிதானா என்று பார், ஜெகதா. நாம் மூன்றுபேரும் சேர்ந்து சாப்பிட்டுப் பல நாள் ஆகிறது. சமையற்காரனை ரெடி பண்ணச்சொல்'' என்று கூறிவிட்டு வேகமாக வெளியேறினார்.

ஆனால் அம்மாவும் பெண்ணும் உடனே எழுந்து கொண்டுவிடவில்லை. பிரமிப்பு அவர்கள் நாவைக்கட்டி யிருந்தது.

''என்னம்மா, இப்படி மாறிவிட்டார் அப்பா?'' என்று அதிசயித்தாள் நிம்மி.

''நீலகண்டன் மாமாவைப்பற்றி உனக்குத் தெரியாது. ஓரோர் சமயத்தில் இப்படித்தான் பெரும் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தி விடுவார் நம் மனசில்'' என்றாள் ஜெகதா. நன்றியுணர்வினால், அவள் கண்கள் பனித்திருந்தன.

சாப்பாட்டின் போதும் புரொபசர் கலகலப்பாக இருப்பதைத் தான் கண்டார்கள் நிம்மியும் ஜெகதாவும், சமையற்காரனை அவர் கிண்டல் செய்வதையும், டைனிங் டேபிளின் நடுவே டிரான்ஸிஸ்டர் இசைத்துக் கொண்ருப்பது என்ன ராகமென்று விளக்குவதையும், அடுத்த மாதம் லக்னோவில் நடத்தவிருக்கும் மாஜிக் ஷோவில் என்ன புது ஐட்டங்கள் இருக்கப் போகின்றன என்று விவரிப்பதையும் கொண்டு, அவர் எவ்வளவு தூரம் மாறி விட்டார் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டார்கள். அவருக்குத் தெரியாமல் இருவரும் பார்வையைப் பரிமாறிக் கொண்டு தங்கள் வியப்பையும் மகிழ்ச்சியையும் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

பாவம்!

திடீர் திடீரென்று அவர் மனத்தில் ஒரு கொந்தளிப்பு உருவாகி உருவாகித் தணிவதை அவர்கள் காணவில்லை. இப்படி வேஷம் போட நேர்ந்தது எத்தனை சிறுமை என்று அவர் உள்ளுக்குள் குமுறுவது அவர்களுக்குத் தெரியாது. அடுத்து என்ன செய்வது, என்ன செய்வது என்று யோசித்து அவருடைய மூளை ரணமாகிக் கொண்டிருப்பதை அவர்கள் அறியவில்லை. விடமாட்டேன், விட மாட்டேன் என்று அவருடைய அகங்காரம் கறுவும் போதெல்லாம் அவர் கண்களில் ஒரு விஷ மினு மினுப்புப் பரவுவதை அவர்கள் பார்க்கவேயில்லை.

வாட்ச்மேன் உள்ளே வந்து சலாமிட்டான் புரொபசருக்கு. ''பரஞ்சோதி ஊரிலிருந்து வந்துவிட்டார் சார். இப்போதுதான் ஒர்க் ஷாப்புக்குப் போகிறார். உங்களிடம் சொல்லச் சொன்னார்'' என்றான்.

''சரி'' என்று முதலில் தலையசைத்தவர், ஏதோ நினைத்துக் கொண்டவராக, ''அவனை இருக்கச் சொல் ஓர்க் ஷாப்பிலேயே. நான் வந்து பார்க்கிறேன்'' என்றார்.

அதன்பிறகு அவருடைய பேச்சுக் குறைந்து விட்டதையும், ஒரு யோசனையின் அறிகுறி முகத்தில் பரவுவதையும், சாப்பாட்டை அவசரமாய் முடித்துக் கொள்வதையும் நிம்மியோ ஜெகதாவோ உணரவில்லை.

இருவருக்கும் முன்னதாக எழுந்து கையைக் கழுவிக் கொண்டார் மித்ரா. ''ஓர்க் ஷாப் வரை போய் வந்து விடுகிறேன். ஜெகதா, பரஞ்சோதி பர்ச்சேஸெல்லாம் ஒழுங்காகப் பண்ணியிருக்கிறானா என்று பார்க்க வேண்டும்'' எனத் தெரிவித்து விட்டுக் கிளம்பினார்.

மூன்றாவது கட்டிடத்தில் இருந்தது ஒர்க் ஷாப். வாசலிலேயே தயாராகக் காத்திருந்தான் பரஞ்சோதி.

அவனுக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். பத்து வருட காலமாகப் புரொபசரின் உதவியாளர்களில் ஒருவனாக இருந்து வருகிறான். மாஜிக் நிகழ்ச்சிகளுக்கும் ஒர்க் ஷாப் தயாரிப்புக்களுக்கும் தேவையான பொருள்களை வெளியூர் களிலிருந்து வாங்கிவர வேண்டிய வேலை அவனுடையது.

''வணக்கம் சார்'' என்று புரொபசரை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான்.

முன்புறமிருந்த அறையில் வட்ட வடிவமான நான்கு மூங்கில் பெட்டிகள் தரையில் வைக்கப்பட்டிருந்தன.

''லக்னோ புரோகிராமில் 'ஸ்னேக் டான்ஸ்' சேர்த்து விடலாம் சார்!'' என்று இளித்தவாறு சொன்னபடியே பெட்டிகளைத் திறந்து காட்டினான் பரஞ்சோதி.

ஒவ்வொன்றிலும் மூன்றடி நான்கடி நீளமுள்ள பாம்புகள் சுருண்டு மடங்கி நெளிந்து கொண்டிருந்தன.

திருப்தியுடன் ஒரு சிரிப்பை விடுத்தார் புரொபசர். ''எல்லாம் பல் பிடுங்கியவைதானே?''

''ஆமாம் சார்.''

ஒரு பெட்டிக்குள் கையை விட்டு, லாகவமாகக் கழுத்தைப் பிடித்துப் பாம்பொன்றைத் தூக்கினார் புரொபசர். முகத்துக்கு நேரே தூக்கிப் பிடித்துக் கொண்டு பார்த்தார்.

பிடியின் இறுக்கம் தாள முடியாமல் தனது நச்சுத் தலையை இப்படியும் அப்படியும் வேகமாக ஆட்டியது அந்தப் பாம்பு. செப்புக்கம்பி போன்ற மெல்லிய இரட்டை நாக்கு, காற்றில் படபடக்கிற மாதிரி துடித்தது. இடுங்கிய சின்னஞ்சிறு கண்கள் மங்கலான விளக்குப் போல மினுமினுத்தன.

''குட்!'' பாம்பைத் திரும்பப் போட்டார் மூங்கில் பெட்டிக்குள். பரஞ்சோதி மூடினான்.

''கடிபட்டு, விஷமேறி, நுரை கக்குவதைக் கச்சிதமாய் நடிக்க வேண்டும். உடம்பில் நீலம் பரவுவது தத்ரூபமாய் இருக்க வேண்டும். ஆடியன்ஸில் முன் வரிசையில் உட்கார்ந்திருக்கிற பெண்கள் பயந்து அலறுவார்கள்.'' தனக்குத் தானே சிரித்துக் கொண்டார் புரொபசர். ''அருமையாய் நடிக்கத் தெரிந்தவர்களாக ஐந்தாறு ஆட்களைத் தயார் செய்து வை. நான் லக்னோ போவதற்கு முன்பே அவர்கள் போயிருக்க வேண்டும். உள்ளூர்க்காரர்கள் போல் மாஜிக் ஷோவுக்கு டிக்கெட் வாங்கிக் கொள்ள வேண்டும். அவர்களிடம்தான் இருக்கிறது ஐட்டத்தின் வெற்றியும் தோல்வியும்.''

''நான் கவனித்துக் கொள்கிறேன் சார்'' என்றான் பரஞ்சோதி.

அவன் நீட்டிய செலவுப் பட்டியலை மேலோட்டமாகப் பார்த்து, கையெழுத்திட்டு விட்டுத் திரும்பினார் புரொபசர்.

''இன்னொரு விஷயம், சார்'' என்றான் பரஞ்சோதி சிறிது தயக்கத்துடன். ''உங்களிடம் சொல்லாமல் செய்து விட்டேன்.''

''என்ன?''

பரஞ்சோதி தன் ஏர்வேஸ் பையைத் திறந்தான். கிரிக்கெட் பந்து அளவுக்கு இருந்த ஒரு கண்ணாடி ஜாடியை வெளியே எடுத்தான். அந்த ஜாடியில்-

ரத்தத்தால் செய்தாற்போன்று செக்கச் சிவப்பான சிறிய ஐந்து நெளிந்து கொண்டிருந்தது. நீளம் ஒன்றரை அங்குலம் தான் இருக்கும்.

''மண்புழுவா?'' என்றார் புரொபசர் தயக்கத்துடன்.

''பாம்புக்குட்டி சார்'' என்று பரஞ்சோதியிடமிருந்து பதில் வந்தது. ''அமேஜான் காடுகளில் பிடித்ததாம். பம்பாய் ஹாப்கின்ஸ் இன்ஸ்டிட்யூட்டில் கொடுப்பதற்காக ஒரு பிரேஸில்காரன் வைத்திருந்தான். ஐம்பது ரூபாய் கொடுத்து வாங்கினேன்.''

திகைத்தார் மித்ரா.

''எதற்காக?''

''ரொம்ப அதிசயமான பாம்பாம் சார் இது. கொடிய விஷம் உண்டு. எத்தனை காலம் வேண்டுமானாலும் உயிரோடு இருக்கும். அதுகூட அதிசயமில்லை. ஜாடியிலோ டப்பாவிலோ அடைத்து வைத்திருக்கலாம். அப்படியும் உயிர்வாழும்...''

''இதே அளவுதான் இருக்குமா?'' என்றார் புரொபசர்.

''இல்லை. கொஞ்சம் சொஞ்சமாக வளர ஆரம்பிக்குமாம். திடீரென்று ஒருநாள் எப்படிப்பட்ட டப்பாவானாலும் உடைத்துக் கொண்டு வெளிவந்து விடுமாம். வேடிக்கையாக இருந்ததால் வாங்கிவிட்டேன். ஆனால் ஷோவில் எப்படி உபயோகப்படுத்தப் போகிறோம் என்று தெரியவில்லை.''

''அந்தப் பிரேஜில்காரன் என்ன சொன்னான்? அவர்கள் ஊரில் என்ன செய்கிறார்களாம்?''

''எதிரியைக் கொல்லத்தான் இது உபயோகமாம்'' என்று பணிவாகச் சிரித்தான் பரஞ்சோதி. ''காட்டு வாசிகள் இதை ஏதாவது சிமிழில் அடைத்து பகைவனின் உடம்பில் இருக்கிற மாதிரி செய்து விடுவார்களாம். ஒரு நாள் இது சிமிழிலிருந்து வெளிப்பட்டு ஆளைத் தீர்த்து விடுமாம்.''

''ஓ!'' உதட்டைக் கடித்தபடி ஜன்னலருகே சென்று நின்றிருந்தார் புரொபசர். பல நிமிடங்கள் அந்த அறையில் நிசப்தம் நிலவியது.

''பரஞ்சோதி, இப்படி வா'' அந்த உதவியாளனின் தோளில் மெல்லக் கை வைத்தார் புரொபசர். அவனுடைய தேகத்தில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டு அடங்கியது. மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவன் போல, மித்ரா சொல்லும் எந்தப் பேச்சுக்கும் கட்டுப்படத்தயாரானன் அவன். ''நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேள்'' என்றார் புரொபசர்.

அவர் வீட்டுக்குத் திரும்பியது போது, டிராயிங் அறையில் ஜெகதா இருக்கவில்லை. நிம்மி மட்டுமே கல்லூரிப் பாடத்தை எழுதிக் கொண்டிருந்தாள்.

''இந்தத் தடவை பரஞ்சோதி வாங்கி வந்ததெல்லாம் தண்டம்'' என்று குறை கூறியபடி மாலைப் பேப்பரைப் பிரித்துக் கொண்டார் மித்ரா.

''ஊம்'' என்று பதிலளித்து விட்டுத் தன் வேலையில் ஈடுபட்டிருந்தாள் நிம்மி.

செய்திகளை வாய் விட்டுப்படித்துக் கொண்டிருந்தார் மித்ரா. ''ஜனாதிபதிக்கு மலையாள சிகிச்சை'' என்ற வரிகளைப் படித்தவர், அசிரத்தையாகக் கேட்கிற மாதிரி, ''காலேஜுக்குப் போயிருந்தாயே, நிம்மி? லீலாவதியின் அண்ணன் - அந்தப் பையனுக்குக் கால் எப்படி இருக்கிறதாம்?'' என்று விசாரித்தார்.

நிம்மி திடுக்கிட்டு, ''வந்து...'' என்று தடுமாறினாள்.

புரொபசர் அவள் திகைப்பை நீக்கும் பொருட்டுப் புன்னகை செய்தார். ''நான்தான் எனக்கு எல்லாம் தெரியும் என்று முன்பே சொன்னேனே நிம்மி?'' என்றார்.

''வந்து... பிளாஸ்டர் கட்டுப் போட்டிருக்கிறது... பத்துப் பதினைந்து நாள் படுக்கையில் இருக்க வேண்டும்...''

''ஹூம்... வெறும் வைத்தியத்தில் மட்டும்தான் இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு நம்பிக்கை'' என்று பெருமூச்சு விட்டார் புரொபசர். ''கடவுள் நம்பிக்கை என்றால் பரிகாசம் பண்ணுவார்கள்...''

அவர் பேச்சை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தாள் நிம்மி.

புரொபசர் தினத்தாளைப் புரட்டியவாறே பேசிக் கொண்டிருந்தார். ''குருவாயூரப்பனுக்கு வேண்டிக் கொள்ளலாம், வெள்ளியில் கால் வாங்கிப் போடுகிறேன் என்று. ஏன், இந்த மாதிரிக் கோளாறுக்கு மந்திரிக்கிறவர் கள்கூடப் பல பேர் இருக்கிறார்கள். ஒரு தாயத்துக் கட்டி விட்டால் போதும். சரியாகிவிடும். ஹூம்! யார் நம்புகிறார்கள் அதையெல்லாம்!''

நிம்மி பதிலொன்றும் கூறவில்லை. புரொபசரும் அதற்கு மேல் பேசவில்லை. தன் பேச்சு எதிர்பார்த்த பலனை விளைவித்திருக்கிறது என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது.

# 19

People who have mislaid valuable documents like title deeds, have been able to remember under hypnosis where they had kept them. Jewels stored away for safe - keeping and later forfgotten, have also been recovered in this way.

- S.Dass

ஆகா! உலகம் எவ்வளவு இன்பமானது!

இந்த எண்ணத்துடன்தான் காலையில் கண்விழித்தாள் நிம்மி. சென்ற சில நாட்களாக அவள் உடம்பில் புகுந்திருந்த அசதியும் மனத்தில் குடியேறியிருந்த சோர்வும் எங்கேதான் ஓடி மறைந்தன என்று அவளே ஆச்சரியப்பட்டாள்.

மூச்சுத் திணறத் திணறத் தண்ணீரில் மூழ்குகிற மாதிரி அவள் அடிக்கடி ஒரு கனவு காண்பதுண்டு. இதோ இதோ என்று உயிர் போகிற மாதிரியான திணறல் ஏற்படுகிறபோது ஒரு கேவலுடன் சடேரென அவள் விழித்துக் கொள்வாள். அந்த மாதிரிதான் வாழ்க்கையிலும் என்னென்ன மாரடைப்புக்களோ ஏற்பட்டன போலும் என்று எண்ணிக் கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள்.

பக்கத்தில் மேஜை மீது கழற்றி வைக்கப்பட்டிருந்த கைக் கடியாரத்தைப் பார்த்தாள். மணி ஐந்தேகால் ஆகிக் கொண்டிருந்தது. அப்படியானால் பால் வந்திருக்கும்.

தலைமாட்டிலிருந்த மணியை அழுத்தினாள். உள்ளே சமையற்கட்டில் அது கிணுகிணுவென ஒலியெழுப்புவது கேட்டது.

பத்து பதினைந்து நாள் முன்பு புதிதாக வேலைக்கு வந்திருந்த சமையற்கார அம்மாள் பதைத்துக் கொண்டு ஓடி வந்தாள்.

''காப்பி ரெடியா?'' என்று நிம்மி கேட்டது அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. ''இதோ கொண்டுவருகிறேன்'' என்று திரும்ப ஓடினாள். நிம்மி தனக்குள் சிரித்துக் கொண்டாள். 'பெட் காப்பி' அருந்தி அவளுக்கும் எத்தனை நாளாகிறது!

மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு, படுத்தவாறே சில பாடங்களைப் படிக்கலாமென்பது அவள் எண்ணம். முக்கியமாக ஆங்கிலப் பாடத்தில் ப்ரோஸ், பொயட்ரி இரண்டும் ரொம்பப் பின்தங்கி விட்டது. அதைப் பிடித்து விடவேண்டும். படுத்தவண்ணம் புத்தகங்களைப் புரட்டலானாள்.

''காப்பி கேட்டாயாமே?'' என்றவாறு ஜெகதாவே வந்தாள். காப்பியின் சூடும் மணமும் நிம்மியை எழுந்து உட்கார வைத்தன.

''ஓ! தாங்க் யூ மம்மி!'' என்று வேண்டுமென்றே ஸ்டைலாகப் பேசினாள் நிம்மி, காப்பியை உறிஞ்சிக் கொண்டு! நிமிர்ந்த விழிகள் அம்மாவைப் புன்னகையுடன் பார்த்தன. ''ஹங் லவ்லி லுக்! உன்னைக் கட்டிக் கொள்ள வேண்டும் போல் ஆசையாயிருக்கிறது.

ஜெகதாவுக்கு அவளுடைய வேடிக்கைப் பேச்சில் மனம் ஈடுபாடு இல்லை. ''சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு கொடு.''

''சுத்த உம்மணா மூஞ்சி அம்மா நீ!'' என்று குறை கூறினாள் நிம்மி. ''நேற்று அப்பா எவ்வளவு மாறிப்போய் விட்டார்! எத்தனை கவலைகள் பஞ்சாட்டம் பறந்து விட்டது நமக்கு! உனக்கு எப்படியோ, எனக்கு நிம்மதியாயிருக்கிறது அம்மா!''

ஜெகதா கட்டிலின் கீழே குனிந்து, ''இந்த வேலைக் காரியை முதலில் மாற்ற வேண்டும்! நீ என்றைக்கோ சாப்பிட்ட சாத்துக்குடி தோல் காய்ந்து கிடக்கிறது. கட்டிலின் கீழே கூட்டுவதேயில்லை போலிருக் கிறது, சோம்பேறிக் கழுதை!'' என்றாள்.

''ரொம்பச்சாமர்த்தியமாகப் பேச்சை மாற்றுகிறாயே!'' என்று முகத்தைத் தூக்கிக் கொண்டாள் நிம்மி. ''அப்பாவைப் பற்றி அவ்வளவு தூரம் சொல்கிறேன், ஆமாம்டி நிம்மி என்று ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா நீ!'' காப்பியை மடமடவென்று அருந்திவிட்டு லொட்டேன்று டம்ளரை மேஜைமீது வைத்தாள்.

''எதற்காகத் கோபிக்கிறாய். நிம்மி? நான் ஒன்றுமே சொல்லவில்லையே?''

''ஒன்றுமே சொல்லவில்லையே என்றுதான் கோபிக்கிறேன்.''

''சரி, சரி, பாடம் படித்துக் கொண்டிருக்கிற போது எதற்காக மற்றக் குழப்பங்கள்? அப்பா மாறிவிட்டார் என்கிறாய். சரி, மாறிவிட்டார். உன் மனம் நிம்மதியடைந்தது என்கிறாய். அப்படியே இருக்கட்டும், போயேன்!'' யந்திரம் போல் மகளின் தோளில் இரண்டு தட்டுத் தட்டி விட்டுச் சென்று விட்டாள் ஜெகதா.

''ஐய! இந்த அம்மாவைப் போல 'ப்ளெஷர் கில்லி' யாரும் கிடையாது'' என்று உதட்டைப் பிதுக்கிக் கொண்டாள் நிம்மி. ஆனால் அன்னையின் அவநம்பிக்கையினால்கூடக் குலைக்க முடியாத அளவுக்கு உற்சாகம் அவளிடம் எழுந்திருந்ததால், ஏழரை மணிவரையில் படிப்பதும் குறித்துக் கொள்வதுமாக இருந்தாள்.

ஆங்கிலப் பாடத்துக்கு இரண்டு 'கைடு' வேண்டியிருந்தது. அவை கல்லூரி சொஸைட்டியில் தீர்ந்து விட்டதாம். பைகிராஃப்ட்ஸ் சாலையில் உள்ள ஒரு புத்தகக் கடையில் கிடைக்கிறதென்று சொன்னார்கள். இன்றைக்காவது வாங்க வேண்டுமென்று முடிவு செய்தவளாக, எட்டரைக்குள் மற்ற வேலைகளை முடித்துக் கொண்டு, தானே காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

"மூன்றரை ரூபாய்" கைடை நிம்மியின் முன்னே வைத்தார் கடைக்காரர்.

"ப்ரோஸ் கைடு மட்டும்தானே கொடுத்திருக் கிறீர்கள்?" என்றாள் நிம்மி.

"பொயட்ரிக்கு எங்களிடம் இல்லை. காலேஜ் கொவாபரெடிவ் சொஸைடிகளில் கிடைக்கும்."

"எங்கள் காலேஜில் இல்லையென்றுதானே இங்கே வந்தேன்?"

"அப்படியானால் மூர்மார்க்கெட் புக் ஸ்டால்களில் கேட்டுப் பாருங்கள்" என்றார் கடைக்காரர்.

நிம்மி, ஹாண்ட் பாக்கிலிருந்து பத்து ரூபாய் நோட்டையெடுத்து நீட்டினாள்.

"இப்பத்தான் திறந்தோம். சில்லறையாக இல்லையா உங்களிடம்?"

"ஸாரி. இல்லையே!"

"நான் வேண்டுமானால் தரட்டுமா?" மூன்றாவது குரலொன்று கேட்டது, வாசற் புறத்தில்.

"லீலா!" ஆர்வத்துடன் தோழியின் கையைப் பற்றிக் கொண்டாள் நிம்மி.

"நானும் கைடுக்காகத்தான் வந்தேன்" என்று தெரிவித்த லீலாவதி இருவருக்குமாகச் சேர்த்துப் பணம் கொடுத்தாள்.

"இன்றைக்குக் காலேஜ் பத்தரைக்குத்தானே? வா, வண்டியில் உட்கார்ந்து கொஞ்சம் பேசலாம்" என்று அழைத்தாள் நிம்மி.

"ஆமாம், ஆமாம். எனக்கும் உன்னிடம் ஒரு விஷயம் கேட்கணும்" என்று அவளுடன் வந்தாள் லீலாவதி.

கஸ்தூரிபா ஆஸ்பத்திரி ஓரமாக நிறுத்தியிருந்த காரை அடைந்தார்கள்.

''ரொம்ப ஸீரியஸான கேள்வி'' என்றாள் பின் ஸீட்டில் அமர்ந்து கொண்ட லீலாவதி.

''ஹ~ட்!''

''ஹிப்னாடிஸம் சம்பந்தப்பட்டது.''

''வித் ப்ளெஷர்.''

''அப்புறம் கோபிக்கக் கூடாது?''

''ஸாரி, நோ காரண்டி.''

''ஹிப்னாடிஸத்தின் மூலம் இன்னொருவரின் சொப்பனத்திலே இடம் பெற முடியுமா?'' என்றாள் லீலாவதி.

''ஏய் கேட்பதைத் தெளிவாய்க் கேள்!''

''அதாவது, இப்போது என் அண்ணா கல்யாணம்தான் இருக்கிறான். நீ இஷ்டப்பட்டால் அவனைக் கனவு காணும்படி பண்ணி, அந்தக் கனவிலே நீ இருக்கிற மாதிரி செய்ய முடியுமா?''

நிம்மி அவள் முகத்தை ஆராய்ந்தாள். சிரிப்பை அடக்கிக் கொண்டிருப்பவர்களின் முகம் எவ்வளவு கோணலாக இருக்குமோ அவ்வளவு கோணலாக லீலாவதியின் முகம் காட்சியளித்தது.

''ஸில்லி! இறங்கடி வண்டியை விட்டு!'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

''என்னவோ அம்மா. நான் ஆதாரமில்லாமல் சொல்லவில்லை. அவன் தூங்குகிறபோது 'நிம்மி நிம்மி' என்று முனகுவது நன்றாய்க் கேட்கிறது.''

குப்பென்று நிம்மியின் முகம் சிவந்துவிட்டது. மறுவினாடியே சமாளித்தவளாக, ''உன் காது லட்சணம் அப்படி! நீதான் சுத்தக் கஞ்சியாயிற்றே! அவருக்கு, பாவம், நன்றாய்ச் சாப்பாடு போடாமல் அரை வயிற்றுக்குப் போடுகிறாய் போலிருக்கிறது. அவர் 'கம்மி கம்மி' என்கிறார். அது உன் காதில்...''

''நிம்மி நிம்மி என்று விழுகிறதாக்கும்!'' என்று வாக்கியத்தைப் பூர்த்தி செய்தாள் லீலாவதி, சிரித்துக் கொண்டே!

நிம்மியின் குரல் கவலையை வெளிப்படுத்தியது. ''லீலா! அவரைச் சும்மா படுத்துக் கொண்டேயிருக்கும்படி விடாதே. கொஞ்சம் நடமாடச் சொல்லு. வாக்கிங் ஸ்டிக் வைத்துக் கொண்டு நடந்து பார்க்கட்டும்.''

''நான் சொல்லாமலே அதைத்தான் செய்கிறார் தினம்! அவர் நன்றாய்க் குணமாகி, கல்கத்தாவுக்குத் திரும்பின பிறகு தான் எனக்கு நிம்மதி ஏற்படும்.''

''சுயநலக்காரி!'' என்றாள் நிம்மி.

''ஐயையோ! ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''பின்னே என்ன? அண்ணன் கல்கத்தாவுக்குச் சீக்கிரம் திரும்ப வேண்டும், நின்று போயிருக்கும் உன் திருமணப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்பதுதானே உன் அந்தரங்க ஆசை! இந்த ஹிப்னாடிஸ்ட் ஜீனியஸுக்கு அது கூடவா தெரியாதென்று நினைத்தாய்?''

''சீ போ!'' என்று கூறிவிட்டுக் காரிலிருந்து இறங்கி விட்டாள் லீலாவதி.

''சீரியோ'' என்று வண்டியைக் கிளப்பினாள் நிம்மி. இன்னொன்று ஞாபகம் வந்தது. ''இரு லீலா, ஒரு விஷயம். என் அப்பா கூடச் சொன்னார். கால் குணமாவதற்கு ஏதாவது நேர்ந்து கொள்ளச் சொல்லு.''

''சரி, பாட்டி!''

லீலாவதி தெருவைக் கடந்து விட்டாள்.

'என்னை என் வீட்டில் டிராப் செய்து விடேன்' என்று அவள் கேட்காதது ஏமாற்றம்தான். கேட்டிருந்தால் அவளை இறக்கி விடுகிற சாக்கில்... நிஜமாகவா இருக்கும், தூக்கத்தில் அவள் அண்ணன் 'நிம்மி நிம்மி' என்று சொல்வது?

இன்னொரு தரம் கல்யாணத்தைச் சந்திப்பதற்கு என்ன சாக்குக் கிடைக்கும் என்று அவளுடைய நாணமற்ற உள்ளம் ஆராய்ந்தது. ஒரு சாக்கும் தேவைப்படாமல் அன்று மாலையே அவனைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது என்று அவளுக்கு அப்போது தெரியாது.

★ ★ ★

''என்ன, ஏதாவது நடந்ததா?'' என்று புரொபசர் கேட்டார்.

''இன்னும் இல்லை, சார். இன்று காலையில் கூடப் பின்தொடர்ந்து ஆள் போயிற்று. ஆனால் சந்தர்ப்பம் சரியாயில்லை.'' என்று பதிலளித்தான் பரஞ்சோதி.

★ ★ ★

வகுப்புக்கள் முடிந்ததும் நேரே வீடு திரும்பவில்லை நிம்மி.

காலையில் தான் வாங்கிய கைடை விரிவுரையாளரிடம் காட்டிய போது, ''இதுகூட அவ்வளவு உபயோகமில்லை. பொயட்ரிதான் உனக்கு வீக். அதற்கு ஒரு கைடு வாங்கிக் கொள்'' என்று அந்த அம்மாள் கூறினாள்.

''அதையும் வாங்கி விடுகிறேன், மேடம்'' என்றவள் காலேஜிலிருந்தே அப்பாவுக்குப் போன் செய்தாள்.

''எங்காவது வெளியே போகிறீர்களா, அப்பா? கார் வேண்டியிருக்குமா?'' என்றாள்.

''வேண்டாம், வேண்டாம். நீ எங்கேயாவது போகப் போகிறாயா?'' என்றார் மித்ரா.

''ஆமாம்பா! மூர்மார்க்கெட் வரையில் போக வேண்டியிருக்கிறது. ஒரு கைடு வாங்க வேண்டும்... போகலாமா என்று...''

''போ, போ! கட்டாயம் போம்மா, நிம்மி!'' என்று அவசரமாக அனுமதி கொடுத்தார் புரொபசர். ''மூர்மார்க்கெட் தானே? இருந்து, பார்த்து, ஒரு கடைக்கு நாலு கடையாக விசாரித்து வாங்கிக்கொண்டு வா.''

மூர்மார்க்கெட்டின் முன்புறத்தில், இரண்டு சர்பத் வண்டிகளுக்கு இடையில் நிம்மி காரை ஒரு குலுக்கலுடன் நிறுத்திய லாகவத்தையும், நான்கு கதவுகளும் பூட்டப் பட்டிருக்கின்றனவா என்று குனிந்து இழுத்துப் பார்த்த அழகையும், உடையை ஒருமுறை இழுத்து விட்டுக்கொண்டு நடைபோட்ட நிமிர்வையும், நீண்ட கறுப்புப் படிகளில் ஏறிய போது, 'அம்மா மகாலட்சுமி' என்று கைநீட்டிய பிச்சைக் காரனுக்கு ஐந்து பைசா போடுகையில் அவள் வதனத்தில் தோன்றிய கருணையையும், புத்தகக் கடைகளைத் தேடிக்கொண்டே அரையிருட்டுத் தாழ்வாரங்களில் அவள் நடந்த போது கண்களின் அலைபாயும் தாவல்களையும் -

மூர்மார்க்கெட்டின் பல பகுதிகளில் பல ஜோடிக் கண்கள் கவனித்தன.

விசாரித்த மூன்றாவது கடையிலேயே அவளுக்குத் தேவைப்பட்ட கைடுகிடைத்துவிட்டது. காருக்குத்திரும்பினாள்.

கதவில்சாவியை நுழைத்துத் திருப்பியிருக்க மாட்டாள்-

தடாலென்று ஒரு இளைஞன் அலங்கோலமாகக் கீழே விழுந்தான். அவளுக்கும் சர்பத் வண்டிக்கும் நடுவேயிருந்த இடத்தில், அவன் குடித்துக் கொண்டிருந்த சிவப்புச் சர்பத் மண்ணில் உறைந்துவிட்டது. கண்ணாடி டம்ளர் கொஞ்ச தூரம் உருண்டோடி நின்றது.

ஏழைத் தொழிலாளிபோல் தோற்றமளித்த அவனுக்கு, கையும் காலும் விலுக் விலுக்கென்று உதைத்துக் கொண்டன.

சர்பத் வண்டிக்காரனும், ஒரு கூலியாளும் ஓடிவந்து அவனுடைய ஆடையைச் சரிசெய்ய, ''இரும்பு கொடப்பா

அவன் கையிலே!'' என்று இன்னொருவர் கூவ, கிடுகிடு வெனக் கூட்டம் சேர்ந்துவிட்டது.

நிம்மிக்கு வண்டியை எடுக்க வழியில்லாமல் மட்டும் போகவில்லை; மனமில்லாமலும் போயிற்று. காரின் சாவியைச் சட்டென்று திணித்தாள் அந்த வலிப்புக்காரன் கையில்.

''யாரு, ராசுதானே? பாவிப் பிள்ளைக்கு இப்படி யாகும்னுதானே ஓடியாந்தேன்!'' என்று புலம்பிக்கொண்டே ஒரு பெண் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே புகுந்தாள். ''ராசுதான்! ராசு! ராசு!'' என்று சத்தம்போட்டு அழத் தொடங்கினாள்.

''ஏம்மா கூச்சல் போடறே! உன் புள்ளைக்கு ஒண்ணும் ஆகிடலை!'' என்று கூட்டத்தில் ஒருவர் அதட்டினார்.

''உனக்குத் தெரியாது ஐயா! 'சாமியார் கொடுத்த தாயத்தைக் கழட்டி வைக்காதேடா'ன்னு எத்தினிவாட்டி சொல்லியிருக்கிறேன் தெரியுமா? அதை எப்பல்லாம் கழட்டுறானோ அப்பல்லாம் இப்படித்தான் ஆகுது!'' என்றாள் அவள், விழுந்தவனின் தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக்கொண்டு.

அவன் மெதுவாய்க் கண்ணைத் திறந்தான். மிரள மிரள விழித்தான்.

''ராசு! என் தங்க ராசு! வூட்டிலே இதை எறிஞ்சிட்டுப் போயிட்டியே! செய்யலாமா?'' என்றவள், தன் கிழிசில் புடவைத் தலைப்பிலிருந்து முடிச்சை அவிழ்த்து, ஒரு தாயத்தை எடுத்தாள். ''பார்த்தேன் - மனசு பொறுக்கலை. எப்படியும் கூலிவேலைக்கு இங்கேதானே வந்திருப்பேன்னு, வக்கீலம்மாகிட்டே சொல்லிட்டு ஓடியாந்தேன்...''

பயபக்தியுடன் அந்தத் தாயத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, ''சாமியாரே! கோச்சுக்காதேப்பா'' என்று வானத்தை நோக்கிச் சொல்லியவண்ணம் அவன் கையில் கட்டினாள்.

மந்திரம் போட்டமாதிரி டக்கென்று எழுந்து உட்கார்ந்துகொண்டான் அவன். ''பாத்தியா? பாத்தீங்களா ஐயா!'' என்று சுற்றுமுற்றும் நின்றிருப்பவர்ளைப் பார்த்து ஆச்சரியத்துடன் சொன்னாள் அந்தப் பெண்.

''போகலாம். வாம்மா'' என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு எழுந்துகொண்டான் அந்த வாலிபன்.

கார் சாவியை நிம்மியிடம் திருப்பிக் கொடுத்த அந்தப் பெண், ''அம்மா! ஒரு சின்ன உதவி செய்யுங்கம்மா! பஸ் ஸ்டாப்பு வரையில் எங்களைக் கொண்டுபோய் விட்டிடுங்க அம்மா! கையெடுத்துக் கும்பிடறேன்...'' என்றாள்.

''வீட்டுவரையிலுமே கொண்டு போய் விடுகிறேன். ஏறிக் கொள்ளுகள்'' என்று பின் கதவைத் திறந்து விட்டாள் நிம்மி.

கூட்டத்தில் யாரோ ஒருவர் ''அடேய் தம்பி! அந்தக் தாயத்துக்கு ரொம்ப மகிமை போலிருக்குதுடா! இனி யாச்சும் கழட்டாதே!'' என்று அறிவுரை கூறினார்.

''புதுப்பேட்டை ஐஸ் ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷனண்டை இறக்கிடுங்கம்மா'' என்று அந்தப் பெண் கூற, நிம்மி மௌனமானக் காரைச் செலுத்தினாள். 'தாயத்து' என்ற ஒரே சொல் அவள் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. நேற்று அப்பா சொன்னார்... இன்று இது நேருகிறது... என்ன தெய்வாதீனமான ஒற்றுமை!

''ஏனம்மா, யார் அந்தச்சாமியார்?'' என்று கேட்டாள் நிம்மி.

''அதையேன் கேட்கிறீங்க, தாயே! எங்க குப்பத்திலே தான். வாத்தியார் வூட்லே தங்கியிருந்தார். இமாசல மலையிலிருந்து வந்தவராம். தாயே! இதோ இந்தக் கையைப் பாரு!'' என்று நிம்மியின் தோள் பக்கமாகக் கையை நீட்டினாள். ''எதினாச்சும் மிஸ்டேக் தெரியுமா?''

பாதையிலிருந்து ஒரே ஒரு வினாடி பார்வையை எடுத்து, அவள் கையைக் கவனித்தாள் நிம்மி. ''ஒண்ணும் தெரியவில்லையே?''

''ஆ! நீயே பார்த்துக்க! இந்தக் கையிலே பெருச்சாளி கடிச்சு போட்டு, ஒரே புண்ணாப் போய், அறுந்து விழுந்திடற மாதிரி ஆயிட்டுது போனமாசம். அப்பத்தான் இந்தச் சாமியார் வந்தார். தாயத்துக் கொடுத்தார். இரண்டே நாள்தான். பட்டுப்போல ஆயிட்டுதும்மா!'' அவள் தன் ரவிக்கையின் கையை உயர்த்திக் காட்டினாள். அங்கே ஒரு தாயத்துக் கட்டப்பட்டிருந்தது.

நிம்மி தன் ஆவலை அடக்கமாட்டாதவளாக, ''எனக்குத் தெரிந்த ஒருவருக்கு காலிலே அடிபட்டிருக்கிறது அம்மா. அவருக்கு ஒரு தாயத்து வாங்கிக் கொடுக்க முடியுமா?'' என்றாள்.

''ஓ! நிச்சயமாய்!'' என்றாள் அவள். ''நீ அழைச்சிட்டு வாம்மா. சாமியார் எப்பவும் வூட்டிலேயேதான் இருக்கிறார்.''

''அழைத்துக்கொண்டு வருவது...'' என்று தயங்கினாள் நிம்மி. ''அவர் வருவாரோ மாட்டாரோ.. அத்தோடு இன்னும் எழுந்து நடமாடுகிறமாதிரி இல்லை...''

''ஆளைப் பார்க்கணும்னுதான் அவர் சொல்வாரு...'' என்றாள் அந்தப் பெண். ''எதுக்கும் கேட்டுப் பார்க்கிறேன். அதோ அந்த ரோடுதான். அதுக்கப்பாலே கார் போவாது. நிறுத்திக்குங்க.''

காரை நிறுத்தியதும் அவளும் அந்த வாலிபனும் இறங்கிக்கொண்டார்கள். ''இங்கேதானே இரு. சாமியாரைக் கேட்டிட்டு வந்து சொல்றேன்.''

கால்மணி நேரம்போல நிம்மி காரியிலே காத்திருந்த பின், அந்தப் பெண் ஓடிவந்து, ''உன் அதிர்ஷ்டம், தரேங்கறாரு. ஆளோட பெயராச்சம் சொல்லணுமாம்'' என்றான்.

''கல்யாணம்'' என்ற நிம்மி. ''இந்தா. அவரண்டை கொடு'' என்று ஐந்து ரூபாய் நோட்டொன்றைக் கொடுத்தாள்.

''சாமியாரு காசைக் கண்ணாலே பார்க்கமாட்டாரம்மா. நான் வாங்கிக்க மாட்டேன்'' என்று மறுத்தாள் அவள்.

''அவருக்குக் கொடுக்கவேண்டாம். உன் மகனுக்குப் பழமும் பிஸ்கட்டும் வாங்கிக்கொடேன்'' என்று அவள் கையில் திணித்தாள் நிம்மி.

அந்தத் தாயத்தைக் கல்யாணத்தின் புஜத்தில் அவள் கட்டிக்கொண்டிருந்த அதே வேளையில்-

''என்ன முடிந்ததா?'' என்று விசாரித்துக் கொண்டிருந்தார் புரொபசர் தன் உதவியாளன் பரஞ்சோதியிடம்.

''முடிந்துவிட்டது சார்!'' என்ற பரஞ்சோதி. ''இந்தாம்மா, இப்படி வா'' என்று அழைத்தான்.

ஒரு வாலிபனும், ஒரு நடுத்தர வயதுப் பெண்ணும் உள்ளே நுழைந்தார்கள்.

''இவர்கள்தான் - வெற்றிகரமாய் நாடகம் நடத்தி விட்டார்கள்'' என்றான் பரஞ்சோதி.

''மூச்சு விடக்கூடாது வெளியில்! தெரிகிறதா?'' என்றார் புரொபசர் கண்டிப்புடன்.

பிறகு ஸ்டில் பீரோவைத் திறந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தார்.

# 20

Hypnosis does not occur in a social vacuum. Prior to hypnosis some relationship must exist between subject and hypnotist. - Martin T. Orne

தாயத்தைக் கட்டிக்கொள்ளக் கல்யாணம் சுலபமாய் இணங்கி விடுவான் என்று நிம்மி நினைக்கவில்லை. அவன் சம்மதித்தது அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

ஆனால் அதைக் காட்டிலும் வியப்புத் தரக்கூடிய வேறு இரண்டொரு விஷயங்களும் அவளுக்கு அன்று நேரிட்டன.

அந்த வியப்பிலும் அதிர்ச்சியிலும், கல்யாணம் தாயத்தைக் கட்டிக்கொண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சிகூட மறைந்துவிட்டது.

தாயத்துடன் நிம்மி கல்யாணத்தின் வீட்டுப் படியேறிய போதுதான், லீலாவதியும் காலேஜிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தாள்.

''என்னவோ கைடு வாங்க மூர்மார்க்கெட் போகிறேன் என்றாய். இங்கே நிற்கிறாயே?'' என்றாள் லீலாவதி.

''உன் அண்ணனுக்கு ஒரு 'கைடு' கிடைத்தது- 'உடம்பைக் குணப்படுத்துவது எப்படி' என்ற கைடு!'' புன்சிரிப்புடன் தாயத்தைக் காட்டினாள் நிம்மி. ''இது ரொம்ப சக்தி வாய்ந்ததாம். லீலா! உன் அண்ணா கட்டிக் கொள்வாரா?''

லீலாவதி உடனே பதில் சொல்லரமல் கீழுதட்டைக் கடித்துக் கொண்டு ஏதோ யோசனை செய்தாள்; ''கல்யாணம் முன்மாதிரி இல்லை... சரி, வா உள்ளே.''

நிம்மிக்கு அவள் பேச்சும் பார்வையும் குழப்பத்தைத் தான் உண்டாக்கின.

கல்யாணத்தின் அறை வாசலுக்கு வந்து நின்றபோது, சாத்தியிருந்த கதவை ஒரு வினாடி நோக்கினாள் அவள். பிறகு, ''தூங்குகிறார் போலிருக்கிறது; தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்றாள்.

''மணி ஆறேகால் ஆகிறது. இந்த நேரத்தில் தூக்கமாவது! கல்கத்தாவில் தனியே இருந்ததில் அவன் ரொம்பக் கெட்டுவிட்டான். பயங்கரமான சதியில் பயப்படாமல் ஈடுபட்டிருக்கிறான்...''

''கல்கத்தா! பயங்கரச் சதி! என்ன சொல்கிறாய் நீ லீலா?''

''உஷ்! இப்போது அதைப்பற்றி விளக்க நேரமில்லை'' என்று சொல்லிவிட்டு, ''அண்ணா! அண்ணா!'' என்று கதவைத் தட்டினாள் லீலாவதி.

உள்ளேயிருந்து மறுமொழி வரவில்லை. ''நீ தட்டு'' என்று தோழியிடம் சொல்லி, பின்னுக்கு நகர்ந்துகொண்ட ாள் லீலாவதி.

விரல் முட்டியினால் டக்டக்கென்று தட்டினாள் நிம்மி. கல்யாணத்தின் பெயரைச் சொல்லிக் கூப்பிட அவளுக்கு நாணமாயிருந்தது; பிறகு அதையும் அடக்கிக்கொண்டு, மெல்ல, ''கல்யாணம்! மிஸ்டர் கல்யாணம்!'' என்று அழைத்தாள்.

அப்போதும் மௌனம்தான் பதிலாக வரவே, நிம்மியின் முகத்தில் கலவரம் படர்ந்தது.

''இதைத்தான் சொன்னேன்'' என்று அவள் காதோடு தெரிவித்தாள் லீலாவதி. ''இந்தமாதிரி அடிக்கடி கதவைச் சாத்திக்கொண்டு விடுகிறான். கூப்பிட்டவுடன் சட்டென்று கதவைத் திறப்பதில்லை. போதாக் குறைக்கு ஒரு புதிய சினேகிதம் ஏற்பட்டிருக்கிறது. கல்கத்தாவில் இவனுடன் வேலை பார்த்தவனாம். இப்போது வேலையில் இல்லையாம். அவன் வேறே அடிக்கடி...''

கேட்டுக்கொண்டிருந்த நிம்மிக்குத் திகில் அதிகரித்தது. சாவிகொடுத்த பொம்மைபோல அவள் கை மீண்டும் தட்டிக்கொண்டிருந்தது கதவை.

கல்யாணம் கதவைத் திறந்தான். அவன் தானாகவே எழுந்து வந்தது நிம்மிக்கு மகிழ்ச்சி அளித்தது.

''நடக்க முடிகிறதா?'' என்றாள் உவகையுடன்.

''ஓ! இதன் உதவியுடன்'' என்று கூறி. ஊன்றிக் கொண்டிருந்த கைத்தடியைக் காட்டிச் சிரித்தான் அவன். ''கம் இன் ப்ளீஸ்.''

டொக் டொக்கென்று கைத்தடியின் முனை எழுப்பும் சப்தம் நிம்மிக்கு அருவருப்பாயிருந்தது. அதே வேளையில், இந்த அளவுக்கு அவன் குணமடைந்திருக்கிறானே என்ற ஆறுதலும் உதித்தது.

கல்யாணம் கட்டிலில் சாய்ந்து கொண்டான். நிம்மி மட்டும்தான் அவன் முகத்தையே நோக்கிக்கொண்டிருந்தாள். லீலாவதியின் விழிகள் திருட்டுத்தனமாக அந்த அறையைச்

சுற்றிச்சுற்றி ஆராய்ந்து கொண்டிருந்தன. அதை நிம்மியும் அறிந்தாள். கல்யாணம் கவனித்துவிடப்போகிறானே என்பதற்காகப் பேச்சுக் கொடுக்கத் தீர்மானித்தவளாக, ''சினிமாவில் கதாநாயகிகள் கேட்பார்களே அதுபோல் நான் கேட்கப் போகிறேன்'' என்றாள் ஒரு குறும்புச் சிரிப்புடன்.

''என்ன அது? 'அத்தான்! என்னைக் கைவிட்டுவிட மாட்டீர்களே?' என்றா?''

நிம்மிக்குக் குபுக்கென்று கன்னம் சிவந்து சிரிப்பும் வந்துவிட்டது. ''அதில்லை, 'என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள். மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லாத வரையில் இந்த இடத்தைவிட்டு நான் போக மாட்டேன்!' என்று சொல்லப் போகிறேன்!''

''அந்தக் கட்டத்தில் கதாநாயகன் என்ன சொல்வது வழக்கம் தெரியுமா?''

''என்ன?''

''தெரியாது? 'யாரை யார் மன்னிப்பது, விமலா!' என்று சொல்வான். அதையே நானும் சொல்றேன்.

இருவருடைய நகைப்பிலும் லீலாவதி பங்கு கொள்ளாமலே இருந்தாள். பேச்சு விளையாட்டுத் தனமாகச் செல்வதை அவள் விரும்பவில்லை போலும் ''எடுத்துக் கொடு நிம்மி'' என்று ஆழமான குரலில்.

நிம்மி கைப்பையைத் திறந்தவாறே ''என்னை மன்னியுங்கள் என்று கேட்டது இதற்காகத்தான். உங்களுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இருக்காது... ஆனால் தயவுபண்ணிக் கிண்டலாக எதுவும் சொல்லாதீர்கள். இமய மலையிலிருந்து வந்திருக்கிற ஒரு ஸ்வாமிஜி கொடுத்தார். ரொம்பச் சக்தி வாய்ந்ததாம்...'' என்றாள்.

''பீடிகை ரொம்ப நீண்டு விட்டது'' என்றான் கல்யாணம்.

''இதுதான்'' என்ற நிம்மி, தாயத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

''ஓ!'' என்று உதட்டைக் குவித்தான் கல்யாணம். என்ன சொல்ல நினைத்தானோ, கிண்டல் வேண்டாம் என்ற நிம்மியின் வேண்டுகோள் நினைவு வரவே, அதைச் சொல்லாமல் நிறுத்திக் கொண்டான்.

''உங்கள் கால் சீக்கிரமாய்க் குணமடைய வேண்டு மென்ற கவலையில் நானாகவே வாங்கி வந்தேன். மறுக்காதீர்கள்'' என்று கூறி, ''கட்டிவிடட்டுமா?'' என்றாள் அவன் முகத்தைத் தயக்கத்துடன் நோக்கி.

''ஓ கே!'' என்று அவன் பதிலளித்ததும், நிம்மியின் இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. கல்யாணத் தின் கட்டிலில் ஓரமாக உட்கார்ந்து கொண்டு, அவன் சட்டையின் கைகளை மேலே தள்ளிவிட்டு, அழகுக்கும் இளமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த அந்தப் புஜத்தில் தாயத்தின் பட்டுக்கயிற்றை முடிந்துவிட்டபோது, ஒரு மின்வெட்டு நேரத்துக்கு இருவர் கண்களும் கலந்தன. நிம்மியின் உள்ளத்திலும் மேனியிலும் பளீரென ஒரு சிலிர்ப்புப் பாய்ந்தது. பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். ஹிப்பிகள் அணியும் பவழமாலையொன்று கல்யாணத்தின் பரந்த மார்பில் தவழ்ந்திருந்தது. லேசாய் அவன் குனிந்திருந்ததால் அந்த மாலை மெல்ல ஆடுவது, அவள் உள்ளத்தைத் தாலாட்டுகிறாற்போல இருந்தது.

''ஆனானப்பட்ட தாலிமுடிச்சே மூன்றோ என்னவோ தான் போடுவார்கள். தாயத்து முடிச்சை நீங்கள் ஏழெட்டுப் போட்டுவீட்டீர்கள்?'' என்று கேலி செய்தான் கல்யாணம்.

''எவ்வளவுக்கெவ்வளவு கெட்டியாய் முடிகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரமாய்க் குணப்படுவீர்கள்'' என்று சமாளித்தாள் நிம்மி.

அவ்வளவு நேரமும் வாயே திறவாதிருந்த லீலாவதி, ''ஆகாரமெல்லாம் சமையல் பாட்டி ஒழுங்காய்க் கொண்டு வந்து தந்தாளா அண்ணா?'' என்று விசாரித்தாள் ஒப்புக்காக.

''அவள் ஏன் கொண்டுவந்து தரவேண்டும்? ஒரு நாளில் பதினெட்டு மணி நேரம் நான் சமையற்கட்டில்தான் குடியிருக்கிறேன்'' என்றான் கல்யாணம்.

உயிரில்லாத சிரிப்பொன்றை வெளிப்படுத்திவிட்டு லீலாவதி எழுந்து கொண்டாள். ''போகலாமா, நிம்மி?''

''ஆமாம், நன்றாய்த் தூங்கிக் கொண்டிருந்தபோது தொந்தரவு பண்ணி விட்டோம்'' என்றாள் நிம்மி.

'அதெல்லாமில்லை' என்று கல்யாணம் மறுக்கவு மில்லை; 'என்ன அவசரம் அதற்குள்?' என்று நிம்மியை இருக்கச் சொல்லவுமில்லை. இருவரின் பின்னாலும் வந்து, அவர்கள் வெளியே சென்றதும் கதவைத் தாழிட்டுக் கொண்டான் முன்போல.

லீலாவதி, நிம்மதியுடன் தோள் மீது கை வைத் திருந்தவள், சிறிது அழுத்தினாள், 'கவனித்தாயா?' என்பது போல்.

முன்னறையை அடைந்ததும் நிம்மி, ''உன் மனசில் என்னதான் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது? தெளிவாய்ச் சொல்'' என்றாள்.

லீலாவதி சுற்று முற்றும் பார்த்துக் கொண்டாள். பிறகு தணிந்த குரலில், ''வங்காளத்தில் கொலை கொள்ளைகள் கோஷ்டியில் என் அண்ணனும் ஒருவனோ என்று தோன்றுகிறது'' என்றாள்.

''அப்ஸர்டு!'' என்று நிம்மி உடனே கூறினாளாயினும், இத்தனை நேரமாகத் தோழியிடமிருந்த கலவரம் அவளையும் அந்த வினாடியே தொற்றிக்கொண்டது.

''இரு!'' என்ற லீலாவதி அலமாரியைத் திறந்து ஒரு இன்லண்ட் உறையை எடுத்து வந்தாள். ''கல்கத்தாவிலிருந்து அண்ணாவின் சினேகிதன் ஒருவன் எழுதியிருக்கிறான்.

அண்ணா படித்துவிட்டுப் போயிருந்ததைத் தற்செயலாகப் பார்த்தேன். இந்த இடத்தை மட்டும் கவனி!'' என்று கடிதத்தில் ஒரு பாராவைச் சுட்டிக் காட்டினாள்.

''சமந்த்ராய், பரூச்சா, அச்சுதன்நாயர் மூன்று பேரையும் நேற்று அரெஸ்ட் செய்திருக்கிறார்கள். நக்ஸலைட் நடவடிக்கைகள் போலீசுக்குத் தெரிந்து விட்டதாம்...'' என்று ரகசியக் குரலில் படித்தாள் நிம்மி. தோழியின் அச்சத்துக்கு இது ஒரு பலமான ஆதாரமாகாது என்று தோன்றியதால் அவள் இதழில் புன்சிரிப்பு அரும்பியது. ''சினேகிதர்கள் நக்ஸலைட்டுகள் என்பதற்காக உன் அண்ணாவும் அப்படித் தான் இருக்க வேண்டுமா?'' என்றாள்.

''இதை மட்டும் வைத்து நான் சொல்லவில்லை'' என்று கூறினாள் லீலாவதி. ''முகர்ஜி என்று ஒரு வேலையற்ற ஆள் அடிக்கடி இங்கே வருகிறாள். பையில் என்னென்னவோ மறைத்து எடுத்து வந்து அண்ணாவிடம் கொடுக்கிறான். நிம்மி, எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஒரே பயமாயிருக்கிறது...''

நிம்மி அவள் கையை அழுத்திப் பிடித்து, மனத்தில் தைரிய மூட்டினாள். ''நீ பயப்படுகிற மாதிரி எதுவும் இருக்காது. எதற்கும் உன் அண்ணனை ஜாக்கிரதையாகக் கண்காணித்துக் கொண்டிரு. ஏதாவது விபரீதமாகவோ வித்தியாசமாகவோ தோன்றினால் மறைக்காமல் உடனே என்னிடம் சொல்லு. பிறகு என்ன செய்வதென்பதைப்பற்றி நாம் இரண்டு பேருமாய் முடிவு செய்யலாம்.''

தாயத்தைக் கட்டிய பிறகு கல்யாணத்தைப் பற்றி கவலையேயிருக்காது என்று அவள் கருதியிருந்தாள். இப்போது, தாயத்தைப் பற்றிய நினைவே மறந்துவிட்டது. முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகமான கவலை அவள் இதயத்தில் குடியேறிவிட்டது.

அடுத்த நாளும் அதற்கடுத்த நாளும் லீலாவதி விசேஷமாக எதுவும் சொல்லவில்லை.

மூன்றாம் நாள் முதல் வகுப்பு நடந்து முடிந்திருந்தது.

''இப்படி வா'' என்று அவளை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் சென்றாள் லீலாவதி.

''நேற்று ராத்திரி படுக்கப் போகிறேன் என்று அண்ணனிடம் சொல்லிவிட்டுப் போய் விட்டேன். கொஞ்நேரம் கழித்து, விளக்கெல்லாம் அணைந்த பிறகு திரும்பியும் அவன் ரூமுக்குப் போனேன். கதவிலே காதை வைத்துக் கேட்டேன். டிக் டிக் என்று ஒரு சத்தம் வந்து கொண்டிருந்தது...''

''அலாரம் கடியாரமாக இருக்கும்'' என்று தன் ஊகத்தைத் தெரிவித்தாள் நிம்மி.

''அண்ணாவின் ரூமில் கடியாரம் எதுவும் கிடையாது... ஆனால் ஏதோ டைம் மெஷின் வேலை செய்கிற மாதிரிதான் இருந்தது அந்தச் சத்தம்.''

திகைப்பு நிம்மியின் வாயைக்கட்டிவிட்டது, சில வினாடிகளுக்கு. ''சாவித் துவாரத்தின் வழியாகப் பார்த்தாயா? ஏதாவது தெரிந்ததா?'' என்று மெதுவாய் வினவினாள்.

''விளக்கு அணைந்திருந்ததால் ஒன்றும் தெரியவில்லை'' என்ற லீலாவதி, ''அண்ணனை நேருக்கு நேர் கேட்டு விட்டால் என்ன என்றுதான் தோன்றுகிறது'' என்றாள்.

''கேட்கலாம். ஆனால் இன்னும் இரண்டொரு நாள் பொறுத்துப் பார்க்கலாம். அவரால் மறுக்க முடியாத அளவுக்கு நம் கையில் ஆதாரம் கிடைக்க வேண்டும்'' என்று நிம்மி சொல்கையில் அடுத்த வகுப்புத் தொடங்கிவிட்டதால் தோழிகள் பிரிந்து விட்டார்கள்.

மறுநாள் இன்னும் கலவரமான செய்தி கொண்டு வந்தாள் லீலா.

பர்ஸுக்குள்ளிலிருந்து, ஓரடி நீளமிருந்த பிளாஸ்டிக் ஒயரொன்றை எடுத்துக் காட்டி, ''அந்த முகர்ஜி இன்று காலையில் அண்ணாவிடம் வந்தபோது அவன் பைக்குள்ளிலிருந்து இது விழுந்திருந்தது'' என்றாள்.

''மின்சார ஒயர்தான் இது'' என்றாள் நிம்மி. ''எதற்காக இருக்கும் என்கிறாய்?''

''எனக்கொரு சந்தேகம் இருக்கிறது. இன்றைக்கு ஊர்ஜிதம் செய்து கொண்டு நாளை வந்து சொல்கிறேன்'' என்றாள் லீலாவதி.

அந்த வார்த்தையை நம்பி, கல்லூரி வாசலிலேயே காத்திருந்தாள் நிம்மி அடுத்த தினம்.

சென்ற சில நாட்களாகவே லீலாவதியின் வதனத்தில் கவலையின் கோடுகள் பதியத் தொடங்கியிருந்தன. இன்றோ வண்டிப் பாட்டையின் சுவடுகள் கிராமத்து மண்ணில் பதிந்திருப்பதுபோல, மிக ஆழமாக அவை புலப்பட்டன.

''அண்ணன் என்ன செய்கிறான் என்பது சந்தேகத்துக் கிடமில்லாமல் தெரிந்து விட்டது நிம்மி'' என்றாள் லீலாவதி படபடப்பாக.

''இங்கே பேச வேண்டாம். முதல் 'அவர்' முடிந்ததும் லைப்ரரிக்கு வந்து விடு'' என்று சொல்லி விட்டுப் பிரிந்தாள் நிம்மி. ஆனால், தோழி சொல்ல வந்ததைக் கேட்டு வைத்துக் கொள்ளாமல் போனோமே என்று மனம் பரபரத்துக் கொண்டிருந்தது. வகுப்பு முடிந்ததும், ''என்ன நடந்தது? என்ன ஊகித்தாய்?'' என்று தோழியை உலுக்கியெடுத்தாள்.

''நிம்மி! அதை என் வாயால் சொல்லக் கூடப் பயமாயிருக்கிறதடி!'' என்று தன் பதைப்பை அடக்க முற்படுபவள்போல மார்பில் ஒரு கையை வைத்துக் கொண்டு பேசினாள் லீலாவதி. ''என் அண்ணன் - வயர்லெஸ் ஆபரேட் பண்ணுகிறான்!''

''என்ன!''

''ஆமாம் நிம்மி. நக்ஸலைட்காரர்களுக்காக ரேடியோவில் செய்திகள் வாங்குவதும் அனுப்புவதும்தான் அவன் வேலை. வயர்லெஸ் டிரான்ஸ்மிட்டிங் கருவிகளைத் தான் அந்த முகர்ஜி மறைத்து மறைத்து எடுத்து வந்திருக்கிறான் போலிருக்கிறது...''

மூச்சு விடாமல் விடு விடு வென்று பேச லீலாவதியை விழிதெறித்து விடுகிற மாதிரி பார்த்துக் கொண்டு நின்றாள் நிம்மி. கடைசியில், ''எப்படிக் கண்டு பிடித்தாய் இதை?'' என்று கேட்டாள்.

''தினம் தினம் நான் தூங்கி விட்டதாக அவன் நினைத்துக் கொண்டிருக்கிற சமயத்தில் எழுந்து வந்து அவன் அறைக்கு வெளியே நின்று, காது கொடுத்துக் கேட்டு வருகிறேன், நேற்று ராத்திரி அப்படிக்கேட்ட போது, யாருடனோ அவன் ரகசியமான குரலில் பேசுவது என் காதில் விழுந்தது.''

''என்ன பேசினார்?''

''அதுதான் விளங்கவில்லை. ஆனால் நிச்சயமாய் அது பேச்சுத்தான். நான் பார்க்காத போது யாராவது வந்திருப்பார்களோ என்றும் தோன்றியது. கண்டுபிடிக்காமல் விடுவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டேன். சமையலறைக்குச் சென்று, எனக்காக வைத்திருந்த பாலைச் சூடாக்கி எடுத்துக் கொண்டேன். 'அண்ணா! அண்ணா!' என்று கதவைத் தட்டினேன்.''

''உடனே திறந்தாரா?''

''இல்லை. ஏதோ முணுமுணுத்துக்கொண்டே வந்தான். திறந்தான். கட்டிலைப் பார்த்தேன். தலையணையையும் போர்வையையும் அவசரமாகப் போட்டு ஏதோ மூடி வைத்திருப்பது தெரிந்தது. ஆனால் நிச்சயமாய் ஆள் யாரும் கிடையாது. ''பாலைச் சாப்பிடாமல் படுத்து விட்டாயே அண்ணா!' என்றேன். 'பாட்டி கொடுத்தாயிற்று. நான்

சாப்பிட்டாயிற்று. அலட்டிக் கொள்ளாமல் பேர்ய்ச் சேர்' என்று எரிந்து விழுந்தான். நான் வெளியேறினதும் கதவை அவசரமாகத் தாழிட்டுக் கொண்டான்.''

''பிறகு?''

''எனக்குத் தாளவில்லை. கதவைத் தட்டினேன் படபடவென்று. வழக்கம்போல உடனே திறக்கவில்லை. 'அண்ணா! அண்ணா!' என்று கூப்பிட்டேன். 'என்ன வேண்டும்?' என்று இரைந்தான். 'கதவைத் திற' என்றேன். கொஞ்ச நேரம் கழித்துத்தான் திறந்தான். ஒரே கோபம். 'எதற்காக இப்படி வேளைகெட்ட வேளைகளில் என்னைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்திருக்கிறாய்?' என்று கடுகடுத்தான்.''

''நீ கொஞ்சம் பொறுமையாக இருந்திருக்கலாம்'' என்று குறை கூறினாள் நிம்மி. ''அப்புறம்?''

''மேலே கேள். நானும் கோபமாக, நீ எதற்காக என்னென்னவோ ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக் கிறாய்?' என்றேன். 'ஓகோ! உளவு பார்க்கிறாயா?' என்று அவன் சீறினான். 'வேண்டாம் அண்ணா! என்னிடம் மறைக்காதே! என்ன நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறாய்? சொல்லு, சொல்லு!' என்று அவனைத் தோளைப் பிடித்து உலுக்கினேன். 'சீ விடு!' என்று மறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். நான் அவனை விடமாட்டேன் என்று என் பக்கம் திருப்ப முயற்சி பண்ணினேன்...''

லீலாவதி தன் பேச்சை ஒரு வினாடி நிறுத்திக்கொண்டு, ஜாக்கெட்டுக்குள்ளிருந்து எதையோ எடுத்தாள்.

''அந்த ரகளையில் இதுகூட அறுந்து விழுந்துவிட்டது.

''தாயத்து!'' நிம்மி வியப்புடன் கூவினாள்.

''ஆமாம். கீழே விழுந்ததை எடுத்து அவனிடம் கொடுத்தேன். 'தாயத்தும் வேண்டாம்! மண்ணாங்கட்டியும் வேண்டாம்! நீ முதலில் வெளியேபோ!' என்று கத்தினான்.

நான் அப்போது முதல் இந்தத் தாயத்தை என்னிடமே வைத்திருக்கிறேன்.''

நிம்மியின் மனத்தில் வேதனை உறுத்தியது. அவனுடைய உடல் நலனை முன்னிட்டு, வெகு அக்கறையாக வாங்கி வந்து, தன் கையாலேயே கட்டிவிட்ட தாயத்தையா கல்யாணம் அலட்சியம் செய்தான்! ஆனால் உடனே ஒரு சமாதானமும் சொல்லிக்கொண்டாள். ''நீ அவரை ரொம்பச் சீண்டிவிட்டாய். அதனால்தான் கோபத்தில் அப்படிச் சொல்லியிருக்கிறார்'' என்றவள், ''தாயத்தைப் பத்திரமாய், பயபக்தியாய் வைத்துக்கொள்ளவேண்டும்... இப்படிக் கொடு,'' என்று வாங்கிக்கொண்டாள். ஒரு நிமிஷம் யோசனை செய்தாள். பிறகு, ''நானே பக்குவமாய்ச் சொல்லி, அவர் மறுபடி இதைக் கட்டிக்கொள்கிறமாதிரி செய்கிறேன்,'' என்றாள்.

''அதுவரையில்?''

''இப்படிக் கட்டிவிடு'' என்று தன் பிளவுஸ் கையைத் தோள்வரையில் மடக்கி உயர்த்திக்கொண்டாள் நிம்மி.

லீலாவதி அங்கே கட்டிவிட்டாள் தாயத்தை.

# 21

His neck became so rigid that he could not turn his head. His respiration became laborious and coma set in. - Edward Nicholson in OPHIOLOGY

இரண்டு மூன்று நாட்களுக்குள் தாயத்தைத் திரும்பக் கல்யாணத்தின் கையில் கட்டிவிடவேண்டுமென்றிருந்தாள். திருந்தாள். ஆனால் சந்தப்பம் வேறு விதமாய் அமைந்து விட்டது.

அன்று காலை அவள் தன் சினேகிதியொருத்தியின் நோட்ஸைப் பார்த்துப் பிரதியெடுக்கப் படாத பாடுபட்டுக்

கொண்டிருந்தாள். 'கையெழுத்தா இது! அவள் தலையில் இடி விழ!' என்று உதவி செய்த பெண்ணுக்கு அர்ச்சனை நடத்திக் கொண்டிருந்தபோது ஜெகதா உள்ளே வந்தாள்.

''இந்தா நிம்மி, வடபழனி கோயிலிருந்து பிரசாதம். மாதாமாதம் உன் பெயருக்கு அர்ச்சனை பண்ண ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்று கூறி, சின்னஞ்சிறிய திருநீறு - குங்குமப் பொட்டலங்களை நீட்டினாள்.

அவற்றை வாங்கி, மேஜையின் ஓரமாக வைத்தாள் நிம்மி. ''அப்புறமாய் நெற்றியில் வைத்துக்கொள்கிறேன்'' என்றாள்.

''பிரசாதத்தை எங்கே வைக்கிறாய் பார்'' என்று கடிந்துகொண்டாள் ஜெகதா.

யாராவது வந்தால் காப்பி கொடுப்பதற்காக வைத்திருக்கும் கப்அன் சாஸரின்மீது அந்தப் பொட்டலங்கள் இருந்தன. ''ஸாரி அம்மா'' என்றாள் நிம்மி.

ஜெகதா பொட்டலங்களைப் பிரித்து, நிம்மியின் நெற்றியில் திருநீறு மேலேயும் குங்குமம் கீழேயுமாகப் பொட்டு வைத்தாள். ''நல்ல படிப்பாளியாய் இரு. நாகரிகமாய் இரு. வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் சிற்சில விஷயங்களில் பயபக்தியுடன் இருக்கத்தான் வேண்டும். அதை மறக்காதே.''

''தாங்ஸ் மம்மி'' என்று புன்னகை செய்தாள் நிம்மி. அம்மா திடீரென்று உபதேசியாக மாறும்போது அவள் ரசிப்பது வழக்கம்.

''படி, படி'' என்று கூறிவிட்டு ஜெகதா சென்று விட்டாள். நிம்மி தன் எழுத்தைத் தொடர நினைத்தாள். வலது புஜத்தில் என்னவோ வலித்தது.

லீலாவதி கட்டிவிட்டுப் சென்றிருந்த அந்தத் தாயத்து தான். அவசரமாகக் கட்டியதால் ஏகப்பட்ட முடிச்சுப்

போட்டிருந்தாள் போலும். அவற்றை அவிழ்த்து, சற்றுத் தளர்த்திக் கட்டிக்கொண்டாள் நிம்மி.

அம்மா சொல்லிவிட்டுச் சென்ற 'பயபக்தி' அவள் நினைவில் உறுத்தியது.

ஏற்கெனவே இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாதவன் கல்யாணம். அதனால்தான் இந்தத் தாயத்து அறுந்து விழுந்ததை லட்சியம் செய்யாமலே இருக்கிறான். இன்னொரு தரம் அவனிடம் எடுத்துச் சென்று, மறுபடியும் ஒருமுறை மன்றாடி, அவன் கையில் கட்டிவிட்டு வந்தால்கூட, பயபக்தியோடு அணிந்து கொண்டிருப்பான் என்பது என்ன நிச்சயம்?

அதைக் காட்டிலும், தானே அணிந்துகொண்டிருக்கலாம் தாயத்தை. 'கல்யாணத்துக்கு நல்லது செய்' என்று கண்ணுக்குத் தெரியாத கடவுளிடம் வேண்டிக்கொண்டு அதைத் தன் கையிலேயே கட்டிக்கொள்ளலாம். என்றைக்காவது ஒருநாள் அவன் மனசெல்லாம் மாறி, லீலாவதி சொல்கிற கெட்ட சகவாசமெல்லாம் தொலைந்து, நல்ல புத்தி வருகிற சமயத்தில், அவனிடம் கொடுத்தால் போயிற்று...

நிம்மிக்கு மேற்கொண்டு படிப்பில் கவனம் செல்லவில்லை. தாயத்தை விரல்களால் வருடிக்கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்தாள். கல்யாணத்திடம் கொடுப்பதா, தானே கட்டிக்கொள்வதா என்று முடிவு செய்ய இயலவில்லை. தன் கையில் கட்டிக் கொண்டால் அவனுக்கு எப்படி நன்மை ஏற்படும் என்ற சந்தேகமும் உதித்தது.

இம்மாதிரி குழப்பம் ஏற்படும் போது அவள் தன் தந்தையை அணுகுவதுதான் வழக்கம். இது தேவலையா, அது தேவலையா என்று பிரசினையைச் சொன்னதும் புரொபசர், ''இஜட்டுக்குள் ஓர் எழுத்துச் சொல்'' என்பார்.

அவள் ஒன்றைச் சொன்னதும், ஏ.பி.ஸி.டி என்று விரலை மடக்கிக்கொண்டு, அது ஒற்றைப்படையா இரட்டைப்

படையா என்று கணக்கிட்டு, அதற்கு ஏற்றாற்போல் தம் தீர்ப்பைக் கூறுவார்.

நிம்மி நோட் புத்தகத்தையும் பேனாவையும் மூடி வைத்தாள். புரொபசரின் அறைக்குச் சென்றாள். கல்யாணத்துக்குத் தாயத்துக் கட்டினால் நல்லதேற்படும் என்று சொன்னவரே அவர்தானே?

ஆனால் புரொபசரின் அறையில் அவளை ஏமாற்றம் தான் வரவேற்றது. 'தொழிற்சாலை'க்கு அவர் சென்றிருப்ப தாக டைப்பிஸ்ட் கூறினார். இப்போதைக்கு அவர் வரமாட்டாராம்.

வாசல்புறம் வந்தாள் நிம்மி. டிரைவர், தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சும் 'ஹோஸை'க் கொண்டு காருக்கு நீர் விட்டுக்கழுவிக்கொண்டிருந்தான். நிம்மி தன்னைக்கூப்பிடுவதாக அவனாகவே நினைத்துக்கொண்டு விரைந்து வந்தான்.

''கூப்பிட்டீங்களா அம்மா?'' என்று அவன் கேட்டதும், ''இஜட்டுக்குள் ஓர் எழுத்துச் சொல்லு'' என்றாள் நிம்மி.

அவன் திகைத்துப்போனான் முதலில். பிறகு சிரித்துக்கொண்டே, ''கே'' என்றான்.

எண்ணப் போனவள், நாக்கைக் கடித்துக்கொண்டாள். ஒற்றைப் படைக்கு என்ன, இரட்டைப் படைக்கு என்ன என்று தீர்மானித்துக்கொள்ளவேயில்லையே! ''இரு'' என்றவள், ஒற்றையானால் தாயத்தைத் தானே அணிவது, இரட்டைப் படையானால் கல்யாணத்திடம் கட்டிவிடுவது என்று முடிவு செய்து கொண்டு, ''சரி, இப்போது இன்னொன்று சொல்'' என்றாள்.

''ஜி'' என்றான் டிரைவர்.

ஏழாவது எழுத்து. தானே அணிய வேண்டியதுதான்.

''தாங்ஸ், போ!'' என்று டிரைவரை அனுப்பிவிட்டுத் திரும்பினாள் நிம்மி. இவ்வளவு உரிமையுடன் அழைத்துப் பேசிய சின்ன எஜமானி. தன் ரகசியம் என்னவென்றும் சொல்லக்கூடாதா என்ற ஏமாற்றத்துடன் டிரைவர் திரும்பிச் செல்வதை அவள் கவனிக்கவில்லை.

''நிச்சயமாய்த் தெரியுமா உனக்கு? தாயத்துக்குள் அதை வைத்தானா?'' புரொபசர் மித்ராவின் கேள்வியில் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு நெருப்புத் துண்டமாக வெளிப்பட்டது.

''என் கண்ணாலே பார்த்தேன் சார்'' என்று உறுதி கொடுத்தான் பரஞ்சோதி. ''அவன் ரொம்பப் பயந்தாங் கொள்ளி. பாம்பைப் புட்டியிலிருந்து எடுத்துத் தாயத்துக்குள் வைப்பதற்குள் பயத்திலேயே பாதி செத்துவிட்டான். 'அதன் தூக்கத்திலிருந்து இப்போதைக்கு விழிக்காது. பயப்படாதே' என்று நூறு முறை தைரியம் சொல்லிக் காரியத்தை முடித்தேன்.''

''தாயத்துக்குள் இப்போதும் இருக்கிறது என்கிறாய்?''

''சத்தியம் செய்வேன்.''

''ஒன்றும் ஆகவில்லையே அவனுக்கு? கொஞ்சம் முன்னால்கூட ஓர் ஆள்போய்ப் பார்த்துவிட்டு வந்தானே?''

காலண்டரைப் பார்த்து, தேதியைக் கணக்கிட்டான் பரஞ்சோதி. ''இன்னும் இருபத்தைந்து நாட்களுக்கு அசையாமல் கிடக்கும் என்று அந்தப் பிரேஸில்காரன் சொன்னான் சார். அவன் கணக்குப்படி பார்த்தால், இன்று அல்லது நாளைக்கு அது தாயத்தை உடைத்துக்கொண்டு வெளியே வந்துவிடும்.''

''அதற்குத் தோதாகத் தாயத்தைச் செய்திருக்கிறாயா?''

''ஆமாம் சார். வாய்ப் பக்கத்தில் சின்னத் துவாரம் செய்திருக்கிறது. அந்த இரண்டங்குலப் பாம்பு, இருபதடி வேங்கை மாதிரி சீறிக்கொண்டு கிளம்பும் சார்'' என்ற பரஞ்சோதி, புரொபசர் நாக்கைச் சுழற்றி உதட்டை ஈரப்படுத்திக்கொண்டு குரூரப் புன்சிரிப்புக் கொள்வதைக் கவனித்தான். அவருடைய உற்சாகத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன், ''இன்று, தப்பினால் நாளை - என்ன ஆகிறது பாருங்களேன்'' என்றான்.

''பார்க்கலாம்'' என்று புரொபசர் கூறிக்கொண்டிருந்த போது -

''ஹலோ'' என்று உள்ளே நுழைந்தார் நீலகண்டன்.

ஒரு வினாடி திடுக்கிட்டுப் போனார் புரொபசர், தானும் பரஞ்சோதியும் பேசிக்கொண்டிருந்ததை அவர் கேட்டிருப்பாரோ என்று.

ஆனால் நீலகண்டனின் கையிலிருந்த மதுப்புட்டியும், நடையிலிருந்த உல்லாசமும், கண்களில் இருந்த செருகலும் அவர் வேறே உலகத்தில் இருக்கிறார் என்பதைக் சாட்டின.

கண்ணால்விடை கொடுத்து அனுப்பினார்பரஞ்சோதியை. பிறகு நீலகண்டனிடம். ''அறையைத் திறந்து விட்டது தப்பாய்ப் போயிற்று. இந்த வீட்டில் எங்கே வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்று சுதந்திரம் எடுத்துக் கொள்கிறாய்'' என்று கடிந்து கொண்டார்.

''சுதந்திரம் நீயா கொடுத்தாய்? ஜெகதா கொடுத்தாள். அவள் நல்லப் பெண். அன்று முதல் இன்றுவரை அவளால் தான் எனக்குச் சோறு, தூக்கம், இது எல்லாம் தட்டுப் பாட்டில்லாமல் கிடைக்கிறது'' என்று சொன்ன நீலகண்டன், தன் கையிலிருந்த மதுப்புட்டியைக் கண்ணெதிரில் தூக்கி, அதன் அழகிய வளைவையும், நிறத்தையும், லேபிளின் அமைப்பையும் பார்த்துப் பார்த்து ரசித்தார். ''ஆகவே த்ரீ சியர்ஸ் டு ஜெகதா?!''

புரொபசரின் முகம் கறுத்தது, அவர் உரிமையோடு ஜெகதாவைப் பற்றிப் பேசப் பேச.

''சரி, சரி. யாராவது வருவார்கள் இங்கே. உன் ரூமுக்குப் போய் எப்படி வேண்டுமானாலும் இருந்து கொள்'' என்றார் கண்டிப்புடன்.

''இதோ போய்விடுகிறேன்.'' நீலகண்டன் தன் பைஜாமாப் பையில் எதையோ குடைந்தார். ''உன்னிடம் ஒரு வேலையை ஒப்படைப்பதற்காகத்தான் வந்தேன்.''

''சீக்கிரம் சொல்லு.''

''ஆ! இதோ அகப்பட்டுவிட்டது.'' நீலகண்டன் வெளியே எடுத்தது ஒரு திருமண அழைப்பிதழ். ''உனக்கும் ஒன்று வந்திருக்குமே?''

புரொபசர் அதைப் பார்த்து விட்டு, ''ஆமாம், வந்திருக்கிறது'' என்றார்; 'மோகன் எக்விப்மெண்ட்ஸ்' என்ற நிறுவத்தின் அதிபர் தன் மகளின் திருமணத்துக்காக அனுப்பி யிருந்தார்.

அந்த அழைப்பிதழை, புரொபசர்தன் 'தொழிற்சாலையை' அமைக்கு முன்பு அவர் தான் மாஜிக் நிகழ்ச்சிகளுக்குத் தேவையான தந்திரக் கருவிகளைச் செய்து தந்தவர்.

''உன் பெயரில் வாழ்த்து அனுப்ப வேண்டும். அவ்வளவுதானே?'' என்றார் புரொபசர்.

''சே, சே! அவ்வளவு சாதாரணமாய் விட்டு விடலாமா?'' என்று மறுத்தார் நீலகண்டன், ''உன்னைக் காட்டிலும் எனக்கு இவனிடம் அதிகப் பழக்கம் உண்டு. அதனால் ஒரு பரிசு அனுப்பவேண்டும்.''

''அனுப்பி விடுகிறேன். அப்புறம்?''

''என்ன பரிசு?''

''ஏதாவது ஸூட்கேஸ்' பிளாஸ்க்...''

''உனக்குக் கற்பனையே கிடையாது! நான் நேற்றிலிருந்து யோசித்து யோசித்து ஒரு பரிசுப் பொருள் கண்டு பிடித்தேன்.''

''என்ன?''

''ஜம்மென்று ஒரு ஃபோம்மெத்தை'' குழந்தை போலக் கடகடவென்று நகைத்துவிட்டு நீலகண்டன் இரண்டு மடக்கு விழுங்கினார் புட்டியிலிருந்து, ''எப்படி ஐடியா?''

''பிரமாதம்'' என்று வெறுப்புடன் பாராட்டினார் மித்ரா.

''கல்யாணம் செய்து கொள்கிறவர்களுக்கு அதுதானே முதல் தேவை!'' என்று மீண்டும் சிரித்தார் நீலகண்டன்.

திடீரெனச் சிரிப்பை நிறுத்திக் கொண்டு, ''உன் விஷயம் ஞாபகமிருக்கிறதா? உன் மாமனார் மெத்தை தலையணை தைக்கப் பணமில்லாமல் உன் சாந்திக் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போனாரே!'' என்றார்.

''போதும், நிறுத்திக் கொள்'' என்று கடுகடுத்தார் புரொபசர்.

ஆனால் நீலகண்டன் தன் எண்ணங்களைத் தானே ரசிக்கலானார். ''இப்போதெல்லாம் கல்யாணத்தன்று இரவே நப்ஷியல்ஸ். ஆனால் பாவம் நீ! கல்யாணமாகியும் பிரம்மசாரி என்று தவித்துக் கொண்டிருந்தாய்! கடைசியில் ஒரு நாள் நான், நீ, ஜெகதா மூன்று பேரும் சைதாட்பேட்டையில்...''

''நிறுத்து!'' பாய்ந்தெழுந்த புரொபசர், நீலகண்டனின் தோள்களை நொறுக்கி விடுகிற மாதிரி இறுக்கினார். அவ்வளவு போதையையும் குடைந்து, நீலகண்டனின் நிதானத்தைப் பிடித்து இழுத்து வந்தது அந்த உலுக்கல். புரொபசரிடம் அப்படியொரு சீற்றத்தை என்றுமே கண்டிராத நீலகண்டன், தடுமாறிப் போனார்.

''விளையாட்டுக்குத்தானே சொன்னேன்? ஏன் இத்தனை கோபம் வருகிறது உனக்கு?'' என்றார்.

''கெட் அவுட்! ஐ ஸே கெட் அவுட்!'' நீலகண்டனின் கையிலிருந்து மதுப்புட்டியைப் பறித்து, தரையில் சிதர்த் தேங்காய் போல வீசியடித்தார் புரொபசர்.

சிலீரென்று உடைந்து அறையெங்கும் கண்ணாடி சில்லுகள் பரவின. நீலகண்டன் அருந்தினது போக மிஞ்சியிருந்த இரண்டு மூன்று சொட்டு மது பரிதாபமான சிறு வரிகளாகச் சுவரில் ஒழுகியது.

''முட்டாள்! முட்டாள்!'' திட்டிக் கொண்டே வெளியேறி விட்டார் நீலகண்டன்.

உள்ளங்கையில் ஆத்திரத்துடன் குத்திக் கொண்டே புரொபசர் குறுக்கு நெடுக்காக உலவினார். சில கண்ணாடி

துண்டுகள் அவர் பாதத்தைக் குத்தியும்கூட அவர் நடை நிற்க வில்லை. ஆங்காரமும் கசப்பும் ஒன்றன் பின்னொன்றாகப் புரண்டு புரண்டு வந்தன அலை அலையாக. வெறுப்பும் கொலை வெறியும் இரும்புத் திரைகளாகப் படர்ந்து அவருடைய பார்வையையும் அறிவையும் மறைத்தன. ''ஜெகதா! துரோகி! நீ செத்தால்தான் எனக்கு நிம்மதி என்று எவ்வளவு முறை சொல்லியாயிற்று! சாகமாட்டேன் என்கிறாயே? உன் வாயிலிருந்தே உண்மையை வரவழைத்து அதைச் சொல்லிச் சொல்லிச் சித்திரவதை செய்து உன்னை இம்மி இம்மியாகக் கொல்ல நினைக்கிறேன். சந்தர்ப்பம் கிடைக்க மாட்டேன் என்கிறதே!' என்று தனக்குள் தானே உறுமிக் கொண்டார்.

நிம்மியின் மூலம் ஜெகதாவின் மன ஆழத்தை அளந்து விடலாம் என்று எத்தனை காலமாக நம்பி வந்தார்! எவ்வளவு வருடங்களாகப் பாடு பட்டார்! எல்லாம் பாழ்! நிம்மிக்குக் காதல் உதித்து விட்டதாம் காதல்! அதை உதிக்க வைத்த கல்யாணம் ஒழிந்தால்கூட நிம்மி பழைய மனோவசிய சக்தியைத் திரும்பப் பெறுவாள் என்பது என்ன நிச்சயம்? காதலனை இழந்த துயரத்திலிருந்து அவள் மீண்டும் வரவேண்டும். அந்த அதிர்ச்சியின் கொந்தளிப்புக்கள் அடங்கி, அவள் உள்ளம் அமைதியையும் தூய்மையையும் அடைய வேண்டும். அதன் பின்னர் முன்போல அவளைத் தூண்டி அவள் அம்மாவின் வாழ்க்கையைத் துருவச் செய்ய வேண்டும்! சீ! இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த முள்படுக்கையில் விழுந்து விழுந்து புரள்வது!

புரொபசர் பல்லைக் கடித்துக் கொண்டார். தலையைப் பிய்த்துக்கொண்டார். முகத்தை இரு கைகளாலும் தேய்த்துக் கொண்டு, தேய்த்துக்கொண்டு தொட்டாலே எரியும் வண்ணம் ரணமாக்கிக்கொண்டார்.

திடுதிப்பென்று அவர் முகம் மலர்ந்த, மேஜையில் தென்பட்ட ஒரு குறிப்பைப் படித்ததும்: என்ன அற்புதமான

சாதனையாக இருக்கும், இதை மட்டும் செய்யக் கூடுமானால்! வெற்றி கிட்டினால், உலகப் புகழ்! சாவு நேருமானால் துன்பத்திலிருந்து விடுதலை!

ஸ்டீல் அலமாரியைத் திறந்தார் புரொபசர். லாக்கரையும் திறந்து துழாவினார். தேடியதைக் காணோம் என்றதும் திக்கென்றது முதலில். பிறகு தான் ஞாபகம் வந்தது.

ஜெகதாவின் அறைக்காக வெளியே வந்தவர், வேலைக்காரன் துடைப்பத்துடன் நிற்பதைக் கண்டார். மதுப்புட்டி உடைந்த சத்தம் காதில் விழுந்ததால் வந்திருக்கிறான் என்று ஊகித்துக் கொண்டு, ''சுத்தமாய்க் கூட்டு'' என்று உத்தரவிட்டு விட்டு மேலே நடந்தார்.

சற்று முன்பு புயலாய்ச் சீறியது இதே குரல்தானா என்று அவருக்கே வியப்பேற்பட்டது. எவ்வளவு அமைதி ஏற்பட்டு விட்டது இப்போது!

சலவையிலிருந்து வந்திருந்த திரைகளை ஜன்னல்களுக்கு மாட்டிக்கொண்டிருந்தாள் ஜெகதா. புரொபசரின் எதிர்பாராத வருகை அவளுக்கு வியப்பைத் தந்தது.

''உனக்காகக் கொடுத்த ஒரு பரிசைத் திரும்பி வாங்கிக் கொண்டு போகத்தான் வந்தேன்'' என்றார் மித்ரா. உதட்டில் முறுவல் திகழ. ஜெகதாவின் பதிலை எதிர்பாராமல் அவளுடைய அலமாரியைத் திறந்து தேடினார்.

''என்ன வேண்டும்?'' என்றாள் ஜெகதா.

''இதோ அகப்பட்டுவிட்டது.'' புரொபசர் எடுத்துக் காட்டினார் அட்டைப் பெட்டிக்குள்ளிருந்து.

கைத்துப்பாக்கி - முன்னொரு நாள் அவர் அனுப்பி வைத்தது.

''நீதான் உபயோகிக்கவில்லை. நானாவது உபயோகப் படுதலாமா என்று பார்க்கிறேன்'' என்றார் புரொபசர்.

சரேலென இரண்டடி அவரை நோக்கி எடுத்து வைத்தாள் ஜெகதா. ரிவால்வரை அவரிடமிருந்து பறிப்பதற்காக அவள் கையை நீட்டியபோது புன்னகையுடன் விலக்கினார் புரொபசர்.

''இன்றைக்கல்ல, இங்கேயல்ல. லக்னோவில் என் புரோக்ராம் இருக்கிறது பார், அடுத்த மாதம் - அங்கே செய்து காட்டப் போகிறேன்!''

கலவரம் கூத்தாடியது ஜெகதாவின் வதனத்தில், ''எதை... என்ன சொல்கிறீர்கள்...?''

''மாஜிக் மேதையின் மனைவியாக இருந்து என்ன புண்ணியம்!'' சிரித்தார் புரொபசர். ''பிரமிக்க வைக்கிற மாஜிக் நிகழ்ச்சிகள் அரை டஜன் சொல்லு என்றால் திணறிப் போவாய்! 'காட்சிங் த புல்லட் பை த டீத்' என்று கேள்விப் பட்டிருக்கிறாயா?''

இல்லை என்று தலையாட்டினாள் ஜெகதா. கணவன் என்ன சொல்கிறானென்பதோ, எதற்காகச் சொல்கிறான் என்பதோ அவளுக்கு வியங்கவில்லை.

''தமிழில் சொல்லட்டுமா? 'பறக்கும் தோட்டாவை பல்லினால் பிடிப்பது'! புரிகிறதா? மாஜிக்காரன் வாயைத் திறந்து கொண்டு நிற்பான். எதிரே பத்தடி தூரத்தில் நின்று கொண்டு ஒருவன் சுடுவான். மின்னல் போல் பாய்ந்து வருகிற தோட்டாவைப் பல்லினால் கடித்துத் தடுத்துப் பிடிக்க வேண்டும்!''

சிலீரென்று அச்சம் ஜெகதாவின் நாடி நரம்புகளில் புகுந்து அவள் உடம்பைச் சிலிர்க்க வைத்தது.

தொடர்ந்தார் புரொபசர் ''உலகத்தில் இதுவரை பதினைந்து மஜஷியன்கள் இந்த ஃபீட்டைச் செய்ய முயன்று மேடையிலேயே உயிர் விட்டிருக்கிறார்கள். புரொபசர் மித்ரா ஜெயித்தால் முதலாவது! தோற்றால் பதினாறாவது!''

கைத் துப்பாக்கியுடன் அவர் திரும்பிய போதுதான் ஜெகதா உணர்வு பெற்றாள். ''நில்லுங்கள்! வேண்டாம்!'' என்று கூவிக் கொண்டே அவர் வழியை மறித்தாள்.

''இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேன். லக்னோ நிகழ்ச்சியில், என் எதிரே நின்று சுடவேண்டிய நபர் யார் தெரியுமா? நீதான்!''

''ஐயோ!'' என்று காதைப் பொத்திக் கொண்டாள் ஜெகதா. ''எதற்காக இந்த விபரீத விளையாட்டு வேண்டாம்!''

''ஏன் ஜெகதா? ஏனம்மா தடுக்கிறாய்?'' எல்லை மீறிய வெறுப்பும் இகழ்ச்சியும் அவர் குரலில் தொனித்தன. ''உன்னைப் பற்றிய ஆறாத புண்ணை மனசுக்குள் புதைத்து வைத்துக்கொண்டு சாகாமல் சாவதைக் காட்டிலும் ஆயிரக் கணக்கான பேர் கை தட்டிப் பாராட்டுகிற அரை வினாடியில் புகழ்ச் சாவைத் தழுவிக் கொள்வது மேலானதில்லையா ஜெகதா?''

''என்னைத்தான் எப்படி வேண்டுமானாலும் சோதனை செய்து கொள்ளச் சொல்கிறேனே! எந்தத் துன்பத்துக்கும் நான் ஆட்படத் தயாராயிருக்கிறேன்'' என்று விம்மினாள் ஜெகதா. ''வேண்டுமானாலும் நிம்மியைக் கொண்டு சோதனை செய்யுங்கள்! என்னை மனோவசியத்தின் மூலம் எந்த உண்மையை வேண்டுமானாலும் தோண்டித் துருவி தெரிந்து கொள்ளுங்கள்.''

''தேவையில்லை, ஜெகதா. உன் மகளுக்கு இம்மியளவு தொந்தரவும் இனிமேல் தரமாட்டேன். கவலைப்படாதே. உன்னை மனோவசியப்படுத்தும் சக்தி அவளிடமிருந்து போய்விட்டது! இனி நிம்மி மூலமாக உன் ரகசியம் எதையும் நான் அறிந்து கொள்ள முடியாதம்மா!''

''ஆனால் என் மூலமாக அறிந்து கொள்ளலாம் சார்!'' என்ற குரல் கேட்டது திடீரென்று.

டொக் டொக்கென்று கட்டை ஊன்றிக் கொண்டு உள்ளே வந்தான் கல்யாணம்.

# 22

By auto-suggestion or self-hypnosis you can implant positive and dynomic suggestions in your mind just as the hypochondria implants negative suggestions. Auto-suggestion is a wonderful science if you cultivate it.

- Melvin powers

"யார் நீ?" என்று உறுமினார் புரோபசர் மித்ரா. ரிவால்வர் அவர் கையில் பயங்கரமாக ஆடிக்கொண்டிருந்தது.

ஆனால் 'நான்தான் கல்யாணம்' என்று அவன் சொல்லுமுன் அவருக்கு அடையாளம் ஞாபகம் வந்து விட்டது அவனை. அவருடைய முதல் பார்வை அவன் புஜத்தின்மீதுதான் சென்றது. கல்யாணம் ஜிப்பா அணிந்திருந்ததால் அங்கே தாயத்து இருக்கிறதா இல்லையா என்பது தெரியக் காணோம். மித்ராவின் ஆங்காரம் உலகையே எரித்துவிடக் கூடியதாக வளர்ந்திருந்தது. உயிருள்ள ஒவ்வொன்றும் உயிரில்லாத ஒவ்வொன்றும், அசைவனவும் அசையாதவையும், ஊர்வனவும் நகர்வனவும், தெரிந்தனவும் தெரியாதனவும் - இப்படி சகலத்தையும் தனக்குப் பகைவர்களாக எண்ணி அவர் உள்ளம் கறுவிக் கொண்டிருந்த வேளையில் கல்யாணம் மட்டும் எப்படி அவருக்கு இதமளிப்பவனாகக் காட்சியளிப்பான்! என்றைக்கோ தீர்ந்து போயிருக்க வேண்டிய ஒரு பிரச்சினை, இவனாலல்லவோ முடியாமல் வளர்ந்துகொண்டே போயிற்று என்ற நினைவு வேறு அவரை மேலும் ஆத்திரம் கொள்ளச் செய்தது.

என்றாலும்கூட, தன்னுடைய மட்டமான பகுதியை அவன் முன்னே வெளிப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை.

படிப்பும் பண்பாடும் நிறைந்த, பத்மஸ்ரீ விருது பெற்ற மாஜிக் மேதை என்பதைத்தான் அவர் வெளியுலகுக்குக் காட்டுவது வழக்கமாகையால், ''தயவு செய்து டிராயிங் அறையில் போய் இருக்கிறீர்களா? நிம்மியை வரச் சொல்கிறேன்'' என்றார்.

''மன்னிக்கவேண்டும்'' என்றான் கல்யாணம் இனிமையான குரலில். ''நான் நுழையும்போது தற்செயலாக உங்கள் பேச்சு என் காதில் விழுந்துவிட்டது. மனோவசியம் செய்யும் சக்தி நிம்மிக்குப் போய்விட்டது என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே...''

''அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்'' என்றார் மித்ரா காட்டமாக.

''தேவைப்பட்டால் நான் - உதவி செய்யத் தயாராயிருக்கிறேன்'' என்றான் கல்யாணம். ஜெகதாவின் விழிமுனையில் துளித்து நிற்கும் கண்ணீர் அவன் உறுதியை அதிகப்படுத்தியது. ''முன்புகூட நான் இதே மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டு எதையோ கெடுத்துவிட்டேன். ஆகவே எனக்கு ஒரு கடமையும் இருக்கிறது, தவறுக்கும் பிராயச்சித்தம் செய்ய...''

''எப்போது வந்தீர்கள் நீங்கள்?'' - ஆச்சரியமான குரல் அவனுக்குப் பின்னாலிருந்து கேட்டது.

நிம்மிதான் வந்துகொண்டிருந்தாள் உள்ளேயிருந்து. பல நாட்கள் கழித்து கல்யாணத்தைக் பார்க்கின்றோம் என்ற பரவசம் அவள் மேனியெங்கும் ஓடியது. என்னென்னவோ விபரீத நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகக் கலவரம் ஏற்படுத்தியிருந்தவன், இப்போது சாதுவாக, வழக்கமான புன்சிரிப்புடன் காட்சியளிப்பதைக் கண்டு அவளுக்கு ஒரே சமயத்தில் திகைப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

அதே வேளையில் அவள் பார்வை அவனைத் தாண்டி, அறைக்குள் சென்றது. அம்மாவின் கண்ணீரும் கம்பலையு

மானதோற்றத்தைக் கண்டவள் அதிர்ச்சியுற்றாள். அப்பாவின் கையில் உள்ள ரிவால்வரைக் கண்டதும் அவள் நெஞ்சம் பதறியது. நிலைமை என்னவாக இருக்குமென்று ஓரளவு ஊகித்துக் கொண்டாள். அம்மாவை வதைப்பதை நிறுத்திக் கொண்டு விட்டதாக ஒருமுறை சொல்வதும், பிறகு மறுபடியும் துன்புறுத்துவதுமாக இருக்கும் புரொபசரிடம் அவளுக்கு அளவு மீறிய வெறுப்பே உதித்தது.

''அப்பா! என்னப்பா ரகளை அங்கே? என்ன நடந்தது?'' என்று கேட்காதிருக்க முடியவில்லை நிம்மியினால்.

''உனக்கு ஒன்றுமில்லை. இவர் உன்னைத் தேடிக் கொண்டுதான் வந்திருக்கிறார். டிராயிங் ரூமுக்கு அழைத்துப் போய்ப் பேசிக்கொண்டிரு'' என்றார் புரொபசர் கண்டிப்புடன்.

''ஆனால் எனக்கென்னவோ இங்கேதான் வேலை இருப்பதாகத் தோன்றுகிறது'' என்றான் கல்யாணம் புன்னகை புரிந்துகெண்டே. ''ஆமாம், நிம்மி. இரண்டு நிமிஷம் முன்னால் நீ வந்திருந்தால் உனக்குப் புரிந்திருக்கும். ஹிப்னாடிஸ சக்தியை நீ இழந்துவிட்டாய் என்று உன் அப்பா வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார் உன் அம்மாவிடம். நான் வேண்டுமானால் செய்கிறேன் என்று சொன்னேன்...''

''தாங்ஸ். உன் உதவி தேவைப்படும்போது கூப்பிடுகிறேன். இது எங்கள் அந்தரங்க விஷயம்'' என்றார் புரொபசர்.

திடீரென்று அவரைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு, கல்யாணத்திடம் வந்தாள் ஜெகதா. அவனுடைய இரு கைகளையும் பிடித்துக்கொண்டாள். ''கல்யாணம்... முன்னேயே ஒரு நாள் சொன்னேன் - நீ என் பிள்ளை மாதிரி என்று, இப்போதும் அதையே சொல்கிறேன். என்னைக் காப்பாற்று. உனக்கு மனோவசியம் தெரியும் என்பது உண்மையானால் என்னை...''

''ஜெகதா! நீ சும்மா இருக்கமாட்டாய்?'' என்று கர்ஜித்தார் புரொபசர் மித்ரா.

''மாட்டேன்!'' என்று தீர்மானமாக்ப் பதில் கொடுத்தாள் ஜெகதா. ''அந்தரங்கமும் சொந்தமும் என்ன வேண்டியிருக் கிறது இனிமேல்? வயது வந்த பெண்ணின் முன்னால் ஒரு தாயை எவ்வளவு கேவலப்படுத்த முடியுமோ அவ்வளவை யும் செய்தாகிவிட்டது. நினைப்பதற்கும் கூசக்கூடிய அபாண்டத்தைச் சுமத்தி என்னை எத்தனை சித்திரவதை செய்யமுடியுமோ அத்தனையும் செய்துவீட்டீர்கள். மானம் தலைக்கு மேலே போன பின்னே நாசூக்கு என்ன? நிம்மிக்குத் தெரிந்தது கல்யாணத்துக்குத் தெரியட்டும். பரவாயில்லை...''

''அம்மா! என்னம்மா இதெல்லாம்?'' என்று உரக்க நிம்மி அதட்டிய பிறகே ஜெகதாவின் புலம்பல் நின்றது. அம்மாவின் கைகளைக் கல்யாணத்தின் கைகளிலிருந்து விலக்கிவிட்டு, அவன் எதிரில் நின்றாள் நிம்மி. ''உங்களுக்கு ஹிப்னாடிஸம் தெரியும் என்றா சொன்னீர்கள்?''

''வெறுமே தெரிவதோடில்லை; கிட்டத்தட்ட எக்ஸ்பர்ட்கூட ஆகியிருக்கிறேன். உன் அம்மாவை 'ஏஜ் ரிக்ரஷன்' செய்து, பல வருடங்களுக்கு முன்னால் நிகழ்ந்ததைச் சொல்லும்படி செய்ய என்னால் முடியும் என்கிறேன்'' கல்யாணத்தின் முகத்தில் பெருமை சுடர்விட்டது.

வியப்பினால் விரிந்தன நிம்மியின் விழிகள். ''எப்படி... எப்போது கற்றுக்கொண்டீர்கள்?''

''காலொடிந்து படுக்கையில் கிடந்த நாளெல்லாம் வேறென்ன செய்து கொண்டிருப்பதாய் நினைத்தாய்?''

'பயங்கரச் சதிவேலைகள் செய்வதாக நினைத்தேன்' என்று சொல்ல எண்ணினாள் நிம்மி. ஆனால் சொல்ல வில்லை.

''லீலாவுக்குக்கூட என்மீது பலவிதமான சந்தேகம். உன்னிடமும் சொல்லியிருப்பாள்'' என்றான் கல்யாணம். ''என் காலில் இருந்த தாளமுடியாத வேதனையை ஹிப்னாடிஸத்தின் மூலம் என்றைக்கு நீ நீக்கினாயோ,

அன்றைக்கே நான் மாறிவிட்டேன். இப்படிப்பட்ட ஆச்சரிய மான சாத்திரத்தைப் பயிலவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. என் சினேகிதர்கள் மூலம் கன்னிமாரா லைப்ரரியிலிருந்து பல புத்தகங்கள் வரவழைத்து வைத்துக்கொண்டு ரகசியமாய்ப் படித்தேன். உன்னையும் லீலாவையும் ஒரு நாள் திடீரென்று ஆச்சரியத்தில் ஆழ்த்தவேண்டுமென்று திட்டமிட்டிருந்தேன்...''

ஜெகதா மறுபடியும் குறுக்கிட்டு, ''தம்பி... உன் திறமையைக் காட்ட நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கிறது'' என்றாள்.

''நீ கொஞ்சம் சும்மா இரு அம்மா'' என்று அவளைக் கடிந்துகொண்ட நிம்மி, ''உங்கள் அறையில் அடிக்கடி பேச்சுக் குரல் கேட்பதாக லீலாவதி சொன்னாளே, அது?'' என்றாள் கல்யாணத்திடம்.

அவன் சிரித்தான், ''உன்னையும் புரொபசரையும்போல நான் வேடிக்கைக்காக ஹிப்னாடிஸம் கற்கவில்லை. மேடையில் செய்துகாட்டி 'சீப்'பான புகழ் பெறவும் ஆசைப் படவில்லை. ஒருபடி மேலே போய், என் திறமைகளை எப்படி வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் கற்றேன். ஸெல்ஃப் - ஹிப்னாஸிஸ், ஆட்டோ ஸஜெஷன் முதலிய வற்றைப் பயிற்சி செய்யத் தொடங்கினேன். கல்கத்தாவில் என் உத்தியோகத்தில் சிறப்பாகப் பணியாற்ற என்னிடம் என்னென்ன திறமைகள் வளர வேண்டுமோ, அவைகளைப் பற்றியெல்லாம் எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். அவைகளை ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொண்டு, தலைமாட்டில் வைத்துக் கொண்டே தூங்கினேன். என் மன ஆழத்தில் அந்தக் கருத்துத் திரும்பத் திரும்பப் பதிவதற்காக இரவு பூரா செவியில் என் வாக்கியங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. ஊருக்குத் திரும்பியதும் நான் எவ்வளவு பிரமாதமான ஆளாக மாறியிருக்கிறேன் என்பதைப் பார்த்து மூக்கில் விரல் வைக்கப்போகிறார்கள்...''

ரிவால்வரை இந்தக் கைக்கும் அந்தக் கைக்குமாகப் பந்தாடியவண்ணம் உலவிக்கொண்டிருந்த புரொபசருக்கு, காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது. அவனை நம்புவதா வேண்டாமா என்று அவர் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்துக்கொண்டிருக்கையில், நிம்மியின் ஆவேசமான குரல் அவரைத் திடுக்கிட வைத்தது.

''என்ன வேடிக்கை பாருங்கள் கல்யாணம்! உங்களுக்காகத்தான் இந்த வீடு காத்திருந்திருக்கிறது இத்தனை காலமும்!'' என்றாள் நிம்மி. ''ஓர் அழகான, மரியாதையான குடும்பத்தில் இருக்கக்கூடாத ஒரு துர்நாற்றமும் இங்கே பல வருடங்களாக வீசிக்கொண்டிருக்கிறது. உங்களைப்போன்ற ஒருவர் வந்துதான், எல்லா இருண்ட கதவுகளையும் திறந்துவிட்டு, குப்பை கூளங்களை வெளியே வீசியெறிந்து, பன்னீர் தெளித்து, ஊதுவத்தி ஏற்றிவைத்து, மணமும் மங்களமும் துலங்கும்படி செய்யவேண்டும். அந்த வேலையை நான் செய்ய முயன்று தோற்றுப்போனேன். நீங்கள் வெற்றி பெறுவது நிச்சயம். ஏனெனில் அதற்குத் தேவையான உள்ளம் உங்களுக்கு இருக்கிறது. முன்னொரு நாள் என் அம்மா வேண்டிக் கொண்டாள் என்பதற்காக, என் மாஜிக் அரங்கேற்றத்தைத் தடுப்பதற்காக, உங்கள் கல்கத்தா பயணத்தைக்கூட நிறுத்தினீர்கள். உங்கள் அருமைத் தங்கையின் திருமணம் நின்றுபோகும் என்பதைக்கூடப் பொருட்படுத்தாமல், பிறருக்காக உதவி செய்தீர்கள். ஹிப்னாடிஸ சக்தியைப் பரிபூரணமாகப் பெறவேண்டுமானால், அதுபோன்ற தூய்மையான, தன்னலமற்ற உள்ளம் தான் இருக்கவேண்டும். ஆரம்பியுங்கள், கல்யாணம்!''

தன்னையே உற்று நோக்கியவாறு இருக்கும் இரண்டு பெண்களின் கண்களையும் மாறி மாறிப் பார்த்தான் கல்யாணம். மன்றாடும் அந்த விழிகளுக்கு நேர் எதிராக, புரொபசரின் கண்கள் அவனைக் கேலி செய்துகொண்டிருந்தன. மகளையும் மனைவியையும் நகர்த்திக் கொண்டு

அவர் அவன் முன்னே வந்தார். விகாரமான புன்சிரிப்பு அவர் இதழ்களில் விளையாடிக்கொண்டிருந்தது.

''செய் இளைஞனே!'' என்றார் வெறுப்பு நிறைந்த குரலில்! ''ஆனால் என்னைப் பச்சைக்குழந்தை என்று மட்டும் எண்ணாதே, நீங்கள் மூன்று பேரும் சேர்ந்து கொண்டு என்னை ஏமாற்ற நினைக்கலாம். ஆனால் இதுதான் உங்கள் கடைசி ஏமாற்று என்பதைப் புரிந்துகொண்டு பிறகு எது வேண்டு மானாலும் செய். உண்மையான 'ரிக்ரஷன்' எது என்பதற்குப் பல அடையாளங்கள் உண்டு. அந்த அடையாளங்கள் தெரிந்த பிறகுதான் நான் நம்புவேன். வெறுமே நடித்தோ பாசாங்கு பண்ணியோ என்னை ஏமாற்றி விடமுடியாது!''

''பொறுத்திருந்து பாருங்கள், புரொபசர்!'' என்றான் கல்யாணம் அமைதி இழக்காதவனாக.

''இங்கே வந்து படுத்துக் கொள்ளுங்கள்'' என்று அவன் அழைத்ததுமே ஜெகதா கட்டிலில் சாய்ந்து கொண்டாள்.

''மேலே எரியும் விளக்கையே பார்த்தபடி இருங்கள்'' என்றான் கல்யாணம். எப்போதுமே மென்மையாயிருக்கும் அவன் குரல் இப்போது இன்னும் மிருதுவாக ஒலித்தது.

புரொபசரின் விரிந்த உள்ளங்கையில் ரிவால்வர் அப்படியே இருந்தது. நிம்மி, இருப்புக் கொள்ளாத சங்கடத்துடன் தன் சங்கிலியின் முகப்பைக் கடித்தவள், கடித்தவண்ணமே இருந்தாள்.

கல்யாணம் ஜெகதாவுடன் பேசிக்கொண்டிருந்தான்.

''விளக்கையே பார்த்துக் கொண்டிருங்கள். ஓர் இன்பமான மதமதப்பு உங்கள் உடம்பையும் தலையையும் மூடிக்கொள்வதுபோல் தோன்றுகிறது. தேகத்தைத் தளர்த்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நரம்பும் ஒவ்வொரு தசையும் ஒவ்வொரு மூட்டும் தன்னிச்சையாகத் தளரட்டும். மெதுவே மூச்சு விடுங்கள்...''

கல்யாணம் பேசப்பேச, தான் கூட வேறோர் உலகத்தில் புகுவதுபோல் உணர்ந்தாள் நிம்மி.

புரொபசர் எத்தகைய மயக்கத்திலும் தள்ளாடவில்லை. அவர் சுவாசம் பெரிதாகவும் வெப்பமாகவும் வந்து கொண்டிருந்தது. இரையை அடிக்கவிருக்கும் புலியைப் போல அவர் பார்வை தீட்சண்ணியமாகவே இருந்தது.

கல்யாணம் கூறிக் கொண்டிருந்தான்.

''இப்போது நீங்களாகவே கண்ணை மூடிக்கொள்ளுங்கள். நிதானமாக, மெதுவாக, அமைதியாக, சீராக மூச்சு விடுங்கள். கைகால்களைத் தளர்த்திக் கொள்ளுங்கள். என் குரலைக் கேளுங்கள். என் குரலை மட்டுமே கேளுங்கள். அதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் மனசுக்குள் புகாமல் விலக்குங்கள். ஆனந்தமான வசந்த காலத்தை நினைவு படுத்திக்கொள்ளுங்கள். மரங்களும் செடிகொடிகளும் பூத்துக் குலுங்குகின்றன. தென்றல் சுகமாய் வீசுகிறது. காற்றோடு காற்றாக, மேகத்தோடு மேகமாக நீங்கள் மிதக்கிறீர்கள். உலகம் மொத்தமும் உங்களிடம் பிரியமாயிருக்கிறது. எல்லோரும் உங்களுக்கு நல்லதையே விரும்புகிறார்கள். நீங்கள் மிதந்துகொண்டே செல்கிறீர்கள் - உயர, உயர, உயர! தொலைவில், தொலைவில், தொலைவில்!...''

நிம்மிக்கு ஆச்சரியமாயிருந்தது, கல்யாணத்தின் பேச்சுத் திறமையை அறிய அறிய.

கல்யாணம் தொடர்ந்தான்:

''உங்கள் உள்ளம் முற்ற முழுக்க அமைதி நிலையில் இருக்கிறது இப்போது. யாரிடமும் உங்களுக்கு விருப்போ வெறுப்போ கிடையாது. சரித்திரத்தைப் படிக்கும்போது எப்படிப் பற்றற்ற கண்ணோட்டத்துடன் படிக்கிறோமோ அதேபோல, உங்கள் வாழ்க்கையை நீங்களே எட்ட நின்று, பந்தபாசம் இல்லாமல், மூன்றாம் மனிதரைப் போல நினைத்துப் பார்க்க இப்போது முடிகிறது. நான் ஐந்துவரை

எண்ணுகிறேன். ஐந்தாவது எண்ணைச் சொன்னதும் உங்கள் மனசில் என்ன வார்த்தை அல்லது பொருள் தோன்றுகிறதோ அதை வாய்விட்டுச் சொல்லுங்கள். அதிலிருந்து நாம் ஒவ்வோர் விஷயமாக மேலே போகலாம்...''

நிம்மி மேலும் பிரமிப்புடன் கல்யாணத்தை நோக்கினாள். தான் கற்றிருப்பதைக் காட்டிலும் நவீனமான ஹிப்னாடிஸ முறையை அவன் கற்றிருக்கிறான் என்று புலப்பட்டது அவளுக்கு.

கல்யாணம் எண்ணத் தொடங்கினான் நிதானமாக.

''ஒன்று... இரண்டு... மூன்று ... நான்கு... ஐந்து...''

''மெத்தை'' என்று பளிச்செனச் சொன்னாள் ஜெகதா.

புரொபசர் அவளை நோக்கி ஓரெட்டு எடுத்து வைத்தார்.

கல்யாணம் தொடர்ந்தான்; ''மெத்தை? நல்லது. மெத்தைப்பற்றி - உங்கள் வாழ்க்கையில் மெத்தை குறுக்கிட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி - தாராளமாய்ப் பேசுங்கள். குழப்பமாகவோ, அடுக்குக் குலைந்தாற் போலவோ சொல்லாமல் ஒழுங்காகச் சொல்லுங்கள். இப்போது உங்கள் வயது குறைந்து கொண்டே போகிறது. காலமென்ற வெளியில் பின்னே பின்னே மிதந்து கொண்டே செல்கிறீர்கள். இப்போது உங்கள் வயது ஆறு... உங்கள் எதிரில் ஒரு மெத்தை இருக்கிறது. நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? அவசரம் வேண்டாம். நன்றாகப் பார்த்து, கவனித்துச் சொல்லுங்கள். உங்கள் வயது ஆறு... புரிகிறதா? ஆறு. என்ன தெரிகிறது?''

''மரக்கட்டிலில் ஒரு மெத்தை இருக்கிறது'' என்று ஜெகதா சொன்னாள்.

''ஆ!'' ஒரே சமயத்தில் நிம்மியும் புரொபசரும் வாய்விட்டு வியப்பை வெளியிட்டுவிட்டார்கள்.

அதைச் சொன்ன குரல்.

நாற்பதை எட்டிக்கொண்டிருக்கும் ஜெகதாவின் குரலாக இல்லை அது. ஆறு வயதுச் சிறுமியின் மழலைக் குரலாக இருந்தது!

புரொபசரின் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்படுவதைக் கவனித்தாள் நிம்மி. கல்யாணத்தின் திறமையில் அவருக்கு நம்பிக்கை துளித்துக் கொண்டிருந்தது. ஜெகதா மனோ வசியத்துக்கு உட்பட்டிருப்பது உண்மையாகவா அல்லது பாசாங்கா என்று தன்னால் கண்டு பிடிக்க முடியும் என்று அவர் சொன்னது இதை வைத்துத்தான் போலும்.

ஆனால் புரொபசர் முற்றிலும் திருப்தி அடைந்துவிட வில்லை. இன்னும் பரீட்சித்துவிட வேண்டுமென்றே எண்ணியவர்போல் சுற்றுமுற்றும் நோக்கினார். அலமாரியில் ஒரு பிளாஸ்டிக் பொம்மை இருந்தது. அதை எடுத்துக் கல்யாணத்திடம் கொடுத்தவர், ஜெகதாவிடம் கொடுக்குமாறு ஜாடை காட்டினார்.

அதைப் புரிந்துகொண்டான் கல்யாணம். ஜெகதாவின் கையில் அந்தப் பொம்மையை வைத்தான். அதை ஸ்பரிசித்ததும் ஜெகதாவின் முகம் மலர்ந்தது. குழந்தையைப் போலவே சிரித்தாள்.

கல்யாணம் வெடுக்கென்று அந்தப் பொம்மையைப் பறித்தான் அவளிடமிருந்து. உடனே ஜெகதாவின் முகம் கூம்பியது. கண்கள் கலங்கின. உதடுகள் குவிந்தன. குழந்தையைப் போலவே சிணுங்கல் வெளிப்பட்டது அவள் கண்டத்திலிருந்து.

''உன் வயது ஆறு. நீ பள்ளிக் கூடம் போகிறாயா?'' என்றான் கல்யாணம்.

''ஆமாம்... போகிறேன்...'' என்றாள் ஜெகதா. அதே குழந்தைக் குரலில்.

''எழுதப் படிக்கத் தெரியுமா? உன் பெயரை எழுதுவாயா?''

''எழுதுவேன்.''

''எழுது பார்க்கலாம்.'' - ஒரு காகிதமும் பென்ஸிலும் கொடுத்தான் கல்யாணம்.

ஜெகதா எழுதினாள் - முதிர்ச்சியும் அறிவும் நிரம்பிய கையெழுத்தில் அல்ல. 'ஆர்.ஜெகதா' என்ற அவள் எழுத்து, கொட்டை கொட்டையாக, கோணல் மாணலாக, ஆறு வயதுச் சிறுமியினுடைய எழுத்தாகவே இருந்தது.

கல்யாணம் திரும்பிப் பார்த்தான் புரொபசரை. மேற்கொண்டு பரீட்சைகள் தேவையில்லை என்பதுபோல அவர் தலையசைத்தார்.

''உன் எதிரில் மெத்தை இருப்பதாகச் சொன்னாய். நன்றாகப் பார். உன் வயது ஆறு... மெத்தையை என்ன செய்கிறாய்?'' என்று தொடர்ந்தான் கல்யாணம்.

# 23

While Iam counting you will go backwards in time, becoming younger and possibly smaller. When I reach ten you would find yoursely back in some situation which will help.

- Denys Kelsey

அம்மாவையும் புரொபசரையும் கல்யாணத்தையும் மாறிமாறி நோக்கியவாறு நின்றிருந்தாள் நிம்மி.

''மெத்தை தெரிகிறது. என்ன செய்கிறாய்?'' என்று கல்யாணம் தொடர்ந்து கேள்வி விடுத்தான்.

ஜெகதா ஆறுவயதுச் சிறுமியின் குரலில் பதில் தந்தாள். ''பழைய மெத்தை. நாங்களெல்லோரும் கிராமத்தில் - பாபனாசத்தில் - இருக்கிறோம். பழைய மரக்கட்டிலில்

கிடக்கிறது அந்த மெத்தை. ஓரத்தில் கிழிந்திருக்கிறது. அங்கே ஈர்க்குச்சியால் குத்தி, பஞ்சைப் பிய்த்துப் பிய்த்து வெளியே எடுக்கிறேன். என் அம்மா பார்த்துவிட்டு என்னை அடி அடியென்று அடிக்கிறாள்.''

''மெத்தையைப்பற்றி உனக்கு வேறு எதுவும் நினைவு வரவில்லை?''

''இல்லை''

''நல்லது. உனக்கு வயதாகிறது. உனக்கு வயதாகிறது. காலவெளியில் மிதந்துகொண்டே முன்னே வா; இருபத்திரண்டு, இருபத்து மூன்று, இருபத்து நாலு. உன் வயது இருபத்தைந்து. நீ இப்போது எங்கே இருக்கிறாய்?''

''சென்னையில் - மாம்பலத்தில்'' என்றாள் ஜெகதா. திடீரென்று அவள் குரல் மாறியிருந்தது - யுவதியின் குரலாக.

''கல்யாணம் ஆகிவிட்டதா?''

''ஆகிவிட்டது.''

''கணவன் யார்?''

''மித்ரா. உறவுக்காரர்.''

''மித்ரா என்ன வேலையில் இருக்கிறார்?''

''ஒன்றுமில்லை. சும்மாதான் இருக்கிறார்.''

''கல்யாணம் பிரமாதமாக நடக்கிறதா?''

''இல்லை. என் அப்பா சாதாரணமானவர். வடபழனி கோவிலில் பத்துப் பதினைந்து பேர்தான் இருக்கிறார்கள்.''

''முகங்கள் தெரிகிறதா?''

''ஆமாம். என் அம்மா - அப்பா. மித்ரா, அவருடைய நெருங்கிய சினேகிதர் நீலகண்டன்.''

''நன்றாய் நான்கு பக்கமும் பார்த்துவிட்டுச் சொல்லு. உனக்குக் கல்யாணமாயிற்றே? மெத்தை வாங்கவில்லை?''

''வாங்கியிருக்கிறார்கள். ஆனால் எனக்கு அன்றைக்குச் சாந்திக் கல்யாணம் நடக்கவில்லை.''

''ஏன்?''

''முகூர்த்தம் முடிந்த பிறகு, ஒரு கிழவி இறந்து விட்டாள் எங்கள் குடும்பத்தில். 'கொஞ்சநாள் போகட்டும். நன்றாய் நடத்துகிறேன்' என்கிறார்.''

யௌவனமான குரலை எப்படி அடைந்திருந்தாளோ அதுபோலவே வாலிபமான உணர்வுகளும் ஜெகதாவின் வதனத்தில் தோன்றிக் கொண்டிருந்தன. உதட்டில் முறுவலும் கன்னங்களில் செம்மையும் காணப்பட்டன.

''மித்ரா உன் வீட்டுக்கு வந்துவிட்டாரா-கல்யாணத்துக்குப் பிறகு?''

''இல்லை. தியாகராய நகரில் தன் சினேகிதர்களுடன் ஒரு ரூமில் தங்கியிருக்கிறார்.''

''வேலை?''

''தேடிக் கொண்டிருக்கிறார்.''

''உன்னைப் பார்க்க வருகிறாரா?''

''அடிக்கடி - தினம் தினம்.''

''என்ன பேசுகிறார்?''

''அவரால் என்னைப் பிரிந்திருக்க முடியவில்லையாம். 'கல்யாணமாகியும் பிரம்மசாரி என்கிற மாதிரி எத்தனை நாளைக்கு இப்படித்தனியேதவிப்பது நான்?'என்று சொல்கிறார்.''

''உன் அப்பா என்ன சொல்கிறார்?''

''ஆகட்டும் ஆகட்டும் என்று நாள் கடத்திக்கொண்டே யிருக்கிறார். மாப்பிள்ளை வேலைவெட்டியில்லாமல் அலைகிறார் என்று ஏளனமாகப் பேசுகிறார். 'சாந்திக் கல்யாணம் ஒன்றுதான் குறைச்சலாக்கும்? ஒரு வேலை சம்பாதித்துக் கொண்டு அழைத்துக்கொண்டு போகட்டும்

பெண்டாட்டியை!' என்கிறார். அதைக் கணவரிடம் சொல்ல முடியாமல் திண்டாடுகிறேன் நான்.''

ஜெகதாவின் முகத்திலிருந்து பார்வையை நகர்த்தாமலே புரொபசர் தன் பையிலிருந்து எதையோ எடுத்துக் கொண்டிருந்தார். அது ஒரு சிறிய டைரி. பரபரவென்று அதன் தாள்களைப் புரட்டி ஒரு குறிப்பிட்ட பக்கத்தைக் காட்டினார் கல்யாணத்திடம். ''திருமணம் நடந்த வருஷம் இது. இந்தத் தேதியைப்பற்றிக் கேள்'' என்றார் சுருக்கமாக.

''உனக்குத் திருமணம் நடந்த வருஷத்தில் - ஆகஸ்ட் எட்டாம் தேதி'' என்றான் கல்யாணம்.

ஜெகதாவின் பேச்சு நின்றிருந்தது.

''நினைத்துப் பார். ஆகஸ்ட் எட்டாம் தேதி. எட்டாம் தேதி, ஆகஸ்ட் மாதம் நன்றாய் நினைவு வருகிறது. காட்சிகள் தெளிவாய்த் தெரிகின்றன. பார், உன் கண்முன்னாலே நடக்கின்றன எல்லாம். என்ன தெரிகிறது?''

''மெத்தை.''

''உன் வீட்டிலா?''

''இல்லை. இது உயர்ந்த ரகமெத்தை, ஸ்பிரிங் கட்டில். பணக்கார வீடு.''

''யாருடைய வீடு?''

''நீலகண்டனின் அக்கா வீடு.''

''எங்கே?''

''சைதாப்பேட்டையில்.''

''இங்கே எதற்காக வந்திருக்கிறாய்?''

மௌனமானாள் ஜெகதா.

''உனக்கு எல்லாம் ஞாபகம் வருகின்றன. முன்னும் பின்னுமாய்ப் பல காட்சிகள் தெரிகின்றன. அவற்றை யெல்லாம் சீர்ப்படுத்திச் சொல்.''

''என் சிநேகிதி ஒருத்திக் கல்யாணம். வீட்டுக்கு வந்து ரொம்ப வற்புறுத்திக் கூப்பிட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். சைதாட்பேட்டையில் கல்யாணம், அம்மா என்னைப் போகச் சொல்கிறாள். அப்பாவும் அனுமதி கொடுக்கிறார். கல்யாணத்துக்கு முதல் நாளும் மறுநாளும் நான் சைதாப் பேட்டையில் தங்கியிருக்கும் நோக்கத்துடன் போகிறேன்.''

''என்ன நடக்கிறது அங்கே?''

''மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் நடக்கிறது. நானும் போய்க் கொண்டிருக்கிறேன். பெண்கள் கூட்டத்தில்.''

''பிறகு?''

''திடீரென்று யாரோ மெல்ல என் கையைத் தொடுகிறார்கள். திடுக்கிட்டுப் பார்க்கிறேன். என் கணவர்.''

''என்ன சொல்கிறார்?''

''தற்செயலாய் என்னைப் பார்த்தாராம். 'தனியே வா சொல்கிறேன்' என்று கூப்பிடுகிறார். எனக்குப் பயமாயிருக் கிறது. ஊர்வலத்திலிருந்து ஒதுங்கிக்கொண்டு, 'என்ன சொல்லுங்கள்' என்கிறேன்.''

''பிறகு?''

''சைதாப்பேட்டையில் தான் நாலு தெரு தள்ளி, நீலகண்டனின் அக்கா வீடு இருக்கிறதாம். அங்கே எல்லோரும் வெளியூர் போயிருக்கிறார்களாம். 'வீட்டில் யாரும் இல்லை. சாவி நீலகண்டனிடம்தான் இருக்கிறது. கல்யாணம் வீட்டில் ஏதாவது சாக்குச் சொல்லிவிட்டு அங்கே வந்துவிடு. இந்தா அட்ரஸ்' என்று ஒரு காகிதத்தில் எழுதி என் கையில் கொடுக்கிறார்.''

''நீ என்ன சொல்கிறாய்?''

''எனக்கு இருதயம் படபட வென்று அடித்துக் கொள்கிறது. அவருடைய முகத்தைப் பார்க்கிறேன். ஆசையும் தாபமுமாய்க் கெஞ்சுகிறது அவர் கண்கள். ஆனால் எனக்கு

ஒரே பயம்; 'மாட்டேன்... மாட்டேன்' என்கிறேன். அவர் வற்புறுத்துகிறார்.''

''கடைசியில் சம்மதிக்கிறாய் இல்லையா?''

''ஆமாம். இரவு பதினொரு மணி வரையில் எல்லோரும் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். விடிந்தால் முகூர்த்தம். எப்படியோ எல்லோரையும் ஏமாற்றி விட்டு நான் புறப்படுகிறேன் அவர் கொடுத்த அட்ரஸுக்கு.''

''தனியாகத்தானே?''

''ஆமாம். ஒரே இருட்டு. அத்துடன் மழை வேறே பெய்து கொண்டிருக்கிறது? தைரியத்தை இழுத்துப் பிடித்துக்கொண்டு ஒளிந்து ஒளிந்து போகிறேன். வாசலில் நீலகண்டன்தான் இருக்கிறார்.''

''உன் கணவர்?''

''எங்கேயோ வெளியே போனாராம். 'மடையனிடம் முட்டிக்கொண்டேன், சும்மா இருடா என்று. கேட்காமல் போயிருக்கிறான் - ஸ்வீட் வாங்கி வருகிறானாம் ஸ்வீட்!' என்று திட்டுகிறார் நீலகண்டன். 'நீங்கள் மாடியில் இருங்கள்' என்று விளக்கைப் போட்டு என்னை மாடிக்கு அனுப்புகிறார்.''

''உனக்குப் பயமாயில்லையா?''

''ரொம்ப - திக் திக்கென்றிருக்கிறது. அவருக்கு மிக உயிருக்குயிரான சிநேகிதர் நீலகண்டன். இருந்தாலும் அந்தப் பெரிய வீட்டில் தனியாக இருப்பது என்னவோ போலிருக்கிறது. நீலகண்டனின் தமக்கையும் தமக்கை கணவரும் உபயோகிக்கும் படுக்கை அறை அது. அந்த மெத்தையைத் தொட - அந்தக் கட்டிலில் உட்காரக்கூட - கூச்சமாக இருக்கிறது. நின்று கொண்டேயிருக்கிறேன். மழை விடாமல் பெய்கிறது. கடியாரம் டிக்டிக் கென்று நிற்காமல் அடித்துக்கொண்டேயிருக்கிறது. எங்கே பார்த்தாலும் நிசப்தம். ஜன்னலுக்கு வெளியே ஒரே இருட்டு. மின்னல் பளீர்

பளீரென்று அடிக்கும் போது, மரத்தின் இலைகளெல்லாம் பச்சைபசேலென்று ஈரம் சொட்டச்சிலுசிலுப்பது தெரிகிறது. இன்னும் அவரைக் காணோமே என்று நான் நடுங்கிக் கொண்டிருக்கும்போது கதவைத்திறந்து கொண்டு-''

வேகமாக யாரோ உள்ளே வந்தார்கள்.

''சொல்லாதே! ஜெகதா! சொல்லாதே!''

நிம்மி, கல்யாணம், புரொபசர் மூவரும் திரும்பிய போது, கையில் வழக்கமான மதுப் புட்டியுடன் தள்ளாடித் தள்ளாடி ஆனால் வேகமாக வந்து கொண்டிருந்தார்.

நீலகண்டன்.

''எட்டி நில்!'' என்று உறுமினார் புரொபசர். ''இதுதான் முக்கியமான இடம். குறுக்கே வராதே.''

''இங்கேதான் நான் குறுக்கே வரவேண்டும்'' என்று பிடிவாதமாக அவரைத் தள்ளிக்கொண்டு செல்ல முயன்றார் நீலகண்டன். கையில் மதுப்புட்டி இருந்தபோதிலும், அவர் பேச்சில் போதை தெரியவில்லை. உண்மையான உணர்வுகள் அவர் உள்ளத்தை உலுக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. ''ஆரம்ப முதல் நானும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். வேண்டாம், ஜெகதாவை மேலும் மேலும் விசாரணை செய்யாதே. அவள் சொல்லமாட்டாள். சொல்லக் கூடாது.''

''சொல்லித்தானாக வேண்டும்'' என்று உறுமினார் மித்ரா. ''நீ விலகுகிறாயா இல்லையா?''

அவர் கைகளை விலக்கிக் கொண்டு ஜெகதாவிடம் குனிந்தார் நீலகண்டன். ''ஜெகதா! சொல்லாதே. சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாய்! அதை மறந்து சொல்லாதே!''

நீலகண்டன் கதறக் கதற, ஜெகதா நினைவின்றியே கிடந்தாள். தன் குரலொன்றைத் தவிர வேறெதுவும் கேட்காது என்று ஆரம்பத்திலேயே கல்யாணம் சொல்லியிருந்தான். ஆகவே அவள் அவளுடைய உலகத்தில் - மழை பெய்யவும்

இரவில், சைதாப்பேட்டை வீட்டில், படுக்கையறைக் கட்டிலில் - இருந்தாள்.

''நகர்!'' என்று பலவந்தமாக நீலகண்டனைத் தள்ளினார் புரொபசர். ''என் கையிலிருப்பதைப் பார்த்தாயா? உயிரின்மீது ஆசையிருந்தால் விலக்கிக் கொள்.''

இமைகொட்டாமல், வெறிக்க வெறிக்கப் புரொபசரையே பார்த்தார் நீலகண்டன். அவர் கையில் மேலும் கீழுமாக ஆடிக்கொண்டிருக்கும் துப்பாக்கியைக் கண்டபிறகு அவர் நாவிலிருந்து வார்த்தை எழவில்லை. சிறு குழந்தைபோல தேம்பித் தேம்பி அழுது கொண்டே தரையில் உட்கார்ந்து கொண்டார்.

''கட்டில் அருகே நீ நின்று கொண்டிருக்கிறாய்'' என்று ஜெகதாவைப் பார்த்துத் தொடர்ந்தான் கல்யாணம். ''யாரோ வருகிறார்கள் இல்லையா? யார் அது?''

''நீலகண்டன்'' என்று பதிலளித்தாள் ஜெகதா. சற்றுமுன் அந்த அறையில் நிகழ்ந்தது எதையும் உணராதவள் போல் அவள் குரல் முன்போல் ஒலித்தது.

''என்ன செய்கிறார் அவர்?''

''விகாரமாய் இளித்துக்கொண்டிருக்கிறார். கண்கள் சிவந்திருக்கின்றன. அவர் கையில் என்ன வைத்திருக்கிறார் என்று முதலில் எனக்குப் புரியவில்லை. பிறகுதான் தெரிகிறது.''

''என்ன அது?''

''மதுப்புட்டி. அவருடைய அக்காள் கணவருக்கு அந்தப் பழக்கம் உண்டாம். பர்மிட்டுடன் வாங்கி வைத்திருக் கிறாராம். இன்றைக்குத்தான் இவர் முதன்முதலாக அதை ருசி பார்த்தாராம். அவரே உளறிக்கொண்டு சொல்கிறார்.''

''நீ என்ன செய்கிறாய்?''

''எனக்கு ரத்தமே உறைந்து போய் விட்டமாதிரி இருக்கிறது. ஒரு குடிகார வாலிபனின் முன்னே, படுக்கை

யறையில் தன்னந்தனியாய் இருக்கிறோமே என்று என் தேகம் பதறுகிறது. மழையோ, புயலோ, இருட்டோ, தனிமையோ- எப்படியும் ஓடிவிட வேண்டுமென்று வாசல்பக்கம் செல்கிறேன். அதற்குள் நீலகண்டன் தடுக்கிறார். 'ஜெகதா...' என்று குழறியபடி என் கையைத் தொடுகிறார்.

''அப்புறம்? அப்புறம்?'' கேட்டது கல்யாணமல்ல! பொறுமையற்றுத் துடித்துக்கொண்டிருந்த புரொபசர் நான்.

''உங்கள் குரல் அவருக்குக் கேட்காது'' என்று நினைவூட்டிவிட்டு, ''அப்புறம்!'' என்று கேட்டாள் கல்யாணம்.

''பளீர் பளீரென்று அவருடைய கன்னத்தில் மாறிமாறி அறைகிறேன், வெறிபிடித்த மாதிரி. சுருண்டு போய்க் கீழே விழுகிறார். கதவைத்திறக்க ஓடுகிறேன். உட்பக்கம் பூட்டி, சாவியை வைத்துக்கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. அவரைத் தொட்டு, சாவியை எடுக்க அருவருப்பா யிருக்கிறது.''

''பிறகு?''

''நான் யோசித்துக்கொண்டிருக்கும்போது தடா லென்று நீலகண்டன் என் காலைப் பிடித்துக்கொள்கிறார். நான் கொடுத்த அறையில் அவர் போதை தெளிந்துவிட்டது. 'ஜெகதா! என்னை மன்னித்துவிடு. ஒரு வினாடி புத்தி பிசகிவிட்டேன். சிநேகிதனுக்கே துரோகம் இழைக்கிற அளவுக்கு மூளை கெட்டுவிட்டேன்' என்று கதறிக் கொண்டு, தரையில் தலையை மடேர்மடேர் என்று மோதிக் கொண்டு அழுகிறார்.''

''நீ என்ன செய்கிறாய்?''

''எனக்கு அவரை மன்னிக்கத் தோன்றவில்லை. கசப்பும் எரிச்சலும் ஏற்படுகிறது. 'உங்கள்மீது தப்பில்லை. என் கணவர் வேலையில்லாமல், குடும்பமில்லாமல், ஊர் சுற்றிக்கொண்டு இருக்கிறார். ஆதலால் என் அப்பாவுக்குத்

தான் அவர்மீது இளப்பம் என்று நினைத்தேன். அவருடைய சினேகிதர்களுக்கும் அப்படித்தான் என்று தெரிகிறது. வெட்டிச் சோம்பேறியின் மனைவியாக இருப்பவள், வேசிபோல இழுத்த இழுப்புக்கு வருவாள் என்று நினைத்து விட்டீர்கள்' என்று அழுதுகொண்டே சொல்கிறேன்.''

''நீலகண்டன் என்ன சொல்கிறார்?''

''முழுக்கப் போதை தெளிந்தவராக எழுந்துகொண்டு, என் கையில் அடிக்கிறார். 'சத்தியமாய்ச் சொல்கிறேன், சகோதரி. உன் கணவனை ஆளாக்குவதுதான் இந்த நிமிடத்தி லிருந்து எனக்கு வேலை. எனக்குச் சில மாஜிக் வித்தைகள் தெரியும். அவனுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். அவனுக் காகவே புதிது புதிதாய் மாஜிக்குகள் கற்று வந்து, அவனுக்குப் பயிற்சி தருகிறேன். இந்தியாவிலேயே தலைசிறந்த மாஜிக் நிபுணனாக மித்ராவை நான் உருவாக்குகிறேனா இல்லையா, பார்!' என்று ஆவேசம் வந்த மாதிரி கத்துகிறார். 'பதிலுக்கு நீயும் சத்தியம் செய்து கொடு - இப்போது, இங்கே நடந்த அவமானக் கதையை யாரிடமும் வெளியிடுவ தில்லை யென்று' என்று கேட்கிறார்.''

''சத்தியம் செய்து தருகிறாயா?''

''ஆமாம் - கையடித்துச் சத்தியம் செய்ததும். அறையை விட்டு வெளியேறிச் செல்கிறார் நீலகண்டன். அவசரமாக அவர் படியிறங்கிப் போகும்போது மேலே ஏறி வந்துகொண்டிருக்கிறார் என் கணவர்.''

''வந்ததும் உன்னை என்ன கேட்கிறார்.''

''எதுவும் கேட்கவில்லை. வெகு நேரம் வரையில் எதுவும் பேசவில்லை. ஸ்வீட் வாங்கச் சைக்கிளில் சென்ற போது, மழைச்சேற்றில் வழுக்கி விழுந்து விட்டதாகச் சொல்கிறார். அவர் உடம்பெல்லாம் நனைந்திருக்கிறது. இந்த முதல் இரவுக்காக அவர் துடித்த துடிப்பு. காட்டிய பரபரப்பு -

எல்லாம் எங்கே போய்விட்டதோ தெரியவில்லை. எனக்கும் பயமாயிருக்கிறது. 'கல்யாண வீட்டில் என்னைக் கொண்டு போய் விட்டுவிடுங்கள்' என்கிறேன். கொண்டுபோய் விடுகிறார்.''

ஜெகதா பேச்சை நிறுத்திக்கொண்டாள். கல்யாணமும் தன் கேள்விகளை முடித்துக்கொண்டவனாக, அவ்வளவு தானே புரொபசர்?'' என்றான்.

புரொபசரின் தலை குனிந்தேயிருந்தது. கல்யாணத்தின் வினா, அவரை சிறிது சிறிதாக எழுப்பியது. ஏறிட்டு அவனைப் பார்த்தார். நிம்மியைப் பார்த்தார். ஒற்றுத் தாளால் மொத்த ரத்தத்தையும் உறிஞ்சி எடுத்துவிட்டவர்போல் அவர் முகம் வெளிறியிருந்தது. வாயை திறக்கவே பெரும் பிரயத்தனப்பட்டார்.

''அவ்வளவுதானப்பா, கல்யாணம் அவ்வளவுதான்!'' என்று மெதுவாகக் கூறினார் நீலகண்டன். வெடிமருந்து கெட்டித்த பீரங்கியைப் போல அவருடைய குரலில் பயங்கரமான அமைதி நிலவியது. இடிந்து உட்கார்ந்துவிட்ட மித்ராவை நோக்கித் திரும்பினார். ''திருப்தியாச்சா. புரொபசர் சார் என்னை உளவு பார்ப்பதற்காக, என்றாவது ஒருநாள் எங்களைக் கையும் கனவுமாய்ப் பிடித்து வஞ்சம் தீர்க்கலா மென்ற நோக்கத்தோடு எனக்கு மதுவை கொடுத்துக் கொடுத்து உங்களுக்கு அடிமையாக்கி வைத்துக்கொண்டிருந்தீர்களே ஆகா! என்ன அருமையான மூளை உங்களுக்கு, புரொபசர் சார் நிம்மி உங்கள் மகளல்ல என்றுகூடச் சந்தேகப்பட்டீர்களா, இல்லையா? மகளைக்கொண்டே தாயின் மானத்தை வாங்க வேண்டுமென்றுதானே திட்டமிட்டிருந்தீர்கள்.

அவர் பேசப் பேச மித்ராவின் தலை தாழ்ந்து கொண்டே போயிற்று.

நிம்மி - அவளுடைய உலகம் பொடிப் பொடியாக விழுகிற மாதிரி இருந்தது, பருவத்தால் குமரியாகவும்

உள்ளத்தால் குழந்தையாகவும் இருந்த அவள் இப்படிப்பட்ட பூகம்பமெல்லாம் ஒரு குடும்பத்தில் நிகழக்கூடும் என்று நினைத்துப் பார்க்கவேயில்லை.

கல்யாணம், ஜெகதாவை ஹிப்னாஸிஸிலிருந்து எழுப்பினான்; ''மூன்றுவரை எண்ணுகிறேன். மூன்று என்று நான் சொன்னதும் நீங்கள் விழித்துக் கொள்வீர்கள்... ஒன்று இரண்டு மூன்று...''

ஜெகதாவின் ஜெகதா ஹிப்னாஸிலிருந்து எழுப்பினான்; ''மூன்று வரை எண்ணுகிறோன். மூன்று என் நான் சொன்னதும் நீங்கள் விழித்து கொள்வீர்கள்... ஒன்று, இரண்டடு மூன்று...''

ஜெகதாவின் உடல் அசைந்து. கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''அம்மா!'' ஓடிவந்து கழுத்தைக் கட்டிக் கொண்டாள் நிம்மி. சோதனைகளெல்லாம் முடிந்துவிட்டதம்மா! கல்யாணம் நம் குடும்பத்தைக் காப்பாற்றி விட்டார்!''

கல்யாணம் புன்முறுவலுடன், ஹிப்னாடிஸ சாத்திரத்துக்கு உன் நன்றியைத் தெரிவி, நிம்மி!'' என்றான்.

''ஹிப்னாடிஸத்தின் சக்தி மட்டும் இல்லை கல்யாணம்!'' நிம்மி தன் சேலையை மடக்கிச் சுருட்டி கொண்டே பேசினாள். ''உங்கள் கால் குணமானதோடு, என் குடும்பத்துக்கும் நன்மை செய்திருக்கிறது. தான் கட்டிக் கொண்டிருக்கும் இந்தத் தாயத்துதான்-''

''நிம்மி! என்று அலறிக் கொண்டே தலை நிமிர்ந்தார் புரொபர்! ''உன் கையிலா கட்டிக் கொண்டிருக்கிறாய்! அந்தத் தாயத்தில் பாம்பு இருக்கிறது. நிம்மி, விஷப் பாம்பு! அறு!''

''என்ன!'' திடீரென அசுரபலம் பெற்றவளாக எழுந்து கொண்டாள் ஜெகதா. நிம்மியின் கையைப் பற்றினாள். பரபரப்பால் தாயத்தின் முடிச்சு எங்கே இருக்கிறதென்று

தெரியவில்லை. பரபரத்துக் கொண்டே இழுத்தாள். பல்லால் கடித்தாள்.

''நில் ஜெகதா! நீ அதை அறுக்காதே! தொடாதே!'' என்று புரொபசர் கத்துவது அவள் காதில் விழவேயில்லை.

பட்டென்று ஒரு சத்தம்.

ஜெகதா தாயத்துக் கயிற்றை அறுத்த அதே கணத்தில், தாயத்தினுள் இருந்து, ரத்தச் சிவப்பாக, மிக வேகமாக அச்சமும் அருவருப்பும் ஏற்படுத்துவதாக, வினோதப் புழுபோன்ற குட்டிப்பாம்பொம்பொன்று வெளிக்கிளம்பி -

''நிம்மி!'' என்று அலறிக் கொண்டே தரையில் சாய்ந்தாள் ஜெகதா.

**ஹா**லிவிலிருந்த நீண்ட சோபாவில் களைப்புடன் படுத்திருந்த நிம்மியிடம் ஓசைப்படாமல் நெருங்கினான் கல்யாணம்.

''என்ன யோசனை, நிம்மி!'' என்றான்.

நீர்மல்கும் கண்களால் அவனைப் பார்த்தாள் நிம்மி. ''விதி விதி என்கிறார்களே, அதெல்லாம் உண்மைதானா கல்யாணம்? வாழ்நாள் பூராவும் கணவனிடம் கொடுமைப் பட்ட அம்மா, முடிவு ஏற்படும் வேளையில் ஏன் உயிர் துறக்க வேண்டும்? நாடு நகரமெல்லாம் முழக்கிய புரொபசர் ஏன் வைக்கோலில் செய்த பொம்மை போலத் துவண்டு கிடக்க வேண்டும்? மதுப்புட்டியும் தானும் உடன் பிறந்தவர்கள் போலிருந்த நீலகண்டன் எதனால் இப்படிப் புத்தம் புது மனிதராக மாற வேண்டும்? இதை எல்லாம் நிகழ்விப்பது எது, கல்யாணம்?''

''வாழ்க்கை என்பது எப்போதுமே சுலபமான கூட்டல் கழித்தல் கணக்காக இருப்பதில்லை நிம்மி.'' - தன் கழுத்தி லிருந்து பவழ மாலையைக் கழற்றி அவளுக்கு அணிந்து

கொண்டே பரிவுடன் பதிலளித்தான் கல்யாணம். ''விடை காணவே முடியாத கணித சூத்திரங்களும் இருப்பதுண்டு. இல்லாவிட்டால் கல்கத்தாவிலிருந்து வந்த இந்த மடையன் உன்னுடைய இதய சிம்மாசனத்தில் ஏறியமர முடிந்ததே, அது எப்படி?''


மல்லாந்த வண்ணம் அவனைப் பார்த்தாள் நிம்மி. அவனுடைய கம்பீரமான தோற்றம், காதலும் கருணையும் ததும்பும் கண்கள், அவனுடைய உள்ளத்தின் ஆழம் - அவ்வளவுதான் அவளை மனம் நெகிழச் செய்தன. அவளுடைய பாதத்திலிருந்து ஒரு சிலிர்ப்புப் புறப்பட்டு, நாடி நரம்புகளில் புகுந்து, ரத்தத்தில் கலந்து, கால்களின் வழியே மேலேறி, மார்பில் வியாபித்து, கைகளில் புளகம் ஏற்படுத்தி, தோள்களில் படர்ந்து, நெஞ்சில் குழைந்து, நாவில் இனித்து, பற்களில் பிரகாசித்து, உதடுகளில் துடித்தபோது, அவ்வளவையும் திரட்டி ஒற்றைச் சொல்லாக்கி -

''கல்யாணம்'' என்றாள்.

''எப்போது?'' என்றான் அந்தக் குறும்புக்காரன்.

நிறைந்தது

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in


ரா.கி.ரங்கராஜனின்
புரொபசர்
மித்ரா